கலைஞானம்

பாகம் 4

# சினிமா சீக்ரெட்



# சினிமா சீக்ரெட் பாகம் - 4

## கலைஞானம்

# சமர்ப்பணம்

 

எனக்கு ஏழு வயதாகியிருந்தபோது, நான் கட்டபொம்மன் நாடகம் பார்த்துவிட்டு வந்து 'என்னடா... என்னடா... கட்டபொம்மா... எந்நேரம் பார்த்தாலும் கத்திச்சண்டை...' என்ற பாடலை ஒரு குச்சியைக் கையில் எடுத்து சுழட்டியவாறு பாடிக் கொண்டே ஒரு நாற்காலியிலிருந்து மற்றொரு நாற்காலிக்கு குதிக்க... கால் தடுமாறி நாற்காலியும் சாய்ந்து என் கீழ் உதட்டில் வெட்டிவிட்டது. உடனே என் தாய் பேச்சியம்மாள், அடுப்புக்கரித்துண்டை நொறுக்கி உப்புக்கல்லையும் நசுக்கி உதட்டுக்கு கட்டுப் போட்டார். அப்போது என் தந்தை முத்தையா வந்து விபரம் கேட்க, நடந்ததை என் தாய் சொல்ல... 'இவன்

வருங்காலத்தில் ஒரு புலவனாக வருவான்' என்றார். என் தாயும் 'அப்படியா' என்று மகிழ்ச்சியில் கட்டி அணைத்து முத்தமிட்டார்.

இன்று அவர்கள் லட்சியக்கனவு நிறைவேறியது. சினிமா உலகில் நானும் ஒரு கலைஞன் ஆனேன் என்பதை நினைத்து இந்நூலை என் பெற்றோர்களுக்கு அன்பு காணிக்கையாக்குகிறேன்.

-கலைஞானம்

# முன்னுரை

சினிமாவுக்கு கதைகள் எழுதுவதில் நான் தேர்ந்துவிட்டேன் என்றுதான் நினைக்கிறேன். அதனாலேயே சில நண்பர்கள் என்னை 'கதைத்தாத்தா', 'பீஷ்மர்', 'கதைஞானம்' என்றெல்லாம் பாராட்டுகிறார்கள்.ஆனால் வரலாறு எழுதுவது... அதிலும் எழுதி புத்தகமாக வெளியிடுவதில் ஒரு பயம் இருந்துகொண்டே இருக்கிறது. காரணம்... முறையாகக் கற்ற எழுத்தாளர்கள் என்னைக் களையாக எண்ணி எடுத்தெறிந்து விடுவார்களோ என்ற பயம்தான். இருந்தாலும் கோதைநாயகியம்மாள், கி.ராஜநாராயணன் போன்றோர் ஆரம்பத்தில் படிக்காதவர்கள்தான். பின்னாளில் மிகச்சிறந்த எழுத்தாளர்களானார்களே. அவர்களை வழிகாட்டியாக எண்ணி எழுதத் துணிந்துவிட்டேன். கொள்ளுவதும், தள்ளுவதும் அன்பு வாசகர்களின் உள்ளங்களே.
பார்த்ததை, கேட்டதை, சொன்னதை அனுபவமாக எடுத்துக்கொண்டேதான் இதுவரை சினிமாவுக்கு 30 கதைகளுக்கு மேல் எழுதிவிட்டேன். இதில் மிகப்பெரிய இயக்குநர்களுடன் திரைக்கதை ஒத்துழைப்பு சுமார் நூறைத் தாண்டும். தயாரிப்பு 16 படங்கள். பாடல்கள் எட்டு. இயக்கம் 2. மெயின் காமெடியனாக 'இது நம்ம ஆளு' ஒன்றுதான். சின்னச் சின்ன வேஷங்கள் சில... இதற்குமேல் என் தகுதிக்கு என்ன வேண்டும்? நான் எடுத்துக்கொண்ட இந்த புது முயற்சிக்கு உங்கள் ஆதரவுதான் வேண்டும்.

முக்கியமாக இங்கே சொல்லவேண்டியது ஒன்று உண்டு. என்னவென்றால் 1974-ல் ஒரே மாதத்தில் என்னிடம் ஆறு கதைகளை சினிமா தயாரிப்பாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு வாங்கினார்கள். எல்லாரும் 'உடனே ஷூட்டிங் போக வேண்டும்; எழுதிக் கொடுங்கள்' என்று அவசரப்படுத்தினார்கள். அப்போது நான் ஒரு யுக்தியைக் கையாண்டேன். தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரையும் டேப்ரிக்கார்டர் வாங்கி வரச் சொல்லி அதிலே கதையைச் சொல்லிவிட்டேன். உதவியாளர்களை வைத்து அதில் உள்ளதை எழுதிக் கொடுக்கச் சொல்லிவிட்டேன். அவர்கள்...

பனசை மணியன், ஜெயபாலு சீனிவாசன், தஞ்சை கே.சுரேஷ் குமார், வி.எம்.ஏ. ஷாலப்பா... தினகரன் அப்பப்ப சிலரும். இப்படிப் பழக்கப்பட்டதால் இதுவரை அதையே கையாண்டு வருகிறேன்.

'சினிமா சீக்ரெட்' தொடரையும் ரெக்கார்டு பண்ணித்தர்றேன் என்றேன், நக்கீரன் துணையாசிரியர் இரா.த.சக்திவேலிடம். அப்போது அவர் சொன்னார்... 'ஐயா, நீங்கள் சொல்லிக்கொண்டே வாருங்கள், நான் எழுதுகிறேன். அது சரியில்லையென்றால் ரெக்கார்டு பண்ணலாம்' என்றார். அதையும்தான் பார்ப்போமே என்று உளுந்துமூட்டையை கொத்திவிட்டது போல் பொல பொலவென்று கொட்டிக்கொண்டேயிருந்தேன். மூன்று வாரங்களுக்குச் சேர்ந்தாற்போல்... என்ன ஆச்சரியம் ஒருவரிகூட தவறாமலும் கூடாமலும் எழுதியதோடு, அதனை அழகுபடுத்தியும் காட்டி என்னை அசத்தி வருகிறார். அவருக்கு என் முதல் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'சினிமா சீக்ரெட்' தொடர் எழுத எனக்கு தொடர்ந்து ஆதரவு கொடுத்து வரும் நக்கீரன் ஆசிரியர் உயர்திரு நக்கீரன்கோபால் அவர்களுக்கும், நக்கீரன் இணையாசிரியர் காமராஜ், மற்றும் அவருடன் தொழில் செய்யும் அத்தனைபேருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை நக்கீரன் பத்திரிகையில் தொடராக வந்த 'சினிமா சீக்ரெட்'டை பொறுமையாக படித்தும் பாராட்டியும், அன்பு காட்டியும் வரும் அனைத்து வாசகர்களுக்கும் தலைவணங்குகிறேன்... நன்றி!

-கலைஞானம்

சென்னை.

கைபேசி எண் : **96770 61186**

# பதிப்புரை!

## *கனத்துப்போன மனசு!*

கால எந்திரத்தில் ஏற்றி பின்னோக்கி அழைத்துச் சென்று, சம்பந்தப் பட்டவர்களை, அவர்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களை நேரில் பார்த்த பிரம்மையை, உண்டாக்கியது அய்யா கலைஞானத்தின் 'சினிமா சீக்ரெட்' தொடர். அதிலும் சினிமா சம்பவங்கள் என்றால் மேலும் மேலும் கண்கள் அகலவிரியும். அந்த சினிமா சங்கதிகளை, அதன் சீக்ரெட்டுகளை தொடராக எழுத வேண்டும் என்ற யோசனை நக்கீரன் ஆசிரியர் குழுவில் ஓடிய போது, எங்களின் யோசனைக்கு யோசனை சொன்னவர் அண்ணன் கலைப்புலி எஸ்.தாணு. ஆம் அவர் தான், 'அந்தக் காலத்திலிருந்து இந்தக் கால சினிமா சங்கதிகள் வரை எழுதணும்னா அதுக்கு சரியான ஆளு அய்யா கலைஞானம் தான்' என்ற அருமையான யோசனை சொன்னார் தாணு. அண்ணன் தாணுவின் சிபாரிசு தப்பாது என்பதை நிரூபித்ததுதான் அய்யா கலைஞானம் நக்கீரனில் எழுதிய சினிமா சீக்ரெட். அறிந்த முகங்களைப் பற்றி அறியாத தகவல்களுடன் 168 இதழ்களில் மெகா தொடராக எழுதி நக்கீரன் வாசகர்களை பரவசத்தில் ஆழ்த்திவிட்டார் அய்யா கலைஞானம். நெருப்பாற்றில் நீந்தி நக்கீரன் சந்தித்த சோதனைகள், பாசிஸ ஜெயலலிதாவின் அடக்கு முறை ஆட்சியில் நக்கீரன் மீது போடப்பட்ட அக்கிரம வழக்கு கள், தம்பி சிவசுப்பிரமணியன் மீது போடப்பட்ட பொய் வழக்குகள், உச்ச கட்டத் தாண்டவமாக என் மீது போடப்பட்ட பொடா வழக்கு, நக்கீரன் மீது ஏவப்பட்ட அரச பயங்கரவாதம் இதைப் பற்றியெல்லாம் நக்கீரனில் 236 இதழ்களில் 'யுத்தம்' தொடராக எழுதினேன். ரத்தமும் சதையுமான அந்த சரித்திர சாதனைத் தொடருக்குப் பின் அதிக இதழ்களில் இடம் பிடித்தது ’சினிமா சீக்ரெட்’ தொடர் தான்.

சினிமா பற்றிய, சினிமாக் கலைஞர்கள் பற்றிய தொடராக இருந்தாலும் கொஞ்சமும் ஒப்பனை இல்லாத உண்மைகளை சொல்லியிருந்தார் அய்யா

கலைஞானம். அவர் சொல்லிய உண்மைகளுக்கு, அலங்காரமில்லாத, ஆர்ப்பாட்டமில்லாத எளிய வார்த்தைப் பூச்சு கொடுத்து அழகுற மின்ன வைத்தவர் தம்பி இரா.த.சக்திவேல். நக்கீரன் சினிமாப் பகுதியில் வரும் எழுத்துக்கள் அனைத்தும் முதன்மைத் துணையாசிரியரான தம்பி சக்திவேலுடையவை. சினிக்கூத்து வார இதழ், சினிக்கூத்து மாதமிருமுறை இதழ் ஆகியவற்றின் அட்டை டூ அட்டை அனைத்தும் அவரது உழைப்பு. அயராத உழைப்பு, வசீகரிக்கும் எழுத்து நடைதான் தம்பி சக்திவேலின் சிறப்பு. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக அய்யா கலைஞானத்துடனேயே பயணித்து, அவரின் எண்ணங்களை உள்வாங்கி, நக்கீரன் வாசகர்களுக்கு, இன்னும் சொல்லப் போனால் சினிமா பிரபலங்களுக்கே அருமையான புதையலைக் காண்பித்தவர் தம்பி சக்திவேல்.

மதுரை மாவட்டத்தின் ஒரு சின்ன கிராமத்திலிருந்து, இரண்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்துவிட்டு, சென்னைக்கு வந்து சினிமாவில் சேர்ந்து எடுபிடி, ஆபீஸ்பாய், டிரைவர், புரொடக்ஸன்பாய் என படிப்படி யாய் வந்து புரொடியூஸரானவர் அய்யா கலைஞானம். ஜாம்பவான்களுடன் பழகிய ஜாம்பவானான அய்யா கலைஞானத்தின் கதை ஞானம் சமீபத்தில் வெளிவந்த, ஆர்.பார்த்திபனின் 'கதை-திரைக்கதை-வசனம்-இயக்கம்' வரை பளிச்செனத் தெரிந்தது. சினிமாவில் ஓஹோ என கோலோச்சியதையும் ஒன்றுமே இல்லாமல் வீழ்ந்ததையும் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லியுள்ளார். அதிலும் அண்ணன் சிவாஜி சொல்லியும் கேட்காமல் அவரை வைத்து எடுத்த ''ராஜரிஷி'யால் பட்ட நஷ்டத்தையும் கஷ்டத்தையும் சொல்லியிருப்பது இப்போதுள்ள சினிமாக்காரர்களுக்கு ஒரு படிப்பினை. சினிமா ஒரு சூதாட்டம், இதில் தொடர்ந்து ஜெயிப்பவர்களும் உண்டு. தொடர் தோல்விகளால் துவண்டு போய் காணாமல் போனவர்களும் உண்டு என்பதை தேவர் பிலிம்ஸை உதாரணம் காட்டிச் சொல்லியிருப்பது உண்மையின் சூடு. அதிலும் குறிப்பாக தேவர் அவர்களின் மகன் தண்டபாணி சென்னையைக் காலி செய்துவிட்டு சொந்த ஊருக்கே கிளம்பியதைப் படிக்கும் போது ஒரு சாம்ராஜ்யம் சரிந்து போனது எப்பேர்ப் பட்ட கொடுமை என 'உச்' கொட்ட வைத்தது. அதே போல் எம்.ஜி.ஆர். -சிவாஜிக்கிடையே எப்படிப்பட்ட பேரன்பும் நட்பும் இருந்தது என்பதற்கு, சிவாஜியிடம் எம்.ஜி.ஆர்.போனில் விளையாட்டாகப் பேசிய சம்பவத்தை கலைஞானம் சொல்லியிருப்பது இதுவரை யாரும் சொல்லாதது. கராத்தே மணி-

டைரக்டர் ஆர்.சி.சக்திக்கிடையே நடந்த விருந்து கலாட்டா செய்தியையும் யாரும் கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள்.

ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லியே ஆகணும். பலசரக்குக் கடையோ, பெட்டிக்கடையோ, தள்ளு வண்டி இட்லிக்கடையோ, கம்ப்யூட்டர் கம்பெனியோ எதுவா இருந்தாலும் பணம் போடுறவன் தான் முதலாளி. சம்பளம் வாங்கி வேலை பார்க்குறவன் தான் தொழிலாளி. அங்கெல்லாம் முதலாளியிடம் பணிவும் குழைவும் காட்டுவான் தொழிலாளி. இதுதான் உலக வழக்கம். ஆனா சினிமா உலகம் இதுக்கு நேர் எதிர். இங்கே லட்சக்கணக்குல, கோடிக்கணக்குல நடிகர்களுக்கு சம்பளம் கொடுப்பவர் தயாரிப்பாளர் என்கிற முதலாளி. ஆனா சம்பளம் வாங்கும் தொழிலாளியான நடிகனிடம் முதலாளி பணிவு காட்டி, குழைவு காட்டும் அதிசயம் சினிமாவில் தான் நடக்கும். காரணம் மேக்-அப் போடும் நடிகர்களுக்கு இருக்கும் மவுசு, முதல் போடும் தயாரிப்பாளர்களுக்கு இல்லை என்பது தான் நிஜம். இதை கலைஞானத்தின் அனுபவமும் உணர்த்துகிறது.

பேர், புகழ், செல்வாக்கு, தானதர்மத்தில் கொடிகட்டிப் பறந்த மதுரை மாவட்டம் எழுமலை ஜமீன்தார் சங்கரபாண்டித் தேவர், துரோகத்தாலும் சூழ்ச்சியாலும் ஜமீனை இழந்து, கடைசி காலத்தில் கலைஞானத்தின் முயற்சியால் சின்னப்பதேவர் அவருக்கு உதவிய கதையைப் படித்ததும் உள்ளபடியே மனசு கனத்துப் போனது.

சினிமா சீக்ரெட்டின் முதல் மூன்று பாகங்களுக்கு வாசகப் பெருமக்கள் அளித்த பேராதரவை தொடர்ந்து இந்த நான்காம் பாகத்தை மகிழ்வுடன் வெளியிடுகிறோம். இதற்கும் உங்கள் பேராதரவு தொடரும் என்ற நம்பிக்கையில்....

-என்றென்றும் உங்கள்

நக்கீரன் கோபால்

# பார்த்திபனின் முன்னுரை!

திரைத்துறையில் பலருக்கு (**Super Star Rajinikanth** உட்பட) முன்னுரையாக, பல ஜாம்பவான்களுக்கு முன் உரையாடல் எழுதியவராக, பல தலை முறைகளுக்கு முன் கதை எழுதியவராக, நான் அடிக்கடி கூறும், '**Fire**-க்கு போற வரைக்கும் உள்ளுக்குள்ள ஒரு **Fire** இருக்கணும்' என்ற வாழ்க்கியத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்பவர், திரு.கலைஞானம் அவர்கள்.
பெயரளவில் இல்லாமல், திரைக்கலை சார்ந்து, ஞானத்தை முலைப்பாலாய் யாரும் ஊட்டாமல், கலைப்பாலாய் தன் அனுபவத்திலிருந்து தானே கறந்து, தன் அயராத உழைப்பால் புட்டியில் நிரப்பி பெத்தடின் மருந்தாய் தனக்குத்தானே புகட்டிக் கொண்டவர்.

எழுபதில் எழுவதே சிம்மசொப்பனம் (உட்கார்ந்து விட்டால் எழுப்பிவிட ஏழு பேர் தேவை) இவரின் **70+**இல் கதை என்று சொல்லிவிட்டால் போதும், க-வுக்கும் தை-யிக்கும் நடுவில், இவரது அனுபவங்கள் சீறிக் கிளம்பி சிவ தாண்டவமே ஆடும்.

**100** வருட சினிமாவில், பாதிக்கு மேற்பட்டவை இவரது கதை விவாதத்தில் **Record** டான்ஸ் ஆடும். சினிமா பற்றி ஏற்கனவே எழுதியவர்களின் **Record**-ஐ **Break** செய்யும் எழுத்து நக்கீரனில் இவர் எழுதியது.

யதார்த்தமாக, அதையும் நாசூக்கான யதார்த்தமாக சுவையோடு ருசிக்கும் விருந்தாக்கிவிட்டார். சில வேளையில் அவரது எழுத்தில் நிர்வாண பால் இருக்கும். ஆடையில்லாமல், அதாவது அநாவசிய பாசாங்கு இல்லாமல், படிக்க அதிர்ச்சியாகக் கூட இருக்கும்.



உதாரணத்திற்கு, தேவரீர் தேவர் பழனி முருகனின் கோவணத்தை வாங்கி வந்து அதை தண்ணீரில் கசக்கிக் குடித்தார் என்பது போன்ற செய்திகள்.

பார்வையாளனுக்கு வெறுமனே கொக்கி போட்டு இழுக்க மட்டுமே இல்லாமல், அதற்கான காரண காரியங்களை பதவிசாக பதிவு செய்திருப்பார்.

நடுப்பக்க கவர்ச்சிப் படத்தைக் கூட, இரண்டாம் முறை பார்க்கும்முன் இவர் பக்க கட்டுரையை அதிக சுவாரஸ்யத் தோடு படிக்கத் தூண்டியது 'சினிமா சீக்ரெட்' கட்டுரை.

நக்கீரன் வாயிலாக சினிமாவைப் பற்றிய ஒரு சிறந்த பதிவு. அவரை என் 'கதை திரைக்கதை வசனம் இயக்கம்' திரைப் படத்தில் தோன்றச் செய்து என்னை கௌரவித்துக் கொண்டேன்.

அவரது திறமைக்கான கௌரவத்தை திரையுலகம் விரைவில் அளிக்கும்.

-ஆர்.பார்த்திபன்

நடிகர்-இயக்குநர்

# கதை மேதையின் கதை!

சிலரைப் பார்க்கும் முதல் நிமிடமே பிடித்துவிடும். அப்படித் தான் எனக்கும் கதை மேதை கலைஞானம் அவர்களைப் பார்த்ததுமே பிடித்தது.

திரைக்கதை சிகரம் கே.பாக்யராஜ் அவர்களை திரை யில் மட்டும் வியந்து கொண்டி ருந்த நான் அவரிடம் உதவியாள ராய் சேர்ந்து இரண்டு படங்களில் கற்றது கடலளவு. அப்போது கிடைத்த நல்ல அறிமுகங்களில் கலைஞானம் அவர்களும் ஒருவர்.

நெடுநெடுவென்ற உயரத்தில் வெள்ளை வேட்டி, வெள்ளை முழுக்கை சட்டையில் ஒரு தனி மரியாதையை பறித்துக்கொள்ளும் தோற்றம். அதைவிட முக்கியமான விஷயம்... அவர் உதடுகளில் நிரந்தரமாக நாற்காலி போட்டு அமர்ந்திருக்கும் வசீகரமான புன்னகை.

திரையுலகத்தின் பெரிய ஜாம்பவான்களுடன் பழகியவர், ஏகப்பட்ட சாதனைகளைச் செய்தவர் என்பதெல்லாம் அவரிடம் தெரியவே தெரியாது.

திரைக்கதை விவாதங்களில் காட்சிகள் கண் களில் விரியும்படி தெளிவாக காரண காரியத்தோடு சொல்வதில் வல்லவர். எந்த ஒரு காட்சிக்கும் தன் வாழ்க்கை அனுபவத்திலிருந்து உதாரணமும் சேர்ந்து வரும். அதேசமயம் மற்றவர்கள் சொல்வதையும் கூர்ந்து கவனிப்பார். தான் சொல்வதே சிறந்தது என்று முரட்டுத்தனமான வாதமெல்லாம் செய்யமாட்டார்.

ஒருமுறை ஈரோடுக்கு அருகில் பாக்யராஜ் அவர்களின் சித்தோடு பண்ணை வீட்டில் 'பவுனு பவுனுதான்' திரைப்படத்தின் கதை விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, தன் சொந்த வாழ்க்கையைப் பற்றி என்னிடம் மனம்விட்டு அவர் பகிர்ந்துகொண்டபோது என் உள்ளத்தில் அவர் மிகவும் உயர்ந்தார்.



ஈரோட்டிலிருந்து சென்னைக்கு அவருடன் காரில் பயணம் செய்தேன். அப்போது அவர் புது பஸ்களின் சேசிஸ்களை மற்ற ஓட்டுனர்களுடன் குழுவாகச் சென்று வட இந்தியாவிலிருந்து ஓட்டி வந்தபோது ஏற்பட்ட அனுபவங்களைச் சொன்னார். அதில் அவர் சொன்ன ஒரு சம்பவம் இதயத்தை உருக்கும் விதமாக இருந்தது. இதை திரைப்படமாகச் செய்யலாமே என்றேன். அவர் சிரித்தார். முழு திரைக்கதையும் செய்து

வைத்திருப்பதாகச் சொன்னார். இந்தச் சம்பவம் பற்றி 'சினிமா சீக்ரெட்' புத்தகத்தில் அவரே விரிவாகச் சொல்லியுள்ளார்.

நக்கீரன் இதழில் தொடராக அவர் எழுதிவரும் 'சினிமா சீக்ரெட்'டின் மூன்று பாகங்களையும் வாங்கி வரச் சொன்னேன். நேரம் கிடைக்கும்போது முதல் பாகத்தி-ருந்து கொஞ்சம் கொஞ்சமாக வாசித்து முடிக்கலாமென திட்டமிட்டிருந்தேன். புத்தகங்களை வாங்கிய நான் மாலையில் முன்னுரைகளை மட்டும் படிக்கலாமே என்று ஆரம்பித்தேன். பிறகு நான்கைந்து அத்தியாயம் படிக்கலாம் என்று தொடர்ந்தேன். நம்புங்கள்... அன்றே முதல் பாகத்தை முடித்துவிட்டேன். அடுத்தநாள் மதியம் இரண்டாம் பாகம் தொட்டேன். அன்று நள்ளிரவு தாண்டி மூன்றாவது பாகத்தையும் படித்து முடித்துவிட்டு நேரம் பார்த்தால்... அதிகாலை மணி நான்கு.

சினிமாவில் வெற்றிபெற ஆர்வப்படும் எவரும் இந்தப் புத்தகங்களை அவசியம் படிக்க வேண்டும். ஆர்வம் மட்டும் போதாது என்பதையும், அபாரமான திறமையும் வேண்டும் என்பதையும், திறமையோடு பொறுமையும் விடாமுயற்சியும், சகிப்புத்தன்மையும்... இதையெல்லாம்விட கொஞ்சம் அதிர்ஷ்டமும் வேண்டும் என்பதையும் இவரின் வாழ்வின் அனுபவங்கள் தெளிவாகப் புரிய வைக்கும்.

திரையுலகின் முக்கியமான தூண்களில் ஒருவரான சாண்டோ சின்னப்ப தேவரைப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக சில செய்திகளை அறிந்திருந்தாலும், அவருடைய உள் பக்கத்தை அவரின் உளவியல்பூர்வமாக அணுகுமுறைகளை இவரின் வார்த்தைகளில் அறியும்போது பிரமிப்பும், ஆச்சரியமும், மதிப்பும், மரியாதையும் இணைந்து ஏற்படுகிறது. அதேபோல திருமதி.கே.பி.சுந்தராம்பாள் பற்றியும் நிறைய புதுப்புது தகவல்களை அறிந்துகொள்ள முடிந்தது. இந்தப் புத்தகங்களில் நான் லயித்துப் போனதற்கான காரணங்களை விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

**1.** தன் வாழ்க்கையின் வரலாற்றைச் சொல்லும்போது பூசி மெழுகுதல் என்பதே இல்லை. அப்பட்டமான உண்மைகளை நேர்மையாகச் சொல்லியிருக்கிறார்.

**2.** பெரிய சாதனைகளை தமிழ் சினிமாவில் இவர் செய்திருந்தாலும் அதைப்பற்றி எங்கும் சுய தம்பட்டம் என்பதே இல்லை.

**3.** பல சினிமா பிரமுகர்களைப் பற்றி சொல்லியிருக்கிறார். ஆனால் எங்கும் ஒரு துளி அளவிற்கும் எவருக்கும் களங்கம் சேர்க்கும் விதமாக ஒரு வார்த்தை கூட இல்லை. யாரைப் பற்றிச் சொன்னாலும் அவர்களின் கண்ணியமான குணங்களையும், நேர்மையான செய்திகளையுமே பதிவு செய்திருக்கிறார்.

**4.** பரபரப்புக்காக பல திரை மறைவு ரகசியங்களையும், பத்திரிகைகளில் வராத செய்திகளையும் பகிர்ந்து கொண்டிருக்க முடியும். ஆனால் அதை இவர் செய்யவில்லை.

**5.** இவரின் அனுபவங்களைச் சொல்லக் கேட்டு அழகான நடையில் அடுத்த அத்தியாயத்தை உடனே படிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் விதமாக எழுதிவரும் நக்கீரனின் துணை ஆசிரியர் இரா.த.சக்திவேல் அவர்களின் திறமை வரிக்கு வரி பளிச்சிடுகிறது.

**6.** இந்தப் புத்தகங்களில் ஒரு தனி மனிதனின் வரலாறு மட்டும் இல்லை. ஒரு தனி மனிதனுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் வாயிலாக தமிழ்த் திரையுலகத்தின் வரலாறும், திரையுலகப் பிரமுகர்களின் குணங்களும், அவர்கள் தங்கள் வெற்றிக்காக சிந்திய வியர்வையும், உழைப்பும், அவர்கள் சந்தித்த பிரச்சினைகளும் சவால்களும், அவற்றை அவர்கள் எதிர்கொண்ட சாதுர்யமும், தைரியமும்... என்று பொதுவாக எவரின் வாழ்க்கைக்கும் அவசியப்படுகிற தன்னம்பிக்கை கூட்டும் புத்தகங்களாகவே இவை அமைந்திருக்கின்றன.

இந்தப் புத்தகங்களை தமிழ்த் திரையுலகில் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கும் அத்தனைக் கலைஞர்களும், இயங்க விரும்பும் ஆர்வலர்களும், தன்னம்பிக்கை, விடாமுயற்சி இவற்றின் மேல் நம்பிக்கை கொண்டுள்ள எவரும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும்.

தமிழ்த் திரைப்பட உலகில் பல தலைமுறைகளைக் கண்டகலைஞானம் அவர்களே, எதுவும் சாதிக்காமல் கூத்தாடும் குறைகுடங்களுக்கு மத்தியில் பல சாதனைகளைச் செய்துவிட்டு நிறைகுடமாக வாழ்ந்துவரும் உங்கள் பக்குவத்தை அனைவரும் பாடம் பயில வேண்டும் என்று விரும்புகிறேன்.

உங்களின் இந்தப் புத்தகத்தின் அடுத்தடுத்த பாகங்களுக்காக மிகுந்த ஆர்வத்துடன் நான் காத்திருக்கிறேன்.

நக்கீரன் ஆசிரியர் கோபால் அவர்களை, இந்த அனுபவப் புதையலைக் கண்டெடுத்ததற்காகவே பலமுறை பாராட்டலாம்.

பிரியங்களுடன்

பட்டுக்கோட்டை பிரபாகர்

# பாகம்-4ல் உள்ள சிறப்பம்சங்கள்!

சிறு குழந்தைகளைப் போல் விளையாடிக்கொண்ட எம்.ஜி.ஆர். - சிவாஜி

பாகவதர் காதல் காட்சியால் என் வாழ்க்கையில் உண்டான பிரளயம்

எம்.ஜி.ஆருக்காக எழுதிய கதையில் ரஜினி

பிரபல இயக்குநர் - நடிகர் கடும் மோதல்

பிரபல பாடகர் கே.ஜே. யேசுதாஸுடன் நான் போட்ட சண்டை

யேசுதாஸ் செய்த சத்தியம்

சென்னையின் முதல் ஸ்டுடியோவான ஸ்டார் ஸ்டுடியோ -சில சுவாரசியத் தகவல்கள்

பானுமதியுடன் நான் கதை சொன்ன அனுபவம்

'இது நம்ம ஆளு' பட சர்ச்சை

பாக்யராஜுக்கு எம்.ஜி.ஆர். போட்ட கட்டளை

பாக்யராஜுடன் எனது கலைப்பயணம்

பாக்யராஜ்-பாலாஜி மோதல்! உண்மை என்ன? ரஜினி சமாதானம்

எழுமலை ஜமீன்தாரின் உருக்கமான, உயர்வான வாழ்க்கைக் கதை

குடும்பப் பிரச்சினையை என்னிடம் சொல்லி அழுத தேவிகா

அப்பாவுடன் சேர மறுத்த கனகா

சினிமாவில் இசையமைப்பாளராக ஜெயிக்க வேண்டும் என நினைத்த ஒரு டாக்டரின் வாழ்க்கையில் விதி ஆடிய விளையாட்டு -நெஞ்சை உருக்கும் சம்பவம்

இன்னும் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது.

வாசியுங்கள்... வரலாறை!

-கலைஞானம்

# என் கதைகளில், தயாரிப்புகளில்
## அறிமுகமானவர்கள் பட்டியல்

# நட்சத்திரங்கள் :

ரஜினிகாந்த்

(கதாநாயகனாக - படம்: பைரவி)

கமல்ஹாசன்

(குழந்தை நட்சத்திரமாக இருந்த கமல் வாலிபனாக ஆனதும் மறு அறிமுகம். படம் : குறத்தி மகன்)

கீதா (படம் : பைரவி)

ஜெய்சித்ரா (படம் : குறத்தி மகன்)

வாணிஸ்ரீ (படம் : காதல் படுத்தும் பாடு)

சுருளிராஜன் (படம் : காதல் படுத்தும் பாடு)

எஸ்.எஸ்.சந்திரன் (படம் : காதல் படுத்தும் பாடு)

மாதவி (படம் : புதிய தோரணங்கள்)

சொப்னா (படம் : நெல்லிக்கனி)

'ராஜபார்ட்' உடையப்பா

(படம் : தாய் வீட்டு சீதனம்)

கோவிந்தா (படம் : லவ் 86 - இந்தி)

கண்ணன் (எஸ்.எஸ்.ஆரின் மகன்- இரண்டாவது

நாயகன் படம் : காக்கைச் சிறகினிலே)

முத்துமாணிக்கம் (எஸ்.எஸ்.ஆரின் தங்கை மகன்- இரண்டாவது நாயகன் படம் : செல்லக்கிளி)

நாகராஜசோழன் (கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்,

படம் : எதிர்வீட்டு ஜன்னல்)

# இயக்குநர்கள்

எம்.பாஸ்கர் - (படம் : பைரவி)

எஸ்.எஸ். தேவதாஸ் - (நடிகை தேவிகாவின் கணவர், படம் : வெகுளிப்பெண்)

கே.எம்.பாலகிருஷ்ணன்- (நடிகர் குமரிமுத்துவின் அண்ணன். படம் : ஆறு புஷ்பங்கள்)

பனசை மணியன் - (படம் : நீதிக்கு ஒரு பெண்)

# பாடலாசிரியர்கள்

கவிஞர் சிதம்பரநாதன் - (படம் : பைரவி)

அருப்புக்கோட்டை தவசுமணி-

(படம் : இளஞ்ஜோடிகள்)

# பின்னணிப் பாடகர்கள்

சீர்காழி சிவசிதம்பரம் -

(படம் : மிருதங்க சக்கரவர்த்தி)

சந்திரபோஸ் - (படம் : ஆறு புஷ்பங்கள்)

# புகைப்படக் கலைஞர்கள்

'ஸ்டில்ஸ்' ரவி - (படம் : பைரவி)

வெள்ளைச்சாமி - (படம் : புதிய தோரணங்கள்)

நடராஜன் - (படம் : செல்லக்கிளி)

## படத் தொகுப்பாளர்கள்

கௌதமன் - (படம் : புதிய தோரணங்கள்)

வெள்ளைச்சாமி - (படம் : புதிய தோரணங்கள்)

## நான் அறிமுகம் செய்த தயாரிப்பாளர்கள்

## என். சகுந்தலா

டி.என். வெங்கட்ராமன்

முருகன் கலைஞானம்

பி.மகாலட்சுமி

பி.கோப்பெருந்தேவி

என்.ஜான்ஸிராணி

## நான் அறிமுகம் செய்த மூலக்கதையாசிரியர்

புஷ்பவல்லி கலைஞானம் -

(படம் : புதுப்பட்டி பொன்னுத்தாயி)

## என் வாழ்க்கை மீது அக்கறை காட்டியவர்கள்

கவி. கே.பி.காமாட்சி சுந்தரம்

கவிஞர் சுரதா

எழுத்தாளர் ஏ.எஸ்.முத்து

நான் ஒரு கலைஞன் ஆவதற்கு அன்பும், அக்கறையும் காட்டிய, காட்டிவருபவர் என் அண்ணன் ஆர்.எம். கிருஷ்ணசாமி.

# நான் திரைக்கதைகளில் பங்கேற்ற இயக்குநர்கள்- தயாரிப்பாளர்கள்

சாண்டோ சின்னப்ப தேவர்

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

ஜோஸப் தளியத் (சிட்டாடல் ஸ்டுடியோ)

ஏ.பீம்சிங்

எஸ்.தியாகராஜன்

(சின்னப்ப தேவரின் மாப்பிள்ளை)

மதுரை திருமாறன்

முக்தா சீனிவாசன்

எம்.எஸ்.காசிவிஸ்வநாதன்

விசு (என்கிற) விஸ்வநாதன்

வி.சி. குகநாதன்

பாரதிராஜா

பாக்யராஜ்

ஆர்.வி.உதயகுமார்

பி.வாசு

கலைமணி

கே.ராஜேஷ்வர்

பார்த்திபன்

கோகுல கிருஷ்ணன்

மற்றும் பலர்...

# என் கதைகளில், படைப்பில் பங்குபெற்ற பிரபலங்கள், நட்சத்திரங்கள்

நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

ஜெமினிகணேசன்

எம்.என்.நம்பியார்

ஜெய்சங்கர்

சிவகுமார்

ரவிச்சந்திரன்

முத்துராமன்

ராதாரவி

நாகேஷ்

கராத்தே மணி

ஸ்ரீகாந்த்

வி.கே.ராமசாமி

தேங்காய் சீனிவாசன்

சோ ராமசாமி

பாலாஜி

மேஜர்சுந்தர்ராஜன்

சுதாகர்

கே.ஏ.தங்கவேல்

கார்த்திக்

சுரேஷ்

எஸ்.வீ.சேகர்

ஆர்.எஸ்.மனோகர்

சிலோன் மனோகர்

நிழல்கள் ரவி

வெண்ணிற ஆடைமூர்த்தி

விசு (எ) விஸ்வநாதன்

வி.எஸ்.ராகவன்

டைரக்டர் கே.விஸ்வநாத் (சங்கராபரணம்)

பார்த்திபன்

காகா ராதாகிருஷ்ணன்

எஸ்.ஏ.அசோகன்

கிருபானந்த வாரியார்

விஜயகுமார்

நெப்போலியன்

சங்கிலிமுருகன்

கிருஷ்ணம்ராஜ் (தெலுங்கு)

நாகபூஷணம் (தெலுங்கு)

ராஜநளா (தெலுங்கு)

கலைச்செல்வி ஜெயலலிதா

கே.ஆர்.விஜயா

சுஜாதா

மனோரமா

ராதா

விஜயசாந்தி

தேவிகா

கனகா

ராஜசுலோசனா

எஸ்.வரலட்சுமி

சி.ஐ.டி. சகுந்தலா

ஸ்ரீப்ரியா

ஸ்ரீவித்யா

ஒய்.விஜயா

ஜெயந்தி

ஜெயா

சுலக்சனா

சுகுமாரி

சச்சு

சுந்தரிபாய்

அம்பிகா

லட்சுமி

ராதிகா

மேஜிக் ராதிகா

தீபா

வசந்தா

('இரவும் பகலும்' அறிமுகம்)

சூரியகலா

காந்திமதி

எஸ்.என்.லட்சுமி

வெண்ணிறஆடை நிர்மலா

மஞ்சுளா

ஜமுனா (தெலுங்கு)

ஜெயப்பிரதா (தெலுங்கு)

கிருஷ்ணகுமாரி (தெலுங்கு)

# இயக்குநர்கள்

ஜோசப் தளியத் (சிட்டாடல் ஸ்டுடியோ)

கே.எஸ். கோபாலகிருஷ்ணன்

ஏ.பீம்சிங்

கே.சங்கர்

பி.வாசு

முக்தா சீனிவாசன்

மதுரை திருமாறன்

எஸ்.எஸ். தேவதாஸ் (தேவிகா கணவர்)

எம்.பாஸ்கர் (பைரவி டைரக்டர்)

கர்ணன்

என்.கே.விஸ்வநாதன்

பி.ஆர்.சோமு

ஆர்.சி. சக்தி

கே.எஸ்.ரவிகுமார்

இராம.நாராயணன்

முரசொலி- கே.சொர்ணம்

தாசரி நாராயணராவ் (தெலுங்கு)

# பாடலாசிரியர்கள்

கவிஞர் கண்ணதாசன்

கவிஞர் வாலி

புலவர் புலமைப்பித்தன்

ஆலங்குடி சோமு

முத்துலிங்கம்

பிறைசூடன்

கங்கைஅமரன்

# இசை அரசர்கள்

எம்.எஸ்.விஸ்வநாதன்

கே.வி. மகாதேவன்

இளையராஜா

சங்கர்-கணேஷ்

வி.குமார்

டி.ஆர்.பாப்பா

# பாடியவர்கள்

டி.எம்.சௌந்தரராஜன்

கே.ஜே.யேசுதாஸ்

எஸ்.பி.பாலசுப்ரமணியம்

பாலமுரளிகிருஷ்ணா

மலேசிய வாசுதேவன்

மனோ

பி.சுசீலா

எஸ்.ஜானகி

எல்.ஆர்.ஈஸ்வரி

வாணிஜெயராம்

# வசனம் எழுதியவர்கள்

ஏ.எல்.நாராயணன்

'வியட்நாம்வீடு' சுந்தரம்

ஏ.எஸ்.பிரகாசம்

தூயவன்

பனசை மணியன்

# டான்ஸ் மாஸ்டர்கள்

தங்கப்பன்

கமலஹாசன் (உதவி டான்ஸ் மாஸ்டர்)

சுந்தரம் (பிரபுதேவா தந்தை)

விமலா (படம் : இளஞ்ஜோடிகள்)

# ஸ்டண்ட் மாஸ்டர்கள்

சங்கர்

மாதவன்

ஹயாத்

# என் நாடகங்களில் தலைமை தாங்கியவர்கள்

'கலைவாணர்' என்.எஸ்.கிருஷ்ணன் டி.ஏ.மதுரம்

எம்.ஏ.வேணு ('சம்பூர்ண ராமாயணம்' படம் எடுத்த தயாரிப்பாளர்)

எஸ்.ஏ.நடராஜன் ('மந்திரிகுமாரி' படப் புகழ்)

# நாடகங்களில் என்னுடன் நடித்தவர்கள்

'குலதெய்வம்' ராஜகோபால்

காகா ராதாகிருஷ்ணன்

கவி கே.பி.காமாட்சி சுந்தரம்

வி.எம். ஏழுமலை

எஸ்.ஏ.நடராஜன் (மிட்டாதாரர்)

கே.தவமணி தேவி (இலங்கைக் குயில், -ஆரவல்லி சூரவல்லி, வனமோகினி போன்ற படங்களில் நடித்துப் புகழ்பெற்ற தமிழ் சினிமாவின் முதல்கவர்ச்சிக்கன்னி)

'கண் திறந்தது' ராமநாதன் (மனோரமாவின் கணவர்)

# நான் நடித்த படங்கள்

## *துணை நடிகராக...*

கோகிலவாணி

தெனாலிராமன்

செல்லப்பிள்ளை

வெறும் பேச்சல்ல

# முக்கிய கதாபாத்திரமாக...

கே. பாக்யராஜின் 'இது நம்ம ஆளு'

பெரிய இடத்து மாப்பிள்ளை

## *சிறப்புத் தோற்றத்தில்...*

கோபுர வாசலிலே

பார்த்திபனின் 'கதை-திரைக்கதை-வசனம்-இயக்கம்'

# எம்.ஜி.ஆர்.-சிவாஜி நட்பு!

'அந்தமான் காதலி'', 'சூரியகாந்தி', 'அக்கரைப்பச்சை' படங்களின் கதாசிரியர் பேராசிரியர் ஏ.எஸ்.பிரகாசம், ஏற்கனவே எனது 'புதிய தோரணங்கள்' படத்திற்கு வசனம் எழுதியிருந்தார். இப்போது சிவாஜியை வைத்து நான் தயாரிக்கும் 'ராஜரிஷி' படத்திற்கும் அவரையே வசன கர்த்தாவாக ஒப்பந்தம் செய்தேன். அந்த நட்பின் அடிப்படையில் பிரகாசம் என்னைச் சந்தித்து ஒரு கோரிக்கை வைத்தார்.

''நான் 'சாதனை' என்கிற கதையை சிவாஜியிடம் சொன்னேன். நானே டைரக்ட் பண்ணவிருக்கிறேன். கதை கேட்ட சிவாஜி, 'தம்பி சண்முகத்தைப் பாருங்க'னு கால்ஷீட் தராமல் தட்டிக் கழிக்கிறார். அதனால நீங்கதான் எனக்காக சிவாஜியிடம் ரெகமெண்ட் பண்ணணும்''' என்றார்.

ஒரு படப்பிடிப்பில் இருந்த அண்ணன் சிவாஜியைச் சந்தித்து விஷயத்தைச் சொன் னேன்.

'ஞானம்... அவரு கொஞ்சம் கோபக்காரர். 'அந்தமான் காதலி' படத்திலயே பார்த்துட்டேன். அவர் எழுதின வசனத்தில் ஏதாவது ஒண்ண, என் வசதிக்கு மாத்தினா ஒத்துக்கமாட்டார். ரொம்பப் பிடிவாதமா இருப்பார். வேற யாரும் என்கிட்ட பிடிவாதம் காட்டியதில்லை. அவரு தேவரு. மறுபடி அவர்கூட படம் பண்ணினா... மனக்கசப்புதான் வரும். அத அவர் வெளியில சொல்வாரு. 'தேவனோட வளர்ச்சிக்கு, ஒரு தேவனே தடையா இருக்கான்'னு எனக்கு கெட்டபேரு வரும். என்னால முடியாது. நீயே அவருகிட்ட சொல்லீரு'' என்றார் சிவாஜி.

'சரிங்கண்ணே...' எனச் சொல்லிவிட்டு வந்தேன்.

எனக்குள் ஒரு யோசனை ஓடியது. அதை எப்படிச் சாத்தியப்படுத்தலாம்... என ஒரு திட்டமும் போட்டேன். அதை பிரகாசத்திடமும் சொன்னேன்.



'இன்னும் ஒருவாரத்துல, தஞ்சாவூர்ல சிவாஜியண்ண னோட கமலா-சாந்தி இரட்டைத் தியேட்டர் திறப்புவிழா நடக்கப்போகுது. அண்ணன் எம்.ஜி.ஆர்.தான் திறந்துவைக்கப் போறாரு. அந்த விழாவுக்கு நானும், சென்னை கலெக்டர் சுந்தரமூர்த்தியும் என் கார்லயே போக முடிவு செஞ்சிருக்கோம். எங்ககூட நீங்களும் வாங்க. வரும்போது புதுசா ஒரு பெட்டி வாங்கி, அதுல ஒருலட்ச ரூவா பணத்தை வச்சிக்கிட்டு வாங்க. சிவாஜி கால்ஷீட்ட வாங்கிடலாம்'''என்றேன்.

"எப்படி... சார்?"

"நீங்க வாங்க... அங்க போன பிறகு எப்படினு சொல்றேன்" என்றேன்.

நம்பிக்கையுடன் சென்றார் பிரகாசம்.

அண்ணன் எம்.ஜி.ஆரும், அண்ணன் சிவாஜியும், அரசியல் ரீதியாக, தொழில் ரீதியாக வெளி உலகிற்கு தங்களை எதிரும் புதிருமாக காட்டிக்கொண்டாலும், பர்ஸனலாக இருவரும் உயிருக்குயிராக, அண்ணன்-தம்பியாகவே பழகினார்கள். அதை வெளிஉலகிற்கு காட்ட வேண்டிய நேரம் வந்தபோது காட்டினார்கள். இது... அவர்களை அறிந்தவர்களுக்குத் தெரியும். எனது அனுபவத்திலும் அதைக் கண்டிருக்கிறேன்.

எம்.ஜி.ஆர் - சிவாஜி நட்பிற்கு இதோ... இந்தச் சம்பவமே உதாரணம்.

டைரக்டர் கே.சங்கரை சந்தித்து, அடுத்து நாங்கள் சிவாஜி அண்ணனை வைத்து எடுக்கவிருக்கும் 'ராஜரிஷி' படம் பற்றி பேசிக்கொண்டிருந்தோம்.

அப்போது சங்கர் "என்ன கலைஞானம்... எம்.ஜி.ஆரும், சிவாஜியும் எவ்வளவு பெரிய ஆளுங்க. ஆனா ரெண்டுபேரும் நேத்து குழந்தையாவே மாறீட்டாங்க"என்றார்.

"அதைச் சொல்லுங்க சார்" என்றேன் ஆர்வமாக.

எம்.ஜி.ஆரும், சங்கரும் எம்.ஜி.ஆரின் வீட்டில் தனிமையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது... 'சங்கர்... இப்போ நான் ஒரு தமாஷ் பண்ணப்போறேன். நீங்க இருந்து வேடிக்கை பாருங்க' என எம்.ஜி.ஆர். சொல்ல... சங்கர் சுற்றும்முற்றும் பார்த்து புரியாமல் முழித்திருக்கிறார்.

'தம்பி கணேசன் ஒரு குழந்தை மாதிரி... உங்களுக்குத் தெரியுமா? கணேசனை வச்சுத்தான் தமாஷ் பண்ணப் போறேன். தஞ்சாவூர்ல தம்பியோட தியேட்டரை திறக்க தேதி குடுத்துட்டேன். அதைவச்சு நான் விளையாட்டுக் காட்டப் போறேன். தம்பி துடிச்சிக்கிட்டு இங்க வரும் பாருங்களேன்" என்ற எம்.ஜி.ஆர்., தனது பி.ஏ. மூலம் சிவாஜிக்கு போன் போட்டு கொடுக்க சொல்லி இருக்கார்.

சிவாஜி லைனுக்கு வந்ததும்... 'கணேசா... டெல்லியில ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு. கண்டிப்பா நான் போயே ஆகணும். திரும்பி வர ரெண்டு மூணு நாளாகும். நாளன்னைக்கு நான் தியேட்டர் திறப்பு விழாவுக்கு வரமுடியாது. வேற யாரையாவது வச்சு திறந்துக்க."

"ஐயய்யோ..."

"என்னப்பா அங்க சத்தம்?"

"நான்தான்ணே... திடீர்னு இப்படி சொன்னீங்கன்னா எப்படி? விழாவுக்கு வர்றவங்க... 'ஏன் எம்.ஜி.ஆர். வரல? மறுபடியும் முன்ன மாதிரி உங்களுக்குள்ள சண்டையா? முன்னாடி பேப்பர்ல மாத்தி மாத்தி அறிக்கை குடுத்த மாதிரி... மறுபடியும் பிரச்சினையா?'னு கேட்பாங்களே. அவங்களுக்கு என்ன பதில் சொல்றது? நான் உங்களைப் போகவிடமாட்டேன். வீட்டுக்கு வந்து உங்க கார் கிளம்பும் போது காருக்கு முன்னால படுப்பேன்."

"காருக்கு முன்னால படுப்பியா? நான் இப்போ ஏரோட்ராம்ல இருக்கேன் கணேசு."

"என்னது ஏரோட்ராம்ல இருக்கீங்களா? அண்ணே... நீங்க அடுத்த ஃபிளைட்ல போங்க. நான் இப்பவே அங்க வர்றேன்."

"சொன்னா கேட்கமாட்ட. என்னமோ செய்"என எம்.ஜி.ஆர், போனை வைத்துவிட்டார்.

அடுத்த அரைமணிநேரத்தில்... சிவாஜியிடமிருந்து போன்.

"என்ன கணேசா... வீட்டுலதான இருக்க?" என எம்.ஜி.ஆர். கேட்க..."

"இல்லண்ணே... ஏரோட்ராம்ல. நீங்க இங்க வரவே இல்லையாமே?"

"சி.எம்.ங்கிறதால ஸ்பெஷல் ரூம்ல உட்கார வச்சிருக்காங்க. இன்னும் நீ குழந்தையாவே இருக்க. நீ எவ்வளவு பெரிய நடிகன். ஆனா... வெளி உலகம் தெரியாம இருக்கியே?"எனச் சொல்லிவிட்டு எம்.ஜி.ஆர், போனை வைக்க...

சில நிமிடங்களுக்குப்பின் மீண்டும் சிவாஜி போன் செய்தார்.

"அண்ணே... வி.ஐ.பி. அறையிலும் நீங்க இல்லியேண்ணே. நீங்க இங்க வரவே இல்லன்னு அதிகாரிகள் உறுதியாச் சொல்றாங்கண்ணே..."

"நான்... யாருக்கும் தெரியாம ரகசியமா போறேன் கணேசா. புரோக்ராம் திடீர்னு சேஞ்ச் ஆயிடுச்சு. கார் மூலமா பெங்களூர் போய், அங்கிருந்து டெல்லி போறேன். நீ உடனே தோட்டத்துக்கு வா" என எம்.ஜி.ஆர். சொல்லிவிட்டு போனை வைக்க...

"நீங்க சி.எம்., ஆனா குழந்தையைப்போல விளையாடு றீங்களே?" என சங்கர் கேட்க...

"என்ன செய்றது... ஒரே டென்ஷன். ஒருநாளாவது ஜாலியா விளையாடணும்னு ஆசைப்பட்டேன். வேற யார்கிட்ட நான் இப்படி இறங்கிவந்து விளையாட முடியும்?" என எம்.ஜி.ஆர். சொல்லியிருக்கிறார்.

அடுத்த அரைமணி நேரத்தில் எம்.ஜி.ஆர் வீட்டில் சிவாஜி. அவர் வந்திருப்பதை அறிந்த எம்.ஜி.ஆர். டெல்லி பயண ஏற்பாடுகளுக்கு துரிதப்படுத்துவது போலவே, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டபடியே கீழே இறங்கிவர...

"தியேட்டரை திறந்து வச்சிட்டுத்தான் நீங்க வேற எங்கேயும் போகணும். இல்லேன்னா... உங்களை போகவிடாம, உங்க கார் முன்னாடி உட்கார்ந்து சத்தியாக்கிரஹம் பண்ணுவேன்.''"

"நான் உன்னைத் தாண்டிப் போவேன்."

"எங்க தாண்டுங்க பார்க்கலாம்'''என்றபடி சிவாஜி போர்டிகோ தரையில் உட்கார்ந்துவிட... சங்கர் அடக்கமாட்டாமல் சிரித்துவிட்டார்.

"என்ன சங்கர்?" என சிவாஜி கேட்க...

"அவரு சி.எம்., நீங்க நடிகர்திலகம். ஆனா ரெண்டுபேரும் இப்படி இருக்கீங்களே?" எனச் சொல்ல, உடனே சிவாஜி, எம்.ஜி.ஆரைப் பார்க்க...

"ஒண்ணுமில்ல கணேசு. "சும்மா மைண்ட் ரிலாக்ஸுக்காக 'தம்பிகிட்ட தமாஷ் பண்ணப்போறேன்'னு சொன்னேன். நான் இப்படி விளையாடுறதுக்கான தகுதி வேற யார்கிட்ட இருக்கு?" என எம்.ஜி.ஆர். சொல்ல...

"இந்த விளையாட்டெல்லாம் என்கிட்ட வேணாம். நான் 'நடிகர்திலகம்' தெரியும்ல'''என பதிலுக்கு சிவாஜியும் ஜாலியாக ஜபர்தஸ்து காட்டியிருக்கிறார்.

"நான் சொன்னபடி சரியா வந்து தியேட்டரை திறந்து வைக்கிறேன்" என சிவாஜிக்கு விடை கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

அதன்பிறகு... "கணேசனுக்கு கள்ளம் கபடம் தெரியாது. "நடிப்புன்னு வந்துட்டா அவரை மிஞ்ச யாருமே இல்லை. 'உலகத்தில் ஒரே நடிகன் சிவாஜிதான்'னு நான் 'மிருதங்க சக்கரவர்த்தி' படம் பார்த்ததுமே சொன்னேனே" என சங்கரிடம் சொல்லியிருக்கிறார் எம்.ஜி.ஆர்.

இந்த தமாஷ் நடந்த மறுநாள்... சங்கர் என்னிடம் இதைச் சொன்னார்.

சங்கர் சொன்ன அந்த சம்பவம் என்னை சிலிர்க்கத்தான் வைத்தது.

சிவாஜியின் தியேட்டர் திறப்பு விழாவில்... தொண்டர் களிடமிருந்து, ரசிகனைக் காப்பாற்றிய எம்.ஜி.ஆர்.

# மாலை போட்டவருக்கு தர்ம அடி!

நாளை... தஞ்சாவூரில் சிவாஜியின் ‘கமலா-சாந்தி’ இரட்டைத் திரையரங்கை எம்.ஜி.ஆர். திறந்துவைக்கிற விழாவுக்கு... இன்று இரவு எனது காரில் நான், சென்னை கலெக்டர் சுந்தரமூர்த்தி, பேராசிரியர் ஏ.எஸ். பிரகாசம் ஆகிய மூவரும் பயணமானோம். சத்துணவு நிதிக்காக 'ஸ்டார் நைட்' நடத்த நான் முடிந்தளவு உதவியதால், கலெக்டர் எனது நெருங்கிய நண்பராகிவிட்டார். அதனால்தான் எனது காரிலேயே விழாவுக்கு வந்தார். நான் பிரகாசத்திடம் ஏற்கனவே சொல்லியிருந்தபடி புது பெட்டியில், புத்தம் புது ரூபாய் நோட்டுக்களாக ஒருலட்ச ரூபாயையும் எடுத்துவந்தார்.
''கலெக்டர் சார்... 'சாதனை' படத்தோட கதையை நான் கலைஞானத்திடம் சொல்லப் போறேன். நீங்களும் கேளுங்க'' எனச் சொல்லி விட்டு கதையை ஆரம்பித்தார் பிரகாசம்.

''ஒரு பிரபலமான சினிமா டைரக்டர், நடிப்புச் சொல்லித்தருவதன் நிமித்தம் நடிகைகளைத் தொட்டுப் பழகுகிறார். இதனால் குடும்பத்தில் பிரச்சினை. இந்தச் சமயம், சலீம்- அனார்கலி கதையை படமாக்க முடிவு செய்து, அனார்கலியாக ஒரு புதுமுகத்தை நடிக்க வைக்க ஒரு பெண்ணை தேர்வு செய்து வைத்திருக்கிறார். இது அந்த டைரக்டரின் லட்சியப் படம். ஆனால் 'நீங்க சினிமாவே எடுக்கக்கூடாது' என மனைவி தடை போட்டுவிடுகிறார். இந்த தடையிலிருந்து மீண்டு தன் லட்சியப் படத்தை டைரக்டர் எப்படி எடுக்கிறார். இதுதான் கதை''’என்றார்.

''தடை எப்படி நீங்குது?''

''கதையை இன்னும் மெருகேத்திக்கிட்டிருக்கேன். கம்ப்ளீட்டா முடிஞ்சதும் சொல்றேன் கலைஞானம்.''



"கதை ஓகே. பெரும்பாலான டைரக்டர்களின் வீடுகளில் இப்படி சந்தேகப் புயல் வீசிக்கொண்டுதானிருக்கு. டைரக்டரின் லட்சியம் எப்படி நிறைவேறுதுங்கிறதுக்கு நான் ஒரு கிளைக்கதையைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க"

"குடும்பத்தில் பிரச்சினை வருவதால் பல வருடங்களாக அவர் படம் இயக்குவதில்லை. டைரக்டரின் மனைவி பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது... 'ஏன் உங்க கணவர் இப்போது படம் டைரக்ட் பண்றதுல்ல? அவரோட படங்கள்லாம் எவ்வளவு அற்புதமான படங்கள் தெரியுமா? ஒரு நல்ல திறமையாளர்... ஏன் இப்படி சினிமாவை விட்டு விலகி இருக்காரு?' என பெண்களெல்லாம் அடிக்கடி விசாரிப்பார்கள். ஒரு கட்டத்தில் கணவனின் திறமையையும், செல்வாக்கையும் உணர்ந்த மனைவி... 'கணவனின் திறமையை பாழாக்கிவிட்டோமே' என மனம் வருந்துகிறாள்.

ஒருநாள்... தேடிப்பிடித்து ஒரு புதுமுக கதாநாயகியை கண்டுபிடித்து அழைத்து வருகிறாள்.

"நீங்க உங்க லட்சியப் படத்தை எடுங்க. இவள்தான் அனார்கலி. இவள் யார் என்று தெரிகிறதா? இருபது வருஷங்களுக்கு முன்... அனார்கலியாக

நடிக்க தேர்வு செய்து வைத்திருந்தீர்களே... அந்தப் பெண்ணின் மகள்தான் இவள்' என்கிறாள். அவளை அனார்கலியாகவும், தன் மகனை சலீமாகவும் வைத்து படம் எடுக்கிறார் டைரக்டர் ...இப்படி கொண்டு போலாமா?'' என்றேன் நான்.

காரின் முன்ஸீட்டில் அமர்ந்திருந்த கலெக்டர் பலமாக கைதட்டி... ''பேராசிரியரே... கலைஞானம் சார் சொன்ன மாதிரியே எடுங்க'' என்றார்.

''இதே தாட்தான் என்னோட மனசுலயும் ஓடிக்கிட்டிருக்கு. ஆனால் அதை பிரஸண்ட் பண்ணுவதில் எனக்குக் குழப்பம். கலைஞானம் தெளிவுபடுத்திட்டார்'' என்றார் பிரகாசம் பிரகாசமாக.

தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தோம். நான் எடுத்த அறையிலேயே மூவரும் தங்கி ரெடியானோம்.

''சிவாஜியோட கால்ஷீட் வாங்க ஒரு திட்டமிருப்பதாச் சொன்னீங்களே...'''என்றார் பிரகாசம்.

''சிவாஜியின் தம்பி சண்முகம் தஞ்சாவூர்லயே ரெண்டு வருஷமா தங்கி... ''தியேட்டர் திறப்புவிழா அன்றுதான் ‘ஷேவ் பண்ணுவேன்'னு லட்சியத்தோட இருக்கார். முதல்ல... நீங்களும், நானும் சண்முகத்தைப் போய்ப் பார்ப்போம். எம்.ஜி.ஆர்., ரிப்பன் வெட்டியதும் கரகோஷம் கேட்கும் சமயம் நீங்க பணப்பெட்டியைத் திறந்து என்கிட்ட குடுங்க'' என்றேன்.

அதன்படி சண்முகத்தை சந்தித்தோம். கரகோஷம் கேட்ட உடனேயே... 'அண்ணே... தியேட்டர் திறந்த நிமிஷமே லட்சுமி வந்திட்டா... புடிங்கண்ணே பணத்தை' என செண்ட்டிமெண்ட் டாக சொன்னேன்.

வாங்கிக் கொண்டவர் 'எதுக்கு?' என்றார். நான் விஷயத்தைச் சொன்னதும் சிவாஜியின் கால்ஷீட் தர சம்மதித்தார் சண்முகம்.

'சாதனை' படத்துக்கு நான் சம்மதம் வாங்கிய விதத்தைப் பார்த்து பாராட்டினார் பிரகாசம்.

தியேட்டர் திறப்புவிழா மேடையில் எம்.ஜி.ஆர்., பேசத் துவங்கும்போது... மாலையுடன் மேடையேறிய ரசிகர் ஒருவர் 'நமது நடிகர் எம்.ஜி.ஆருக்கு இந்த மாலையைச் சூட்டு கிறேன்' என்றார்.

அவ்வளவுதான்... மேடையில் பாய்ந்த தொண்டர்கள் சிலர், அந்த நபரை மேடையில் வைத்தே தாக்கத் துவங்க... எம்.ஜி.ஆர். தடுத்து, குரல்

கொடுத்தார்.

'புரட்சித்தலைவரே... முதல்வரேனு சொல்லாம விடமாட்டோம்' என்றபடி தர்ம அடி கொடுத்தனர்.

'அந்த நண்பர் சொன்னதுதான் சரி' என எம்.ஜி.ஆர் சொல்ல... நிசப்தம்.

எம்.ஜி.ஆர்., தொடர்ந்து பேசினார்...

அந்த நண்பர் சொன்னது சரிதான். நான் நடிகனாக இருந்துதானே இப்படி ஒரு அந்தஸ்துக்கு வரமுடிந்தது. நான் உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன். ஒரு ஊரில் அண்ணன் பிரபலமாக இருந்தான். யார் வீட்டில் சுக, துக்கம் நிகழ்ந்தாலும் அதில் பங்கெடுத்து ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருப்பான். ஒருமுறை ஒரு துக்க வீட்டிற்கு அண்ணன் போவான். 'செத்துப்போன உன் தாய் உனக்குமட்டுமா தாய்? எனக்கும் தாய்தானே' என ஆறுதல் சொல்லுவான்.

மறுநாள்... அண்ணனின் புகழ்மேல் பொறாமை கொண்ட தம்பி... 'இனிமே ஊரில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு நம் வீட்டின் சார்பில் நான்தான் போவேன்' என்றான். அண்ணனும் மனப்பூர்வமாக அதை வரவேற்றார். அன்று ஊரில் ஒருவனின் மனைவி இறந்துவிடுவாள். 'செத்துப்போனவ உனக்கு மட்டுமா மனைவி. எனக்கும்தான் மனைவி' என அந்தத் தம்பி ஆறுதல் சொல்ல... ஊரார் அவனை அடித்து உதைப்பார்கள். அதனால் சமயம் அறிந்து பேசவேண்டும்'' என கதை சொன்னார் எம்.ஜி.ஆர்.

அடுத்த சில நாட்களில்... தஞ்சாவூரில் நடந்த ஒரு விழாவில் கலந்துகொண்டார் எம்.ஜி.ஆர். உடல்நலக் குறைவால் தொடர்ந்து வாந்தி எடுத்தார். இதையடுத்து சென்னை கொண்டுவரப்பட்டு அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இங்கிருந்து சிகிச்சைக்காக அமெரிக்கா கொண்டுசெல்லப்பட்டார் எம்.ஜி.ஆர்.

சிவாஜியை வைத்து 'ராஜரிஷி' படத்தைத் தொடங்கு வதற்காக கால்ஷீட் கேட்டுப் போனேன்.

'அண்ணனுக்கு கைவசம் நிறைய படம் இருக்கு. ஒருவருஷம் கழிச்சு வந்து பாருங்க' என்று சொல்லியனுப்பி விட்டார் சிவாஜியின் தம்பி சண்முகம்.

இதனால்... என் உதவியாளர் பனசை மணியனை இயக்குநராக்கி, கோப்பெருந்தேவி, ஜான்ஸிராணி ஆகிய இருவரையும் தயாரிப்பாளராக்கி 'நீதிக்கு ஒரு பெண்' படத்தை சிறு பட்ஜெட்டில் தொடங்கினேன்.

கதை விவாதம் நடந்துகொண்டிருந்தது.

கணவனை கொலை செய்து சொத்துக்களை அபகரிக்கும் கொடுமனம் கொண்டவள். தன் வீட்டுக்கு வசதியானவர்கள் வந்தால் அவர்களை மயக்கி, கள்ளத் தொடர்பு கொண்டு அவர்களை கொலை செய்து பணத்தை அபகரித்துவிடுவாள். இப்படிப்பட்ட ஒருத்தி தன் மகனின் ஏழைக்காதலியை மருமகளாக ஏற்பாளா? இப்படிக் கதையின் மையத்தைச் சொன்னேன்.

விவாதித்ததில் பங்கேற்ற என் நண்பர் வெங்கட் ராம அய்யர் அதிருப்தி தெரிவித்தார். "இந்த மாதிரி கொலைக்காட்சிகளைப் பார்ப்பதால் குற்றங்கள் நடக்குது சார். இப்போ வந்திருக்க 'நூறாவது நாள்' படத்தைப் பார்த்துட்டு தன் தங்கையின் குடும்பத்தையே கொலை செய்ததா ஜெயப்பிரகாஷ்ங்கிறவன் சொல்லீருக்கான் பார்த்தீங்களா?" என்றார்.

"இது மிக அரிதாக நடக்கிற சம்பவம்தான். அதையெல்லாம் நினைச்சுக்கிட்டு கதை பண்ணினா... சரிப்படுமா? என்னோட பதிமூணு வயசுல... ஒரு சம்பவம் நடந்திச்சு. பாகவதர் நடிச்ச 'அம்பிகாபதி' படத்தை பார்த்த ஒருவர், படத்துல பாகவதர் பாட்டுப் பாடியபடியே தன் காதலியை இரு கைகளால் இடுப்பைப் பிடித்து தூக்கி கட்டிலில் போடுவதுபோல் தன் பொண்டாட்டி யையும் தூக்கி கட்டில்ல போட்டதில்... அந்தம்மாவுக்கு குறுக்கு ஒடிஞ்சு போச்சுங்க. அதுமட்டுமில்ல... அந்தப் படம் என்னோட வாழ்க்கையையே துயரம் துரத்தித் துரத்தி அடிப்பதுபோல ஆக்கீருச்சு. இப்ப அதை நினச்சாலும் கதறிடுவேன்."

"சார்... டிஸ்கஷனை அப்புறம் வச்சுக்கலாம். முதல்ல அதைச் சொல்லுங்க."

"சொல்றேன்."

# பாகவதரின் காதல் காட்சி!

"எங்க அப்பா இறந்ததிலிருந்து எங்கம்மா நோய்வாய்ப்பட்டேதான் இருந்தாங்க. என் அண்ணன், பெரியப்பா வீட்டிலயே தங்கிக்கிட்டு, எழுமலையில் இருக்க ரைஸ்மில்லில் வேலை பார்த்துக்கிட்டிருந்தார். எங்க அக்கா வீராயம்மாள் வயசுக்கு வந்தது. கல்யாணம் செய்துகொடுக்க வீட்டில் செப்புக்காசுகூட இல்லை. இந்தச் சமயம் மதுரையிலிருந்து அமாவாசை சேர்வை வந்தார். "ரெண்டாந்தாரமா உங்க பொண்ண எனக்கு கட்டிக்குடுங்க. கல்யாணச் செலவையெல்லாம் நானே பார்த்துக்கிறேன்'னாரு. அவருக்கு வயசு 40. அக்காவுக்கு வயசு 15. அம்மா சம்மதிச்சாங்க. கல்யாணம் நடந்தது. புஷ்பவள்ளினு ஒரு பெண் குழந்தையும் பிறந்துச்சு. எங்க அக்கா வீட்டுக்காரர் குடிச்சிட்டா எமகாதகன், குடிக்கலேன்னா தர்மராஜாதான். தினமும் அடிஉதைபட்டு அக்கா அர உசுராத்தான் வாழ்ந்துக்கிட்டி ருந்துச்சு. தாய் நோயாளி. வீட்டுலயும் வறுமை. என்னை பராமரிக்க முடியாமல் ஆண்டிபட்டி பக்கமிருக்க கன்னியப்பபிள்ளைபட்டியில் தாத்தா வீட்டுல கொண்டுபோய் விட்டாங்க. அப்போ எனக்கு 13 வயசு. ஊருக்கு வெளியே இருந்த தாத்தாவோட மிளகாப் பழத்தோட்டத்துக்கு என்னை காவலுக்கு வச்சாங்க. காலைல சாப்பாடு கிடையாது. மத்தியானத்துக்கு மேல கூழ் கொண்டுவந்து குடுப்பாங்க. அத குடுச்சிப்புட்டு அங்ஙனயே கிடக்க வேண்டியதுதான்.



பக்கத்து தோட்டத்துல 14 வயசுப் பையன் இருந்தான். ஒருநா... "ஏலேய் பாலு... உனக்கு விஷயம் தெரியுமா? ஆண்டிபட்டியில 'அம்பிகாபதி' படம் நடக்குது. அதுல பாகவதரு, தன் காதலியான சந்தானலட்சுமிய அலாக்கா தூக்கி கட்டில்ல போட்டு கட்டிப்பிடிச்சு பாடியிருக்காரு. இதப்பார்த்த ஒரு புருஷன், பொண்டாட்டி வீட்டுக்குப் போய் என்ன செஞ்சாக தெரியுமா? '"இப்படித்தான பாகவதரு தூக்கினாரு'ன்னு'சொல்லி

பொண்டாட்டிய தூக்கி கட்டில்ல போட்டுருக்காப்ல. கட்டில் ஒடஞ்சு, அந்தம்மாவோட குறுக்கும் ஒடஞ்சுப் போச்சு. வைத்தியர்ட்ட தூக்கிட்டுப் போனா... "எலும்பு கூடுறது சிரமம். இன்னும் ரெண்டு வருஷத்துக் காவது படுத்த படுக்கையாவே இருக்கணும்'னு சொல்லி கட்டுப் போட்டு அனுப்பிச்சிருக்காரு. எங்கப்பன் "அம்பிகாபதி''படம் பாக்கப் போயிருக்கு. அங்க பேசிக்கிட்டாங்களாம்'''என்றான்.

பொதுவாவே நான் ஒரு சினிமாப் பைத்தியம். சந்தானலட்சுமிய பாகவதரு தூக்கிப் போடுறத இன்னைக்கே பார்த்தாகணும்னு வெறி. கைல காசில்லையே. ஒரு பை நிறைய மிளகாப் பழத்தைப் பிடுங்கினேன். பக்கத்துஊரான நீர்ஆறுபட்டியில் விற்று வரச் சொன்னேன். அவனும் விற்று வந்து காசு கொடுத்தான். சினிமா டிக்கெட்டுக்கு போதுமானதாக இருந்தது.

"நீ தோட்டத்தப் பாத்துக்க. நான் போய் படம் பார்த்திட்டு வந்திடுறேன்" எனச் சொல்லிவிட்டு, மாலை ஐந்து மணிக்கு கிளம்பி ஆண்டிபட்டி போய்ச் சேர்ந்துவிட்டேன்.

டூரிங் டாக்கீஸில் 'அம்பிகாபதி' படம் ஆரம்பம். கட்டில் ஸீனுக்காக காத்திருந்தேன்.

'சந்திரன், சூரியன் திசை மாறினாலும், நாம் மாறக்கூடாது' என்கிற அர்த்தத்தில் பாகவதர் பாடிக்கொண்டிருந்தார்.

"இதெல்லாம் எனக்குத் தேவையா... சட்டுனு தூக்கி கட்டில்ல போடு பாகவதரே''என நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன். அந்தக் காட்சி வந்தது. காதலியை பாகவதர் கட்டிலில் தூக்கிப்போட்டு, கட்டிப்பிடித்து முத்தமும் கொடுத்தார். ஆர்வ மிகுதியில் நான் கைதட்டி ரசித்தேன்.

படம் முடிந்து வந்தேன். தாத்தா மூங்கில் குச்சியுடன் ஆவேசமாக இருந்தார். 'பழத்த திருடி வித்தா, சினிமா பார்க்கப் போன? பக்கத்து தோட்டத்துக்காரன் நீ இல்லாதப்போ பழத்தை திருடிக்கிட்டிருக்கான். வேலைய விட்டுட்டு உனக்கு அப்படி சினிமா கேக்குதோ?" என முதுகில் "பளார்' என ஒன்று போட்டார். தீப்பிடித்த மாதிரி இருந்தது. வலி பொறுக்க முடியாமல் ஓடினேன். சுமார் ஒரு மைல் தூரம் என்னைத் துரத்தி வந்தவர்... 'இருடா... என் மகன்ககிட்டச் சொல்லி உன் காலை முறிக்கிறேன்' என கத்திவிட்டுப் போனார். தாத்தாவின் மகன்கள், எனது தாய்மாமன்கள். சிலம்பம் உள்ளிட்ட வீர விளையாட்டில் கெட்டிக்காரர்கள்.

எப்படியும் என்னை அவர்கள் அடித்தே கொன்றுவிடுவார்கள்... என நினைத்துப் பயந்து, ஆண்டிபட்டிக்கு வந்து சேர்ந்தேன்.

அங்கிருந்து எங்கள் சொந்த ஊரான எழுமலைக்குச் செல்ல விரும்பி, நடையைக்கட்டினேன். மதுரையிலிருந்து, போடிக்கு ரயில்விட்ட வெள்ளக்காரன், ஆண்டிபட்டி கணவாயில் பெரிய மலையைக் குடைந்து பாதை போட்டிருந்தான். அந்த குகைப்பாதை வழியே போனால் சீக்கிரமாக போய்விடலாம். அதனால் குகைப்பாதை வழியாக நடந்தேன். ஒரே கும்மிருட்டு. அடி பாதத்தில் நிரடி... நிரடி தடவியபடியே போனேன். ஒரு கட்டத்தில் எனக்கு பயம் வந்துவிட்டது. "அம்மா... அப்பா...''என அரற்றியபடியே நடந்தேன். ஒருவழியாக கணவாய் கடந்து, உசிலம்பட்டி பஸ் ஸ்டாண்ட் வந்து சேர்ந்தேன். அப்போது காலை 9 மணி. பத்து மைல்தூரம் நடந்து வந்த களைப்பில் மயக்கமாக வந்தது. இன்னும் பத்து மைல் நடக்கணுமே.... என்கிற கவலை ரொம்பவே என்னை மனம் தளரச் செய்தது. பஸ் ஸ்டாண்ட்டில்... டிக்கெட் ஏஜெண்ட் கருப்பண்ணத் தேவர் நின்றிருந்தார்.

"அய்யா" என்றேன்.

என்னைப் பார்த்தவர், அதிர்ச்சியாகிவிட்டார். கிழிந்த சட்டை, இடுப்பில் பழைய துண்டு, பரட்டைத்தலையுடன் இருந்தேன்.

"ஏலேய்... கிளார்க் மகனாடா நீ? என்னடா இப்படி பரதேசிப்பய கணக்கா நிக்கிறவன்?" எனக் கேட்டார்.

நடந்த விஷயங்களை சொல்லி அழுதேன்.

"அழாதரா சாமி... நேத்து சாயந்தரம்தான் மதுரயிலருந்து ஒங்க அக்காவும், மாமாவும், கைக்குழந்தையோட எழுமலைக்கி போனாகடா. ஒங்க ஆத்தாளுக்கு மேலுக்கு முடியலனு பார்க்கப்போறதா சொன்னாங்க" என்றபடி காபி வாங்கிக் கொடுத்து குடிக்கச் சொன்னார்.

"உசிலம்பட்டி டூ எழுமலை ஸண்டிங் பஸ் இப்ப வர்ற நேரந்தான். அதுல ஏத்தி விடுறேன். ஊருக்குப் போ" என்றார்.

"அம்மாவுக்கு உடம்பு முடியலனுதான் என்னய தாத்தா வீட்டுக்கு அனுப்பினாக. திரும்ப அம்மாகிட்ட போயி என்ன பண்றது?''என யோசித்துக்கொண்டே உசிலம்பட்டி பஸ் ஸ்டாண்ட்டின் ஒரு ஓரமாக நின்றுகொண்டிருந்தேன்.

எங்க ஊரிலிருந்து மதுரை செல்லும் 'சங்கர் ட்ரான்ஸ்போர்ட்' பஸ் வந்தது. பஸ்ஸின் ஒரு ஸீட்டில் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்த என் அக்கா, அனாதை போல ஒரு ஓரமாக உட்கார்ந்திருந்த என்னைப் பார்த்துவிட்டது.

"அய்ய்ய்யோ... ஆத்தே... ஏலே பாலு... பாலு..." என அலறி அடித்தபடி ஓடி வந்து என்னைக் கட்டிப்பிடித்து அழ... பஸ் ஸ்டாண்ட்டில் இருந்த ஜனங்களெல்லாம் கூடி எங்களை பார்த்தது. நான் எதுவுமே பேச முடியாமல் அழுதுகொண்டேயிருந்தேன்.

கருப்பண்ணத்தேவர் வந்து அக்காவிடம் விசாரித்தார். "ஆத்தாளுக்கு எப்படித்தா இருக்கு?"

"சொல்ற மாதிரி இல்ல... மோசமாத்தான் இருக்கு."

"ஏம்மா... இந்த பாலுப்பயல உன்கூடயே மதுரக்கி கூட்டிட்டுப் போயிரேம்மா" என்றார்.

என் அக்கா, மாமாவின் முகத்தைப் பார்த்து "நம்ம புள்ளைய தூக்கி வச்சுக்கிறதுக்கு கூட்டிட்டுப் போலாம்ங்க" என்றது. மாமா பதில் சொல்லாமல் பஸ்ஸில் ஏறினார். அவரின் அனுமதியைப் பெறாமலேயே அக்கா என்னை கூட்டிக் கொண்டுபோய் பஸ்ஸில் ஏற்றியது.

மதுரை முனிச்சாலை 7-வது தெருவில் அக்கா வீடு. வீட்டுக்குள் நுழைந்தோம். தர்மராஜாவாக வெளியே போன மாமா, எமகாதகனாக திரும்பிவந்தார். குடித்துவிட்டு வந்தார்.

"நான் கல்யாணம் பண்ணிட்டு வந்தது ஒன்னயத்தான். ஒந்தம்பிய இல்ல" என சண்டையை ஆரம்பித்தவர்... அக்காவை அடித்து உதைக்க... நான் குறுக்கே புகுந்து தடுத்தேன். எனக்கும் அடி. ஓங்கி ஒரு உதைவிட்டார். 'அம்மா...' என அலறியபடி தூரப்போய் விழுந்தேன். போதை இறங்கியதும், 9-வது சந்தில் இருந்த சாராயக்கடைக்குப் போய்விட்டார் மாமா.

மாமா அடித்த இடத்தில் அக்கா எண்ணெய் தடவிவிட்டது.

"நீ தினமும் அடிபடுறது போதாதுனு, அந்த பச்சப் பயலையும் கூட்டி வந்து அடிவாங்க விடுறியா?" என பக்கத்து வீட்டு நாயுடு அம்மா பரிதாபப்பட்டார்கள்.

"வேற வழியில்லக்கா. அம்மாவுக்கு ரொம்ப முடியல. என்னத்தவோ ஆக்குற கஞ்சியில அவனுக்கு இத்தினி ஊத்தலாம்னு கூட்டி வந்தேன்.

வந்தன்னைக்கே இந்த மனுஷன் இப்படிப் போட்டு அடிக்கிறாரே'' என அக்கா அழுத்து.

விடிந்தது. வாழ்க்கையல்ல... அன்றைய பொழுது.

''மாமா... அவன ஏதாவது வேலையில சேத்துவிடுங்க. அவன் வயிற அவன் வளத்துக்குவான்ல'' என அக்கா சொல்ல... ''ஏங்கூட வாடா'' என அழைத்துக்கொண்டு போனார் மாமா.

மாமா இலை வியாபாரம் செய்துவந்தார். பக்கத்தில் வாழைப்பழம் வியாபாரம் செய்யும் ராமுவிடம் ''இவனை எடுபிடியா வச்சுக்க'' என விட்டுவிட்டுப் போனார்.

ராமு, காலைச் சாப்பாடு சாப்பிட போயிருந்த நேரம் ''தம்பி... அரைசீப் வாழப்பழம் குடுப்பா'' என ஒருவர் கேட்டுவந்தார். குலையிலிருந்து பழம் அறுத்துப் பழக்கமில்லாதால் சரியாக அறுக்க முடியாமல் கத்தி என் பெருவிரலில் பாய்ந்த்து. ரத்தம் கொட்டுது. விரலை அழுத்தியபடி, கத்திக் கொண்டே வீட்டுக்கு ஓடினேன். உப்பும், விறகுக் கரியும் நுணுக்கி வைத்து அக்கா கட்டிவிட்டது.

பூட்டிய மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் தனிமையில் சிக்கிக்கொண்டேன்!

# ஓடினேன்...! ஓடினேன்...!!

13 வயது சிறுவனாக இருந்த என்னை அக்கா தன்னுடன் மதுரைக்கு அழைத்து வந்துவிட்டது. மாமா தன் நண்பரின் வாழைப்பழக் கடையில் என்னை வேலைக்குச் சேர்த்துவிட்டார். முதல் நாளே... வாழைத்தாரிலிருந்து, பழம் அறுக்கையில் கத்தி என் பெருவிரலில் பாய்ந்துவிட்டது. அக்கா எனக்கு உப்பும், அடுப்புக்கரியும் நுணுக்கி வைத்து கட்டுப் போட்டுவிட்டது. பகலிலேயே போதையில் வந்தார் மாமா. "கைல என்னடா கட்டு?"

"வாழப்பழம் அறுக்கையில கத்தி வெட்டீருச்சாம்..." என அக்கா சொல்ல...

"வாழப்பழமே அறுக்கத் தெரியல. நீ எப்படிடா வாழப்போற?" என ஓங்கி பிடரியில் அடித்தார் மாமா. நான் வீட்டுக்கு வெளியே வந்து விழுந்தேன். 'அவன அடிக்காதீங்க. அவன் எங்கிட்டாவது போயி பிழைச்சிக்கட்டும்' என மாமாவைத் தடுத்த அக்கா... 'ஓடுடா... பாலு... எங்கிட்டாவது ஓடீருடா' என கத்த... அழுதபடியே ரோட்டில் ஓடினேன்.

சிந்தாமணி தியேட்டரில் அந்தவாரம் வெளியான 'ஹரிதாஸ்' படம் பகல் காட்சி ஓடிக் கொண்டிருக்கிறது. அடுத்த காட்சி பார்ப்பதற்காக ஊரே திரண்டிருந்தது. 'என்னுடல்தனில் ஓர் ஈ மொய்த்தபோது, உங்கள் கண்ணில் தைத்தாற்போல... தாயே... தந்தையே...' என பாகவதரின் சுகமான ராகம் தியேட்டருக்குள்ளிருந்து வெளியே கேட்டது. பாட்டை ரசித்தபடி, போஸ்டரிலிருந்த தியாகராஜ பாகவதரை தடவிப் பார்த்தேன்.



'எவன்டா போஸ்டரை கிழிக்கிறது?' என வாட்ச்மேன் குரல் கொடுக்க... அங்கிருந்து நடையைக் கட்டி... மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போனேன். கோயிலில் யானைகள் கட்டி வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குப் போய், தண்ணீர் தொட்டியில் நாலு தம்ளர் மோந்து குடித்ததும் பசி மயக்கத்தில் தூங்கிவிட்டேன். விழிப்பு வந்தபோது... எழுந்துபோய் பார்த்தேன். கோயில் பூட்டப்பட்டிருந்தது. அதிகாலையில் பூஜை செய்வதற்காக வந்தவர்கள் என்னைப் பார்த்து விசாரித்தார்கள்.

'அய்யா... கோயில சுத்திப் பார்க்க வந்தேன். அசந்து தூங்கீட்டேன்'' என்றேன்.

'தீவட்டி தூக்குறவன் இன்னும் வரல. இவனை தூக்கச் சொல்வோம்'''என தீவட்டியை என் கையில் கொடுத்தனர். சுமார் ஆறு மணிவரை தீவட்டி ஏந்தினேன். அந்த வெளிச்சத்தில் குருக்கள் பூஜை செய்தார். யானைக்கு உணவாக ஒரு கால்பந்து அளவிற்கு புளியோதரை சோற்று உருண்டைகள் வைக்கப்பட்டிருந்தன. அதில் ஒரு உருண்டையை என்னிடம் கொடுத்தார்கள். துண்டில் அதை வாங்கி வந்து சாப்பிட்டேன்.

‘சாயங்காலம் நாலு மணிக்கு மேல்தான் மாமா வீட்டில் இருக்கமாட்டார். அந்த நேரம் போகலாம்’ என நினைத்து கோயிலிலேயே பொழுதைக் கழித்தேன்.

நான்கு மணிக்கு வீட்டின் முன் போய் நின்றேன். அக்கா என்னைப் பார்த்து பதறிவிட்டு, ஒரு பெரிய தகரப்பெட்டியில் துணிமணிகளை வைத்து தயாரானது. இதைப் பார்த்த நாயுடு அம்மா விசாரித்தார்.

"வாழ்வோ... சாவோ... நான் எங்க ஆத்தா வீட்டுக்கே போயிடுறேன்" என அக்கா சொன்னது.

நான், அக்கா, அக்காவின் கைக்குழந்தை... மூவரும் ‘மாமாவின் கண்ணில் பட்டுவிடக்கூடாது’ என்பதால் சந்து சந்தாக நுழைந்து, பஸ் ஸ்டாண்ட் வந்தோம். எழுமலைக்கு போகும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தோம். பஸ் கிளம்பியதும் நிம்மதிப் பெருமூச்சு விட்ட அக்கா முகத்தில் ஒரு மலர்ச்சி. என் தலையை கோதிவிட்டது.



எழுமலை வந்து சேர்ந்தோம். பெரியப்பாவிடம் நடந்த விஷயங்களையெல்லாம் அக்கா சொன்னதும்... "எம்மாடி... ஒங்கம்மா வடக்குப்பட்டியில குடியேறியிருக்கு. நீ அங்க போறியா? இங்னயே இருக்கியா?" எனக் கேட்டார் பெரியப்பா.

"அம்மாகிட்டப் போறேன்..." எனச் சொல்லிவிட்டு கிளம்பியது அக்கா.

என்னிடம் ஒரு ஆட்டையும், ரெண்டு குட்டியையும் கொடுத்து ''மேய்ச்சிட்டு வாடா'' என பெரியப்பா சொல்லிவிட்டார்.

அக்கா போனநேரம் வடக்குப்பட்டியில் கொள்ளை நோய் பாதித்து கொத்துச் சாவுகள் நடந்துகொண்டிருந்தன. அக்காவையும் நோய் பாதித்தது. ஒருவாரத்தில் அக்கா இறந்துபோனது. மதுரையிலிருந்து மாமா வந்தார். அக்காவுக்கு இறுதிச் சடங்கு செய்துகொண்டிருந்தபோது, தொடர்ந்து அங்கே சாவுகள் நடப்பதை கண்முன்னால பார்த்தோம். அன்றே அக்காவின் உடல் தகனம் நடந்தது. மாமா குழந்தையை தூக்கிக்கொண்டு மதுரை கிளம்பிவிட்டார்.

வடக்குப்பட்டியில் என் தாயாருடன் என் தங்கை 8 வயது சரஸ்வதியும், என் தம்பி 5 வயது நித்தியானந்தனும் இருந்தனர். 'ஊரே கொள்ளை நோயில் கிடக்கு. நீ இங்க இருந்து புள்ளைகளை பறி கொடுக்க வேணாம். உடனே.. ஒங்க அப்பா வீட்டுக்கு, கன்னியப்பபிள்ளைபட்டிக்கு கிளம்புங்க' என உறவினர்கள் வலியுறுத்த... கட்டை வண்டி கட்டி மூவரும் கிளம்பினார்கள். எனக்கு எதுவும் புரியாமல் அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

மீண்டும் பெரியப்பா வீட்டுக்கு வந்து, ஆடு மேய்க்கும் வேலையைச் செய்துவந்தேன்.

பெரியப்பா வீட்டில் காலை முதல் மாலை வரை உணவு கிடையாது. சாயங்காலத்துக்கு மேல்தான் உணவு. என்னால் பசி பொறுக்க முடியவில்லை. என்னுடன் இரண்டாம் வகுப்பு வரை படித்த ராஜேந்திரபெருமாள் ஐந்தாவது படித்துக்கொண்டிருந்தான். நான்தான் இரண்டாவதுடன் படிப்பை விட்டாச்சே. ராஜேந்திரப் பெருமாளின் தாத்தா ‘குண்டத்தூர் நாயுடு ஓட்டல்’ என்ற பெயரில் ஓட்டல் நடத்தி வந்தார். நண்பனிடம் ''எனக்கு ரொம்ப பசிக்குதுடா'' எனச் சொன்னேன்.

''ஏலேய் பாலு. எங்க ஓட்டலுக்கு யாரு வந்து ''பிள்ளைக்குச் சோறூட்டணும்'னு கேட்டாலும் கொடுப்பாருடா. நாளைக்கி நீ வந்து 'பிள்ளைச்சோறு’ கேளு'' என்றான்.

அதன்படி ஓட்டலுக்குச் சென்று ''அய்யா... பிள்ளைச் சோறு கொடுங்க'' னு கத்தினேன். நான் வந்திருப்பதை அறிந்த நண்பன், வழக்கத்திற்கு மாறாக கொஞ்சம் கூடுதலாக சோற்றுடன் ஒரு கறித் துண்டையும் புதைத்து இலையில் வைத்துக் கொடுத்தான். அதை வாங்கிப்போய் கண்மாயில் வைத்துச் சாப்பிட்டேன்.

ஆனால் அந்த பிள்ளைச்சோற்றிலும் விதி விளையாடியது.

மறுநாள் பிள்ளைச் சோறு வாங்க ஓட்டலுக்குப் போனபோது ஓட்டல் மூடி யிருந்தது.

அது... 1943-44 காலகட்டம். உலக யுத்தம் நடந்து வந்ததால் உணவு தானியங்களுக்கு தட்டுப்பாடு. தேவையான அரிசி கிடைக்காததால், யுத்தம் முடிஞ்சால்தான் ஓட்டல் திறக்கப்படுமாம். 'எதற்காகவோ, எங்கேயோ நடக்கிற உலகப்போர் ஒரு கடைக்கோடி கிராமத்து சிறுவனின் கைப்பிடிச் சோற்றுக்கும் வேட்டு வைக்கிறதே...' என்கிற அதிகார அரசியல் எனக்கு அப் போது தெரியவில்லை. "எவனோ சண்டை போடுறதுக்கு, என் சோத்துல மண்ணைப் போடுறாங்களே?'' என்கிற அழுகை மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தது.

தாய் ஆடு கனத்த பால் மடியுடன் இருப்பதை தினமும் பார்த்திருக்கிறேன். ஆனால் அப்போது தோணாத ஐடியா இப்போது கடும் பசியில் தோணியது. நான் கீழே படுத்துக்கொண்டு ஆட்டின் மடுவை என் வாய்க்கு நேராக வைத்துக் கொண்டு பீய்ச்சி, என் வயிற்றில் நிரப்பிக் கொண்டேன். பசி அடங்கியதும் பகீர் என்றது.

என் பெரியப்பா ஆடு வளர்ப்பதன் நோக்கமே... இரவில் அவர் ஆட்டுப்பால் சாப்பிடுவதற்காகத்தான். பலூன் மாதிரி பாலால் வீங்கியிருந்த மடு இப்போது வற்றிப்போயிருந்தது. 'பெரியப்பா அடிப்பாரோ' என பீதியான நான் பசும்புல்களை அறுத்து அறுத்துக் கொண்டுவந்து ஆட்டின் முன் போட்டேன். புல் தின்னத்தின்ன உடனே ஆட்டின் மடு பெரிதாகிவிடும் என்கிற நினைப்புதான். ஆனால் பால் ஊறவில்லை. சாயங்காலமாகிவிட்டது. அதனால் ஆட்டைக் கொண்டுபோய் சத்தமில்லாமல் வீட்டு வாசலில் கட்டினேன். உசிலம்பட்டிக்கு நடையைக் கட்டினேன்.

பஸ் ஸ்டாண்ட்டில்... அப்பாவுடன் பஞ்சாயத்து போர்டு ஆபீஸில் வேலை பார்த்த முகமது ராவுத்தரை எதேச்சையாக பார்த்துவிட்டு 'அண்ணே' என அழுதபடி "அம்மாவப் பார்க்க கன்னியப்பபிள்ளைபட்டிக்குப் போகணும்"'என்றேன். பஸ் டிக்கெட்டுக்கும், ஏதாவது வாங்கிச் சாப்பிடவும் காசு கொடுத்தார் ராவுத்தர்.

ஆண்டிபட்டியில் வந்து இறங்கினேன். பஸ் ஸ்டாண்ட் கடையில் பஜ்ஜி வாங்கித் தின்று பசியாறினேன்.

‘பாகவதர் தன் காதலியை தூக்கி கட்டிலில் போட்ட 'அம்பிகாபதி' படத்தைப் பார்த்து யாரோ ஒருவர் தன் மனைவியை தூக்கி கட்டிலில் போட்டு இடுப்பை ஒடித்த விஷயம் என் காதிற்கு எட்டாமல் இருந்திருந்தால்... நான் மிளகாப் பழம் திருடி விற்று அந்தப் படத்தைப் பார்த்திருக்க மாட்டேன். தாத்தாவிடம் அடி வாங்கியிருக்கமாட்டேன். ஊரைவிட்டு ஓடியிருக்க மாட்டேன். என் அக்கா கண்ணில் பட்டிருக்கமாட்டேன். அக்கா என்னை மதுரைக்கு அழைத்துச் சென்றிருக்காது. இதனால் மாமா என்னை அடித்திருக்க மாட்டார். அக்காவும், மாமாவை விட்டு வடக்குப்பட்டி வந்திருக்காது. கொள்ளை நோயால் செத்திருக்காது. ஆனால் என் படம் பார்க்கும் ஆசை... என் அக்காவின் மரணத்திற்கு மூலகாரணமாய் அமைந்துவிட்டதே... என்கிற குற்ற உணர்ச்சி. வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு திரும்பினேன். சுவரில் 'கண்ணகி' பட போஸ்டரில் கண்ணாம்பா ஆவேசமாக சிலம்புடன் நின்றார்.

மறுபடியும் எனக்கு சினிமா பைத்தியம் பிடித்தது.

# டூரிங் டாக்கீஸில் ஓசிப் படம்!

'பாகவதர் நடித்த 'அம்பிகாபதி' படத்தை பார்த்தே ஆகவேண்டும்' என்கிற எனது சினிமா பைத்தியம்தான் ஏதோ ஒரு வகையில் என் அக்கா அநியாயமாகச் சாவதற்கு காரணம்' என்கிற குற்ற உணர்ச்சி இருந்தாலும்கூட, மீண்டும் நான் சினிமா பைத்தியமாகவே ஆனேன்.
ஆண்டிபட்டி பஸ் ஸ்டாண்ட்டில் ராவுத்தர் கொடுத்த காசில் பஜ்ஜி வாங்கி தின்றுவிட்டு திரும்பினேன். ஜுபீடரின் 'கண்ணகி' பட போஸ்டரில் கையில் சிலம்புடன் கண்ணாம்பா ஆவேசமாக நின்றிருந்தார்.

'அடடா... இந்தக் கதையே மதுரையை எரிக்கிற கதையாச்சே. இந்தப் படம் மதுரையில் ரிலீஸான அன்று மதுரையில் ஒரு பெரிய தீ விபத்து நடந்துச்சுனு சொன்னாங்களே... இந்தப் படத்தை இன்னைக்கே பார்த்தாகணுமே' என பரபரத்தபடி டூரிங் டாக்கீஸுக்கு ஓடினேன். டாக்கீஸைச் சுற்றி தென்னங்கீற்றால் வேயப்பட்ட, காம்ப்பவுண்ட் சுவர் மாதிரியான அடைப்பு போடப்பட்டிருந்தது. அதைச்சுற்றிலும் கருவேல முள்ளை வெட்டிப் போட்டிருந்தார்கள். ஓலையைப் பிய்த்துக்கொண்டு யாரும் உள்ளே வந்துவிடக்கூடாது என்பதால் இந்த முள்வேலி. நான் எங்கள் ஊரில் ஏற்கனவே டூரிங் டாக்கீஸில் முறுக்கு விற்றவன். அந்த அனுபவம் கைகொடுத்தது. தோதான ஒரு இடத்தைப்பார்த்து, முட்களை விலக்கி, ஓலைத் தட்டிகளை பிரித்துக்கொண்டு உள்ளே நுழைந்தேன். அது பெண்களுக்கான கழிப்பறை. அந்த நேரம் பார்த்து ஒரு பெண்மணி சிறுநீர் கழிப்பதற்காக அமர... நான் உள்ளே நுழைய... அந்தப் பெண் 'அய்யய்யோ' என அலறி எழ... நான் சடாரென அவரின் காலில் விழுந்து கும்பிட்டு “"அக்கா... அக்கா... மன்னிச்சிடுங்கக்கா... படம் பார்க்கணும் காசில்ல..'' எனச் சொல்லிவிட்டு அவரின் பதிலுக்குக் கூட காத்திராமல் தியேட்டர் கூட்டத்துக்குள் கலந்தேன்.



படம் பார்த்தேன். ஆந்திரக்காரரான கண்ணாம்பாவின் தூய தமிழ் வசன உச்சரிப்பும், நடிப்பும் ஜனங்களை வசியம் செய்தது.

வாழ்க்கையில் அப்போதுதான் முழுக்க முழுக்க தமிழ் வசனத்தை திரைப்படத்தில் நான் கேட்கிறேன். சிறுவனான எனக்கே புரியும்படி எளிமையாகவும், இனிமையாகவும், துடிப்பாகவும் இருந்தது வசனம். இளங்கோவடிகள் எழுதிய ‘சிலப்பதிகாரத்தை எளிய தமிழில், அசத்தலாக வசனமாக எழுதியிருந்தார் இளங்கோவன். 'அசோக்குமார்', 'சிவகவி', 'அம்பிகாபதி' படங்களின் வசனகர்த்தா இளங்கோவன் என்பது குறிப்பிடத்தக்கது. அன்றைய காலகட்டத்தில் இளங்கோவனின் வசனங்கள் தமிழ்நாட்டிற்கே புத்துணர்ச்சி கூட்டியது. இப்படி ஒரு எழுத்தாளனை தமிழ்த்தாய் நமக்குக் கொடுத்தது நமக்கெல்லாம் கிடைத்த பெருமை.



''மானமெல்லாம் போனபின்னே வாழ்வதுதான் ஒரு வாழ்வா? வணிகர் குல மரபினர்க்கோர் வசை பெற, ஏன் பிறந்தேன்' என கோவலனாக பி.யு.சின்னப்பா பாடிய பாடலை பாடிக்கொண்டே... கன்னியப்பபிள்ளைபட்டிக்குச் சென்று அம்மாவையும், தம்பி, தங்கையையும் பார்த்தேன்.

13 வயதில் எனக்கு ஏற்பட்ட இந்த கருமாயப்பட்ட அனுபவம், எந்த ஒரு மனிதனுக்கும், அந்த சிறுவயதில் ஏற்படக்கூடாது' என எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன். எனது 85 வயதில் இப்போது நினைத்தாலும் அந்த துயரம் என் உடம்பை பதற வைக்கிறது.

'நீதிக்கு ஒரு பெண்' படத்திற்கான கதை விவாதத்தை ஆரம்பித்து என் சொந்தக் கதையை சொல்ல நேர்ந்தது. நண்பர் வெங்கட்ராம அய்யர், என் சோகத்தைக் கேட்டு வருந்தினார்.

''சரிங்க அய்யரே! நீங்க சொல்ற மாதிரி, படத்தில் கொலைக் காட்சிகளை வைக்காமல் விட்டுடலாம். அதற்குப் பதில் 'அவரு துபாய் போயிருக்காரு' என வில்லி சொன்னால்... 'அவர் கொலை

செய்யப்பட்டிருக்கார்' என ரசிகர்கள் புரிந்து கொள்வதுமாதிரி வசனம் வைக்கலாம்'' என முடிவு செய்தேன்.

பணத்திற்காக கொலையே செய்யும் ராஜசுலோச்சனா. அவரின் மகன் எஸ்.வீ.சேகர், ஏழை நட்டுவனார் மகள் அம்பிகாவை காதலிக்கிறார். ஒருமுறை மயக்க மருந்து கூல்ட்ரிங்ஸ் கொடுத்து அம்பிகாவை சேகர் கெடுத்துவிட... அம்பிகா கர்ப்பம். கர்ப்பம் என்பதால் அம்பிகாவை மருமகளாக ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ராஜசுலோச்சனாவுக்கு. 51 பவுன் நகை வரதட்சணை கேட்க... அதை ஏற்பாடு செய்ய முடியாமல், அம்பிகாவின் அப்பா வீட்டைவிட்டே ஓடிவிடுகிறார். ''நான் எங்குபோய் வேலை கேட்டாலும் என் கற்பை கேட்கிறாங்க'' என அம்பிகா அழ... 'கற்பைக் கேட்கிறாங்களோ... கருமத்த கேட்கிறாங்களோ தெரியாது. 51 பவுனுடன் வந்தா கல்யாணம்'' என ராஜசுலோச்சனா சொல்லிவிடுவார். வேறு வழியில்லாமல் விபச்சாரத்தில் தள்ளப்படும் அம்பிகா, 60 பவுன் சம்பாதித்து கொண்டுவந்து கொடுக்க, கல்யாண ஏற்பாடு நடக்கிறது. மனசாட்சி இடம் கொடுக்காததால், தாலிகட்டும் நேரத்தில் 'உங்க மருமகள் விபச்சாரம் செய்து சம்பாதித்தவள்' என அம்பிகாவே ஒரு கடிதம் எழுதி சிறுவன் மூலம் ராஜசுலோச்சனாவிடம் கொடுக்க.... கல்யாணம் நிற்கிறது. பிரச்சினை கோர்ட்டுக்குப் போகிறது. ''காசுதான் முக்கியம்னு நினைக்கிற உன்னைப்போன்ற மாமியார்களுக்கு முடிவு கட்டவே இப்படி தப்பான வழியில் போனேன்'' என கதறி அழுது உயிரைவிடுவார் அம்பிகா.

இப்படி ஒரு கதையை நான் தேர்வு செய்யக் காரணம்...

வங்காளத்தில் 'மம்தா' படமும், இந்தியில் 'ஜரூரத்' படமும், ஆங்கிலத்தில் 'எம்லிஜோலா' படமும், கன்னடத்தில் 'அவளும் பெண்தான்' படமும், தமிழில் இயக்குநர் சிகரம் கே.பாலசந்தரின் 'அரங்கேற்றம்' படமும், வலிய விபச்சாரத்தில் தள்ளப்பட்ட பெண்களின் கதைதான். அந்தப் படங்கள் பெரும் வெற்றிபெற்றதால் நானும் அப்படி ஒரு கதையை எழுதினேன்.

படத்திற்கு இயக்குநராக என் உதவியாளர் பனசை மணியனை போட்டேன். அதற்கு சுவாரஸ்யமான ஒரு காரணமும், என் கடமையுணர்ச்சியும் இருந்தது.

பனசை மணியன் 'குறத்தி மகன்' கதையில் எனக்கு உதவியாளராக இருந்த சமயம்... இந்திரா என்கிற தனது உறவுக்காரப் பெண்ணை காதலித்தார். ஆனால் பெண்ணின் அம்மாவோ... ''சினிமாத் தொழில்

பண்ற மாப்பிள்ளை வேண்டாம். இருந்தாலும் அவரு எந்த கம்பெனியில, யாருகிட்ட வேலை பார்க்கிறாரு? உண்மையிலேயே சினிமாவுல இருக்காரா?'' என எதிர்ப்பைக் கிளப்ப... பனசை, இதை என்னிடம் சொன்னார்.

உடனே நான் டைரக்டர் கே.எஸ்.கோபால கிருஷ்ணனிடம் விஷயத்தைச் சொல்லி ''அண்ணே டைட்டில்ல பனசை பேரையும் போடுங்க'' என்றேன்.

ஸ்டுடியோவே அதிரும்படி சிரித்தவர், ''மாமியாரை உடனே சம்மதிக்க வச்சுடுவோம். போடுடா டைட்டில'' என்றார். அதன்படி 'குறத்தி மகன்' பட டைட்டில் கார்டில் ''திரைக்கதை உதவி -பனசை மணியன்'' என தனி கார்டே போட்டார். இதைப் பார்த்து மகிழ்ந்த அந்தம்மா கல்யாணத்திற்கு உடனே சம்மதித்தார்.

ஒரு டைட்டில் கார்டு ஒரு காதலை வெற்றியடைய வைக்கும் வல்லமை கொண்டதாக இருந்தது. ஆனாலும் ஒரு சிக்கல்.

''உடனே கல்யாணம் பண்ணிக்கணும். இல்லேன்னா பொண்ண வேற எடத்துல கட்டிக் கொடுப்போம்னு சொல்றாங்க'' என்றார் பனசை.

''நான் என்னப்பா செய்யணும்?''

''துணி-மணி, கல்யாண மண்டபச் செலவுகளுக்கு உதவணும்'' என்றார்.

முடிந்த உதவிகளைச் செய்தேன். மாங்கல்யம் வாங்கித்தரும் பொறுப்பை ஸ்டண்ட் மாஸ்டர் திருவாரூர் தாஸிடம் ஒப்படைத்திருந்தார். விடிந்தால் கல்யாணம் என்ற நிலையில் பனசை வந்தார். ''பாம்பேல தர்மேந்திரா பட ஷூட்டிங்ல இருக்கிறதால் வரமுடியலனு தாஸ் மன்னிப்புக் கேட்டுட்டார். நீங்கதான்...'' என்றார்.

மார்வாடிதானே நம்ம பேங்க். என் குழந்தையின் கழுத்தில் கிடந்த சங்கிலியைக் கழற்றி விற்று அந்தப் பணத்தை பனசை கையில் கொடுத்தேன்.

கே.எஸ்.கோபாலகிருஷ்ணனும் நானும் உடனிருந்து பனசையின் திருமணத்தை நடத்தி வைத்தோம்.

''நம்ம கல்யாணம் நடக்கிறதுக்கு கலைஞானம் சார்தான் முக்கிய காரணம்'' என அடிக்கடி தன் மனைவியிடம் சொல்லியிருக்கிறார் பனசை. அதனால் ''அண்ணா... அண்ணா'' என என்மீது சொந்த சகோதரி போல் அன்பு காட்டினார் பனசையின் மனைவி.

பனசை மூன்று குழந்தைகளுக்கு தந்தையாகிவிட்டார். 'நான் நல்ல நிலையில் இருக்கும் போதே பனசைக்கு ஒரு வழி ஏற்படுத்த வேண்டும்' என்கிற கடமையால் அவரை 'நீதிக்கு ஒரு பெண்' படத்திற்கு இயக்குநராக்கினேன்.

எனது 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தின் மாபெரும் வெற்றியால் 'நீதிக்கு ஒரு பெண்' படத்தின் ஏழு ஏரியாவும் உடனே விற்பனையாகி, அட்வான்ஸும் கொடுத்தார்கள் விநியோகஸ்தர்கள்.

படப்பிடிப்பு முடிந்து படத்தைப் போட்டுக் காட்டினேன். ''நீங்க கதை சொன்னப்ப இருந்த குவாலிட்டி படத்துல இல்லை. ஸ்ரீதர், பாலசந்தர் மாதிரி பெரிய டைரக்டர்கள் பண்ண வேண்டிய கதை.

பனசை ஏற்கனவே ‘நான் நன்றி சொல்வேன்'னு ஒரு படத்தை இயக்கியிருந்தார். எம்.ஜி.ஆருக்கு நெருக்கமா இருந்த ஐசரி வேலன் சொன்னதால் அந்தப் படத்தைப் பார்த்தோம். குப்பையா எடுத்திருந்தார். இந்தப் படத்தில் நீங்க சம்பந்தப்பட்டதால் நல்லாருக்கும்னு நம்பி வந்தோம். படத்தை தேத்துற வழியைப் பாருங்க'' என கொண்டு வந்த பணத்தை திருப்பிக் கொண்டுபோய்விட்டார்கள் விநியோகஸ்தர்கள்.

எம்.ஜி.ஆருக்காக எழுதப்பட்ட கதையில் ரஜினி!

# ‘ரஜினி அங்கிள்’ -உருவான பின்னணி!

''நீதிக்கு ஒரு பெண்''படம் திருப்தியாக இல்லை’என கொண்டுவந்த பணத்தை விநியோகஸ்தர்கள், திரும்ப கொண்டுபோய் விட்டார்கள். மன உளைச்சலால் இரவெல்லாம் தூக்கமில்லை எனக்கு. அந்தச் சமயம் ‘கராத்தே’மணிக்கு நல்ல மார்க்கெட் இருந்தது. 'ரங்கா' படத்திலிருந்தே அவர் எனக்கு நெருக்கமானவர் என்பதால், சி.ஐ.டி.கேரக்டர் ஒன்றை உருவாக்கி அதில் அவரை நடிக்க வைத்து படத்தில் சேர்க்க முடிவு செய்தேன். மறுநாள் கராத்தே மணியைச் சந்தித்து நிலமையைச் சொன்னேன். மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட மணி ''உங்களுக்காக கெஸ்ட் ரோலில் நான் நடிக்கிறேன். பதிலுக்கு என்னை ஹீரோவாக வச்சு நீங்க ஏன் ஒரு படம் எடுக்கக்கூடாது. அப்படி எடுத்தா, அந்தப் படம் மூலம் உங்களுக்கு பெரிய லாபம் கிடைக்கிற மாதிரி ஏற்பாடு பண்றேன். ஜப்பானில் என்னோடு கராத்தே கத்துக்கிட்டவங்க, உலக அளவில் ரொம்ப ஃபேமஸா இருக்காங்க. அதில் ஒரு நீக்ரோ எட்டு பெல்ட் வாங்கியிருக்கான். அவனையும் அழைச்சிட்டு வர்றேன். ஊட்டியில் ஒரு டோர்னமெண்ட்டுக்கு ஏற்பாடு செய்யுங்க. இந்தியா முழுக்க இருக்க என்னோட மாணவர்கள் ஆயிரம் பேரை வரவைக்கிறேன். டோர்னமெண்ட் நடத்தி படத்துல சேர்த்திடலாம்'' என்றார்.
மணி சொன்ன ஐடியா எனக்கு ரொம்பவே பிடித்திருந்த தால் உடனே ஓ.கே. சொன்னேன்.

கராத்தே மணியை கெஸ்ட் ரோலில் நடிக்க வைத்து 'நீதிக்கு ஒரு பெண்' படத்தை ரிலீஸ் செய்தேன். படம் என் கையைக் கடித்தது. இருந்தாலும் என் உதவியாளர் பனசை மணியனுக்கு எதுவுமே செய்யவில்லை என்கிற குற்ற உணர்ச்சிக்கு ஆட்படாமல், அவருக்கு டைரக்டராக வாய்ப்பளித்த கடமையைச் செய்த திருப்தி உண்டானது எனக்கு.



நண்பர்களுக்கு நான் என்னால் முடிந்த பல உதவிகளைச் செய்திருக்கிறேன். தேவர் பிலிம்ஸின் கதை இலாகாவில் நான் மற்றும் தூயவன் பணியாற்றியதையும், தேவரின் மரணத்திற்குப் பின்பு தேவர் பிலிம்ஸுக்காக 'ரங்கா' கதையை தூயவன் கொடுத்ததையும், அந்தக் கதையின் மூலக்கதை என் கதை. நண்பனுக்காக அந்தக் கதையை விட்டுக் கொடுத்ததையும் ஏற்கனவே நான் சொல்லியிருந்தேன்.

'நீதிக்கு ஒரு பெண்' படத்தை நான் எடுத்துக்கொண்டிருந்த போது... தூயவனும் நானும் சந்தித்தோம். அப்போது 'கலைஞானம், நீர் பெரிய தயாரிப்பாளர் ஆயிட்டீர். இப்போ உமக்கு பணம் புரளுது. குடும்பப்

பிரச்சினை இல்லை. பிறருக்கு உதவி செய்ற இடத்துக்கு நீர் வந்துட்டீர். இதப்பார்த்து நான் சந்தோஷப்படுறேன். அந்த சந்தோஷம் நானும் படணும். அதுக்கு ஒரு யோசனை சொல்றேன் ஓய். அது சரியா வருமான்னு பாரும்வோய்'' என்றார் தூயவன்.

அவர் பாணியிலேயே 'சொல்லுவோய்' என்றேன்.

''எம்.ஜி.ஆருக்காக 'அன்புள்ள எம்.ஜி.ஆர்.'னு ஒரு கதையை எழுதியிருந்தேன். அவரைப் பார்த்து சொல்றதுக்கு சந்தர்ப்பம் அமையறதுக்குள்ள சி.எம். ஆயிட்டாரு. இது எனக்குப் பெரிய ஏமாற்றம்தான். அந்தக் கதையை இப்ப நான் சொல்றேன். ஆதரவற்ற குழந்தைகள் படிக்கிற ஒரு ஹோம். அங்கிருக்கிற குழந்தைகளை அவர்களின் தூரத்து உறவினர்கள் யாராவது வந்து பார்த்துவிட்டுச் செல்வார்கள். ஆனால் ஒரே ஒரு பெண் குழந்தையை மட்டும் யாரும் பார்க்க வருவதில்லை. 'உறவினர்களே இல்லையே? அனாதையாயிட்டோமே?' என அந்தக் குழந்தை ஃபீல்பண்ணும். அப்போது ஹோமுக்கு வந்த செய்தித்தாள் ஒன்றில் எம்.ஜி.ஆர். ஒரு பெண் குழந்தையைத் தூக்கி முத்தமிடும் காட்சி இடம்பெற்றிருந்தது. இதைப் பார்த்ததும் அந்தப் பெண் குழந்தை 'எனக்குச் சொந்தம் கிடைச்சிருச்சி... நான் அனாதை இல்லை' என சந்தோஷக் கூச்சலிடும்.

'யார் உன்னோட சொந்தம்?' என மற்ற குழந்தைகள் அவளிடம் கேட்கும்போது...

'எம்.ஜி.ஆர். அங்கிள்' என பேப்பரைக் காட்டி கண்ணீர் விடுவாள்.

ஒருநாள் அந்தக் குழந்தை எம்.ஜி.ஆருக்கு கடிதம் எழுதும். திடீரென்று ஒருநாள் எம்.ஜி.ஆர். வந்து அந்தக் குழந்தையை அரவணைத்துக்கொள்வார். இதுதான்வோய் அந்தக் கதை. எம்.ஜி.ஆர். இனி நடிக்கமாட்டார். வேற யார் நடிச்சா நல்லாருக்கும்னு யோசிச்சப்போ... ரஜினி ஞாபகத்துக்கு வர்றார். சமீபகாலமா ரஜினி நடிக்கிற தேவர் பிலிம்ஸ் படங்களுக்கு நான் வசனம் எழுதுனது உமக்குத் தெரியும்வோய். ரஜினி என்மேல பாசமா இருக்காரு. நான் ஏன் அவரைப் பயன்படுத்தக்கூடாது?''

''அருமையான ஐடியா தூயவன். ரஜினிகிட்ட ரெண்டு நாள் கால்ஷீட் கேளு. ஒத்துக்கொள்வார். நாம நாலு நாளா இழுத்துக்கலாம். வேற வழியில்லாம அவரும் சம்மதிப்பாரு. ரஜினி ஓ.கே. சொன்னதுமே என்னை வந்து பாரு'' என்றேன்.

அதேபோல் தூயவனுக்கு நான்கு நாட்கள் கால்ஷீட் கொடுத்த ரஜினி, "என் நண்பன் நட்ராஜை டைரக்டரா போடுங்க. அவருக்கு நான் உதவி செய்த மாதிரியும் இருக்கும், உங்களுக்கும் உதவின மாதிரி இருக்கும்" எனச் சொல்லிவிட்டார்.

நேராக என்னிடம் வந்த தூயவன், "ஃபர்ஸ்ட் காபி சிஸ்டத்தில் யார்ட்டயாவது ஃபைனான்ஸுக்கு ஏற்பாடு பண்ணுங்க" என்றார்.

"நானே தர்றேன் தூயவா, என்ன எதிர்பார்க்கிற?"

"25 லட்சம்"

உடனே நான் ஓ.கே. சொல்லிவிட்டு, என்னுடைய ஃபைனான்ஸியர் ஜி.வி.நடராஜுக்கு போன் செய்தேன். உடனே அவர் வந்துவிட்டார். ஆனால்... தூயவனும் நடராஜும் பேசி நெகட்டிவ் ரைட்ஸ் போட்டுக்கொண்டார்கள். தூயவனுடன் அழகன் தமிழ்மணி பார்ட்னராக இருந்து படத்தை தயாரித்தார். அதில் எனக்கு சந்தோஷமே.

வர்த்தக ரீதியில் ஒரு கதாநாயகி அந்தப் படத்திற்கு தேவைப்பட்டது. அந்தச் சமயம் எனதுதயாரிப்பில் 'நீதிக்கு ஒரு பெண்' படத்தில் அம்பிகா நடித்துக்கொண்டிருந்ததால்... "அம்பிகாவிடமே பேசுங்கவோய்" என்றார்.

அதன்படியே அம்பிகாவைப் பார்த்துப் பேசி ஒப்பந்தம் செய்து கொடுத்தேன். 6 வயது குழந்தையாக மீனா ஒப்பந்தமானார். படப்பிடிப்பு ஆரம்பமானது. செலவுகள் அதிகமானதால் தனக்கு லாபம் குறைவாக வரும் என தூயவன் என்னிடம் வருத்தப்பட... "மௌன கீதங்கள்', 'டார்லிங் டார்லிங்', 'தூறல் நின்னுப் போச்சு' போன்ற கே.பாக்யராஜ் படக் கதைகளில் தூயவன் பங்கெடுத்திருந்தார். அதை அவரிடம் நினைவுபடுத்தி 'ஏம்ப்பா... 'முந்தானை முடிச்சு' சூப்பர்ஹிட். இந்தச் சமயம் தம்பி பாக்யராஜிடம் ஒருநாள் கால்ஷீட் வாங்கி ரஜினி கூட சேர்ந்து வர்ற மாதிரி நடிக்க வை" என்றேன்.

அதன்படியே ரஜினி-பாக்யராஜ் சேர்ந்து நடித்த ஸீன் படத்தின் ஹைலைட்டாக அமைந்தது. படமும் வெற்றிகரமாக ஓடியது. அதன்பிறகு 'விடியும் வரை காத்திரு', 'வைதேகி காத்திருந்தாள்' உட்பட சில படங்களை எடுத்து பெரிய தயாரிப்பாளராக புகழ்பெற்றார், பொருளும் பெற்றார் தூயவன். அது எனக்கு மட்டில்லா மகிழ்ச்சியைத் தந்தது.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால்... அறிமுகமில்லாதவர் களுக்கெல்லாம் தேவர் பாணியில் நான் உதவி செய்திருக்கிறேன். என் உயிர் நண்பனுக்கு

உதவாமல் விட்டுடுவேனா? 'அன்புள்ள ரஜினிகாந்த்' படப்பிடிப்பு முடியும்வரை உடனிருந்து உதவினேன். படத்தின் ஃபைனான்ஸியருக்கும் தூயவனுக்கும் பிரச்சினை வந்தபோது, அதையும் முன்னின்று தீர்த்து வைத்தேன். அதாவது, "செலவு அதிகமாகிவிட்டதால் ஃபைனான்ஸியர் நடராஜிடம் அக்ரிமென்ட்டுக்கு மேல் ஒரு லட்ச ரூபாய் வாங்கிக் கொடுங்கள்" என்று தூயவன் கேட்டார். நான் சொன்னால் தட்டவேமாட்டார் ஜி.வி.நடராஜ். அதன்படியே ஒரு லட்சம் அதிகமாகக் கொடுத்து படத்தை நல்ல விளம்பரம் செய்து வெளியிட்டார். படம் வெற்றி பெற்றது.

பின்னொரு சமயம்... தூயவன் தன் மனைவியுடன் நாகப்பட்டினம் தர்ஹாவிற்கு சென்றிருந்த இடத்தில் மாரடைப்பால் இறந்துவிட்டார். அங்கிருந்து ஒரு காரில் தூயவனின் உடலை தன் மடியில் வைத்து சென்னைக்கு கொண்டுவந்தார் அவரின் மனைவி. அன்று இரவு முழுக்க தூயவன் வீட்டு வாசலிலேயே நானும் காத்திருந்தேன். வந்ததும் நண்பரின் உடலுக்கு மாலை, மரியாதை செய்துவிட்டு அவரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அல்லாவை வேண்டிக்கொண்டு வந்தேன். எனக்கும் தூயவனுக்கும் இடையேயான நட்பு தூய்மையான நட்பு.

தூயவனின் மகன் பாபு தூயவன், இப்போது 'கதம் கதம்' என்கிற படத்தை இயக்கியிருக்கிறார். இதற்கான இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடந்தது. தூயவனுக்காக எத்தனையோ பிரபலங்கள் இந்த விழாவுக்கு வந்து இசையை வெளியிடலாம். ஆனால் பாபுவோ, "அப்பாவின் ஆத்மார்த்தமான நண்பரான நீங்கள்தான் உங்கள் கையால் இசையை வெளியிடவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார். அதன்படி நானும் வெளியிட்டு வாழ்த்தினேன். மறுநாள், வீட்டிற்கு வந்த பாபு தூயவன், "ஐயா! அடுத்து, நான் ஒரு ஆவி கதையை படமாக்கப் போகிறேன். நீங்கள் உடனிருந்து உதவ வேண்டும்" என கேட்டுக்கொண்டார். அப்படியே செய்வதாகச் சொல்லி யிருக்கிறேன்.

"பெட்ரூமையே சதா நினைத்துக் கொண்டிருக்கும் கேரக்டரில் 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி' தீபா நடித்தால் மக்கள் ஏற்பார்கள். நான் நடித்தால் ஏற்பார்களா?' -கே.ஆர்.விஜயா கேள்வி.

# ஷூட்டிங்கில் ஒரு நிஜ ஃபைட்!

'நீதிக்கு ஒரு பெண்' படத்தில் கராத்தே மணி கெஸ்ட் ரோலில் நடித்தபோது பேசியபடி, அவரை ஹீரோவாக வைத்து 'தங்கக் கோப்பை' படத்தை ஆரம்பித்தேன்.

உலக அளவில் கராத்தே போட்டியில் ஜெயித்து தங்கக்கோப்பையையும், புகழையும் பெறும் நோக்கத்துடன், கடுமையாக பயிற்சி செய்துகொண்டிருப்பான் அந்த வீரன். அவனுடைய வீரத்திலும், உடற்கட்டழகிலும் மயங்கிய ஒரு இளம்பெண் "இவனை திருமணம் செய்து கணவனாக்கிக் கொண்டால்... 24 மணிநேரமும் படுக்கையறை சுகம் காணலாம்"என கணக்குப் போட்டு, வீரனை கல்யாணம் செய்து கொள்வாள். அதன் பிறகு ஏற்படுகிற பிரச்சினைகள்... தன் லட்சியத்தில் வீரன் வென்றானா? என்பதை வைத்து 'தங்கக் கோப்பை' கதை தயார் செய்தேன்.

கராத்தே 'மணி, 'ரோசாப்பூரவிக்கைக்காரி'' தீபா இருவரையும் நாயகன், நாயகியாக ஒப்பந்தம் செய்தேன். மேலும் எஸ்.வி.சேகர், நளினியை காமெடி ஜோடியாகவும், டைரக்டராக ஆர்.சி.சக்தியையும் ஒப்பந்தம் செய்தேன். எல்லோருக்கும் அட்வான்ஸ் கொடுத்தாகிவிட்டது. வெளிநாட்டிலிருந்து வீரர்களை அழைத்துவர, மணியிடம் ஐந்து லட்ச ரூபாயும் கொடுத்தாகிவிட்டது.

இந்நிலையில் கேரளாவிலிருந்து தீபா போன் செய்தார்.

"மலையாளப் படத்திற்காக ஷூட்டிங் வந்தேன். புயல்-மழை காரணமா ஷூட்டிங் நடக்கவேயில்லை.ஷூட்டிங் முடிக்காம வெளியே போகக்கூடாது'னு போக விட மாட்டேங்கிறாங்க. நீங்க வேற யாரையாவது ஹீரோயினா போட்டுக்கங்க சார். நான் உங்க படத்திலிருந்து விலகிக்கிறேன் சார்" எனச் சொல்லிவிட்டார் தீபா.



வட்டிக்கு வாங்கி படச்செலவுகளை செய்துவிட்டேன். திட்டமிட்டபடி நான்கு நாட்களில் ஷூட்டிங் தொடங்கா விட்டால் எனக்கு பெரிய நஷ்டம் வரும். இதை நான் ஆர்.சி.சக்தியிடம் சொன்னேன்.

''உங்களுக்கு நஷ்டம் வராத அளவுக்கு நீங்க என்ன முடிவெடுத்தாலும் ஒத்துழைக்கிறேன்'' என்றார்.

இதையடுத்து கதாநாயகியாக யாரைத் தேர்வு செய்வது என யோசித்தேன். கமர்ஷியல் ஹீரோயின்களில் மற்றவர்கள் கால்ஷீட் குதிரைக்கொம்பாக இருந்தது. ஆனால் எவ்வளவு பிஸியாக இருந்தாலும் எனக்கு கால்ஷீட் தருபவர் கே.ஆர் .விஜயாதான். அவரைச் சந்தித்து கதை சொன்னேன்.

''சதா நேரமும் பெட்ரூம் பற்றியே நினைச்சுக்கிட்டிருக்க கேரக்டரில் 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி' தீபா நடிச்சா, ஜனங்க ஏத்துக்குவாங்க. நான் அந்த கேரக்டரில் நடிச்சா ஒப்புக்கமாட்டாங்க. என்னோட இமேஜுக்கு தகுந்த மாதிரி என் கேரக்டரில் மாறுதல் செஞ்சா... உங்களை நம்பி, உங்களுக்காக நான் நடிக்கிறேன்'' என்றார் கே.ஆர்.விஜயா. அதை ஏற்று அவரை நாயகியாக ஒப்பந்தம் செய்தேன்.

கேரளாவிலிருந்து ஜப்பான் போய் அங்கே குடியேறிய களரி வீரர் பரம்பரையைச் சேர்ந்த வீரரையும், ஏழடி உயர அமெரிக்க நீக்ரோ

வீரரையும், பிரெஞ்ச் மற்றும் ஹாங்காங்கைச் சேர்ந்த வீரர்களையும் ஒப்பந்தம் செய்து அழைத்து வந்தார் கராத்தே மணி.

கதாநாயகி கேரக்டரை கே.ஆர்.விஜயாவுக்காக மிகக் கண்ணியமான கேரக்டராக மாற்றியதால், கதையில் பாதி ஜீவன் குறைந்தது. இருப்பினும், நிஜ கராத்தே வீரர்களை வைத்து எடுக்கப்படும் காட்சிகள் படத்துக்கு பலம் சேர்க்கும் என்ற நம்பிக்கையில் ஊட்டியில் டோர்னமெண்ட் காட்சிகளின் படப்பிடிப்பிற்கு ஏற்பாடு செய்தேன். இந்த உலக வீரர்களுடன், மணியின் இந்திய மாணவர்கள் சுமார் 900 பேர்களும் வந்துவிட்டனர். அப்போது ஊட்டியில் சீஸன் களை கட்டியிருந்த நேரம். அதனால் ஓட்டல்களில் அறைகள் கிடைக்கவில்லை. முக்கியமானவர்கள் தவிர, மற்றவர்களை, கல்யாண மண்டபங்களை வாடகைக்கு எடுத்து தங்க வைத்தோம். ஒவ்வொருவரும் தனி பெட், தலையணை கேட்டனர். ஊட்டி முழுக்க ரவுண்ட் கட்டி முடிந்த அளவு வாங்கிக் கொடுத்தோம். ஆயிரம் அலுமினியத் தட்டுகளும், தம்ளர்களும் வாங்கித் தந்தோம்.

விடிந்தால் ஷூட்டிங். ஆனால் இரவில் கராத்தே மாணவர்களில் ஒரு பிரிவினர் மது அருந்த, இன்னொரு பிரிவினர் 'இது தப்பு' என எதிர்க்க... இரு பிரிவினரும் மோதிக்கொண்டு, பெட், தலையணை, தம்ளர் மற்றும் பிளேட்டுகளை நாசம் செய்துவிட்டனர். ஷூட்டிங் தொடங்கும் முன்பே அந்த நஷ்டம் என் தலையில் விழுந்தது.

ஊட்டியே திரண்டுவந்து வேடிக்கை பார்க்க, கராத்தே டோர்னமெண்ட்டுடன் படப்பிடிப்பு தொடங்கியது.

வெளிநாட்டு வீரர்கள் நான்கு பேர்களுடனும் மோதி ஜெயித்து, 'கராத்தே' மணி தங்கக் கோப்பை வாங்கணும். இது காட்சி. கேமரா ஓடத் தொடங்கியது. ஏழடி நீக்ரோ வீரர் வானத்திற்கும், பூமிக்குமாக காற்றில் குதித்து ஸ்டைலாக வந்து நிற்க... பரவசமான மணியின் மாணவர்கள், கைதட்டி ஆரவாரம் செய்துவிட்டனர். இதில் மணி அப்செட்.

"நான் சொல்லாம நீங்க எப்படிடா கைதட்டலாம்? கதைப்படி நான் ஹீரோ. இதை மறந்து அறிவுகெட்டதனமா செஞ்சிட்டீங்களே" என கத்திய மணி, 'ஷூட்டிங் கேன்ஸல்' எனச் சொல்லிவிட்டு காரில் ஏறி ஹோட்டலுக்குப் போய்விட்டார்.

வெளிநாட்டு வீரர்களுக்கு மொழிப்பிரச்சினை. அவர்கள் குழம்பி நிற்க... தயாரிப்பு நிர்வாகியான என் மருமகன் வக்கீல் எஸ்.ஏ.நடராஜன் ஆங்கிலத்தில் அவர்களிடம் நடந்ததை விளக்க... 'இதை தனிப்பட்ட

முறையில் மணி எங்களிடம் சொல்லியிருக்கலாமே. நாங்கள் ஹீரோயிஸம் காட்டாமல் நடித்திருப்போமே? இப்படி எங்களையும் அவமானப் படுத்திட்டாரே’ என வருந்தினர்.

அவர்களைச் சமாதானப்படுத்தி ஹோட்டலில் தங்கவைத்தோம். மறுநாளே அவரவர்களை, அவரவர் நாடுகளுக்கு அனுப்பிவைத்தோம்.

மணி அபரிமிதனமான சாகஸ விளையாட்டுகள் தெரிந்த வீரர். அதனால் அதையே பூஸ்ட்-அப் பண்ணி, சக இந்திய வீரர்களை வைத்து படத்தை எடுத்தாலே படம் ஓடும் என முடிவு செய்தோம்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின் மணியிடம் ஒரு மாறுதல். அதாவது...மணி மிக நல்ல மனிதர்தான். இருப்பினும் அவரிடமே அவருக்கு எதிரியாக ஒரு பிரச்சினை இருந்தது. அவருக்கு காது கேட்புத் திறனில் சிறிது மந்த நிலை. ஸ்பாட்டில் மற்றவர்கள் என்ன பேசினாலும், குறிப்பாக மணியைப் பற்றி நல்லவிதமாகப் பேசினாலும், தன்னை தப்பாக பேசுகிறார்கள்’ எனத் தவறாக புரிந்துகொண்டு என்னிடம் குமுறிவிடுவார். நான் எவ்வளவு சமாதானம் சொன்னாலும், சமாதானமடையமாட்டார். அதனால் அவர் போக்கிலேயே அவரை விட்டுப் பிடித்து படப்பிடிப்பை நடத்தினோம்.

மணி, கே.ஆர்.விஜயா சம்பந்தப்பட்ட காட்சிகளை படமாக்கினோம்.

"கே.ஆர்.விஜயா மேடம் எவ்வளவு புகழ்பெற்ற நடிகை. அவர் கூடவெல்லாம் நான் நடிப்பது சாத்தியமானு நினைச்சேன். அவரை எனக்குச் ஜோடியா நடிக்க வைக்கிறாங்களே. மேடமும் பெருந்தன்மையா என்கூட நடிக்கிறாங்களே..." என வியந்து, ரொம்பவே மகிழ்ச்சியான மணி, அந்த சந்தோஷ மூடில், படத்தின் டைரக்டர் ஆர்.சி.சக்தி, கேமராமேன் விஸ்வம் நடராஜன் ஆகியோருக்கு தன் வீட்டிலேயே விருந்து ஏற்பாடு செய்தார். விருந்தில் உதவி செய்வதற்காக அஸிஸ்டெண்ட் ஆர்ட் டைரக்டரும் போயிருந்தார்.

விருந்து உற்சாகமாக போய்க்கொண்டிருந்த நிலையில்... "டைரக்டரே... தமிழ் நாட்டுல சிறந்த நடிகர் யார்?" என கராத்தே மணி கேட்க...

"நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும்... என்னைப் பொறுத்தவரை கமல் மட்டும்தான் சிறந்த நடிகர்" என ஆர்.சி.சக்தி சொல்ல... கராத்தே மணியின் கண்கள் சிவந்தன.

அப்புறமென்ன... விருந்து பெரும் வில்லங்கமானது.

"என்னோட துப்பாக்கிக்கு நீ பலியாயிடுவ" என்றார் கராத்தே மணி.

"வெட்ட வர்ற அருவாள்ல ஒன்னுக்கு அடிச்சவன் நான்" என பதிலுக்கு சீறினார் ஆர்.சி.சக்தி.

# விசுவாமித்திரர்!

கராத்தேமணி, தன் வீட்டில் டைரக்டர் ஆர்.சி.சக்திக்கும், கேமராமேன் விஸ்வம் நடராஜனுக்கும் விருந்து வைத்தார். விருந்தில் உதவி செய்வதற்காக அஸிஸ் டெண்ட் ஆர்ட் டைரக்டரும் போயிருந்தார். விருந்து விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தபோது... "டைரக்டரே... தமிழ்நாட்டில் சிறந்த நடிகர் யார்" என கராத்தே மணி கேட்க...
"கமல்தான். நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் என்னைப் பொறுத்தவரை கமல்தான் சிறந்த நடிகர்னு சொல்வேன். வேற யாரையும் நான் ஒத்துக்கமாட்டேன்" என ஆர்.சி.சக்தி சொல்லியிருக்கிறார்.

"நான் 'தங்கக் கோப்பை' படத்தின் ஹீரோ. நீங்க என் படத்தோட டைரக்டர். அதை ஞாபகம் வச்சுக்கிட்டு சொல்லுங்க. இந்தியாவிலேயே கராத்தேவில் எட்டு பெல்ட்டுகள் வாங்கி நம்பர் ஒண்ணா இருக்கிறவன் நான்தான். இதைப்பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"நீங்க கலையைப் பத்திக் கேட்டுட்டு... இப்போ வீரத்தைப் பத்திப் பேசுறீங்க. இது நீங்க ஹீரோவா நடிக்கிற முதல் படம். இது ரிலீஸான பிறகுதான் உங்களைப்பத்தி நான் சொல்லமுடியும்."

"என் படத்துல டைரக்டரா இருந்துக்கிட்டு என்னையவே டீகிரேட் பண்றீங்களா? முதல்ல நீங்க சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்குங்க."

"ஒரு பேச்சுப் பேசிட்டா... மாத்திப் பேசுற பழக்கம் இந்த சக்திகிட்ட கிடையாது."

"வாபஸ் வாங்கலேன்னா... என்னோட துப்பாக்கிக்கு நீ பலியாகிடுவ."



"யோவ்... உன் துப்பாக்கியப் போல பல துப்பாக்கிகளை பார்த்திருக்கேன். நான் சின்னப் பயலா இருக்கும் போதே... அருவாளை எடுத்துக்கிட்டு எவனும் என்னை வெட்ட வந்தா... அந்த அருவாள்லயே ஒன்னுக்கடிச்சவன் நான். அப்படிப்பட்ட ராம்நாட் மண்ணுல இருந்து வந்தவன். என்கிட்ட உன் ஜபர்தஸ்த்த காட்டவேணாம்" என சக்தி சொல்ல...

மிகுந்த கோபமுற்ற மணி "இரு... உன்னை ஷூட் பண்ணிடுறேன்" என்றபடி துப்பாக்கியை எடுப்பதற்காக மாடிப்படியேறி அறைக்குள் நுழைய...

பின்னாலேயே போன அஸிஸ்டெண்ட் ஆர்ட் டைரக்டர், மணியை உள்ளேவிட்டு, வெளிப்பக்கமாக கதவைப் பூட்டிவிட்டு, எனக்கு போன் செய்து நடந்த விஷயங்களைச் சொன்னார்.

அப்போது நள்ளிரவு தாண்டி ஒருமணி.



'சாயங்காலம் ஆறு மணிக்கு ஆரம்பிச்ச விருந்து இன்னமுமா முடியல?' என எனக்குள்ளே கேட்டபடி 'விபரீதம் எதுவும் ஆகிடக்கூடாதே' என பயந்தபடி காரை எடுத்துக்கொண்டு மணியின் வீட்டுக்கு வந்தேன்.

மாடியறைக்குள் பூட்டப்பட்ட மணி கதவை உடைப்பது போல, அடித்துக் கொண்டிருந்தார்.

"விஸ்வம்... நீங்க மணியைச் சமாளிங்க" எனச் சொல்லிவிட்டு, ஆர்.சி.சக்தியை இழுத்து காரில் ஏற்றிக் கொண்டுபோய் அவரின் வீட்டில் விட்டேன்.

"சார்... நான் விருந்து கொடுக்கல. விருந்து கேட்கல. ஊட்டியில, திடீர்னு மணி ஷூட்டிங்கை கேன்ஸல் பண்ணினப்போ கூட நான் அதை பெரிசு

படுத்தல. ஆனா... என்னை அவமானப்படுத்துறதுக்காகவே இந்த விருந்த ஏற்பாடு பண்ணீருக்காரு. இனியும் நான் இவரை வச்சு டைரக்ட் பண்ணமுடியாது. நீங்க வேற டைரக்டரைப் போட்டு படத்தை முடிங்க'' என்றார் சக்தி.

''காலைல பேசிக்கலாம்'' எனச் சொல்லிவிட்டு வந்தேன்.

மறுநாள் காலையில் மணியின் வீட்டுக்குப் போனேன்.

''சார்... வேற டைரக்டரைப் போடுங்க. இல்லேன்னா நான் நடிக்க மாட்டேன்'' என்றார் மணி.

“டைரக்டர் சக்தி ஒங்களை நினைச்சு அழுகிறார். அவர்கிட்ட நான் ஸாரி கேட்கணும்னு அழுகிறார்'' என நாரதர் கலகம்போல் நல்லதுக்காக பொய் சொன்னேன்.

உடம்பை முறுக்கிக்கொண்டிருந்த மணி இப்போது லேசாக தளர்ந்தார்.

''நாளைக்கி நீங்க ஷூட்டிங் வரும்போது கையில் ஒரு ஆப்பிள் பழத்தை எடுத்திட்டு வாங்க. ஆப்பிள் குடுத்து சமரசமாயிடுங்க'' என்றேன்.

ஆர்.சி.சக்தியின் வீட்டுக்குப் போனேன்.

'நீங்க வேற டைரக்டரைப் போட்டுக்கங்க' என்றார்.

''சக்தி எவ்வளவு பெரிய டைரக்டர். அவர்கிட்ட தப்பா நடந்துக்கிட்டேனே...’னு மணி அழுகிறார் சார்'' என அதே பொய்யைச் சொன்னேன். சக்தியின் கண்கள் கசிந்தன.

ஆப்பிள் சமரசத்தை சக்தியிடமும் சொன்னேன்.

மறுநாள்... கற்பகம் ஸ்டுடியோவில்... சக்தியும், மணியும் பரஸ்பரம் ஆப்பிளை பரிமாறிக் கொண்டனர். அப்போது இருவருமே புளியங்காய் தின்றவர்களைப் போல ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டனர்.

ஒருவழியாக படம் முடிந்து வெளியானது. திருச்சி ஏரியாவை நானே ரிலீஸ் செய்தேன். ‘கராத்தே’ மணிக்கு இருந்த ஆக்ஸன் ரசிகர்களால்; நாங்க எல்லோருமே தப்பித்துவிட்டோம். இதுதான் நான் 'தங்கக்கோப்பை' படம் எடுத்த கதை. படத்திற்கு எந்த கோப்பையும் கிடைக்காததால்... நாலடி உயரத்தில் ஒரு பித்தளைக் கோப்பையை வாங்கி, எனக்கு நானே பரிசளித்து ஞாபகார்த்தமாக அலுவலகத்தில் வைத்துக்கொண்டேன்.

'மிருதங்க சக்கரவர்த்தி' முடிந்ததும் அடுத்த படத் திற்கும் சிவாஜியின் கால்ஷீட் கேட்டு, சிவாஜியின் தம்பி சண்முகத்தை நான் அணுகியபோது... 'ஒரு வருஷம் கழிச்சு வாங்க' எனச் சொல்லியிருந்தார். அதனால்தான் 'நீதிக்கு ஒருபெண்', 'தங்கக்கோப்பை' படங்களைத் தயாரித்தேன்.

ஒரு வருடம் ஆன நிலையில் சண்முகத்தை சந்தித்தேன்.

"கதை ரெடியா?"

"கதை இல்லாம வருவேனா? ஆர்.எஸ்.மனோகரின் 'விசுவாமித்திரர்' மேடை நாடகத்தை அண்ணாமலை மன்றத்தில் பார்த்தேன். ஸீனுக்கு ஸீன் பொறி பறந்தது. அற்புதமான நாடகம். முக்கியமா பேராசிரியர் ஏ.எஸ்.பிரகாசத்தின் வசனம் நாடகத்துக்கு உயிர். மக்கள் ரொம்பவே வரவேற்று ரசிக்கிறாங்க. அதனால் நாடகம் பார்த்த மறுநாளே... ஆர்.எஸ்.மனோகரிடம் ஒரு லட்ச ரூபாய் கொடுத்து கதை உரிமையை வாங்கிவிட்டேன். இதோ பாருங்கள் அக்ரிமெண்ட்" என காண்பித்தேன்.

"அப்ப அண்ணனிடம் சொல்லுங்க" என்றார்.

சிவாஜியைச் சந்தித்து "அண்ணே... ராஜரிஷியான விசுவாமித்திரரோட கதை" என மகிழ்ச்சி பொங்கச் சொன்னேன்.

வேப்ப எண்ணெய் குடித்ததுபோல் ஒரு கசப்பான ரியாக்ஸன் காட்டிய சிவாஜி, "இந்தக் கதை வேண்டவே வேண்டாம்" என்றார்.

"நல்லாருக்கும்ணே..."

"நாடகத்தை நானும் பார்த்தேன். பாதியிலயேஎழுந்து வந்திட்டேன். எனக்கு நாடகம் பிடிக்கல. 'விசுவாமித்திர'ராக படம் முழுக்க நான் தாடியோட வந்தா ரசிகன் பார்ப்பானா?. ஒரு லிமிட்டுக்கு மேல தாடி ஒட்டினா எனக்கும் அலர்ஜி வரும். அதனால வேற கதை பாரு" என்றார் சிவாஜி.

"சரிங்கண்ணே... நாளைக்கு வேற கதையோட வர்றேன்" எனச் சொல்லிவிட்டு வந்தேன்.

மறுநாள் போனேன்.

"அண்ணே... உங்களுக்காக புதுக்கதை யோசிச்சா... நீங்க ஏற்கனவே பண்ணின கேரக்ட்டராவே வருது. 'விசுவாமித்திரர்' கதையவே உங்க சௌகரியத்துக்கு மாத்திக்கலாம்ணே" என்றேன்.

"இந்தக் கதையை படமா பண்ணலாம்னு ஏ.பி.நாகராஜன் கேட்டார். ஜேயார் மூவீஸ் கேட்டது. ஏ.எஸ்.பிரகாசமும் கேட்டார். நான் வேண்டாம்னு சொல்லீட்டேன். ஆனா... நான் இந்தக்கதை வேண்டாம்னு சொல்லச் சொல்ல... ஒன்னோட முகம் அஷ்டகோணலாகுது. உனக்குத் தைரியமிருந்தா எடு. நான் நடிக்கிறேன்" என்றார்.

"தைரியம் இருக்குண்ணே" எனச் சொல்லி, சம்மதம் வாங்கிவிட்டு வந்தேன்.

சிவாஜி, கே.ஆர்.விஜயா, நம்பியார், லட்சுமி, ராதிகா, பிரபு, நளினி என நிறைய நட்சத் திரங்களை வைத்து, "ராஜரிஷி"ஷூட்டிங்கை நடத்திக்கொண்டிருந்தபோது...

காஞ்சிபுரத்தில் ஆர்.எஸ்.மனோகர் 'விசுவாமித்திரர்' நாடகம் போட்டிருந்தார். டைரக்டர் சங்கர் இந்த நாடகத்தை பார்த்ததில்லை என்பதால், அவரையும், அவரின் உதவி இயக்குநர்களையும் அழைத்துக் கொண்டு காஞ்சிபுரம் சென்றோம். நாடகம் பார்த்தோம்.

"இந்த நாடகத்தை படமா எடுக்கலாமா?" என நாடகம் பார்த்துவிட்டு வந்த ஜனங்கள் சிலரிடம் நான் அபிப்பிராயம் கேட்டேன்.

"இதையா படமா எடுக்கப் போறீங்க...?" என கேட்டுவிட்டுப் போனார்கள்.

பெரும் செலவில் படப்பிடிப்பு நடந்துவரும் நிலையில் ரசிகர்கள் இப்படிச் சொன்னதால்... இரவெல்லாம் தூக்கம் வராமல் தவித்தேன்.

அண்ணன் எம்.ஜி.ஆர்., அதிருப்தி!

# தலைமறைவு!

ஆர்.எஸ்.மனோகரின் ‘விசுவாமித்திரர்’ நாடகக் கதையை 'ராஜரிஷி’ என பெரும் செலவில் நான் படமாக எடுத்துக்கொண்டிருக்கையில், “இந்த நாடகக் கதையையா படமா எடுக்கிறது?'' என நாடகம் பார்த்த ஜனங்கள் கமெண்ட் அடித்தனர். சென்னையில் ரசிக்கப்பட்ட நாடகம், சென்னைக்கு வெளியே ரசிக்கப்படவில்லை. அப்போதுதான் சிட்டி ஆடியன்ஸ் வேறு, கிராமப்புற ஆடியன்ஸ் வேறு என்பதை தெளிவாக உணர்ந்தேன்.
அண்ணன் சிவாஜியும் 'வேண்டாம்' எனச் சொல்லியும் 'துணிந்து இறங்கி விட்டோம். கதையை வலுப்படுத்துவோம்’ என எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன்.

நாடகக் கதையில் ஒரு காட்சியில் மட்டும் விசுவாமித்திரர், கௌசிக மன்னனாக வருவார். அதை நான்கு ஸீன்களாக டெவலப் செய்தேன். பிரெஞ்ச் புரட்சியின்போது நடந்த ஒரு சம்பவத்தை இந்தக் கதைக்கு பொருத்தமாக உள்ளே நுழைத்தேன்.

படப்பிடிப்பு முடிந்து, முதல் காப்பி ரெடி.

'ராஜரிஷி'யை நான் பிரமாண்டமாக தயாரித்திருந்ததால் சிவாஜியை வைத்து பாரதிராஜா எடுத்திருந்த 'முதல் மரியாதை' படத்தை ரிலீஸ் செய்யத் தயங்கி, பயந்திருக்கிறார் பாரதிராஜா.

'ராஜரிஷி'யை தன் லட்சியப்படமாக ரசித்து, இசைத்திருந்தார் இளையராஜா. அதனால் பிரசாத் லேப்பில் படத்தைப் பார்க்க முதல் ஆளாக இளையராஜா வந்தார். சிவாஜி, பாரதிராஜா உள்ளிட்டவர்களும் படம் பார்த்தனர்.



படம் முடிந்ததும் வெளியே வந்த பாரதிராஜா 'தேவரே... பயங்கரமா செலவு பண்ணி படத்தை எடுத்திருக்கீங்க. ஆத்தாடி... என்னாலயெல்லாம் இம்புட்டு செலவு பண்ண முடியாது' என எனக்கு கை கொடுத்தார்.

சிவாஜி உட்பட எல்லாரும் சென்றபிறகும்... இளையராஜா மட்டும் தியேட்டர் இருக்கையிலேயே அமர்ந்திருந்தார். நான் அவர் அருகில் போய் நின்றேன்.

''கலைஞானண்ணே... இந்தப் படத்தோட வெற்றி உங்களுக்கும், எனக்கும் பெருமை தேடித்தரப் போகுது'' எனச் சொல்லிவிட்டு வெளியே வந்தார்.

மறுநாள்... சிவாஜியின் தம்பி சண்முகத்திடம் ரிலீஸ் தேதி கேட்டேன்.

''தயவு செஞ்சு ரெண்டு வாரத்துக்குப் பிறகு ரிலீஸ் பண்ணுங்களேன். 'முதல் மரியாதை' படத்துக்கு முன் எந்தப் படமும் நிற்க முடியாது. அற்புதமான படம். அது ரிலீஸான பிறகு நீங்க பண்ணுங்க. இல்லேன்னா ஒங்க படம் அடிபடும்'' என்றார்.

அன்று ஒரு கோடி ரூபாய் பட்ஜெட்டில் எடுக்கப்பட்டது 'ராஜரிஷி'. இன்றைய மதிப்பில் அது நூறுகோடி பட்ஜெட் படம். உடனே ரிலீஸ் செய்ய முடியாததால் சோகமானேன்.

'முதல் மரியாதை' ரிலீஸ் ஆனது. முதல்நாளே படம் பார்த்தேன். அற்புதமாக இருந்தது. 'ஒரு கிழவனை, ஒரு குமரி காதலிக்கிறாள்... என கதை சொல்லி, வெற்றி பெற பாரதிராஜாவால் மட்டுமே முடியும்' என நினைத்து வியந்தேன்.

மூன்று வாரம் கழித்து... 'ராஜரிஷி' ரிலீஸ். சென்னை சிட்டியில் சொந்தமாக ரிலீஸ் செய்தேன். செலவு செய்த பட்ஜெட் அளவுக்கு படம் போகவில்லை. படத்தின் ரிசல்ட் தெரிந்ததுமே அதில் மேனகையாக நடித்த லட்சுமி எனக்கு முதலில் போன் செய்தார்.

"கலைஞானம் சார்... கவலைப்படாதீங்க. நாங்க இருக்கோம். நீங்க அடுத்து எடுக்கப்போற படத்தில் எங்களால் முடிந்த அளவுக்கு உதவி செய்வோம்" என்றார்.

கே.ஆர்.விஜயாவின் கணவர் வேலாயுதம் நாயர் அழைத்ததன் பேரில் அவரின் வீட்டுக்குச் சென்று சந்தித்தேன்.

"வெற்றியும், தோல்வியும் என்னோட வாழ்க்கையில் சாதாரணம். உங்களுக்கு இது பெரிய தோல்விதான். இருந்தாலும் அடுத்தடுத்து மிகப்பெரிய வெற்றி கிடைக்கும்" என்றவர் கேரள டீ கொடுத்து உபசரித்துவிட்டு... தன் வாழ்க்கையில் நடந்த முக்கியமான நிகழ்வைச் சொன்னார்.

எனக்கு கோடிக்கணக்கான சொத்துகளில் முதலீடு, தொழில் ஸ்தாபனங்கள்... என நிறைய உண்டு. ஆனாலும் ஒரு கெட்ட நேரம்... சொத்துக்கள் முடங்கிவிட்டன. வங்கியிலும் பைசா எடுக்க முடியாதபடி முடக்கப்பட்டது.

நீங்க 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தை எடுத்துக் கிட்டிருந்தப்போ... அந்த படப்பிடிப்பிற்காக விஜயா கிளம்பணும். காருக்கு பெட்ரோல் போடணும். வீட்ல இருந்தது நூறு ரூபா மட்டும்தான். நானும் வெளியில போகணும்தான். யாருகிட்டயாவது பணம் கேட்டா 'வேலாயுதம் இவ்வளவு தாழ்ந்திட்டானா?'னு பேசுவாங்க. அன்றைய சூழ்நிலைல விஜயாதான் சம்பாதிக்கிறவள். அதனால் நான் வீட்டில் முடங்கிக்கொண்டு, விஜயாவின் காருக்கு பெட்ரோல்போட அந்த நூறு ரூபாயைக் கொடுத்துவிட்டேன். இந்த விஷயம் விஜயாவுக்குத் தெரியாது.

அதன் பிறகு, பிரச்சினைகள் சால்வ் ஆகி, பல கோடிகளை சம்பாதிச்சிட்டேன். ஊரெல்லாம் 'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தைப் பத்திபேசவும், வீட்லயே படத்தைப் போட்டுப் பார்த்தேன். 'இவ்வளவு

அருமையான படத்தை கலைஞானம் எடுத்திருக்காரே... அடுத்து அவருக்கு ஒரு பெரிய பள்ளம் விழும்'னு நினைச்சேன். அதுபோலவே இப்போ ஆகிப்போச்சு. கவலப்படாதீங்க... நான் இருக்கேன். எந்த உதவியும் செய்றேன்'' என ஆறுதல் கூறினார் கே.ஆர்.விஜயாவின் கணவர் வேலாயுதம் நாயர்.

நான் 'ராஜரிஷி' படத்தை தயாரித்து முடித்திருந்த சமயம்... சிகிச்சைக்காக அமெரிக்கா சென்ற அண்ணன் எம்.ஜி.ஆர். உடல் நலம் பெற்று சென்னை திரும்பியிருந் தார்.

'மிருதங்க சக்கரவர்த்தி'யை பார்த்து ரசித்த மாதிரி, 'ராஜரிஷி'யையும் முதல்வர் எம்.ஜி.ஆர்., பார்க்க வேண்டும்'என விரும்பினேன். அந்த பாக்கியமும் கிடைத்தது. ஜானகியம்மாவுடன் வந்து படம் பார்த்து முடித்தார்.

'மிருதங்க சக்கரவர்த்தி'யை தயாரித்ததற்காக அவரிடம் பாராட்டு வாங்கினேனல்லவா... அதே போல் ஒரு பாராட்டை எதிர்பார்த்தேன்.

சற்று முகம்சுளித்த எம்.ஜி.ஆர்., ''இந்தக் கதையை நீங்க எடுத்திருக்கக் கூடாது'' என்றார் எடுத்த எடுப்பிலேயே.

'இந்தக் கதை வேணாம்னு அண்ணன் சிவாஜி சொன்ன மாதிரியே, அண்ணன் எம்.ஜி.ஆரும். சொல்கிறாரே?' என நினைத்தபடி அவரையே பார்த்தேன்.

''இது தமிழ்நாட்டு மக்களுக்கு பரிச்சயமில்லாத கதை. ஆனா... நிறைய செலவு செஞ்சு எடுத்திருக்கீங்க. அந்த பிரமாண்டத்திற்காக படம் ஓடினால்தான் ஆச்சு'''எனச் சொல்லிவிட்டு காரில் ஏறினார்.

அப்போது டைரக்டர் சங்கரிடம் ''சார்... 'மிருதங்க சக்கரவர்த்தி'க்கு நாலு விருது இருக்குனு அண்ணன் சொன்னாரே... அதை ஞாபகப்படுத்துங்க'' என்றேன்.

இப்பதான் மெல்ல மெல்ல உடல்நலம் பெற்று வர்றார். இப்ப போய் விருது பற்றி கேட்கிறது சுயநலம். இப்போ நாம செய்யவேண்டியது, ''முதல்வர் பரிபூரண குணமடையணும்'னு வேண்டிக்கிறதுதான்'' என்றார்.

'எனக்கு இந்தக் கதை பிடிக்கல. அதுக்கு மேல உன் இஷ்டம்' என சிவாஜி சொல்லியும், விடப்பிடியாக நான் 'ராஜரிஷி'யை எடுத்து சூடு போட்டுக்கொண்டேன். கிட்டத்தட்ட 25 லட்ச ரூபாய் அளவில் நஷ்டம். கடன் கொடுத்தவர்கள் ஆபீஸை முற்றுகையிட ஆரம்பித்தார்கள்.

அவர்களின் தொந்தரவு தாங்க முடியாமல் மகாபலிபுரம் சாலையில் இருக்கும் ஐடியல் ஹோட்டலில் ரூம் போட்டு தலைமறைவாகத் தங்கினேன்.

நான் தூங்கி எழுந்தபோது என் கால்மாட்டி லும், தலைமாட்டிலுமாக இரண்டு கடன்காரர்கள் இருந்தார்கள்.

"அட... எப்ப வந்தீங்க?"

"நாங்க வந்து ரொம்ப நேரமாச்சு சார். நல்லா அசந்து தூங்கிக்கிட்டிருந்தீங்க. அதான் எழுப்பல. ஆமா... எங்க பணத்தை எப்போ செட்டில்பண்ணப் போறீங்க?"

"காசிக்குப் போனாலும் கருமம் தீராதுங்கிற மாதிரி... ஆபீஸ விட்டுட்டு இங்க வந்தேன். இங்கேயுமா? நான் உங்க பணத்தை மோசடி செஞ்சிரமாட்டேன். கொஞ்சம் டைம் கொடுங்க" என அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி னேன்.

தலைமறைவாக இருந்தும் கடன் கொடுத்தவர்கள் கண்டுபிடித்து வந்துவிட்டாலே... அடுத்து தொழில் செய்ய விடமாட்டார்கள். அதனால் நான் தயாரித்த படங்களின் 99 வருஷ உரிமையை விற்றேன். அதில் ஐந்து லட்ச ரூபாய் தேறியது. அதில் முக்கியமான கடன்காரர்களுக்கு கொடுத்துவிட்டேன். மீதம் 20 லட்ச ரூபாய் கடன் இருந்தது.

நான் யோசிக்க ஆரம்பித்தேன்.

ஒரு திரைப்படம் எப்படியெல்லாம் நஷ்டத்தை உருவாக்குகிறது?

இதற்குப் பல காரணங்கள் உண்டு.

படம் எடுத்து முடித்த பிறகு... விநியோகஸ்தர்களுக்கு போட்டுக்காட்டுவது வழக்கம். படம் பிடிக்காமல் போனால்... 'நாங்க குடுத்த அட்வான்ஸ திருப்பிக் குடுங்க. இந்தப் படம் ஓடாது' எனச் சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். இதனால் மேலும் கடன் வாங்கி படத்தை சொந்தமாக ரிலீஸ் செய்வார் தயாரிப்பாளர். இந்த மாதிரி சமயங்களில் நடுத்தரமான தயாரிப்பாளர்கள் நஷ்டத்தால் அழிந்துபோவார்கள்.

ஒரு தயாரிப்பாளர், ஃபைனான்ஸியரை நம்பி படத்தை ஆரம்பித்து எடுத்து வருவார். திடீரென பாதியில் ஃபைனான்ஸியர் கைவிட்டு விடுவார். இதனால் வேறு ஃபைனான்ஸியரை தேடி அலைவதற்குள் ஜென்மம் ஆகிவிடும். இதனால் படம் கால தாமதமாக வெளியாகி நஷ்டத்தை உண்டாக்கும். சில சமயம் ஹீரோ-ஹீரோயின் கருத்து வேறுபாட்டால் தயாரிப்பாளர் நஷ்டப்படுவதும் உண்டு.

# பீடியால் வந்த நட்டம்!

ஒரு திரைப்படம் தோல்வி யடைவதற்கு பல காரணங்கள். அதில் மிக முக்கியமானது... கதாநாயகன், கதாநாயகி இடையேயான கருத்து வேறுபாடு மிக முக்கிய காரணம்.

அந்தக் காலத்தில் பிரபலமானது 'முருகன் டாக்கீஸ்' தயாரிப்பு நிறுவனம். அதன் உரிமையாளர் சுந்தரம் அய்யரிடம் நான் சென்னை வந்த சமயம் கார் டிரைவராக பணியாற்றினேன். அதுபற்றி நான் ஏற்கனவே பல தகவல்களை எழுதியிருக்கிறேன். அப்போது பழைய தகவல் ஒன்றை நான் அறிய நேர்ந்தது. அதை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

அன்றைய சூப்பர் ஸ்டார் பி.யூ. சின்னப்பாவையும், தென்னிந்திய சூப்பர் ஸ்டார் என புகழ் பெற்றிருந்த நடிகை பானுமதியையும் ஜோடியாக நடிக்க வைத்து, இரட்டை இயக்குநர்களான கிருஷ்ணன்-பஞ்சு இயக்கத்தில் 'ரத்ன குமார்' படத்தைத் தயாரித்தது முருகன் டாக்கீஸ்.

சின்னப்பா ஒரு பீடி பிரியர். சதா நேரமும், புகைத்தபடியே இருப்பார். பானுமதியுடன் சேர்ந்து நடிக்கும் காட்சிகளின் போதும், புகைத்துவிட்டே வருவார். பானுமதிக்கு இந்த பீடி நாற்றம் பிடிக்காமல் வாமிட் ஃபீல் ஏற்பட்டு, செட்டுக்கு வெளியே போய்விடுவார். பலமுறை இப்படி நடந்ததால் பீடி வாடையை சகிக்க முடியாமல், சுந்தரம் அய்யரைக் கூப்பிட்டு "இவர் எப்போ பீடி குடிக்காம வர்றாரோ... அப்போ நான் ஷூட்டிங் வர்றேன்' எனச் சொல்லிவிட்டு கிளம்பி விட்டார்.

இதை சின்னப்பாவிடம் தெரியப்படுத்தினார் சுந்தரம் அய்யர்.

'பீடி குடிப்பதை நிறுத்தச் சொன்னா... நான் உங்க படத்தில் நடிக்க மாட்டேன்' எனச் சொல்லிவிட்டார் சின்னப்பா.



பாதி படம் வளர்ந்த நிலையில் இந்தப் பஞ்சாயத்து. இதனால் படம் நின்றுபோனது. சின்னப்பாவும், பானுமதியும் வேறு வேறு படங்களில் பிஸியாக இருந்ததால்... இந்தப் படத்தை கண்டுகொள்ளவில்லை. நாலைந்து வருடங்கள் வரை இழுபறியாகி... அதன்பிறகே படப்பிடிப்பை முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். படம் வெளியானது. இருப்பினும், மிகத்தாமதம் காரணமாக, முருகன் டாக்கீஸுக்கு நிறைய நஷ்டம்.

சமயங்களில்... இயற்கையால் கூட நஷ்டம் வரும்.

நட்சத்திரங்களின் ஒத்துழைப்பு, டைரக்டர் உள்ளிட்ட தொழில்நுட்ப கலைஞர்களின் ஒத்துழைப்பு, ஃபைனான்ஸ்ஸியரின் ஒத்துழைப்பு.. இப்படி எல்லா அம்சமும் தயாரிப்பாளருக்கு சாதகமாக இருக்கும்.

ஊட்டியில் தேயிலை எஸ்டேட்டில் ஷூட்டிங் என பிளான் போட்டு யூனிட் போய் நிற்கும். ஆனால் அடை மழை பிடித்துக்கொள்ளும். யூனிட்டுக்கு சாப்பாட்டுச் செலவு செய்து கட்டுப்படியாகாத தயாரிப்பாளர்,"காட்சிகளை இண்டோரில் இருப்பதுபோல் மாற்றி எழுதி எடுத்துவிடலாம்'' என்பார். கதாசிரியரைக் கூப்பிட்டு கதையை மாற்றச் சொன்னால் 'மாத்துனா நல்லா இருக்காதே' என்பார். 'மாத்தலேன்னா... கதாசிரியரவே மாத்த வேண்டியிருக்கும்' என தயாரிப்பாளர் சொல்லுவார்.

இதற்குப் பயந்து, கதாசிரியர் கதையை மாத்த.. படமே டோட்டலாக மாறி வெற்றிக்கு வேட்டு வைக்கும்.

எனது 'ராஜரிஷி' படத்திற்கு அண்ணன் சிவாஜி உட்பட ஆல் ஆர்டிஸ்ட் ஒத்துழைப்பு இருந்தது. தயாரிப்புச் செலவுக்கான முழுப்பணமும் கையில் இருந்தது. இருப்பினும் ஏன் நஷ்டம் வந்தது?

புராணப்படம் என்பதால் 50 குதிரைகள், சாரட் வண்டி, யானைகள், சேவகர்களாக நடிக்க துணை நடிகர்கள், நட்சத்திரங்கள் மற்றும் யூனிட் ஆட்கள் உட்பட 250 பேர்களுடன் ஊட்டியில் போய் இறங்கினோம். விடிந்தால் படப்பிடிப்பு.... விடியும் நேரத்தில் டைரக்டர் கே.சங்கருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. கோவையில் ஒரு மருத்துவமனையில் சேர்த்தோம். 15 நாட்கள் சிகிச்சை பெற வேண்டியிருந்தது. இதனால் யூனிட் சென்னைக்கு ரிட்டர்ன் ஆனது. இதனால் மட்டும் 4-5 லட்ச ரூபாய் நஷ்டம். 1985-ல் இது பெரிய நஷ்டத்தொகைதானே.

கே.சங்கர் குணமாகி வந்த பிறகு... இதே யானை, குதிரை உள்ளிட்ட செட்-அப்புடன் ஒகேனகலில் ஷூட்டிங் நடத்த முகாமிட்டோம். விடிந்தால் ஷூட்டிங்... என்கிற நிலையில், இரவில் புரொடக்ஸன் பாய்ஸ் ஐந்து பேர்கள், சாராயம் குடிப்பதற்காக சாராயம் காய்ச்சும் இடத்திற்குப் போய்விட்டனர். இவர்களுடன் அந்த கள்ளச் சாராயம் குடித்த உள்ளூர்வாசிகளும் பெரும் பாதிப்படைந்தனர். முப்பது பேர்கள் கள்ளச் சாராயத்தால் உயிரிழந்தனர். அதில் புரொடக்ஸன் பாய் ஒருவர். 100 பேர்கள் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டனர். அதில் புரொடக்ஸன் பாய்ஸ் நான்கு பேர்கள்.

இதனால் ஷூட்டிங் தொடங்கப்படவில்லை. இறந்து போன புரொடக்ஸன் பாயின் உடலை எடுத்து கொண்டு சென்னை வந்து, அவரின் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தேன். இறுதிச்சடங்கு உள்ளிட்ட செலவுகளுக் காக ஒரு தொகையையும் கொடுத்துவிட்டு வந்தேன். புரொடக்ஸன் பாயின் பொறுப்பில்லாத்தனத்தால் ஷூட்டிங் நிறுத்தம் உள்ளிட்ட வகையில் எனக்கு நஷ்டம். புரொடக்ஸன் யூனியனிடம் சட்ட ரீதியாக நான் நஷ்ட ஈடு வாங்கியிருக்க முடியும். இருப்பினும், ஒரு தொழிலாளர் அமைப்பை கஷ்டப்படுத்த வேண்டாமே... என விட்டு விட்டேன்.

ஒகேனகலில் மீண்டும் படப்பிடிப்பு தொடங்கியது.

துஷ்யந்தனாக நடிக்கும் பிரபு குதிரையில் வருவதுபோல காட்சி. இதற்காக ஆற்று மணலில் குதிரை மீது பிரபு பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தார். குதிரையை வேகமாக ஓட்டி வந்தபோது, புதை மணலில் குதிரை சிக்கியது. மணலில் புதைந்த குதிரையின் உடம்பிற்குக் கீழே பிரபுவின் கால் மாட்டிக் கொண்டது. சிரமப்பட்டு குதிரையையும், பிரபுவையும் வெளியே தூக்கினோம். பிரபுவின் காலில் பெரிய அளவில் சுளுக்கு. உடனடியாக பெரிதாக வீங்கிவிட்டது. பிரபுவால் நடக்க முடியவில்லை. பிரபுவின் விருப்பத்தின் பேரில், சேலத்தில் சிவாஜியின் உறவினர் வீட்டில் பிரபுவை தங்க வைத்துவிட்டு, மொத்த யூனிட்டும் சென்னை திரும்பினோம். இதனால் நான்கு லட்ச ரூபாய் எதிர்பாராத நஷ்டம். 'ராஜரிஷி' படத்தின் இரண்டு ஏரியாவை சொந்தமாக ரிலீஸ் செய்தேன். படம் பரவாயில்லை என ரிப்போர்ட் வந்தும், வசூல் கம்மி. அத்துடன் மேலே சொன்ன முன் நஷ்டங்களும், வட்டியும் சேர்ந்து 25 லட்ச ரூபாய் கடன் என்னை நெருக்கியது. இதில் என் படங்களின் 99 வருட உரிமையை விற்றதில் வந்த ஐந்து லட்ச ரூபாயை கடனுக்கு கொடுத்தது போக இருபது லட்ச ரூபாய் கடனில் இருந்தேன்.

மலையாளத்தில் ‘ஓடையில் நின்னு’ என்றொரு படம் வந்தது. அதை ‘பாபு’ என்ற பெயரில் தமிழில் எடுத்தார்கள். சிவாஜி ரிக்சாக்காரனாக நடித்திருந்தார். கதைப்படி, வீடற்ற தனிமனிதனான ரிக்சாக்காரன்... ஒரு நாள் கடும் மழையால் ஒரு குடிசை வீட்டின் தாழ்வாரத்தில் ஒதுங்குவான். வீட்டுக்குள் குழந்தையுடன் இருந்த சௌகார்ஜானகி, ரிக்சாக்காரனுக்கு சாப்பாடு தருவார். ஒருவேளை சோறு போட்டதற்காக அந்தக் குடும்பத்திற்கு தன் வாழ்நாளையே அர்ப்பணிப்பான். நன்றிகெட்ட இந்த உலகத்திற்கு, புத்தி சொல்லும் அருமையான படமாக "பாபு" அமைந்தது.

என் வாழ்க்கையில் நிஜமாகவே நன்றியுணர்ச்சியுடன் செயல்பட்டவர் தம்பி கே.பாக்யராஜ்.

விஜயா லேப்பில் விநியோகஸ்தர்கள் மத்தியில் பேசிக்கொண்டிருந்தபாக்யராஜ், 'அண்ணன் கலைஞானம் நஷ்டத்திற்கு ஆளாகிவிட்டார். நான் முதன்முதலில் அவரிடம்தான் அஸிஸ்டெண்ட்டாக இருந்தேன். அதன் பிறகுதான் எங்க டைரக்டர் பாரதிராஜாவிடம் சேர்ந்தேன். ஒரு வேளையாவது நான் அவர் வீட்டில் சாப்பிட்டிருக்கேன். அவருக்கு நான் உதவி செய்தே ஆகவேண்டும்' எனச் சொல்லியிருக்கிறார். ‘முந்தானை முடிச்சு’ படத்தால் பாக்யராஜின் புகழ் உச்சத்தில் இருக்கையில் இப்படிச் சொல்லியிருக்கிறார்.

அங்கிருந்த ஒரு விநியோகஸ்தர் என்னைச் சந்தித்தார்.

"கலைஞானம் அண்ணே... புடிங்க... ஒங்க படத்துக்கு 25 ஆயிரம் அட்வான்ஸ்" என்றார்.

"நான் படம் எதுவும் எடுக்கலையே" என்றேன்.

"படம் எடுத்து ரிலீஸ் பண்ணப் போறதாவே வச்சுக்கங்க" எனச் சொல்லிவிட்டு, பாக்யராஜ் பேசியதை என்னிடம் சொல்லிவிட்டுப் போனார்.

'இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கலாமே'னு நானும், என் மனைவியும் கலந்து பேசிவிட்டு, பாக்யராஜிற்கு போன் செய்தேன்.

"வீட்டுக்கு வாங்கண்ணே... வாசல்லயே வெய்ட் பண்றேன்" என்றார்.

நானும், என் மனைவியும் காரில் அவரின் வீட்டுக்குப் போகையில் நல்ல மழை. வீட்டு வாசலில் பாக்யராஜ் ஒரு குடையுடனும், பூர்ணிமா பாக்யராஜ் ஒரு குடையுடனும் காத்திருந்தனர்.

எங்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர்.

"அண்ணே... உங்களுக்கு எத்தனை லட்சம் கடன் இருக்கு?"

"இருபது லட்சத்துக்கு மேல..."

"5-10 லட்சம்னா சமாளிக்கலாம்" என மலைத்தவர்... "சரிங்கண்ணே... இதுக்கு என்ன பண்ணலாம்?னு யோசனை பண்ணிச் சொல்றேன்" என்றார்.

உணவு பரிமாறினார் பூர்ணிமா. சாப்பிட்டுவிட்டு கிளம்புகையில்... "அண்ணே... நீங்க ரெட்டியாரோ... (நாகிரெட்டியார்) செட்டியாரோ... (ஏவி.மெய்யப்பச் செட்டியார்) இல்லை. ஒரு எழுத்தாளன். இனிமே நீங்க சின்ன பட்ஜெட் படமா எடுங்க. அதையும் தனியா எடுக்க வேணாம். கூட்டுச் சேர்ந்து எடுங்க" என யோசனை சொல்லி வழியனுப்பி வைத்தார்.

# யேசுதாஸ் கோபம்!

எதிர்பாராத சம்பவங்களால் 'ராஜரிஷி' படம் மூலம் எனக்கு கடன் ஏற்பட்டது. அதுபற்றி தம்பி பாக்யராஜ் தன் வீட்டில் வைத்து என்னிடம் விசாரித்துவிட்டு உதவுவதாகச் சொன்னார். அப்போது.... ''நீங்க ரெட்டியாரோ, செட்டியாரோ... இல்லை. நீங்க ஒரு எழுத்தாளர். அதை மனதில் வைத்து இனிமே சின்ன பட்ஜெட்டில், வேறு சிலரை கூட்டுச் சேர்த்துக்கொண்டு படம்தயாரியுங்கள்''என"தம்பி கே.பாக்யராஜ் சொன்னதை நினைவில் கொண்டு 'ஜோதிமலர்' என்கிற சிறு பட்ஜெட் படத்தைத் துவங்கினேன். என் உயிருக்கு உயிரான நண்பர் வெங்கட்ராம அய்யர் என்னிடம் பத்தயிரம் ரூபாயைக் கொடுத்து 'என்னையும் இந்தப் படத்தில் பார்ட்னராக சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றார். அவரைச் சேர்த்துக் கொண்டு, ஃபைனான்ஸ் வாங்கி படப்பிடிப்பை நடத்தினேன். ஜெய்சங்கர், கே.ஆர்.விஜயா, கங்கா, பாண்டியன் உட்பட பலரும் நடித்தனர். கதை, திரைக்கதை, வசனம் மற்றும் பாடல்கள் எழுதி, படத்தை தயாரித்தேன். இராம.நாராயணன் இயக்கம்.

1962-ல் 'தாய்க்குலம்' என்கிற படத்திற்காக நான் கிட்டத்தட்ட ட்யூனுடன் எழுதிய இரு பாடல்கள், அந்தப் படம் தயாரிக்கப்படாததால் பதிவாகவில்லை. அப்போது நடந்த சுவாரஸ்யமான சம்பவங்களை ஏற்கனவே நான் விரிவாகச் சொல்லியிருக்கிறேன். அந்த இரு பாடல்களையும், நான் படம் தயாரிக்கும்போது சமயம் பார்த்து பயன்படுத்த வேண்டும்... என நீண்ட நாட்களாக நினைத்துக்கொண்டிருந்தேன். 1986-ல் 'ஜோதிமலர்' படத்தில் அதற்கான வாய்ப்பு அமைந்தது.



இந்த இரண்டு பாடல்களையும் கே.ஜே.யேசுதாஸ்தான் பாட வேண்டும் என்பது எனது லட்சியமாகவே இருந்தது. யேசுதாஸுக்கும், எனக்கும் முன்பின் அறிமுகமில்லை. பொதுவாக பாடகர்களின் கால்ஷீட் வாங்குவது, அவர்களுக்காக சம்பளத்தைப் பேசி வாங்கித் தருவது இசையமைப்பாளர்களின் பொறுப்புதான். தயாரிப்பாளரைப் பற்றியெல்லாம் பாடகர்கள் கேட்க மாட்டார்கள். அதனால் இசையமைப்பாளர் சங்கர்-கணேஷிடமே அவரை புக் பண்ணச் சொன்னேன்.

'யேசுதாஸ் அமெரிக்கா போயிருப்பதாகவும் வர்றதுக்கு 25 நாட்களாகும்' என அவரின் பி.ஏ. மூலம் தெரியவந்தது. படப்பிடிப்பு கிட்டத்தட்ட முடிந்த நிலை. இந்த இரு பாடல்களையும் வேறு யாரையாவது வைத்து பாடச்செய்து படம் பிடித்தால் ரிலீஸ் பண்ணிவிடலாம். ஆனாலும் நான்... 'யேசுதாஸ் வர்றதுக்கு எத்தனை நாள் ஆனாலும் பரவால்ல. படத்தை ரிலீஸ் பண்ணாமல் தாமதிப்பதால் வட்டி ஏறும்... இருந்தாலும் பரவால்ல' என முடிவுசெய்து காத்திருந்தேன். அந்த அளவுக்கு அவரின் குரல் மேல் எனக்கு மயக்கம்.

ஒருமாதம் கழித்து யேசுதாஸ் சென்னை திரும்பினார்.

ஏவி.எம்.ரெக்கார்டிங் தியேட்டரில் பாடல் பதிவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. யேசுதாஸ் வந்தார். டைரக்டர் இராம.நாராயணன், தான் இயக்கி வந்த வேறொரு படத்தின் படப்பிடிப்பிற்குப் போய்விட்டார். இசையமைப்பாளர்கள் சங்கர்-கணேஷும் தனது மெயின் உதவியாளரை இங்கே இருந்து பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, அவர்கள் வேறொரு பெரிய கம்பெனி படத்தின் கம்போஸிங்கிற்கு சென்றுவிட்டார்கள். பொதுவாக யேசுதாஸுக்கு ட்யூன் சொல்லிக் கொடுப்பதென்றால் சில மியூஸிக் டைரக்டர்களுக்கு பயம்தான். அந்த அளவுக்கு யேசுதாஸ் ஜீனியஸ். மியூஸிக் டைரக்டர் வராததற்கு ஒருவேளை அதுவும் காரணமோ... என்னவோ....? இது என்னுடைய சந்தேகம்தான்.

நான் எழுதிய இரு பாடல்களும், சுமார் 24 ஆண்டு களுக்குப் பிறகு அரங்கேற்றம் ஆகப்போவதால் ரொம்ப ஆர்வத்துடன் ரெக்கார்டிங் இஞ்ஜினியரின் அறைக்குள் வந்து உட்கார்ந்துவிட்டேன்.

கண்ணாடி அறைக்குள் இருந்தபடி முதல் பாடலாக...

வெண்ணிலா முகம் பாடுது-அது

கண்ணிலே சுகம் தேடுது

வண்ணமயிலும், வானவில்லும்

பெண்ணுருவில் வந்து ஆடுது'

பாடலை பாடி முடித்தார்.

லைவ்வாக கேட்டு கிறங்கிப் போனேன்.

அடுத்த பாடல்...

'பிறப்பதற்கும் இறப்பதற்கும் நடுவிலே -மனிதன்

பெரிய பெரிய கனவு கண்டான் முடியலே

வாழ்வதற்கும் தாழ்வதற்கும் நடுவிலே -விதி

வருவதெந்த உருவத்திலே தெரியலே...'

இந்தப் பல்லவியை பிரமாதமாகப் பாடிவிட்டார்.

அடுத்து சரணம்...

'இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலே -நடக்கும்

ரகசியத்தை இன்னும் எவரும் அறியலே

பெருகிவரும் மனிதகுலம் உலகிலே -எதற்கு

பிறக்குதென்று இதுவரைக்கும் புரியலே...'

எனப் பாடிவந்த யேசுதாஸ், திடீரென பாடுவதை நிறுத்தினார். நானும், இஞ்ஜினியர் ஜே.ஜே.மாணிக்கமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

"இந்த இடத்தில் மீட்டருக்குள் வார்த்தை உட்காராமல் இடிக்குதே" என இஞ்ஜினியரிடம் மைக்கில் தெரிவித்தார்.

உடனே நான் ஆர்வத்துடன் மைக் மூலம் "ஆமாம் சார்... இடிக்குது. கொஞ்சம் கேப் விட்டு எடுத்தீங்கன்னா சரியா வரும்" என்றேன்.

மியூஸிக் டைரக்டர்தான் மைக்கில் பேசுகிறார் என நினைத்துக்கொண்டு "இதையெல்லாம் அங்க இருந்துக்கிட்டு சொல்லக்கூடாது. இங்க வந்து சொல்லுங்க. இன்னவரைக்கும் எங்க போயிருந்தீங்க?" எனக் கோபமாகக் கேட்டார்.

சங்கர்-கணேஷின் உதவியாளரான அய்யரோ பயத்தில் கை, கால் நடுங்கியபடி நின்றிருந்தார்.

"நான் போய் கரெக்ட் பண்றேன்" என ஆர்வத்துடன் கிளம்பி யேசுதாஸ் இருந்த கண்ணாடி அறைக்கு வந்து, கதவைத் திறந்து இரு கைகளையும் கூப்பினேன். "வணக்கம் சார். நீங்க சொல்றது சரிதான்" என்றேன்.

வணக்கத்திற்கு எந்த ரியாக்ஸனும் காட்டாமல், விசுவாமித்திரக் கோபம் என்பார்களே... அப்படியான கோபக் கண்களுடன் என்னைப் பார்த்தார்.

நான் அவரின் கோபத்தைத் தணிக்கும் விதமாக, இன்னும் குனிந்து, கிட்டத்தட்ட அவரின் தொப்புள் லெவலுக்கு குனிந்து, தலை வணங்கி "வணக்கம் சார்" என்றேன்.

"நீங்க யாரு? முதல்ல... வெளியில போங்க" என்றார்.

'சரிங்க சார்' என வெளியே வந்தேன். எனக்கோ, உடம்பெல்லாம் புடைத்து, முறுக்கிக் கொண்டது. அவ்வளவு உச்சகட்ட கோபம்.

மீண்டும் கதவை திறந்துகொண்டு கத்தினேன்.

"டேய்... யேசுதாஸ்... அயோக்யா... நான் உன்னோட ஃபேன். உன் பாட்டுன்னா எனக்கு உசுரு. உன்னைப் பாட வைக்கணும்கிறதுக்காகவே ஒரு மாசமா படத்தை ரிலீஸ் பண்ணாம வச்சிருக்கேன். வட்டி

ஏறிக்கிட்டிருக்கு. அது எவ்வளவு பணம்னு உனக்குத் தெரியுமா? கொஞ்சம்கூட மனிதத்தன்மை இல்லாம... வணக்கம் சொன்னதுக்கு பதில் வணக்கம் வைக்காம இருக்கியே... ராஸ்கல்..." என இன்னும் மோசமான வார்த்தைகளை அளவுக்கு அதிகமாகவே கொட்டிவிட்டேன்.

டென்ஷனில் என் உடல் கிடுகிடுத்தது.

இஞ்ஜினியரின் அறைக்குள் வந்து உட்கார்ந்துவிட்டேன்.

இதற்குமுன்... கனவில்கூட யேசுதாஸை யாரும் இப்படித் திட்டியிருக்கமாட்டார்கள். அதனால் பெரும் அதிர்ச்சியில் மலைத்துப்போய் நின்றுவிட்டார்.

தன்னை சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்ட யேசுதாஸ், இண்டர்காமில் இஞ்ஜினியரிடம் "இங்கே வந்திட்டுப் போனவர் யார்?" என விசாரிக்க...

"டைரக்டரும் வரலை. மியூஸிக் டைரக்டரும் வரலை. அஸிஸ்டெண்ட்டை விட்டுட்டுப் போயிட்டாங்க. இப்போ அங்க வந்தவர்தான் கலைஞானம். இந்தப் படத்தோட கதை, வசனகர்த்தா, தயாரிப்பாளர். இந்தப் பாடல்களையும் அவர்தான் எழுதியிருக்கார்" என இஞ்ஜினியர் சொன்னார்.

"உடனே அவரை இங்க அனுப்புங்க" என்றார்.

மறுபடியும் பிரச்சினை வந்துவிடக்கூடாது என்பதால் நான் தயங்கினேன்.

"அவர் கண்டிப்பா இங்க வரணும்" என மீண்டும் வலியுறுத்தினார் யேசுதாஸ்.

# அவர் செய்த சத்தியம்!

'ஜோதிமலர்' படத்திற்கான பாடல் பதிவின்போது நான் தயாரிப்பாளர் -பாடலாசிரியர் என்பது தெரியாமல், என் வணக்கத்திற்கு பதில் வணக்கம் சொல்லாத பாடகர் கே.ஜே.யேசுதாஸ் 'நீங்க யார்? முதல்ல வெளியே போங்க' என்றதால் கோபமாகி அவரை கடுமையான கெட்ட வார்த்தைகளால் திட்டிவிட்டு ரெக்கார்டிங் இஞ்ஜினியர் அறைக்கு வந்துவிட்டேன்.
இண்டர்காம் மூலம் இஞ்ஜினியரை தொடர்புகொண்டு என்னைப் பற்றி விசாரித்து தெரிந்துகொண்ட யேசுதாஸ் 'அவரை உடனே இங்க வரச்சொல்லுங்க' என்றார். மீண்டும் பிரச்சினை வரக்கூடாது என்பதால் நான் தயங்க... 'அவரை கண்டிப்பாக இங்கே அனுப்புங்கள்' என மீண்டும் வலியுறுத்திய யேசுதாஸ், 'ஜீஸஸ் மேல் ஆணை. நான் அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்' என்றார்.

அடுத்த வினாடியே என் உடம்பு ஆடிவிட்டது.

'எப்பேர்பட்ட கலைஞன். அவரோட கால் தூசுகூட பெறமாட்டோம். அவரைப்போய் அசிங்கமாக பேசிவிட்டோமே' என அச்சமும், வேதனையுமாக, அவரை முகம் கொண்டு பார்க்க கூச்சப்பட்டபடி கண்ணாடி அறையின் கதவைத் திறந்தேன். 'ஓ'வென வாய்விட்டு அழுதபடி இருகைகளையும் கூப்பி 'என்னை மன்னியுங்கள்'' என்றேன். அதன்பிறகு என்னிடமிருந்து வார்த்தைகள் வரவில்லை.

அப்படியே என்னை இறுகக் கட்டிப்பிடித்த யேசுதாஸ், ''அண்ணா... என்னை மன்னியுங்கள். மன்னிச்சிடுங்க. 'மன்னிச்சுட்டேன்'னு நீங்க சொன்னாத்தான் உங்களை விடுவேன்'' என்றபடி மேலும் என்னை இறுக்கிப் பிடித்தார்.

எனக்கு வார்த்தை வரவில்லை. அழுதபடி தலையை மட்டும் அசைக்கிறேன். அவரும் கண்ணீர்விட்டார். எங்களால் பேச

முடியவில்லை. ஆனாலும் எங்கள் இருவரின் கண்ணீரும் ஒன்றாக கலந்து பேசிக்கொண்டது.



என்னை, தன் பிடியிலிருந்து விடுவித்த யேசுதாஸ் "யாராக இருந்தாலும், அவர்களை மதிக்க வேண்டும் என்பது அந்த நேரத்தில் என் புத்திக்கு எட்டாமப் போச்சு. இப்போ ஜீசஸ் நல்ல புத்தியை எனக்குக் கொடுத்திட்டார். இப்படி ஒரு சூழ்நிலை எனக்குத் தேவைதான். இந்த இக்கட்டு மூலம் எனக்கு ஒரு நல்ல சகோதரனை ஜீஸஸ் கொடுத்திட்டார். அண்ணா... இன்னைலருந்து நீங்க எடுக்கிற படத்திலெல்லாம் நான்தான் பாடுவேன். அதேசமயம்... பாடுறதுக்கு பணம் வாங்கமாட்டேன். இது சத்தியம் அண்ணா" என்றார்.

நான் நெகிழ்ந்து நின்றேன்.

"அண்ணா... நீங்க ரெக்கார்டிங் ரூமுக்கு போங்க. உங்களுக்கு திருப்தி வர்றவரைக்கும் பாடுறேன்" என்றார்.

பேயறைந்த மாதிரி ரெக்கார்டிங் ரூமிற்கு திரும்பினேன்.

"அடப் புத்திகெட்டவனே... யேசுதாஸ் பாடணும் கிறதுக்காக ஒரு மாசம் காத்திருந்தியே. அந்த தாமதத்துக்காக வட்டியையும் சந்தோஷமா சுமந்தியே? ஒரு நிமிஷம் பொறுமையா இருந்திருக்கலாமேடா... பாவிப்பயலே" என என் தலையில் என் மனசாட்சி எதையோ கொண்டு அடிப்பது மாதிரி இருந்தது எனக்கு.

பாடலைப் பாடி முடித்த யேசுதாஸ் மைக் மூலம் "கலைஞானம் அண்ணா... எப்படியிருக்கு?" எனக் கேட்டார்.

"சூப்பர்... சூப்பர்..."

"இல்ல... இன்னொருமுறை பாடுறேன் கேளுங்க" எனச் சொல்லிவிட்டு அதே பாடலை திரும்பவும் பாடினார்.

அந்த சோகப்பாடலில் இப்போது சோகத்தின் உச்சகட்டமே ஒலித்தது.

"அண்ணா... இப்ப எப்படி இருக்கு?"

"ரொம்ப நல்லாருக்கு"

"இல்ல... இன்னொருமுறை பாடுறேன்" என மூன்றாவது முறையாகவும் பாடினார்.

"இப்ப எப்படி இருக்கு?"

"நீங்க மூணு முறை பாடியதுமே சிறப்பா இருக்கு" என்றேன்.

"நான் கிளம்பறேன்" எனச் சொல்லிவிட்டு தியேட்டரி லிருந்து வெளியேறி தனது காரில் ஏறினார்.

யேசுதாஸுக்கான சம்பளத்தை ஒரு பேப்பரில் பண்டலாகக் கட்டி, புரொடக்ஸன் மேனேஜர் ஆறுமுகத்திடம் கொடுத்து கொடுக்கச் சொன்னேன். அவர் கொண்டுபோய் கொடுத்தார்.

"நான் சொன்னா சொன்னதுதான். இது என் சகோதரன் கம்பெனி. என் வாழ்நாள் பூராவும் இந்தக் கம்பெனிக்கு சம்பளம் வாங்காமல் பாடுவேன். சொன்னபடி நடப்பேன். இதை கலைஞானம் அண்ணாவிடம் சொல்லிவிடுங்கள்" என பணத்தைப் பெற்றுக்கொள்ளாமலே கிளம்பிப் போய்விட்டார்.

'ஜோதிமலர்' படம் வெளியானது. படம் சுமாராகத்தான் போனது. ஆனால் அந்தப் படத்திற்கு யேசுதாஸ் பாடிய பாடல்கள் ரொம்பவே பிரபலமானது. அதிலும் இன்றைய தேதிவரை வானொலி இரவு நேர ஒலிபரப்பில் 'வெண்ணிலா முகம் பாடுது' பாடல் நேயர் விருப்பமாக ஒலித்தபடி இருக்கிறது. இந்த பாடல் ஒலிபரப்பிற்காக ஆண்டுதோறும் எனக்கு ராயல்டி வந்து கொண்டுதான் இருக்கிறது.

ஒருநாள்... நள்ளிரவில் பாரதிராஜா எனக்கு போன் செய்தார். 'இந்நேரத்தில் போன் பண்றாரே' என பதட்டத் துடன் பேசினேன்.

"இப்பத்தான் ரேடியோவில் 'வெண்ணிலா முகம்' பாடலைக் கேட்டேன். அடப்பாவி... சண்டாளா... இப்படியெல்லாம் கூட பாட்டெழுதுவீங்களா? கேட்கக் கேட்க சுகமா இருக்கே" என பாராட்டினார் பாரதிராஜா.

இந்தப் பாராட்டுக்குக் காரணகர்த்தா... யேசுதாஸ். அவருக்கு எத்தனை வணக்கம் வைத்தாலும் தகும். இப்படி அருமையாக பாடியதற்கு சம்பளம் வாங்க மறுத்துவிட்டதை நினைத்து என் மனசு நிம்மதி இல்லாமல் இருந்தது. 'இந்த பாடலுக்குரிய சம்பளத்தை அவருக்கு கொடுத்தே ஆக வேண்டும்' என தீர்மானித்து அதற்கான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன். ஏழெட்டு வருஷங்களுக்குப் பிறகு அந்த சந்தர்ப்பம் அமைந்தது.

1994-ல் 'புதுப்பட்டி பொன்னுத்தாயி' படம் எடுத்தேன். அப்படத்தின் நெகடிவ் ரைட்ஸ் இராம.நாராயணனுக்கு என்கிற ஒப்பந்த அடிப்படையில் தயாரித்தேன்.

இளையராஜா இசையில் ஒரு சோகமான பாட்டு கம்போஸ் ஆனது.

'இறுகிக் கிடக்கும் பாறையிலே

நீரைத் தேடும் வேரு -அந்த தாயைப்போல யாரு'

என பாடலை புலமைப்பித்தன் எழுதினார்.

குற்றுயிராக கிடக்கும் வளர்ப்பு மகனை கட்டை வண்டியில் படுக்க வைத்து ராதிகா இழுத்துச் செல்ல... பின்னணியில் இந்தப் பாடல் ஒலிக்கும்.

இதை யேசுதாஸ்தான் பாட வேண்டும் என முடிவு செய்தோம்.

"என் படம் என்று தெரிந்தால் யேசுதாஸ் பணம் வாங்கமாட்டாரே... அதனால் 'இது இராம.நாராயணன் தயாரிக்கும் படம்' என யேசுதாஸ் கவனத்திற்கு கொண்டு சென்று... அவரைப் பாட வைத்தாகிவிட்டது. நான் யேசுதாஸ் கண்ணில் படாமல் இருந்தேன். பாடி முடித்து அவர் கிளம்புகையில் இந்தப் பாடல் பாடியதற்கான சம்பளத்தையும், 'வெண்ணிலா முகம்' பாடலுக்கான சம்பளத்தையும் சேர்த்து பண்டல் போட்டு, தயாரிப்பு நிர்வாகியான என் மாப்பிள்ளை நடராஜனிடம் கொடுத்து 'இராம.நாராயணன் கொடுத்தார்னு சொல்லி யேசுதாஸ் கைல கொடு' என்றேன்.

அதன்படி நடராஜன் கொடுக்க... யேசுதாஸ் வாங்கிக் கொண்டு கிளம்பினார்.

'ஒரு மனிதன் உழைத்ததற்கான ஊதியத்தை அவனுக்கு கொடுத்துவிட்டோம்' என்கிற நிம்மதி எனக்கு அப்போதுதான் ஏற்பட்டது.

யேசுதாஸ் என்கிற இசையுலக ஜீனியஸின் வசீகரக் குரலை என் படங்களில் தொடர்ந்து நான் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் போனதற்கு எனது பொறுமையற்ற கோபம்தான் காரணம். இது ஒருவகையில் எனக்கு பெரிய நஷ்டமே.

கோபத்துடன் எழுபவன் நஷ்டத்துடன் அமருவான்' என்கிற சீனப் பழமொழியை அய்யா ஏ.ராமையா என்னிடம் அடிக்கடி சொல்லுவார்.

சென்னையில், வாஹினி, ஏவி.எம். ஸ்டுடியோக்கள் உருவாவதற்கு முன்பாகவே... சென்னையின் முதல் ஸ்டுடியோவை உருவாக்கியவர் அய்யா ராமையா.

அவருடனான எனது அனுபவமும், அவர் மூலம் நான் பானுமதியிடம் கதை சொன்னதும் மறக்கவே முடியாத அனுபவங்கள்தான்.

அது...

# வந்தார் பானுமதி!

கோடம்பாக்கத்தின் முதல் ஸ்டுடியோ' என்கிற பெருமைக்குரியது ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோ. அதன் பிறகுதான் வாஹினி ஸ்டுடியோ, ஏவி.எம். ஸ்டுடியோ சென்னையில் அமைந்தது.

முதல் ஸ்டுடியோவின் உரிமையாளர் அய்யா ஏ.ராமையாவைச் சந்திக்கிற வாய்ப்பு 1960-61-ல் அமைந்தது. நீண்ட வருடங்களுக்குப் பிறகு மீண்டும் படம் தயாரிக்க விரும்பிய ராமையாவிடம் கதை சொல்வதற்காக எனது நண்பரும், 'பாக்தாத் திருடன்' உள்ளிட்ட சில படங்களின் வசனகர்த்தாவுமான ஏ.எஸ்.முத்து என்னை அவரிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார்.

'வண்டிக்காரன் மகன்' என்கிற கதையை நான் சொன்னேன்.

''நான் நினைச்ச மாதிரியே நல்ல கதை கிடைச்சிடுச்சு. எம்.ஆர்.ராதா, எஸ்.வி. சுப்பையா, எஸ்.எஸ்.ஆர்., பிரேம்நசீர் ஆகியோருக்கு இந்தக் கதை பொருத்தமாக இருக்கும் கலைஞானம்'' என்ற ராமையா தன் குடும்பத்தினர் எல்லோரையும் அழைத்து ஒவ்வொருவராக எனக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

''இது என் மனைவி கண்ணாமணி. இது என் மூத்தமகள் சரோஜினி. இது என் இரண்டாவது மகள் தங்கமணி. இது என் மூன்றாவது மகள் ராணி. இது என்னோட ஒரே மகன் முத்துக்குமாரசாமி'' என அறிமுகப்படுத்தினார். அப்படி அறிமுகப்படுத்தக் காரணம்.... 'அப்பா படம் தயாரிக்க நல்ல கதை கிடைக்கலியே என காலதாமதம் செய்து வருகிறாரே' என குடும்பத்தினர் நினைத்தனர். இப்போது நல்ல கதை அமைந்ததால், படத் தயாரிப்பை உடனே தொடங்குவது உறுதி என்பதை தெரியப்படுத்தவே இந்த அறிமுகப்படலம். இந்த மகிழ்ச்சியில் குடும்பத்தினர் எனக்கு இனிப்பு கொடுத்து உபசரித்தனர்.



அதன்பிறகு ராமையா என்னைப் பற்றிய விபரங்களை விசாரித்தார்.

முழு விபரமும் சொன்னேன்.

1940-களில் கோடம்பாக்கத்தில் முதல் ஸ்டுடியோவை அமைக்கும் துணிச்சல் இவருக்கு எப்படி வந்தது? என்கிற ஆச்சரியத்தை அவரிடமே தெரிவித்தேன்.

தனது பின்னணி குறித்து ராமையா என்னிடம் முழுமையாகச் சொன்னார்.



தஞ்சை அருகே உள்ள உடையார்கோவில் கிராமம்தான் ராமையாவின் சொந்த ஊர். அவரின் அப்பா ஆறுமுகத் தேவர் பெரிய நிலக்கிழார். ஒரே வாரிசு என்பதால் சென்னை பிரஸிடென்ஸி கல்லூரியில் ராமையாவை படிக்க வைத்தார். 1930-வாக்கில் லண்டனில் உள்ள பிரபல இம்பீரியல் கல்லூரியில் படிக்க அனுப்பப்பட்டார். அப்போதெல்லாம் மிகப்பெரிய பணக்காரர்கள் மட்டுமே பயணிக்கும் ராயல் கப்பலில்தான் லண்டன் சென்றார் ராமையா.

இரண்டாண்டுகள் படிப்பு முடிந்து சொந்த ஊர் திரும்பினார் ராமையா. தஞ்சை மாவட்டத்திலேயே முதன்முதலாக லண்டனில் படித்துவிட்டு வந்தவர் ராமையா என்பதால்... அவரின் அப்பாவுக்கு மட்டில்லா மகிழ்ச்சி. ஊரெங்கும் தோரணம், மேளம் முழங்க, கேரளாவிலிருந்து யானையை வரவழைத்து அதில் ராமையாவை ஏற்றி ஊர் முழுக்க வலம் வர வைத்திருக்கிறார். அன்றைய தினம் ஊருக்கே விருந்தும் தரப்பட்டது.

"மகனே... அடுத்து என்ன செய்ய உத்தேசம்?"

"அப்பா... நான் சினிமா தொழில் செய்யலாம்னு..."

"உன் விருப்பப்படியே செய்"

அப்பாவின் ஆசியுடன் சென்னை வந்து நண்பர்களுடன் தங்கியிருந்தபோது... டைரக்டர் ஒய்.வி.ராவ் அறிமுகமானார். (நடிகை லட்சுமியின் அப்பா ஒய்.வி.ராவ்).

''தெலுங்கில் சினிமா படம் எடுக்கலாமே'' என ராவ் கொடுத்த ஆலோசனைப்படி தெலுங்கில் ஐந்து படங்களைத் தயாரித்தார் ராமையா.

'நாரதநாரி', 'கிருஷ்ணபிரேமா', 'அரிச்சந்திரா', 'சாரங்க தாரா' மற்றும் 'மாயா மச்சேந்திரா' படங்களைத் தயாரித்தார். தமிழில் 'சம்சாரநௌகா', 'விஜயலட்சுமி' படங்களையும், மலையாளத்தில் 'கேரள கேசரி', மற்றும் கன்னடத்தில் ஒரு படத்தையும் தயாரித்தார் ராமையா. பின்னாளில் தென்னிந்தியப் புகழ்பெற்ற கண்ணாம்பாவை 'மாயா மச்சேந்திரா' படம் மூலம் அறிமுகப்படுத்தியவர் ராமையாதான்.

இதையெல்லாம் என்னிடம் தெரிவித்த ராமையா, கொண்ட காதலில் விடாப்பிடியாக இருந்த பானுமதி பற்றி சொல்ல ஆரம்பித்தார்.

''நான் 'கிருஷ்ண பிரேமா' படத்தில் பானுமதியை கதாநாயகியாக்கினேன். அந்தப் படத்தில் உதவி இயக்குநரா இருந்த ராமகிருஷ்ணா மீது பானுமதிக்கு காதல். ''போயும் போயும் உன் அந்தஸ்துக்கு பொருத்தமில்லாத உதவி டைரக்டரை காதலிப்பதா?'' என பானுமதி வீட்டில் கடும் எதிர்ப்பு. பெரிய பிரச்சனை ஆயிடுச்சு. இருந்தாலும் பானுமதி தன்னோட காதல்ல உறுதியா இருந்தார். இதை தெரிஞ்சுக்கிட்ட நான் அந்த காதல் ஜோடியை சேர்த்து வைக்க முடிவு செஞ்சேன். என்னோட வீட்டில் வைத்து பானுமதிக்கும், ராமகிருஷ்ணாவுக்கும் தெலுங்கு முறைப்படி கல்யாணம் செஞ்சு வச்சேன். அதிலிருந்து பானுமதி என்னையும், என் மனைவியையும் தன்னோட பெற்றோராவே பாவிக்க ஆரம்பிச்சார்.

1944-ல் கோடம்பாக்கத்தில் இடம் பிடித்து 'ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோ'வை ஆரம்பிச்சேன். பனங்காடு மாதிரி இருந்த இடத்தில் 106 கிரவுண்ட்டில் ரெண்டு பெரிய ஃபுளோரோட ஸ்டுடியோவைக் கட்டினேன். (இந்த ஸ்டுடியோவுக்காக பூமி பூஜை போடும் இந்த புகைப்படத்தைப் பாருங்கள் வாசகர்களே... பனங்காடு மாதிரி இருக்கும் இந்த இடம் எது தெரியுமா? இப்போது வடபழநி பஸ் டெப்போ இருக்கும் இடத்திற்கு பக்கத்து இடம்தான். அதாவது... கோடம்பாக்கத்திலிருந்து வந்தால் வடபழனி பஸ் டிப்போவை தாண்டியதும் டிப்போவின் சுற்றுச் சுவரை ஒட்டியுள்ள, ஆற்காடு சாலையில் உள்ள இடம்தான் ஸ்டார் ஸ்டுடியோ இருந்த இடம்.)

இந்த ஸ்டுடியோவில் வைத்துத்தான் தமிழ், மலையாளப் படங்களை தயாரிச்சேன். சிலோன்காரர் மூணாஸ் என் ஸ்டுடியோவில்தான் படம்

தயாரிச்சார், என்.எஸ்.கிருஷ்ணன் உட்பட பல பிரமுகர்களுக்கு என்னோட ஸ்டுடியோவை வாடகைக்கு விட்டேன். பலரும் சரியா வாடகைப் பணம் தரல. நானும் இரக்கப்பட்டு கேட்காம விட்டுட்டேன். அதனால நான் கடனாளியாயிட்டேன். ஸ்டுடியோவும் கைவிட்டுப் போச்சு. இப்ப மறுபடியும் படம் தயாரிக்க ஆசை வந்திருக்கு. ஏ.எஸ்.முத்துகிட்ட விவாதிச்சேன். அவர்தான் உங்களை என்கிட்ட சேர்த்திருக்கார். இனிமே என்கூடவே உங்களை வச்சிக்கிறேன். இந்தப் படத்துக்கு பானுமதி கணவர் ராமகிருஷ்ணாவை டைரக்டரா போடலாம்னு முடிவு பண்ணீருக்கேன். அவர்கிட்ட நீங்க கதையைச் சொல்லணும்'' என்றார் ராமையா.

பானுமதிக்குச் சொந்தமான பரணி ஸ்டுடியோவிற்கு என்னை அழைத்துச் சென்று ராமகிருஷ்ணாவிடம் அறிமுகப்படுத்தினார். கதையைச் சொன்னேன்.

''கதை ரொம்ப நல்லாருக்கு. ஒரு சின்ன ரெக்வெஸ்ட்...''

''என்ன?'' என்றார் ராமையா.

''பானுமதிகிட்டேயும் இந்தக் கதையைச் சொல்லச் சொல்லுவோமே. அவரோட அபிப்ராயத்தையும் கேட்போமே'' என்றார் ராமகிருஷ்ணா.

ராமையாவும் சம்மதித்தார்.

''பானுமதி நெல்லூர்ல இருந்து மெட்ராஸுக்கு கார்ல வந்துக்கிட்டிருக்கார். இன்னும் ஒரு மணி நேரத்துல இங்க வந்திடுவார். அதுவரைக்கும் வெய்ட் பண்றீங்களா?''

''தாராளமா'' என்றார் ராமையா.

ராமகிருஷ்ணாவின் அறையில் காத்திருந்தோம்.

'அஷ்டாவதானி' எனப்படும் பல திறமைகள் கொண்ட தென்னிந்திய நட்சத்திர தாரகையான பானுமதியிடம் கதை சொல்லப் போகிறோம் என்கிற பரபரப்பும், பதட்டமுமாக இருந்தேன் நான். ஒரு பிரபலத்திடம் கதை சொல்லப்போகும் முதல் அனுபவம் என்பதால் தித்திப்பும், திகைப்புமாக இருந்தது மனசு.

ஒரு மணிநேரம் கடந்த நிலையில்....

கார் சத்தம் கேட்டது.

என்னை அழைத்துக்கொண்டு வெளியே வந்தார் ராமையா.

அலுத்துச் சலித்து காரைவிட்டு இறங்கினார் பானுமதி.

''பானு... அய்யா ராமையா என் ரூம்ல உட்கார்ந்திருக்கார்'' என ராமகிருஷ்ணா சொன்னதும் நன்றி உணர்ச்சியில் பானுமதியின் முகம் பிரகாசமானது. இருப்பினும் உடல் சோர்வால் தலையை ஆட்டினார்.

என்னைக் கைகாட்டி ''இவரிடம் ஒரு கதை இருக்கு. எனக்குப் பிடிச்சது. நீயும் கதையைக் கேட்டுட்டு அபிப்ராயம் சொல்லு'' என்றார் ராமகிருஷ்ணா.

அலுப்பால் 'உஸ்ஸ்ஸ்ஸ்...' என நீண்ட பெருமூச்சுவிட்ட பானுமதி, என்னை மேலும் கீழும் பார்த்தார்.

நான் வணக்கம் வைத்தேன்.

நான் அப்போது ஏழ்மையின் உச்சத்தில் இருந்த நேரம். அடிக்கடி துவைத்துக் கட்டியதால் பழுப்பேறியிருந்தது நான் அணிந்திருந்த கதர் வேஷ்டியும், சட்டையும்.

பானுமதியை நேரில், அதுவும் மிக அருகில் பார்த்து விட்டதால் என் உள்மனம் பிரகாசமானது. இருப்பினும்... 'நாம சொல்ற கதையை நிராகரிச்சிடுவாரோ...' என்கிற பயமும் இருந்த்து. ஆனாலும் தைரியப்படுத்திக் கொண்டேன்.

தன் அறைக்குச் சென்று சோபாவில் அமர்ந்த பானுமதி 'அப்படி உட்காருங்க' என்பது போல சைகை செய்தார்.

# சம்பளத்துக்காக நெல்!

பயணக் களைப்பில் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்த பானுமதி 'ஏதோ... கதை சொல்றீங்களாமே... ஷார்ப்பா சொல்ல முடியுமா?' எனக் கேட்டார். சொல்லப்போனால் அவருக்கு அப்போது கதை கேட்கும் மனநிலையே இல்லைதான். இருப்பினும் 'ஷார்ப்பாக சொல்வதாக' தலையை அசைத்துவிட்டு கதையைச் சொல்ல ஆரம்பித்தேன்.
சோபாவில் சரிந்து உட்கார்ந்திருந்த பானுமதி நான் காட்சிகளை குறிப்பிட்டு கதையைச் சொல்லச் சொல்ல... ஆர்வமாகி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

சுமார் ஒரு மணிநேரம் கதை சொன்னேன்.

"வெரிகுட். இவ்வளவு பிரமாதமாக கதை சொல்றீங்களே... உங்க பேர் என்ன?"

"கலைஞானம்"

பானுமதி தனக்குத்தானே 'கலை...ஞானம்' எனச் சொல்லிப் பார்த்துவிட்டு 'வெரிகுட் நேம். முதல்ல உங்களைப் பார்த்ததும்... 'என் உசிரை வாங்குறதுக்குன்னே ஒரு ஆள் எங்க இருந்தோ வந்துட்டாரே'னு நினைச்சேன். உங்க தோற்றம் அப்படி இருந்தது" என மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசியவர் 'வேர் இஸ் காமெடி?' எனக் கேட்டார்.

எனக்கு ஆங்கிலம் புரியவில்லை. இருப்பினும் நான் சொன்ன கதையில் நகைச்சுவை காட்சிகள் இல்லாதது குறித்து கேட்கிறார்' எனப் புரிந்துகொண்டு 'திரைக்கதை எழுதும் போது சேர்த்துக்கலாம்' என்றேன்.

ஏ.ராமையாவும், பானுமதியின் கணவர் ராமகிருஷ்ணாவும் வந்தனர்.



"கதை ரொம்ப நல்லாருக்கு. படம் எடுக்கலாம்" என தெலுங்கில் அவர்களிடம் தெரிவித்தார் பானுமதி.

முதன்முதலாக ஒரு பிரபலத்திடம்... அதுவும் சகலகலா வாணியான பானுமதியிடம் கதை சொல்லி, ஓகே. ஆனதால் சந்தோஷத்தில் ஆயிரம் ரெக்கைகள் கட்டிப் பறந்தது என் மனசு. என் வாழ்நாளில் இன்றளவும் நான் மறக்கமுடியாத அனுபவம்... பாக்யம் அது.



எம்.ஆர்.ராதாவும், எஸ்.எஸ்.ஆரும் அப்பா-மகன், எஸ்.வி.சுப்பையாவும், பிரேம்நசீரும் அப்பா-மகன் என எனது கதையான 'வண்டிக்காரன் மகன்' படத்திற்கு நட்சத்திரங்களை புக் செய்து டோக்கன் அட்வான்ஸும் கொடுத்தார் ராமையா.

அடுத்த சில நாட்களில் குடும்பத்தினருடன் காரில் ஊருக்கு கிளம்பினார் ராமையா.

''கலைஞானம்... இப்போ எங்க ஊரான உடையார் கோவிலில் நெல் அறுவடை சீஸன். நான் அங்க போய் கூடஇருந்து நெல் அறுவடையானதும் அதை விற்று பணம் கொண்டு வற்றேன். ஷூட்டிங் தொடங்கிடலாம்'' என்றவர் 'ஆமா... உனக்கு நான் அட்வான்ஸ் கொடுத்தேனா?' என்று கேட்டார்.

நான் சிரித்தேன்.

நடிகர்களுக்கெல்லாம் கொடுத்துட்டேன். நீ நம்ப புள்ளயாச்சே. கூடவே இருக்குறதுனால மறந்துட்டேன். சரி... அதனாலென்ன. நான் ஊருக்குப் போய் இறங்கினதும் உனக்கு ஒரு மூடை நெல் அனுப்பி வைக்கிறேன். அதை அரைச்சு சாப்பாட்டுக்கு வச்சுக்க'' எனச் சொல்லிவிட்டு கிளம்பினார்.

அடுத்த இரு நாட்களில்... மைலாப்பூர் காரணேஸ்வரர் கோயில் தெருவில் நான் பத்து ரூபாய் வாடகைக்கு குடியிருந்த வீட்டுக்கு ஒரு மூட்டை நெல் வந்து இறங்கியது.

எனக்கு இன்ப அதிர்ச்சி. ஒரு மூட்டை நெல்லை அரைத்து தாராளமாக சாப்பாட்டுக்கு வைத்துக் கொள்ளலாம் என மகிழ்ந்துபோனேன்.

என் வீட்டருகே இருந்த மளிகைகடைக்காரர் ஒரு சினிமா பைத்தியம். அதனால் என்னிடம் மிகுந்த மதிப்பு உண்டு அவருக்கு. மளிகைப் பொருட்களை எனக்கு கடனாகவும் கொடுப்பார்.

அவரிடம் போய் "நெல் அரைக்கணும். அரவைக் கூலிக்கு பணம் கைமாத்தாக் குடுங்க" என்றேன்.

"எங்க போய் அரைப்பீங்க?"

"ஏதாவது ஒரு ரைஸ்மில்ல அரைக்க வேண்டியது தான்" என்றேன்.

மளிகைக்கடைக்காரர் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீங்க?"

"மெட்ராஸ் டவுனுக்குள்ள நெல் அரைக்கக்கூடாதுனு ரூல்ஸ் இருக்கு தெரியுமா?"

"தெரியாதே..."

"தெரு முனைல கிருஷ்ணானு ஒரு கைவண்டிக்காரன் இருப்பான். அவனை நான் கூப்பிட்டேன்னு கூட்டிவாங்க" என்றார்.

நான் போய் அழைத்து வந்தேன்.

"கிருஷ்ணா... சாருக்கு ஒரு மூடை நெல் அரைக்கணும். எங்க அரைக்கலாம்?"

"திருவான்மியூர் தாண்டி ஒரு தோட்டத்துக்குள்ள ஒரு அரவை மில் இருக்கு. காத்தால புறப்பட்டுப் போனாத்தான் ராவுக்குள்ள வீடு திரும்ப முடியும். நாளைக்கி காத்தால வந்து நெல்ல எடுத்துட்டுப் போறேன்" என்றார் கிருஷ்ணா.

மறுநாள்... கை வண்டியில் நெல் மூட்டையை ஏற்றினார் கிருஷ்ணா.

"நீங்களும் கூடவே போய்ட்டு வாங்க. அப்பத்தான் திருட்டு நடக்காது" என என் காதைக் கடித்த கடைக்காரர் அரைப்புக் கூலிக்கான பணத்தை

என் கையில் கொடுத்தார்.

வண்டிக்காரர் முன்னே இழுத்துச் செல்ல... நான் பின்னாலேயே நடந்தேன்.

அடையாறு வரை ரோடு நன்றாக இருந்தது. அதன்பிறகு... மண்ரோடுதான். மணல், மண், சகதி, மேடு, பள்ளம்... என ஆங்காங்கே கைவண்டி சிக்கிக் கொள்ள... நான் தம் கட்டி தள்ளிவிட... ஒருவழியாக மில்லுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

நெல்லை அரிசியாக்கியதில் அரை மூட்டை தேறியது. அதை எடுத்துக் கொண்டு வீடு திரும்பியபோது மணி இரவு ஒன்பது.

மளிகைக்கடைக்காரருக்கு தரவேண்டிய முன்பாக்கி, அரவைக்கு அவர் கொடுத்த பணம் ஆகியவற்றுக்கு அரிசியாக எடுத்துக்கொண்டார். வண்டிக்கார கிருஷ்ணா வுக்கும் கூலியாக அரிசியை எடுத்துக் கொடுத்தார் கடைக்காரர். கடைசியில் நாலுபடி அரிசி மிச்சம். அதை பையில் போட்டுக் கொண்டு வீடு திரும்பினேன்.

தர்ம சிந்தனையுள்ள அய்யா 'ஸ்டார் ஸ்டுடியோ' ராமையாவால் படம் எடுக்க முடியாத சூழ்நிலை ஆகிவிட்டது.

இதோ... இன்றுவரை நான் அந்த குடும்பத்தில் ஒரு அங்கமாக இருக் கிறேன்.

ராமையாவின் ஒரே மகன் முத்துக்குமாரசாமியும், அவர் மனைவி மீனாட்சியும் என்மீது பிரியமுடன் பழகுகிறார்கள். முத்துக்குமாரசாமி இப்போது சென்னை ஹைகோர்ட்டில் பிரபல வக்கீலாக பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

ராமையாவின் வம்சம் ஆல்போல் தழைத்து சிறப்புடன் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

'ஜோதிமலர்' படத்தை வெளியிட்ட பின்பு, ஒருநாள்...

பிரசாத் ஸ்டுடியோவில் இளையராஜாவைச் சந்தித்தேன்.

'ராஜரிஷி' படத்தால் எனக்கு ஏற்பட்ட நஷ்டம் குறித்து கவலையுடன் பேசினார். அந்தச் சமயம் இளையராஜாவின் கால்ஷீட்டுக்காக தென்னிந்திய தயாரிப்பாளர்கள் வரிசை வைத்து காத்திருந்த பிஸியான நேரம்.

"அண்ணே... நான் உங்களுக்கு ஆறு பாடல்கள் போட்டுத் தர்றேன். அதை வச்சு ஒரு படம் பண்ணுங்க. எனக்கு பணம் வேண்டாம்" என்றார் இளையராஜா.

அவருக்கு நன்றி சொல்லிவிட்டு வெளியே வந்து காரில் ஏறி கிளம்ப...

எதிரே... இளையராஜாவைப் பார்ப்பதற்காக காரில் உள்ளே நுழைந்த பாக்யராஜ் என்னைப் பார்த்துவிட்டு 'கலைஞானம் அண்ணே' என்றபடி காரில் இருந்து இறங்கினார். நானும் இறங்கினேன்.

"என்னண்ணே?"

"ராஜாவ பாக்க வந்தேன் தம்பி. நான் கடன்ல இருக்கிறதுக்காக வருத்தப்பட்டவர் 'ஆறு பாடல்கள் தர்றேன். அதுக்கு கதை பண்ணி படம் எடுங்க'னு சொல்லீருக்காரு."

"பாட்டுக்காக கதையா?"

"ஆமா... ஏன் முடியாது?"

"அந்தப் பரீட்சையெல்லாம் வேணாம். இப்ப என்ன பண்றீங்க?"

"சும்மாதான் இருக்கேன்."

"நான் ஒரு கதை சொல்றேன். கூட இருந்து பண்ணித் தர்றீங்களா?"

"தாராளமா"

"வெளியூர் போகலாமா?"

"போலாம்"

"எப்ப போகலாம்?"

"எப்ப வேணும்னாலும்"

"இன்னைக்கே"

"போலாமே"

"சாயங்காலம் கிளம்புறோம். பவானி பக்கத்துல என்னோட தோட்டம் இருக்கு. அங்கதான் டிஸ்கஷன்."

"சந்தோஷம்"

இருவரும் விடை பெற்றோம்.

**தம்பி பாக்யராஜுடனான எனது சுவாரஸ்யமான அனுபவங்கள்....**

# என்னை நடிகனாக்கிய பாக்யராஜ்!

'தம்பி பாக்யராஜ் டிஸ்கஷனுக்கு கூப்பிட்டிட்ருக்கு' என என் மனைவியிடம் தெரிவித்துவிட்டு பயணத்துக்கு தயாரானேன். நான், பாக்யராஜ், பாக்யராஜின் உதவியாளர்களான வீ.சேகர், லிவிங்ஸ்டன் மற்றும் பார்த்திபன் உள்ளிட் டோருடன் சென்னையிலிருந்து இரவு காரில் கிளம்பினோம்.

காலை ஏழு மணிக்கெல்லாம் பவானியை அடுத்து இருந்த பாக்யராஜின் தோட்டத்து பங்களாவை அடைந்தோம். குளித்துவிட்டு, டிபன் சாப்பிட்டுவிட்டு காலை பத்துமணிக்கு அனைவரும் ஹாலில் அமர்ந்தோம்.

'எங்க சின்னராசா' கதையைச் சொன்னார் பாக்யராஜ்.

"தம்பி... நானே பழைய ஆளு. ரொம்ப பழைய டைப்ல சித்தி கொடுமையை வச்சு கதை சொல்றீங்களே?" என்றேன்.

"அண்ணே, அப்படி ஒரு கதை பண்ணலாமே. முதன்முதலா நான் அஸிஸ்டெண்ட்டா சேர்ந்தது உங்ககிட்டத்தான். அப்பவெல்லாம் நீங்க கே.எஸ். கோபாலகிருஷ்ணன் மாதிரி குடும்பக் கதையா சொல்வீங்க. 'என்னடா இது.. பழைய பாணியில கதை சொல்றாரே'னு ஜீரணிச்சுக்க முடியாமத்தான் பாரதிராஜாகிட்ட அஸிஸ்டெண்ட்டா சேர்ந்தேன். ஆனா... இப்போ உங்க பாணியிலேயே ஒரு கதையை ரெடி பண்ணி படமாக்கலாம்னு ஐடியா வந்திச்சு. அதான்..." என்றார் பாக்யராஜ்.

"சரிங்க தம்பி. என்னோட சிந்தனையில் உங்களுக்கு நம்பிக்கை இருந்தா... நான் வொர்க் பண்ணித் தர்றேன். இப்போ மணி என்ன?"



"பகல் 12"

"நாளைக்கி காலைல 11 மணிவரைக்கும் என்னை தனியா விட்ருங்க. நீங்கள்லாம் உங்க வேலைகளைப் பாருங்க" எனச் சொல்லிவிட்டு எழுந்தேன்.

இரவெல்லாம் பாக்யராஜின் கதைக்கு ஸீன் உருவாக்கினேன். காலைக்குள் முப்பது ஸீன்களை ரெடி செய்தேன்.

சொன்னபடி காலை 11 மணிக்கு எல்லோரும் கூடினோம்.

"கதையைப் பேசலாமாண்ணே" என கேட்டார் பாக்ய ராஜ்.

"பேசுறதில்லை. நான் விலாவாரியா கதையை ஸீன்களோட சொல்றேன்" எனச் சொல்லிவிட்டு ஒரு மணிநேரம் சொன்னேன்.

கர்சிப்பை வாயில் வைத்து கடித்தபடி சிரித்த பாக்யராஜ், "அண்ணே... நாம மெட்ராஸ் கிளம்பலாமா?" என்றார்.

எனக்கு பகீர் என்றது. 'நாம் சொன்ன ஸீனெல்லாம் தம்பிக்கு பிடிக்கலையோ?' என யோசித்தபடி அவரையே பார்த்தேன்.

''இது போதும்ணே எனக்கு. இதை வச்சு நாம கொடி கட்டீரலாம்ணே'' என்றார்.

எனக்கு உயிர் வந்தது. 'அப்பாடா... பாஸாயிட்டோம்' என நிம்மதியடைந்தேன்.

நான் எத்தனையோ வெற்றிகரமான கதைகளை தந்திருந்தாலும் கூட... நான் புதிதாக ஒரு கதையோ, காட்சிகளோ சொல்லும்போது அது ஏற்கப்பட்டு விட்டால்... அன்று புதிதாய் பிறந்ததைப்போல் ஒரு சந்தோஷத்தை அனுபவிப்பேன்.

முழுமையான கதை கிடைத்த திருப்தியுடன் சென்னை திரும்பினோம்.

தம்பி பாக்யராஜ் தனக்கே உரிய பாணியில் சகல மசாலாவும் சேர்த்து, வேறு யாராலும் சொல்ல முடியாத க்ளைமாக்ஸ் அமைத்து, 'எங்க சின்ன ராசா' படத்தை எடுத்தார். எக்ஸ்ட்ராடினரி ஹிட்டாக இந்தப் படம் அமைந்தது.

இந்தப் படத்தின் தெலுங்கு ரீ-மேக்கில் வெங்கடேஷ் நடித்தார். அங்கேயும் பம்பர் ஹிட். இந்தியில் அனில்கபூர் நடித்தார். அதுவும் செம ஹிட்.

'மௌனகீதங்கள்', 'அந்த ஏழு நாட்கள்', 'முந்தானை முடிச்சு' போன்ற பாக்யராஜின் சூப்பர் ஹிட் வெற்றிப் பட வரிசையில் 'எங்க சின்ன ராசா'வும் அமைந்தது.

'எங்க சின்ன ராசா' ஷூட்டிங்கின்போதே ''அண்ணே... இந்தப் படம் முடிஞ்சதும் உங்களுக்கு ஒரு படம் எடுத்துத் தர்றேன். அதில் முடிஞ்ச அளவு உங்க கடனை அடைச்சிட லாம்'' எனச் சொல்லியிருந்தார் பாக்யராஜ்.

அதன்படி... 'பொண்ணு பார்க்கப் போறேன்' படத்திற்கு பூஜை போடப்பட்டது. டைரக்டர் பி.மாதவன், எடிட்டர் தேவன், கேமராமேன் பி.என்.சுந்தரம் மற்றும் பாக்ய ராஜின் உதவியாளர்களுக்கு அட்வான்ஸ் தொகையை என் கையில் கொடுத்து கொடுக்கச் சொன்னார் பாக்யராஜ். வைரமுத்து எழுதிய ஒரு பாடல் பதிவுடன் பெரும் செலவில் படத் துவக்கவிழா நடந்தது. ஆனால் தவிர்க்க முடியாத ஒரு காரணத்தால் படத்தை கைவிட்டார் பாக்யராஜ்.

(அதன் பிறகு சின்னப்ப தேவரின் மாப்பிள்ளை டைரக்டர் தியாகராஜன் படத்திற்காக 'பொண்ணுப் பார்க்கப் போறேன்' டைட்டிலை

விட்டுக்கொடுத்தோம்.)

அடுத்து... 'இது நம்ம ஆளு' படவேலைகளில் இறங்கினார் பாக்யராஜ். நானும், அவரும் இந்தப்படத்திற்                காக கதையும், காட்சிகளும் பிடிப்பதில் தீவிரமாக இறங்கினோம்.

கதை பக்காவாக ரெடியானது. நட்சத்திரங்களையும் புக் பண்ணிவிட்டார். இந்தக் கதையில் 'கிருஷ்ணய்யர்' என்கிற முக்கியமான கேரக்டருக்கு உரிய நடிகரை ஒப்பந்தம் செய்யாமல் இருந்தார்.

'என்ன தம்பி... அந்த கேரக்டருக்கு யாரை போடப்போறீங்க?' என ஆர்வம் தாங்காமல் கேட்டுக் கொண்டேயிருந்தேன்.

'பொறுங்கண்ணே' எனச் சொல்லியே வந்தார்.

விடிந்தால் ஷூட்டிங் ஆரம்பம்.

நள்ளிரவு நேரம்... மேக்-அப் மேன் மூர்த்தி என் வீட்டுக்கு வந்தார்.

'கிருஷ்ணய்யர் கேரக்டர்ல அண்ணன் கலைஞானம்தான் நடிக்கப் போறாரு. அவர்கிட்ட சொல்லிட்டு வந்திடுங்கனு டைரக்டர் அனுப்பிச்சார்" என்றார்.

எனக்கு உதறல் எடுத்தது.

"அய்யய்யோ.. என்னால முடியாது. இதை கண்டிப்பா தம்பிகிட்ட சொல்லிடுங்க" என அனுப்பிவைத்தேன்.

மீண்டும் மூர்த்தி வந்தார்.

"அவர்தான் நடிக்கணும்னு நான் கண்டிப்பா சொன்னதா சொல்லீடுங்கனு சொல்லிட்டு வரச்சொன்னார்" எனத் தெரிவித்துவிட்டு கிளம்பிவிட்டார் மூர்த்தி.

நான் ஆரம்பத்தில் சென்னை வந்ததே நடிப்பதற்குத்தான். (அது பற்றி நான் மிக விரிவாக ஏற்கனவே உங்களிடம் பகிர்ந்திருக்கிறேன்). ஆனால் எனக்குள் இருந்த நடிப்பாசை எப்போதோ ஓடி மறைந்துவிட்டது. நான் பல நட்சத்திரங்களை அறிமுகப்படுத்தியவனாக இருக்கிறேன். எனது படங்களில் துணை நடிகர்களாக நடித்தவர்கள் 'இது நம்ம ஆளு' படத்திலும் நடிப்பார்கள். அவர்கள் முன்பு நான் எப்படி சிறப்பாக நடிக்க முடியும். இந்த தாழ்வு மனப்பான்மை என்னை வாட்டியது. ஆனாலும் வேறு வழியே இல்லை. இந்தப் படத்தில் நானும் ஒரு பங்குதாரர். அதில்

வரக்கூடிய பணத்தை வைத்துத்தான் ஓரளவு கடனை அடைக்கணும். ஆகவே நடிக்கத் தயாராகிவிட்டேன்.

விடிந்தது.

படப்பிடிப்புத் தளம். எனக்கு அய்யர் கெட்-அப் போட்டு அழைத்து வந்தனர். படபடப்பில் வேர்த்துக் கொட்டி என் முகமெல்லாம் வறண்டுவிட்டது. இதை தூரத்திலிருந்து தம்பி பாக்யராஜ் கவனித்துவிட்டார். அதனால் அன்றைய தினம் ஷூட்டிங் முடிகிறவரை எனது காட்சிகள் எடுக்கப்படவில்லை. மறுநாளும் இதே நிலை. அன்றைய தினமும் நான் சம்பந்தப்பட்ட காட்சிகள் எடுக்கப்படவில்லை.

மூன்றாம் நாள்...

மேக்-அப் போட்டு நின்றேன். பாக்யராஜ் என் அருகே வந்தார். குனிந்து என் இதயப்பகுதியில் தன் காதை வைத்துக் கேட்டார். என் இதயம் படபடவென துடிப்பதைக் கேட்டு சிரித்துவிட்டார்.

"அண்ணே... 'புதிய வார்ப்புகள்' படத்துக்கு நீதான்யா ஹீரோ'னு என் குருநாதர் பாரதிராஜா திடீர்னு சொன்னபோது... இப்படித்தான் எனக்கும் நெஞ்சு படபடனு அடிச்சது. இதைப் புரிஞ்சுக்கிட்ட அவர் ஸீன்களை எடுக்காமல் முதலில் பாடல் காட்சியை எடுத்தார். 'வான் மேகங்களே' பாட்டுக் காட்சியில் நடிக்கும் போது பாடுறமாதிரி வாயைப் பிளந்தேன். மூட வரல. 'கட்' சொன்ன டைரக்டர் 'யோவ்... வாயை மூடிப் பாடுய்யா'ன்னு சிரிச்சுக்கிட்டே சொன்னார். எப்படியோ சிரமப்பட்டு படத்துல நடிச்சு முடிச்சேன். டைரக்ஸன்ல மட்டும் ஈடுபடணும்னுதான் என்னோட ஆசை. ஆனா 'புதிய வார்ப்புகள்' வெளியான 24 மணிநேரத்துல தமிழ்நாடு முழுக்க என்னை ஹீரோவா ஏத்துக்கிட் டாங்க. நீங்க தயாரிப்பாளார்ங்கிறதும், கதாசிரியர்ங்கிறதும் சினிமா உலகத்துக்கு மட்டும்தான் தெரியும். இந்த அய்யர் கேரக்டர்ல நடிச்சீங்கன்னா... படம் வெளியானதுமே 'யாரு இவரு?'னு கேட்டு தமிழ்நாடு பூராவும் பரவி... உங்களைப் பாராட்டு வாங்க' என்றார்.

'மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்' குறள்தான் என் நினைவுக்கு வந்தது. நான் புகழ் பெற தாயுள்ளத்துடன் என்னை நடிக்க வைக்க ஆசைப்படும் பாக்யராஜின் பண்பை எண்ணி கண் கசிந்தேன். என்னை நானே மண்டையில் அடித்துக்கொண்டு 'நடிடா கலைஞானம்' என்றபடி நடிக்க ஆரம்பித்தேன்.

# இது நம்ம ஆளு!

"நீங்க ஒரு கதாசிரியர், தயாரிப்பாளர் என்பது இண்டஸ்ட்ரிக்கு தெரியும். ஒரு படத்தில் நீங்க நடிக்கும்போது, தமிழ்நாடு முழுக்க நீங்க பேசப்படுவீங்கண்ணே" என தம்பி பாக்யராஜ் தாயுள்ளத்தோடு சொன்னதால் 'இது நம்ம ஆளு' படத்தில் கிருஷ்ணய்யர் வேடத்தில் நடிக்க தயாரானேன்.

படம் முழுக்க எனது கேரக்டர் வந்தது. பாக்யராஜ், ஷோபனா, சோமையாஜூலு ஆகிய மூவருக்கும் ஈடுகொடுத்து நடித்தேன்.

படம் வெளியானது. எனது கேரக்டர் பாராட்டப்பட்டது. (இப்போதும் கூட டிவியில் 'இது நம்ம ஆளு' படம் பார்க்கும் ரசிகர்கள், குறிப்பாக பெண்கள்... 'சினிமா சீக்ரெட்' தொடரை படித்து வரும் வாசகர்கள் 'அய்யா... நீங்களாய்யா அது! பிரமாதம்யா' என பாராட்டுகிறார்கள்)

நான் 20 லட்ச ரூபாய் கடனில் இருந்ததை ஏற்கனவே தெரியப்படுத்தியிருந் தேனல்லவா. 'இது நம்ம ஆளு' வெளியானதுமே தம்பி பாக்யராஜ் ஒரு நல்ல தொகை கொடுத்தார். அதில் பாதிக்கடனை அடைத்தேன்.

நான் கடனில் தவித்தபோது... என்னால் சினிமாவுக்கு அறிமுகம் செய்யப்பட்டவர்கள், என்னால் பலன் அடைந்தவர்கள் என பலரின் கதவுகளைத் தட்டினேன். கதவுகள் திறந்தன. ஆனால் அவர்களின் இதயக்கதவுகள் திறக்கவில்லை. ஆனால் தம்பி பாக்யராஜின் கதவுகளை நான் தட்டவேயில்லை. ஆயினும் கதவுகளைத் திறந்து, தன் இதயக் கதவுகளையும் திறந்து தானாக என்னைத் தேடிவந்து மிகப்பெரிய உதவி செய்தார். நானும், என் குடும்பத்தாரும் தம்பி பாக்யராஜிற்கு என்றென்றும் நன்றி உள்ளவர்களாக இருப்போம்.



'இது நம்ம ஆளு' படம் மக்களிடம் மிகப்பெரிய வெற்றியை, வரவேற்பைப் பெற்றது. அதே நேரம் பிராமணர் சங்கத்திலிருந்து படத்திற்கு மிகப்பெரும் எதிர்ப்பு வந்தது.

'ஒரு பிராமணப் பெண் எப்படி ஒரு முடி திருத்துபவர் மகனை காதலிப்பது போல் காட்டலாம்? எங்கள் இனத்தையே அவமானப்படுத்துகிறது இந்தப்படம்' என கடும் கண்டனம் தெரிவித்தது பிராமணர் சங்கம்.

ஒரு பிராமணப் பெண் வறுமையை சமாளிக்க விபச்சாரத்தில் இறங்கியதுபோல் கே.பாலசந்தர் எடுத்த 'அரங்கேற்றம்' படத்திற்கு எதிராக இதே சங்கம்தான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அதில் பாலசந்தர் ஜெயித்து நின்றார்.

பிராமணராகப் பிறந்து முற்போக்கான படங்களைத் தந்து, மன உறுதியோடு வழக்கிலும் வென்ற பாலசந்தரை மனதுக்குள் பாராட்டிக்கொண்டேன்.

இந்தச் சமயத்தில்... படத்தில் பங்குபெற்ற கலைஞர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்காக சிறப்புக் காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. என் சார்பில், என் குடும்ப டாக்டர் ஜெகதீஸனை அழைத்திருந்தேன்.

படம் பார்த்துவிட்டு வந்தவர்களெல்லாம் வானளாவ புகழ்ந்தபடி வர... டாக்டரோ கண்சிவந்தபடி வெளியே வந்தார்.

"கலைஞானம்... ஏய்யா என்னை இந்தப் படத்துக்கு கூப்பிட்ட?, ரொம்பத் தப்புப் பண்ணீட்டீங்க" எனச் சொல்லிவிட்டு கோபமாக வெளியேறிச் சென்றார்.

'பாராட்டுவார்னு நினைச்சா... பழி போட்டுட்டுப் போறாரே...' என திகைத்து நின்றேன்.

ஒருவாரம் கடந்த நிலையில்... டாக்டரிடம் ட்ரீட் மெண்ட்டுக்காகப் போனேன். மாதம் ஒருமுறை அவரிடம் ஊசி போட்டுக்கொள்வது வழக்கம். அதனால் போனேன். ஆனாலும் உள்ளூர அச்சத்துடன் போனேன்.

'வாங்க கலைஞானம்...' என புன்னகையுடன் அழைத்தவர் 'ஊசிதான?' எனக் கேட்க... நான் தலையாட்டினேன்.

மருந்து பாட்டிலை எடுத்து அதன் ரப்பர் மூடிக்குள் சிரிஞ்ச் ஊசி முனையை பல்லை கடித்தபடி குத்தி மருந்தை சிரிஞ்சுக்குள் இழுத்தார்.

இது டாக்டர் வழக்கமாகச் செய்கிற செயல்தான். இருப்பினும் அன்று எனக்கு அது படபடப்பை உண்டாக்கியது.

'எல்லார் முன்னாலயும் நம்மகிட்ட கோபமா பேசினவர், ஏதாவது ஒரு மருந்தை ஏத்தி, ஊசிபோட்டு நமக்கு ஏதாவது ஆயிருச்சின்னா...' என பயந்துபோன நான் 'அடடா... சார்... கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க. கார்லயே பர்ஸை வச்சிட்டு வந்திட்டேன். எடுத்திட்டு வந்திடுறேன்' எனச் சொல்லிவிட்டு கிளம்ப... தனது பெரிய கண்களால் என்னைப் பார்த்தார் டாக்டர்.

நான் ஓடிவந்து காரை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டேன்.

சுமார் இரண்டு மாதங்கள் அவரின் க்ளினிக் பக்கம் போகவேயில்லை.

நோயாளிகளிடம் மருந்துவாங்க காசில்லை என்று தெரிந்தால் தன் சொந்தக்காசில் வாங்கித்தருபவர் டாக்டர் ஜெகதீஸன். 'இவ்வளவுதான் பீஸ்' என கட்டாயப்படுத்த மாட்டார். கொடுப்பதை வாங்கிக் கொள்வார். அவரின் ட்ரீட்மெண்ட் பெரும்பாலும் தோல்வியடைந்ததில்லை. 'கைராசி டாக்டர்' எனப் பெயரெடுத்தவர். அவரின் ட்ரீட்மெண்ட்தான் எனக்கும்

அந்தச் சமயம் செட்டானது. அதனால் இரண்டுமாதம் கழித்து டாக்டரிடம் போனேன்.

சிரித்த முகமாக வரவேற்றவர் 'மருந்தை லோடுபண்ணி வச்சிட்டு வெய்ட் பண்ணினேன். அதுக்குப் பின்னாடி நீங்க வரவேயில்லையே?' எனக் கேட்டார்.

"பெரிய அளவுல பணம்... கார்ல வச்சேனா, வீட்ல வச்சேனானு தெரியாம, பதட்டத்துல வீட்டுக்குப் போயிட்டேன் டாக்டர்" என ஒரு பொய்யைச் சொன்னேன். ஊசி போட்டுக் கொண்ட என்னிடம் பல விஷயங்களைப் பேசினவர் 'இது நம்ம ஆளு' படம் குறித்து எதுவுமே கேட்கவில்லை. எனக்கு ஒரு தகப்பனைப் போன்றவர். அவரைப் போல ஒரு நல்ல டாக்டரை நான் பார்த்ததில்லை.

'இதயம் பேசுகிறது' பத்திரிகையில் 'இது நம்ம ஆளு' படத்தை கடுமையாக தாக்கி எழுதிவிட்டார் ஆசிரியர் மணியன்.

இதைப் படித்த படத்தின் டைரக்டர் பாலகுமாரன் (எழுத்தாளர் பாலகுமாரன்), "கலைஞானம் சார்... நீங்க உடனே 'இதயம் பேசுகிறது' ஆபீஸுக்குப் போய் "ஏன் இப்படி எழுதியிருக்கீங்க'னு கேட்டே ஆகணும்" எனச் சொல்லி என்னை அனுப்பி வைத்தார்.

நான் மணியன் அவர்களை பத்திரிகை அலுவலகத்தில் சந்தித்தேன்.

'வாங்க கலைஞானம்... நீங்க எதுக்கு வந்திருக்கீங்க'னு சொல்லட்டுமா?" என்றார். நான் அவரையே பார்த்தேன்.

'படத்தை தாக்கி எழுதினதால் என்கூட சண்டைபோட வந்திருக்கீங்க. சரியா?' எனக் கேட்டபடி சிரித்தார்.

நான் அதை ஆமோதிப்பதுபோல் தலையாட்டினேன்.

"நீங்க ஒரு பைத்தியக்கார ஆளு. 'ஏன் இப்படி தாக்கி எழுதினே?'னு என்னை கடுமையா தாக்கி நீங்க ஒரு கட்டுரை எழுதிக் கொடுங்க. என் ஆபீஸ்லயே, இப்பவே உட்கார்ந்து எழுதிக் கொடுங்க. அடுத்தவார இதழ்ல போடுறேன். மாத்தி மாத்தி தாக்கி எழுதினா பெரிய விளம்பரம் கிடைக்கும். இதைக்கூட கத்துக்கிறலைன்னா... என்ன பெரிய எழுத்தாளர் நீங்க?" என்றார் மணியன்.

நான் அசடு வழிந்தபடி அவரிடம் விடைபெற்று கிளம்பினேன்.

'இந்நேரம் மணியனுக்கும் கலைஞானத்துக்கும் இடையே பெரிய களேபரம் நடந்திருக்கும்' என நினைத்தபடி என் வருகைக்காக பாலகுமாரனும், பாக்யராஜும் எதிர்பார்த் திருந்தார்கள்.

என்னைப் பார்த்ததும் 'என்ன... பயங்கரமா தாக்கீட்டு வர்றீங்க போல?' எனக் கேட்டனர்.

நான் நடந்ததைச் சொன்னேன்.

'என்ன இருந்தாலும் மணியன், தான் ஒரு பெரிய மனுஷன் என்பதை நிரூபிச்சிட்டார்' என இருவரும் சமாதான மானார்கள்.

பிராமணர் சங்கத் தலைவர் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வந்ததால்... முடிதிருத்துவோர் சங்கத் தலைவர் ஒரு பெரும் கூட்டத்துடன் பாக்யராஜை சந்தித்தார். அப்போது நானும் அங்கே இருந்தேன்.

''சார்... இந்த நாட்டு சுதந்திரத்திற்காக போராடின தியாகி விஸ்வநாததாசினுடைய பரம்பரை நாங்க. எங்களை யாராவது இழிவா நினைச்சா அவங்க இனத்துக்கே முடி வெட்ட மாட்டோம். அவங்க வீட்டு காரியங்களுக்கும் போக மாட்டோம். நாளைக்கே... தமிழகம் முழுக்க இருக்க எங்க ஆட்கள் மெட்ராஸூக்கு வந்துகூடி அண்ணாசாலையில் ஊர்வலம் போகவும் ரெடியா இருக்கோம்'' என ஆவேசமாகச் சொன்னார்கள்.

''இந்த மாதிரி முடிவுக்கு வரவேணாம். தப்பா போய்விடும். அந்த தியாகம் இப்பவும் இருக்கணும். நாங்க இந்த பிரச்சினையை முதல்வர் ஜானகியம்மாவின் கவனத்துக்கு கொண்டு சென்று சுமுகமாக பேசி தீர்த்துக் கொள்கிறோம்'' என முடி திருத்துவோர் சங்கத்தினரை பாக்யராஜ் சமாதானம் செய்து அனுப்பினார்.

அப்போதைய முதல்வர் ஜானகி அம்மாள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு முடிவுக்கு கொண்டு வந்தார்!

எம்.ஜி.ஆர். படத்தில் பாக்யராஜ்.

# பாக்யராஜுக்கு எம்.ஜி.ஆர். இட்ட கட்டளை!

எம்.ஜி.ஆர்., லதா, நம்பியார் மற்றும் சங்கீதா நடிப்பில் ஜே.ஆர்.மூவிஸ் தயாரிப்பில் டைரக்டர் ஸ்ரீதர் இயக்கத்தில் உருவாகி வந்த படம் 'அண்ணா நீ என் தெய்வம்'. எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் அருமையான பாடல்களுடன் சுமார் 5000 அடிவரை எடுக்கப்பட்ட நிலையில்... எம்.ஜி.ஆர். முதலமைச்சராக ஆனார். 'முதல்வராகிவிட்டதால் இனி எம்.ஜி.ஆர். சினிமாவில் நடிக்கமாட்டார்' என தகவல்கள் உறுதியாக வர... படத்தின் தயாரிப்பாளருக்கோ இக்கட்டான நிலை. இந்தப் படத்திற்காக ஃபைனான்ஸியர் துரையிடம் பணம் வாங்கியிருந்தார். அதனால் படம் எடுத்தவரையில் துரையிடம் கொடுத்து 'இதை நீங்களே என்ன செய்யவேண்டுமோ செய்துகொள்ளுங்கள். இனி இந்தப் பட உரிமை உங்களுக்குத்தான்' என எழுதிக் கொடுத்துவிட்டுப் போய் விட்டார் தயாரிப்பாளர்.

ஓரிரு வருடங்கள் ஓடிய நிலையில்... 1980-ல் எம்.ஜி.ஆர். அரசு மத்திய அரசால் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. இதனால் மீண்டும் எம்.ஜி.ஆர். நடிக்க வருவார் என தகவல்கள் வந்ததால், 'அண்ணா நீ என் தெய்வம்' படத்தை முடித்துவிட ஆர்வமானார் துரை. ஆனால் மறுபடியும் தேர்தலில் அமோக வெற்றிபெற்று முதல்வராகி விட்டார் எம்.ஜி.ஆர்.



எம்.ஜி.ஆரை தன் குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து துரை முறையிட்டார். மனமுடைந்து முறையிட்ட துரை குடும்பத்தினரை அழைத்து ஆறுதல் சொல்லி அவர்களை சாப்பிட வைத்து 'பாக்யராஜ் மூலம் இந்தப் படத்திற்கு ஒரு தீர்வு ஏற்படுத்தித் தருகிறேன்' என எம்.ஜி.ஆர். அனுப்பி வைத்தார். அதன்பிறகு பாக்யராஜை வரவழைத்து " 'அண்ணா நீ என் தெய்வம்' படத்தை நீங்கள்தான் முடிக்க வேண்டும்' என அன்புக்கட்டளையிட்டார். இப்படி... அன்புக் கட்டளையிட காரணம், தனது கலையுலக வாரிசாக பாக்யராஜை அறிவித்திருந்தார் எம்.ஜி.ஆர். அந்த உரிமையில்தான் இந்த அன்புக்கட்டளை.

கதை பற்றி பாக்யராஜ் கேட்டபோது, "தங்கையை கெடுத்தவனை தேடிக் கண்டுபிடித்து அவனுடனேயே வாழ வைக்கிற அண்ணன். இந்த ஒன் லைன்தான் கதை. இதற்கு அன்றைய சூழ்நிலையில் நான் நிறைய கமர்ஷியலான ஸீன்களை யோசித்து வைத்திருந்தேன். ஆனால் இப்போ அதைப் பேசுவதற்கு எனக்கு நேரமில்லை. உங்கள் பாணியில் இந்தப் படத்தை முடித்து ரிலீஸ் பண்ணுங்கள். துரைக்கு அவர் போட்ட

முதலுடன் லாபம் வருவது மாதிரி செய்துவிடுங்கள்'' என்றார் எம்.ஜி.ஆர்.

இது... கிட்டத்தட்ட 1986-ல்.

எம்.ஜி.ஆர். தனக்கிட்ட அன்புக்கட்டளையை தம்பி பாக்யராஜ் எங்களிடம் தெரிவித்தார். இதையடுத்து நானும் பாக்யராஜின் குழுவைச் சேர்ந்தவர்களும், பாக்யராஜும் 'அண்ணா நீ என் தெய்வம்' படத்தின் 5000 அடி காட்சிகளைப் பார்த்தோம்.

''அண்ணே... இவ்வளவு கதை பண்ணின உங்களால இந்த ஸீன்களை வச்சுக்கிட்டு படம் பண்ண முடியாதான்னு எம்.ஜி.ஆர். அண்ணன் கேட்டார். நானும் அவரை தொல்லைபண்ண விரும்பல. அதனால் நாமளே ஒரு கதை பண்ணிரலாம்ணே. இப்போ, 'ரத்தத்தின் ரத்தமே' பட ஷூட்டிங் நடந்துக்கிட்டிருக்கு. இது முடிஞ்சு வர்றதுக்குள்ள இதுக்கான கதையை மோல்டுபண்ணி வைங்க'' என எங்களுக்கு அன்புக்கட்டளையிட்டார் பாக்யராஜ்.

வீ.சேகர் உள்ளிட்ட பாக்யராஜின் குழுவினருடன் இரவு பகலாக உட்கார்ந்து மூன்றுமாத காலத்தில் எம்.ஜி.ஆர்.- பாக்யராஜ் தொடர்புள்ள கதை ஒன்றை எழுதி முடித்தோம்.

'ரத்தத்தின் ரத்தமே' படத்தை முடித்துவிட்டு வந்த பாக்யராஜ், ''என்னண்ணே கதை ரெடி பண்ணியிருக்கீங்க?'' என்றார் என்னிடம்.

நான் முழு கதையையும் சொன்னேன். அதிலிருந்து சில ஸீன்களை மட்டும் எடுத்துக்கொண்டு அவருக்கே உரிய பாணியில் ஒரு முழுக் கதையை எங்களிடம் சொல்லி அசத்தினார்.

பாக்யராஜிற்கு இரண்டு வேடம். ஒருவன் வீரன். இன்னொருவன் கோழை. ஆனால் போலீஸ்காரன். வீரன் செய்கிற வீரதீர செயல்கள் மூலம் கோழை போலீசுக்கு பெயரும் புகழும் கிடைத்து அவார்டும் கிடைக்கும். போலீஸின் மனைவியான சிலுக்கு 'பாவா உங்கள கோழைன்னு சொல்லி எல்லாரும் கேலி பண்ணுனாங்க. ஆனா, நீங்க வீரன் பாவா வீரன். உங்களுக்கு நான் பத்து புள்ள பெத்துத்தாரேன். எல்லாரையும் வீரனாக்குறேன்' என்பார். இதை அசடுவழிய சமாளிப்பார் பாக்யராஜ்.

ஒருசமயம் வீரன் பாக்யராஜ் ஒரு ரவுடியை அடித்து உதைப்பதை பார்த்துவிடும் கோழை பாக்யராஜின் மகன், சிலுக்கிடம் 'அம்மா... எனக்கு ரெண்டு அப்பா' என்பான். சிறுபிள்ளை தெரியாத்தனமாக பேசுவது

தப்பாகிவிடக் கூடாதே என்பதால் 'இப்படியெல்லாம் சொல்லக்கூடாது' என சிலுக்கு கண்டிப்பார். ஆனாலும் அவன் 'அம்மா ஒம்மேல சத்தியமா எனக்கு ரெண்டு அப்பா. நான் பார்த்தேன்' என்பான். இந்தச் சிக்கலையும் பாக்யராஜ் சமாளிப்பார்.

இப்படி பாக்யராஜுக்கே உரிய ஹைலைட்டான ஸீன்கள் இந்தக் கதையில் அமைந்தன.

நான் சொன்ன ஒரு சுவாரஸ்யமான ஸீன்...

போலீஸ் குடியிருப்பில் இருக்கும் ஒரு போலீஸ்காரருக்கு கண் வலி வந்துவிடும். இதைப் பார்த்துவிட்ட சிலுக்கு அவரின் மகனைக் கூப்பிட்டு ஒரு சங்கில் தாய்ப்பால் பீய்ச்சிக் கொடுத்து ''இதை உன் நைனா கண்ணுல ஊத்து, கண் வலி சரியாயிரும்' என கொடுத்துவிடுவார். மறுநாள் இதையறிந்த போலீஸ் குடியிருப்பில் இருக்கும் ஆண்களெல்லாம் பாக்யராஜ் வீட்டில் வரிசையாக பாத்திரங்களுடன் நிற்பார்கள். 'எங்களுக்கும் கண் வலி' எனச்சொல்லி அடம் பிடிப்பார்கள். பாக்யராஜ் ஒரு கோழை என்பதால் இப்படி இளக்காரமாக நடந்து கொள்வார்கள். இதனால் அதிர்ச்சியான பாக்யராஜ் டென்ஷனாகி அவர்களை விரட்டியடிப்பார்.

பாக்யராஜின் கோழைத்தனத்தை மற்றவர்கள் எப்படி இளக்காரமாக எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை விளக்குவதற்காகவே இந்த ஸீனை வைத்தோம். இப்படி... ஸீனுக்கு ஸீன் காமெடி, சென்ட்டிமெண்ட், த்ரில் என முழு ஸ்கிரிப்ட் ரெடி செய்தார் பாக்யராஜ். எம்.ஜி.ஆரின் தங்கை மகனாக பாக்யராஜுக்கு கதையில் லிங்க்கும் கொடுத்தாகி விட்டது.

கதை தயாரான நிலையில் முதல்வர் எம்.ஜி.ஆர். இயற்கை எய்தினார்.

'எம்.ஜி.ஆர்.தான் இறந்துவிட்டாரே' என தம்பி பாக்யராஜ் நினைக்கவில்லை. அவருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவதற்காக இந்தக் கதையைப் படமாக்குவதில் உறுதியாக இருந்தார்.

'அண்ணா நீ என் தெய்வம்', 'அவசர போலீஸ் 100' என்ற பெயரில் படப்பிடிப்பு தொடங்கியது. மிக திருப்திகரமாக படமும் தயாரானது. 1990-ல் 'அவசர போலீஸ் 100' ரிலீஸ். ரசிகர்கள் எப்படி வரவேற்கிறார்கள் இந்தப் படத்தை என தெரிந்துகொள்வதற்காக மதுரை சென்ட்ரல் தியேட்டரில் வந்து நின்றேன். அடேயப்பா...! அலையா... மக்கள் தலையா என முடிவு செய்ய முடியாத அளவுக்கு கூட்டம்.

கள்ளமார்க்கெட்டிலும் டிக்கெட் விற்பனை படுசூடாக நடந்தது. சந்தோஷத்தில் துள்ளிக் குதித்த நான், பாக்யராஜுக்கு போன் செய்தேன்.

'தம்பி நம்ம உழைப்பு வீண் போகல. படம் இமாலய வெற்றி' என்றேன்.

'தலைவர் நம்மள காப்பாத்திட்டாரு' என மறுமுனையில் துள்ளிக் குதித்தார் பாக்யராஜ்.

படம் வெளியான மறுநாள் அதே சென்ட்ரல் தியேட்டருக்கு போனேன். இழுத்துப் பறித்து ஹவுஸ்ஃபுல் ஆனது. எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. மூன்றாம் நாள் அதே தியேட்டருக்குப் போனேன். 'ஸார்... படம் ஆரம்பிக்கப்போவுது. டிக்கெட் வேணுமா?' என ஒருவர் என்னைச் சுற்றிச் சுற்றி வந்தார். நான் அதிர்ச்சியில் அப்படியே தியேட்டரின் காம்பவுண்ட் சுவரோரம் தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டேன். அதிலிருந்து மீளவே எனக்கு நேரம் பிடித்தது.

ஒருவழியாக மனதை தேற்றிக்கொண்டு அங்கிருந்த தியேட்டர் ஊழியர்களிடமும், விநியோகஸ்தர்களிடமும் விசாரித்தேன்.

"பாக்யராஜ் நல்ல கதை எழுதியிருக்கார். அதை அவரே தனியா நடிச்சிருந்தா பெரிய வெற்றிப்படமா அமைஞ்சிருக்கும். இந்தப் படத்தில் ஜனங்க எதிர்பார்த்து வந்தது பாக்யராஜை அல்ல... தலைவரை. 'கதை எழுதுவதில் புகழ்பெற்ற பாக்யராஜ், தலைவரோட படத்துக்கே கதை எழுதியிருக்காரே... எப்படியிருக்கும்?' என்கிற ஆர்வத்தோட வந்தாங்க. கதை பிடிச்சிருந்தாலும் 'இதோ... தலைவர் மறுபடியும் அடுத்த ஸீன்ல வருவார்... இதோ இந்த ஸீன்ல வருவார்... இல்லல்ல க்ளைமாக்ஸ் ஸீன்ல கண்டிப்பா வருவார்' என எதிர்பார்ப்புடன் படம் பார்த்தார்கள். ஏமாந்து திரும்பி விட்டார்கள். அதோட 'இது நம்ம தலைவருக்கு முக்கியத்துவம் இல்லாத படம்' என முதல்நாள் படம் பார்த்த ரசிகர்களின் மௌத் டாக் மூலம் படத்துக்கு எதிரான கருத்து பரவிவிட்டது.

# உண்மைக் கதை!

எம்.ஜி.ஆர். நடித்து ஐயாயிரம் அடிவரை எடுக்கப்பட்ட 'அண்ணா நீ என் தெய்வம்' படக் காட்சிகளை இணைத்து பாக்யராஜ் இரு வேடங்களில் நடித்த 'அவசர போலீஸ் 100' படம் முதல்நாள் இமாலய ஒப்பனிங்கில் இருந்தது. அடுத்தடுத்த நாட்களில் கூட்டம் சரியத் தொடங்கியது. இதனால் பாக்யராஜ் பதட்டம் அடைந்துவிடவில்லை.
''கலைஞானம் அண்ணே... அண்ணன் எம்.ஜி.ஆர்., எனக்கிட்ட அன்புக்கட்டளையை ஏற்று இந்தப் படத்தை முடித்தேன். அண்ணன் சொன்னதுபோல் தயாரிப்பாளருக் கும் நல்ல லாபம் கிடைக்கச் செய்தேன். 'எம்.ஜி.ஆர் இறந்துவிட்டாரே... இனி இந்தப்படத்தை எடுக்கணுமா' என நினைக்காமல், அவருக்கு கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றிவிட்ட மனநிறைவு இந்தப் படம் மூலம் எனக்குக் கிடைத்திருக்கிறது. அது போதும்ணே எனக்கு'' என என்னிடம் தெரிவித்தார் தம்பி பாக்யராஜ்.

மதுரையில் என்னிடம் பேசிய விநியோகஸ்தர்கள் தெரிவித்தது போல ஒரு பாக்யராஜ் கோழை போலீஸ், இன்னொரு பாக்யராஜ் வீரன் என்கிற இந்தக் கதையில் பாக்யராஜே நடித்திருந்தால் படம் பெரும் வெற்றியைப் பெற்றிருக்கும். எம்.ஜி.ஆரை இந்தப் படத்தில் நிறைய ஸீன்களில் எதிர்பார்த்து வந்த ரசிகர்களால் தோல்வியடைந்தது.

(சில வருடங்களுக்கு முன்... அண்ணன் கோழையான போலீஸ், தம்பி வீரன்... என 'அவசர போலீஸ் 100' கதைக் கருவை எடுத்துக்கொண்டு இரு இளம் நடிகர்கள் நடித்து ஒரு பெரிய டைரக்டரின் இயக்கத்தில் வந்த படம் சூப்பர் ஹிட் ஆனது. அப்போது நான்... பாக்யராஜின் கதை ஞானத்தை மெச்சி என் மனதுக்குள் பாக்யராஜிற்கு ஒரு சல்யூட் வைத்துக்கொண்டேன்)



எனக்கும், பாக்யராஜிற்கும் இடையேயான கலைப் பயணம் என்பது அருகுபோல் வேர் படர்ந்து கொண்டே இருக்கிறது… இன்றுவரை. அந்த அனுபவங்களையெல்லாம் அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் சொல்கிறேன்.



எனது பேரன்... அதாவது என் மகள் கோப் பெருந்தேவியின் மகன் ஜெயக்குமார், 'சொக்கத் தங்கம்', 'பாரிஜாதம்'' படங்களில் பாக்யராஜிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றினார். அந்த அனுபவத்துடன் 'அறியாதவன் புரியாதவன்' என்கிற படத்தை எழுதி, இயக்கி, தயாரித்து, இசையமைத்து, ஹீரோவாகவும் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பாக்யராஜ், ஆர்.வி.உதயகுமார் உள்ளிட்டோர்

சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். அந்த விழாவில் என்னைப்பற்றி ஆர்.வி.உதயகுமார் பல விஷயங்களைப் பேசினார்.

''அண்ணன் கலைஞானத்தின் பேரன் ஜெயக்குமார் எடுத்திருக்கும் படக் காட்சிகளைப் பார்த்தபோது கலைஞானத்தின் படங்களை நினைவுபடுத்தியது. ரஜினியை முதன்முதலில் கதாநாயகனாக்கி 'பைரவி' படத்தை எடுத்தவர், சிறந்த தயாரிப்பாளர், பல கதைகளை எழுதி புகழ் பெற்றவர் கலைஞானம். இவரின் கதைகளை, காட்சிகளை கையாண்டவர்கள் பலர் உண்டு. அதில் நானும் ஒருவன். அவ்வளவு ஏன்? கமல்ஹாசனின் 'தேவர் மகன்' கதை கலைஞானம் கதைதான். என்னிடம் பலமுறை அந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார்.

என் இயக்கத்தில் வந்த 'எஜமான்', 'பொன்னுமணி', 'ராஜகுமாரன்' கதைகளில் கலைஞானம் அண்ணனின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது'''எனப் பாராட்டிப் பேசினார் உதயகுமார். அந்தச் சமயம் நான் ஆபரேஷன் செய்து மருத்துவமனையில் இருந்தேன்.

'எஜமான்' படத்தில் என் பங்கு என்ன என்பதை இப்போது உங்களிடம் சொல்கிறேன்.

அம்மன்கோயில் திருவிழாவின்போது வழக்கமாக ரஜினிகாந்த்திற்கு செய்ய வேண்டிய கோயில் பரிவட்ட மரியாதையை, வில்லன் தடுத்து வேறு ஒருவருக்கு அந்த மரியாதை கிடைக்க ஏற்பாடு செய்கிறான். இந்த சதித்திட்டம் ரஜினிக்கு தெரியவருகிறது. இதனால் எரிமலையாய் வெடித்தெழும் ரஜினி, ஒரு மிகப்பெரிய ரோஜா மாலையை எடுத்துக் கொண்டு, அந்த மாலைக்குள் துப்பாக்கியை மறைத்து வைத்துக்கொண்டு கோயிலுக்குப் போவார்.

'பூசாரி... இந்த மாலையை எடுத்து அம்மன் காலடியில் போடுங்க. அது போதும்' என்பார்.

பூசாரி மாலையை தட்டிலிருந்து எடுக்க... துப்பாக்கியை எடுக்கும் ரஜினி மேல் நோக்கி சுட... விரோதிகள் அத்தனை பேரும் தலை தெறிக்க ஓடுவார்கள். மிரண்டுபோன பூசாரி, ரஜினி கழுத்தில் அந்த மாலையை அணிவித்து, முதல் மரியாதையையும் செய்வார். கழுத்தில் ரோஜா மாலையுடன் மக்கள் கூட்டத்துக்கு மத்தியில் வீரநடை போட்டுச் செல்வார் ரஜினி.

நான் சொன்ன இந்த ஒரு காட்சிக்காகவே தம்பி ஆர்.வி.உதயகுமார் எனக்கு வானளாவிய பாராட்டுடன் ஒரு நல்ல தொகையும் கொடுத்தார்.

அன்றிலிருந்து இன்றுவரை என்னை தன் சொந்த அண்ணனாகவே பாவித்து வருகிறார்.

இப்படி ஒரு வலிமையான காட்சி எனக்கு எப்படி கிடைத்தது?

அது ஒரு பெரிய கதை. ஆமாம்... அது உண்மைக் கதை!

1975-ல் சின்னப்ப தேவரின் கதை இலாகாவில் நான் தொழில் செய்து கொண்டிருந்தபோது...

"அண்ணே... எனக்கு மிகமிக அவசரமா மூவாயிரம் ரூபாய் தேவைப்படுது" என்றேன்.

"அட... பணம் எப்ப வேணாலும் வாங்கிக்க. எம்புட்டு வேணாலும் வாங்கிக்க. 'அவசரம்'னு சொல்றியே... அப்படி என்னப்பா அவசரம்?" என தேவர் கேட்டார்.

"அண்ணே... ஒரு பெரிய தர்மப்பிரபு... தானதர்மம் செய்றதுல அவருக்கு நிகர் அவர்தான். காங்கிரஸ் இயக்கத்துல சேர்ந்து நாட்டு விடுதலைக்காக தன் உயிரையே பணயம் வச்சவர். தன்னோட பெருஞ்செல்வத்தையெல்லாம் இதனால் இழந்தவர். இப்போ... ஏழ்மை நிலையில இருக்கார். தன் மூத்த மகளை காப்பாற்ற வசதியின்றி சென்னை பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கார். கையில் பணமில்லை. வாய்விட்டு என்னிடம் கேட்க முடியாமல் தவிக்கிறார். அதனாலதான்...."

'அடடா...' என இரக்கப்பட்ட தேவர் "அதுசரிடா... தியாகினு சொல்றே... அவரு யாரு எந்த ஊரு?" எனக் கேட்டார்.

"அண்ணே... அவரோட வாழ்க்கை வரலாற்றை கேட்டீங்கன்னா... ஒரு அருமையான கதையே கிடைக்கும்ணே. அவசரப்படாம கேக்குறீங்களா?"

"விலாவாரியாவே சொல்லுப்பா"

"நெல்லை மாவட்டத்துல... ஒரு ரிஜிஸ்தார் ஆபீஸுக்கு நண்பர் ஒருவரை பார்க்கிறதுக்காக போயிட்டு வெளியில வந்தேன். அங்கன ரெண்டுபேர் 'என்னப்பா... இன்னும் ஜமீன்தார் வரலியே?'னு பரபரப்பா இருந்தாங்க. 'ஜமீன்தார் யாரா இருக்கும்' என்கிற ஆர்வத்தில் நானும் அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த திசையிலேயே பார்த்துக்கொண்டிருந்தேன்.

'இதோ... ஜமீன்தார் வந்துட்டாரே' என ஒருவர் சொல்ல... முக்கா கை வைத்த கதர்ச்சட்டை, கதர் வேஷ்டி, சிவந்த நிறம், கண்களில் கண்ணாடி அணிந்த 75 வயதுக்கு மேல் மதிக்கத்தக்க ஒருவர் வந்தார். ஓரிடத்தில்

உட்கார்ந்தார். இரண்டு பேர் பத்திரங்களை எடுத்துக் கொடுத்தார்கள். பத்திரங்களைப் படித்துவிட்டு 'இது சரியா இருக்கு. சீக்கிரம் ரிஜிஸ்டர் பண்ணிட்டு வாங்க, நான் இங்கேயே இருக்கேன்' என்றார்.

அவர்கள் சென்றபின் கையிலிருந்த நியூஸ்பேப்பரை எடுத்து சீரியஸாகப் படித்துக்கொண்டிருந்தார்.

நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

படித்து முடித்ததும் பேப்பரை பையில் வைத்துவிட்டு நிமிர்ந்து என்னைப் பார்த்தார். நான் அவரையே பார்த்தேன்.

செருமியபடி.. 'என்ன தம்பி என்னையவே பார்க்கிறே?' எனக் கேட்டார்.

"ஒண்ணுமில்லய்யா... உங்களை ஜமீன்தாருன்னு சொன்னாங்க. நீங்க உண்மையிலேயே ஜமீன்தாரா... இல்ல... உங்க பேரு ஜமீன்தாரா?" எனக் கேட்டேன்.

புன்சிரிப்போடு 'தம்பி நீங்க யாரு?' என்றார்.

"ஐயா... நான் மெட்ராஸ்ல சினிமா கதை எழுத்தாளரா இருக்கேன். என்னோட சொந்த ஊர் உசிலம்பட்டி பக்கம் எழுமலை. ஒரு நண்பரை பார்க்கிறதுக்காக இங்க வந்தேன்" என்றேன்.

'எழுமலை' என நான் சொன்னதும், அவர் முகத்தில் மின்னல் போல ஒரு மலர்ச்சி வந்துபோனது. 'நீங்க ரொம்ப அக்கறையா என்னை விசாரிச்சதாலயும், குறிப்பா... நீங்க எழுமலை ஊர்க்காரர்ங்கிறதாலயும் நான் யார்னு உங்கக்கிட்ட சொல்றேன். என்னோட வீட்டுல போய் பேசலாமா?' எனக் கேட்டார்.

சம்மதித்து அவருடன் சென்றேன்.

ஒரு சிறிய ஓட்டுவீடு. அதற்குள் நுழைந்து 'ராணி...' என மனைவியை அழைத்தவர் 'சாப்பிட இருப்பதை இந்த தம்பிக்கும் சேர்த்து எடுத்திட்டு வா' என்றார்.

நான் மறுத்தும் கூட அந்தம்மா இரண்டு டம்ளர்களில் அரிசிக் கஞ்சி கொண்டு வந்து இருவருக்கும் கொடுத்தார்.

குடித்து முடித்தோம்.

"தம்பி... உங்க பேர் என்ன?"

"கலைஞானம்"

"தம்பி... நான் உண்மையில் ஜமீன்தார்தான். என்னை எங்கேயாவது பார்த்த ஞாபகம் இருக்கா உங்களுக்கு?"

"இல்லய்யா" என்றேன்.

ஜமீன்தார் தன் வாழ்க்கைக் கதையைச் சொல்லச் சொல்ல... எனக்கு சிலிர்ப்பு உண்டானது. கண்ணீரும் பெருகியது.

# பொய்யை நம்பிய மக்கள்!

"தம்பி... கலைஞானம்... நீங்க எழுமலைக் காரர்ங்கிறதால உங்ககிட்ட என்னைப் பத்தி சொல்றேன்" என தன் கதை சொல்லத் துவங்கினார் ஜமீன்தார்.

"என்னை எங்காவது பார்த்த ஞாபகம் உங்களுக்கு இருக்கா தம்பி..."

"இல்லைங்கய்யா"

"ஆமா... எழுமலை ஜமீன்தாரைப் பத்தி உங்களுக்குத் தெரியுமா?"

"அவரை நான் பார்த்ததில்லை. ஆனா அவரைப்பத்தி எனக்கு நல்லாவே தெரியும்யா. அவர் பேரு சங்கரபாண்டியன். அதிவீர பாண்டியன்னும் ஒரு பேரு உண்டு. ஜமீன்தார் பாண்டியன்னும் சொல்லுவாங்க. அவரோட ஜமீன் அரண்மனையில தினமும் தர்ம சாப்பாடு போடுவாங்க. எங்க குடும்பம் கஷ்டத்துல இருந்ததால்... சின்ன வயசில் நான் பலநாள் ஜமீன் சாப்பாடு சாப்பிட்டிருக்கேன். ஆனா... நானெல்லாம் ஜமீன்தாரைப் பார்த்தது இல்லைய்யா. கொஞ்ச காலம் கடந்து... அந்த ஜமீன்தார் அரண்மனையை விட்டுட்டு குடும்பத்தோட எங்கேயோ போயிட்டாருனு பேசிக்கிட்டாங்க. நானும் கிட்டத்தட்ட 38 வருஷத்துக்கு முந்தியே ஊரைவிட்டு வெளியேறி மெட்ராஸுக்கு போயிட்டேன். இப்ப... ரெண்டு தலைமுறை தாண்டிருச்சு. அப்பப்போ எங்க ஜமீன்தாரை நினைச்சுக்குவேன்."

"தம்பி... எழுமலை ஜமீன்தார் வி.டி.எம். சங்கரபாண்டியத் தேவர் நான்தான்" என்றார்.



என்னையுமறியாமல் சடக்கென எழுந்து நின்றேன் நான்.

இந்த இடத்தில் நான் எழுமலை ஜமீனின் பெருமைகளை சொல்ல விரும்புகிறேன்.

எழுமலை ஜமீன்தார் உயர்திரு வி.டி.எம்.சங்கரபாண்டித் தேவர் பற்றிய குறிப்புகள்.

குடும்பப் பெயர் : வடமல திருவொனாத்.

சேத்தூர் ஜமீன்தார் - வி.டி.ஏ.சேவுகப்பாண்டியத் தேவர், அண்ணன் வி.டி.எம்.முத்துச்சாமித் தேவர். இவருக்கு மூன்று மகன்கள், ஒரு மகள்.

மகன்கள் : மூத்தவர் வி.டி.எம்.சுந்தரதாஸ் தேவர், நடுவர் -வி.டி.எம்.அழகப்ப தேவர், இளையவர் -வி.டி.எம். சங்கர பாண்டியத் தேவர்.

மகள் : இராமலட்சுமி நாச்சியார் -கொல்லங்கொண்டான் ஜமீன்தாரின் மனைவி.

சுந்தரதாஸ் தேவரும், அழகப்ப தேவரும் இறந்தபின் கடைசி வாரிசான வி.டி.எம்.சங்கரபாண்டியன் எழுமலை ஜமீன்தார் ஆனார்.

ஜமீன் பழக்க வழக்கங்கள் :

திருமண நிச்சயதார்த்தம் எனப்படும் பரிசம் போடுதல், குழந்தைகள் காது குத்தல், குலதெய்வத்திற்கு மொட்டை போடுதல், மறுவீட்டு அருள்

போன்ற மங்கல நிகழ்ச்சிகளில் முறைகாரர்களை பவுன் (தங்கக்காசு) வைத்து அழைப்பர்.

மணப்பெண்ணுடன் சீர் அனுப்பும்போது ஆடு, மாடு, வெள்ளிப் பாத்திரங்கள், பித்தளைப் பாத்திரங்கள், அம்மி, ஆட்டு உரல் இவற்றுடன் வேலைக்காரர்களையும் அனுப்புவர். (ஆண், பெண் இருதரப்பு வேலையாட்கள்)

தமிழ், ஆங்கிலம், கணிதம், வரலாறு என ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி வாத்தியார்கள் அரண்மனைக்கு வந்து ஜமீன் பெண்களுக்கு சொல்லிக்கொடுப்பார்கள்.

கோயில் திருவிழாவின்போது உற்சவர் எனப்படும் சாமி, சாமியைக் கொண்டுவரும் சப்பரம் மற்றும் தேர் இதெல்லாம் அரண்மனைக்கே வரும். அங்கே... ஜமீன் குடும்பத்தாரால் மரியாதையும், பூஜையும் செய்யப்படும்.

சலங்கையுடன் இரட்டை மாடு பூட்டிய வில்வண்டிதான் ஜமீனின் போக்குவரத்து வாகனம்.

சாமான்கள் ஏற்ற தனி மாட்டுவண்டி பயன்படுத்துவர்.

ஜமீன் குடும்பத்தில் இறந்து போகிறவர்களை தனி தேரில் ஏற்றிச்சென்று சொந்தத் தோட்டத்தில் சமாதி வைப்பர். அல்லது எரியூட்டுவர்.

இதுபோல் மேலும் சில சிறப்பு அம்சங்கள் உண்டு.

நாம் இங்கே சந்திக்கப்போகும் கதை நாயகனான வடமலை திருவொனாத வி.டி.ஏ.முத்துச்சாமித் தேவ ரின் மகன் வி.டி.எம். சங்கரபாண்டியன் என்ற கைப் பாண்டியனின் வாழ்க்கை வரலாற்றில் சில முக்கியமான விஷயங்கள்...

மகாத்மாகாந்தி மேல் மிகுந்த பற்றுடையவர். காங்கிரஸ் தியாகி. நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி சிறைசென்றவர். கஸ்தூரிபாய் காந்தி போல அனாதை ஆசிரமத்தில் கழிவறை கழுவி, அனாதைக் குழந்தைகளின் துணிகளை துவைத்துப்போட்டு அங்கே பல நற்பணிகளைச் செய்தவர்.

பீடி, சிகரெட், மது, மாது, சூது என எந்த கெட்ட பழக்கங்களும் இல்லாதவர்.

ஏழை எளியோர்களுக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டவர்.

ஆங்கிலம் எழுதபடிக்க தெரிந்தவர். தான்படித்தபடிப்பை பலநல்ல காரியங்களுக்கு அதாவது, பத்திரம் எழுத உதவி செய்வது, வழக்குகள் விபரத்தை அறிந்து சொல்வது, மனுக்கள் எழுதுவது... இந்த ஆலோசனைகளுக்காக சன்மானம் பெற்றுக்கொள்ளாமல் இனாமாக செய்து வாழ்ந்து வந்தவர்.

பசி என்று வருவோர்க்கு தான் உண்ணவிருக்கும் உணவைக் கொடுத்து மகிழும் பரோபகாரி.

தன்னை நம்பியிருந்த பதினெட்டு கிராம மக்களின் வாழ்க்கைக்காகவே அல்லும் பகலும் அயராது பாடு பட்டவர்.

வசதியில்லாத குடும்பங்களில் திருமணம் நடந்தால் மணப் பெண்ணிற்கு சகல சீர்வரிசையும் செய்து கொடுப்பவர்.

'கொள்ளி வைக்க பிள்ளை இல்லையே' என்று ஒரு குடும்பத் தலைவி மாரில் அடித்து அழுதபோது அந்தத் துயரத்தை தாங்கிக்கொள்ள முடியாதவர், தானே கொள்ளி வைத்து அந்தத் தாயின் வேதனையைப் போக்கியவர்.

உழைப்பாளிகள் எதிர்பார்க்கும் ஊதியத்தை விட ஒரு மடங்கு அதிகம் கொடுத்த உபகாரி.

ஆடம்பர வாழ்க்கை அறவே பிடிக்காது, கதர் உடைதான் அணிவார்.

ஒப்பற்ற தர்ம சிந்தனையாளர். தப்பற்ற சத்திய சீலர்.

இவ்வளவு சிறப்புகள் கொண்ட எழுமலை ஜமீன் வி.டி.எம். சங்கரபாண்டியன் என்ற கைப்பாண்டியனின் ஜீவனுள்ள சுயசரிதையைத்தான் இனி சொல்லவிருக்கிறேன்.

"தம்பி... எழுமலை ஜமீன்தார் வி.டி.எம். சங்கரபாண்டியத் தேவர் நான்தான்" என்றார்.

என்னையுமறியாமல் சடக்கென எழுந்து நின்றேன் நான்.

"அய்யா... என்னய்யா சொல்றீங்க?" என அதிர்ச்சி விலகாமல் கேட்டேன்.

"உட்காருங்க..." என சைகையால் சொன்னார்.

நான் உட்கார்ந்தேன்.

சில நிமிடம் கனத்த மௌனம் நிலவியது.

'எவ்வளவு செல்வாக்கான ஜமீன்தார் இன்று ஏதோ ஒரு ஊரில் ஒரு ஓட்டுவீட்டில், பத்திரம் எழுதி பிழைப்பு நடத்துகிறாரே' என என் மனம் படபடத்தது.

அங்கே நிலவிய மௌனத்தைப் போக்கும் விதமாகவும், ஆர்வம் தாளாமலும் கேட்டேன்... "அய்யா நீங்க ஏன் ஜமீனை விட்டுப் போனீங்க?"

பலத்த யோசனையுடன் நீண்ட பெருமூச்சுவிட்ட ஜமீன்தார் சொல்லத் தொடங்கினார்.

"அது... 1933 முதல் 1947 காலகட்டம். எழுமலை ஜமீனை நான் ஆண்டு வந்தேன். சுற்றியுள்ள 18 பட்டிகளும் எனது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. மக்களிடம் வரி வசூலித்து வெள்ளையர் அரசாங்கத்திற்கு தவறாமல் வரி கட்டவேண்டும். எனது நிர்வாகத்தில் கோயில்கள், குளங்கள், வைத்திய வசதிகள் என ஒரு குறையுமில்லாமல் பராமரித்து வந்தேன். தினமும் பசித்த ஏழை எளியோர்கள் நூறு பேர்களுக்கு உணவளித்து வந்தேன். இதனால் பொதுமக்கள் என் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார்கள்.

நான் தினமும் காலையில் சிற்றுண்டி சாப்பிட்டு முடிச்சதும், முற்றத்தில் உள்ள நாற்காலியில் வேலைக்காரன் என் துண்டைப் போடுவான். அதைப் பார்க்கும் பொதுமக்கள் நான் முற்றத்தில் அமரவிருப்பதை தெரிந்து கொள்வார்கள். மக்கள் தங்களது மேல் துண்டை எடுத்து கையில் வைத்துக் கொள்வார்கள். குடை பிடித்துச் செல்பவர்கள் குடையை மடக்கிக் கொள்வார்கள். செருப்பு அணிந்திருப்பவர்கள் செருப்பை கையில் எடுத்துக் கொள்வார்கள். அரண்மனை இருக்கும் தெருவை கடக்கும் போது மரியாதை நிமித்தமாக இப்படிச் செய்வார்கள். இப்படி ஒரு மரியாதையை நான் கேட்கவில்லை. ஆனால்... என் மீதுள்ள பிரியத்தில் இப்படிச் செய்வார்கள். அதேபோல நான் சாப்பிட்டு முடித்ததும் உணவுக்கூடத்தின் கதவு திறக்கும். ஏழை எளியோர் வந்து பசியாறுவார்கள்."

"அய்யா... அந்த கூட்டத்துல நானும் பலநாள் உட்கார்ந்து சாப்பிட்டிருக்கேன்யா. அப்போ... எனக்கு ஏழெட்டு வயசு இருக்கலாம்..."

"அந்த காலகட்டத்தில் இந்தியா முழுக்க சுதந்திர தாகம் பரவியது. எனக்கும் சுதந்திர தாகம் ஏற்பட்டது. ஜமீன் நிர்வாகத்தை என் உறவினர் ராஜாமணியிடம் ஒப்படைத்து விட்டு காங்கிரஸ் பேரியக்கத்தில் என்னை

இணைத்துக் கொண்டு வெள்ளையர் அரசை எதிர்த்து கடுமையாக தாக்கிப் பிரச்சாரம் செய்துவந்தேன். ஒருகட்டத்தில் காந்தி தங்கியிருந்த ஆசிரமத்திற்கு சென்று அங்கேயே தங்கி, அனாதை குழந்தைகளின் துணிமணிகளை துவைப்பது, கழிவறைகளை சுத்தம் செய்வது... என ஊழியம் செய்தேன்.

காலம் ஓடிக்கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில் அரண்மனை வேலைக்காரன் என்னைத் தேடிவந்து சந்தித்தான்.

'அய்யா... அரணமனை நிர்வாகம் சீர் கெட்டுவிட்டது. கோயில், குளம் சீரமைப்புகள் பாழாகிவிட்டது. ஏழைகளுக்கு வழங்கப்பட்டு வந்த அன்னதானம் நிறுத்தப்பட்டுவிட்டது. நிர்வாகியாக நீங்கள் நியமித்த ராஜாமணி, கஜானாவை சுரண்டி வருகிறார்' எனத் தெரிவித்தான்.

என் மக்களுக்கு துரோகம் நடப்பதை என்னால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. உடனடியாக கிளம்பி ஜமீனுக்கு வந்தேன்.

ராஜாமணியின் பித்தலாட்டங்களையும், செல்வத்தை அவன் திருடியதையும் விசாரணையின் மூலம் உறுதிசெய்து கொண்டேன். அவனை ஊர் மக்கள் மத்தியில் கட்டிவைத்து 'ஏழைங்க சோத்துல மண்ணப்போட்ட பாவி' என அடித்து உதைத்து ஊரைவிட்டே விரட்டினேன்.

கஜானாவில் கால்பணம் கூட இல்லை. நான் கவலையில் மூழ்கினேன். ஏற்கனவே வெள்ளைக்கார அரசின் அதிகாரிகளுக்கு என்மேல் கோபம். இப்போது அவர்களுக்கு கப்பம் கட்ட முடியாத சூழ்நிலை. அதனால் அவர்கள் நெருக்கடி கொடுத்தார்கள். எனது ஜமீனை வேறு ஒரு ஜமீன்தாரின் அதிகாரத்திற்கு மாற்றிவிடப் போவதாக நோட்டீஸ் அனுப்பினார்கள்.

ஜமீன் கையைவிட்டுப் போய்விடக்கூடாதே என்பதால் என் ஆளுகைக்கு உட்பட்ட 18 பட்டி மக்களையும் சந்தித்தேன். நிலமையை விளக்கினேன். 'ஜமீனை காப்பாற்ற நீங்கள்தான் ஆதரவு தரவேண்டும். இந்தப் பிரச்சினையிலிருந்து மீள தற்காலிகமாக புதிய வரி விதிக்க வேண்டியிருக்கிறது. நமது மலைகளில் விறகு எடுக்கச் செல்லும் மக்கள் ஒவ்வொருவரும் தலா கால்அணா பணம் கொடுத்து அனுமதிச்சீட்டு வாங்க வேண்டும். ஏர்கலப்பை செய்வதற்காக மரம் வெட்டுபவர்கள் அரைஅணா சீட்டு வாங்க வேண்டும். வண்டிகள் செய்வதற்காக மரம்

வெட்டுபவர்கள் ஒருஅணா சீட்டு வாங்க வேண்டும். அனுமதிச் சீட்டு வாங்காமல் மரம் வெட்டுபவர்கள், விறகு எடுப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இதற்கு நீங்கள் ஒத்துழைப்பு தரவேண்டும். என் மக்களாகிய உங்களிடம் மிகப் பணிந்தே... உங்கள் கால்களைப் பிடித்து கெஞ்சியே கேட்கிறேன்' என்றேன்.

மக்களும் புதிய வரிவிதிப்பை ஏற்றுக்கொண்டு ஜமீனை காப்பாற்ற முன்வந்தார்கள்.

ஆனால்... என்னால் விரட்டப்பட்ட துரோகி ராஜாமணி என்னைப் பற்றி துர்பிரச்சாரம் செய்துவந்தான். "மக்களே... நம்ம ஜமீன்தார் சொல்றதை நம்பாதீங்க. அவரு காங்கிரஸில் சேரல. சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுக்கவுமில்ல. காந்தி ஆசிரமத்தில் சேரவுமில்ல. மெட்ராஸ்ல ஒரு தாஸி கூட பழக்கமாகி அவளுக்கு கஜானா செல்வத்தை அள்ளிக் கொடுத்துட்டாரு. மறுபடி மறுபடி அவ பணம் கேட்டு நச்சரிக்க... அவரு என்கிட்ட கஜானா பணத்தைக் கேட்டாரு. நான் மறுத்ததால் எனக்குத் துரோகிப் பட்டம் கட்டி வெளியே அனுப்பிச்சிட்டாரு. நான் ஜமீன்ல சாப்பிட்ட நன்றிக் கடனுக்காக பொறுமையா வெளியேறிட்டேன். இப்போ திடீர்னு உங்க மேல புதுசா வரி போட்டிருக்கார். நாட்ல இருக்க எந்த ஒரு ஜமீனும் இப்படி ஒரு வரி போட்டதில்ல. இதை முளையிலயே கிள்ளி எறியலேன்னா... பெரும் கஷ்டத்துக்கு ஆளாவீங்க. மக்களே... உங்களோட நன்மை கருதி நான் ஒரு யோசனை சொல்றேன்.

இந்த வரியை அமல்படுத்தக் கூடாதுன்னு கோர்ட்ல வழக்குப் போடுவோம். நிச்சயம் நமக்கு நியாயம் கிடைக்கும். வழக்குச் செலவுக்காக தலைக்கட்டுக்கு (குடும்பத்திற்கு) தலா ஒருரூபா கொடுங்க' என ராஜாமணி தூண்டிவிட... அவன் பேச்சையும் மக்கள் நம்பிவிட்டார்கள். ராஜாமணி என்மீது வழக்கும் போட்டுவிட்டான். வேறு வழியில்லாமல் வழக்குச் செலவுக்காக அரண்மனையை பத்தாயிரத்துக்கு அடகு வைத்து எதிர்வழக்குப் போட்டேன்.

வழக்கு தீவிரமாக நடந்து கொண்டிருந்த நேரத்தில்...

நான் அன்றாடம் வழிபட்டு வந்த பெருமாள் கோயிலை பூட்டுப் போட்டு பூட்டிவிட்டார்கள் எதிரிகள். உடனே நான் ஒரு பூட்டை எடுத்துச் சென்று அவர்கள் போட்ட பூட்டுக்கு மேல் நானும் பூட்டைப் போட்டுவிட்டு வந்தேன்.

இப்படி இருதரப்பு, இரண்டு பூட்டுக்களைப் போட்டது விநோதமாகவும், பரபரப்பாகவும் மக்களால் பேசப்பட்டது. பெரும் கொந்தளிப்பையும் ஏற்படுத்திவிட்டது'' எனச் சொல்லி நிறுத்தினார் ஜமீன்தார்.

(வாசகர்களே... கமலின் 'தேவர் மகன்' படக் காட்சி உங்கள் நினைவுக்கு வருகிறதா?)

இனி... வெள்ளைக்கார துரையின் கையாளைச் சுட்டுக் கொன்ற ஜமீன்.

ரஜினியின் 'எஜமான்' படக் காட்சியின் உண்மைச் சம்பவம்....

# எதிரிகள் போட்ட திட்டம்!

எழுமலை ஜமீன்தார் சங்கர பாண்டியன் என்னிடம் தன் வாழ்க்கைக் கதையைச் சொல்லி வந்தார்.

எதிரி ராஜாமணி என்மீது போட்ட வழக்கை எதிர்த்து வழக்கு நடத்த ஜமீன் அரண்மனையை பத்தாயிரம் ரூபாய்க்கு அடமானம் வைத்து வழக்கை நடத்தி வந்தேன். இந்நிலையில் நான் தினமும் வணங்கிவரும் பெருமாள் கோயிலை எதிரிகள் பூட்டுப் போட்டு பூட்டினர். நானும் பதிலுக்கு ஒரு பூட்டைப் போட்டு கோயிலைப் பூட்டினேன். இப்படி பூட்டுக்கு மேல் பூட்டுப்போட்ட சம்பவம் அப்போது மக்களிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது.

இந்த காலகட்டத்தில்... ஐந்து வருஷங் களுக்கு ஒருமுறை கொண்டாடப்படும் முத்தாலம்மன் கோயில் திருவிழா வந்தது. திருவிழாவின் போது வழக்கமாக எனக்குத்தான் பரிவட்டம் கட்டி முதல்மரியாதை செய்வார்கள். ஆனால் எதிரிகள் இந்தமுறை வேறு ஒருவருக்கு முதல்மரியாதை கிடைக்க ஏற்பாடு செய்ததுடன், என்னை அவமானப்படுத்த திட்டமிட்டனர்.

'இந்த சதித்திட்டத்தை எதிர்த்து ஒரு கை பார்த்துவிட வேண்டியதுதான்...' என முடிவெடுத்தேன். ஒரு பெரிய ரோஜா மாலையை கட்டி ஒரு தாம்பாளத்தில் வைத்து, மாலைக்கு அடியில் கைத்துப்பாக்கியை மறைத்துவைத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றேன்.

'பூசாரி... இந்த மாலையை முத்தாலம்மன் திருவடியில் சமர்ப்பித்துவிடு. அது போதும் எனக்கு' என்றேன். உடனே பூசாரி மாலையை எடுத்தான். உடனே அதன் கீழிருந்த துப்பாக்கியை எடுத்து கூரையை நோக்கி 'டமார்... டமார்' எனச் சுட்டேன். எதிரிகள் தலைதெறிக்க ஓடினார்கள். மிரண்டுபோன பூசாரி எனக்கு பரிவட்டம் கட்டி முதல்மரியாதை செய்ததுடன், மாலையை என் கழுத்தில் அணிவித்தான். கையில் துப்பாக்கியுடன், கழுத்தில் மாலை அணிந்தவாறு எதிரிகள் முகத்தில்

கரியைப் பூசிவிட்டு கம்பீரமாக நடந்துவந்தேன். இதனால் எதிரிகள் ஆத்திரமடைந்துவிட்டார்கள். ராஜாமணி ஒரு திட்டம் போட்டான்.



'வெள்ளைக்கார துரைகளின் கையாளாக ஒரு அடியாள் கூட்டம் இருக்கு. அந்த கூட்டத்தின் தலைவன் மாயாண்டி. பழி பாவங்களுக்கு அஞ்சாதவன். துரையின் உத்தரவுப்படி, காங்கிரஸ் போராட்டக்காரர்கள் சிலரை கொன்று தடயம் தெரியாமல் செய்திருக்கு மாயாண்டியின் கூட்டம். 'நாம் மாயாண்டியைச் சந்தித்துப் பேசுவோம். அவனுக்கு பத்தாயிரம் கூலி பேசி, ஐயாயிரம் முன்பணம் கொடுப்போம். மலையில் மாயாண்டி தன் ஆட்களுடன் அனுமதிச் சீட்டு வாங்காமல் மரம் வெட்டுவான். ஜமீன் சார்பில் ரெய்டுவரும் ஃபாரஸ்ட்மேன் எப்படியும் அனுமதிச் சீட்டை காட்டச் சொல்லுவான். அந்த மோதலில் ஃபாரஸ்ட்மேனை மாயாண்டி கொன்றுவிடுவான். அத்துடன் 'அடுத்து ஜமீன்தார் கொல்லப்படுவார்' என மாயாண்டி எச்சரிக்கை விடுவான். இதுதான் நமது திட்டம்''என ராஜாமணி

சொல்ல... சிலர் அதற்கு சம்மதிக்க... அதன்படி மாயாண்டியை சந்தித்து ஐயாயிரம் அட்வான்ஸ் கொடுத்துவிட்டார்கள்.



'இந்த ஜமீன்தார் மேல ஒரு கண் வையின்னு ஏற்கனவே வெள்ளக்காரதுரை என்கிட்ட சொல்லீருக்கார். அதனால் ஜமீன்தார் ஜோலிய சுலபமா முடிச்சிடலாம்' என மாயாண்டியும் சொல்லியிருக்கிறான்.

அதன்படியே என் ஜமீனுக்கு உட்பட்ட மலையில் அனுமதியின்றி மாயாண்டி உட்பட அவனின் ஆட்கள் ஆறுபேர்கள் மரம் வெட்டியிருக்கிறார்கள். ஃபாரஸ்ட்மேன் காளிமுத்து அந்த இடத்திற்குச் சென்று மரம் வெட்டுவதற்கான அனுமதிச் சீட்டை காண்பிக்கச் சொல்ல... காளிமுத்துவை ஆறுபேரும் சேர்ந்து கடுமையாக அடித்து உதைத்து ஒரு மரத்தில் தலைகீழாக கட்டித் தொங்கவிட்டார்கள். அதோடு அடையாளம் தெரியாத ஒருநபர் மூலம் ஜமீனுக்கு ஒரு துண்டுக் கடிதமும் கொடுத்துவிட்டிருந்தான் மாயாண்டி. அதில்.... 'ஜமீந்தாரே... நீ எங்க வெள்ளைக்கார துரைக்கு எதிரா புரட்சி பண்றியா? உன் ஜமீனோட

காவலாளி காளிமுத்துவை பழத்தோட்டத்துல தலைகீழா தொங்கவிட்டிருக்கோம். நீ வீரனாக இருந்தால் தனி ஆளாக வந்து காளிமுத்துவை காப்பாத்திக்கோ' என எழுதப்பட்டிருந்தது.

மாயாண்டி தன் கூட்டாளிகள் ஐந்து பேர்களையும் அனுப்பிவிட்டு அவன் மட்டும் மது போதையில் மலையில் பதுங்கியிருந்தான்.

நான் தனி ஆளாக துப்பாக்கியை எடுத்துக்கொண்டு மலைக்குச் சென்றேன். பழத்தோட்டத்தில் தலைகீழாக தொங்கவிடப்பட்டிருந்த காளிமுத்து இறந்துவிட்டான். நான் கடும்கோபம் அடைந்தேன்.

போதை வெறியுடன் மாயாண்டி என் எதிரே வந்தான். ‘உன்னைத்தான் பாண்டியா எதிர்பார்த்துக் காத்திட்டிருந்தேன்.நீ வெள்ளக்கார துரைக்கு எதிரியா? இதுவரை... தீவிரவாதிகளான காங்கிரஸ் சுதந்திரப் போராட்டக்காரர்கள் ஐந்துபேரை அடையாளம் தெரியாமல் துரைக்காக கொன்னுருக்கேன். நீ இப்போ ஆறாவது ஆள். துரை இருக்கும்வரை என்னை யாரும் ஒண்ணும் பண்ணமுடியாது பாண்டியா. அந்த துரை எங்களையெல்லாம் காப்பாத்திக்கிட்டு வர்றாரு. ஒழிஞ்சுபோ...' என்றபடி அரிவாளை ஓங்கியவாறு என்மீது பாய்ந்தான் மாயாண்டி. நான் துப்பாக்கியால் அவனைச் சுட்டுக் கொன்றுவிட்டு, அரண்மனைக்கு தகவல் அனுப்பினேன். காவலர்கள் வந்தார்கள். 'இந்த தேசத்துரோகி மாயாண்டி உடலை எரித்து சாம்பலாக்கிவிடுங்கள்' என உத்தரவிட்டேன். என் ஊழியன் காளிமுத்துவின் உடலுக்கு இறுதிச் சடங்குகளையும் செய்துவிட்டு அரண்மனைக்குத் திரும்பினேன்.

குளித்துவிட்டு சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தேன். எல்லா விஷயங்களையும் கேள்விப்பட்டிருந்த ராணியார் பதட்டத்தில் சாப்பாடு பரிமாறும்போது தடுமாறினாள்.

'என்ன ராணி.. ஒரு மாதிரி இருக்கே?' எனக் கேட்டேன்.

'ஒரு கொலைகாரனை நீங்க ஏன் சுட்டுக் கொல்லணும். இது உங்களுக்குத் தேவையா?' எனக் கேட்டாள்.

நான் சாப்பிடுவதை நிறுத்தினேன். 'ராணி... நான் அவனைக் கொன்னது எனக்காக மட்டுமல்ல. நமது ஊழியனைக் கொன்றவன் அவன். ஊழியன் உயிர் வேற.. நம்ம உயிர் வேறனு நினைக்கக் கூடாது. அதுமட்டுமல்ல... நான் அவனை சுட்டுக் கொன்றதற்கு வேற ஒரு முக்கிய காரணமும் இருக்கு. நாட்டு விடுதலைக்காகப் போராடிய ஐந்து நிரபராதிகளை வெள்ளைக்காரர்களின் ஏவுதல் பேரில் கொலை செய்திருக்கிறான்.

'ஆறாவது ஆள் நீதான்' என அரிவாளுடன் என் மீது பாய்ந்தான். நான் சும்மா இருக்க முடியுமா?. நான் 18 பட்டி மக்களுக்கும் பொறுப்பானவன். அந்த மக்களை காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கு இருக்கு. 'இதெல்லாம் நமக்கு எதுக்கு?' என நீ நினைத்தால் இந்த ஜமீனை விட்டுவிட்டு, பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டு நாம் எங்கேயாவது கண்காணாத இடத்திற்குப் போய் பிழைக்கலாமா? பதில் சொல் ராணி''என்றேன். மௌனமாக இருந்தாள் ராணி.

கொஞ்ச நாட்களிலேயே நாடு விடுதலை பெற்றது. சர்தார் வல்லபாய் படேல், ஜமீன் ஒழிப்பு திட்டத்தைக் கொண்டுவந்தார். முதல் ஆளாக ஜமீனை எழுதிக் கொடுத்துவிட்டு குடும்பத்துடன் வெளியேறினேன். எங்கெங்கோ குடியேறினேன். கையில் இருந்த பணமெல்லாம் கரைந்துவிட்டது. என் கௌரவத்தை விட்டுக்கொடுக்காத அளவுக்கு எப்படியோ சமாளிச்சு குடும்பம் நடத்துறேன்.

ஜமீன்தாராக இருந்துவிட்டு இப்படி வாழ்வதில் எனக்கு எந்த வருத்தமுமில்லை. எனக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன். என் மூத்த மகள் கல்யாண வயதில் இருக்கிறாள். அவளுக்கு கல்யாணம் செய்துவைக்க முடியவில்லையே என்கிற கவலைதான் என்னை வாட்டுகிறது. நான் பழைய கௌரவத்தை நினைத்து ஜமீன்வீட்டு மாப்பிள்ளை தேடினால்... அதற்குத் தகுந்த வசதி இல்லை. சரி... யாரோ ஒரு ஏழைக்கு கட்டிக் கொடுக்கலாம் என்றால்... என் மனைவிக்கு மனசு ஒப்பவில்லை. இப்படித்தான் தம்பி போராடிக் கொண்டிருக்கிறேன்'' என சொல்லி பெருமூச்சுவிட்டார் ஜமீன்தார்.

ஜமீன்தார் வாயாலயே அவரின் கதையைக் கேட்ட எனக்கு, பிரமிப்பு, வியப்பு, வேதனை உண்டானது. அந்த பாதிப்பிலிருந்து விலக எனக்கு வெகு நேரம் பிடித்தது.

'ஐயா... நீங்க எதற்கும் கவலைப்பட வேண்டாம். அந்தக் காலத்தில் நீங்க ஏழைகளுக்கு காலை உணவாக அளித்த இட்லியைத் தின்றவன் நான். அதை என்னால் மறக்க முடியாது. கூடிய சீக்கிரம் ஒரு நல்ல முடிவோடு வருகிறேன்' என அவரின் காலைத் தொட்டு வணங்கி, கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் வெளியேறினேன்.

# மனிதர்கள்!

ஜமீன்தார் சங்கரபாண்டியனின் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டு 'அய்யா... கூடிய சீக்கிரமே ஒரு நல்ல முடிவோடு வருகிறேன்' எனச் சொல்லிவிட்டு கண்கசிய வெளியேறினேன்.

என் ஊரான எழுமலைக்கு வந்து நண்பர்களையும், உறவினர்களையும் சந்தித்தேன்.

'நம்ம ஊர் ஜமீன்தார் இப்போது திருநெல்வேலி பக்கம் பத்திரம் எழுதி பிழைக்கிறார்' என்பதையும், ஜமீந்தார் என்னிடம் சொன்ன அரண்மனை ரகசியங்களையும், இப்போது மகளுக்குத் திருமணம் செய்ய இயலாமல் அவர் தவிப்பதையும்' விலாவாரியாகச் சொன்னேன்.

'அடடா... நம்ம ஊர் ஜமீன்தார் அவ்வளவு நல்லவரா? யாரோ ஒரு நபரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு நம் மூதாதையர்கள் ஜமீன்தாருக்கு எதிராக இருந் திருக்கிறார்களே...? அவர் செய்த நன்மைகளை மறந்துவிட்டார்களே... அதற்கு நாம் இப்போது பிராயச்சித்தம் செய்வோம்' என இளைஞர்கள் ஆர்வமாக முன்வந்தார்கள்.

'அடகில் இருக்கும் ஜமீன் அரண்மனையை மீட்பது, ஒரு நல்ல தொகையை ரொக்கப் பணமாக ஜமீன்தாரின் கையில் கொடுத்து அவரை அழைத்து வந்து இந்த அரண்மனையில் குடியேற்றுவது, அடுத்து... ஜமீன்தாரின் மூத்த மகளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைப்பது...' இந்த மூன்று திட்டங்களுடன் நிதி வசூல் செய்தோம். ஊர்க்காரர்கள் சுமார் 60 பேர்கள் ஒரு லாரி பிடித்து நிதியுடன் ஜமீந்தாரைச் சந்தித்தோம். எங்களின் திட்டங்களை ஜமீன்தாரிடம் சொன்னோம்.



மகிழ்ச்சிப்பெருக்கில் அழுதுவிட்டார் ஜமீன்தார். அழுகையை அடக்க வெகுநேரமானது. மெல்ல தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டவர்... 'நான் வாழ்ந்த மண்ணில் பிறந்த செல்வங்களே... நான் உங்களுக்கு என்ன கைமாறு செய்வேன். நான் அப்படி என்ன தியாகம் செய்துவிட்டேன். நான் என் கடமையைத்தான் செய்தேன். என் மண்ணின் மைந்தர்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று கனவு கண்டேனோ... அது நிறைவேறிவிட்டது. இதற்கு மேல் எனக்கு என்ன பெருமை வேண்டும்?' என்ற ஜமீன்தார் மீண்டும் கண்களில் நீர்கோர்க்க... அமைதியானார்.

நாங்களும் அமைதியாக அவரையே பார்த்தோம்.

"பிள்ளைகளே... நீங்கள் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு பழையபடி அரண்மனையில் குடியேறு கிறேன் என்றே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அதற்கு முன் உங்களிடம் ஒரேஒரு கேள்வி கேட்கட்டுமா?"

நாங்கள் ஆர்வமும், குழப்பமுமாக அவரைப் பார்த்தோம்.

'உங்கள் ஜமீன்தார் தன் கடைசி காலத்தில் யாசகம் பெற்று அசிங்கமாக வாழ்ந்து செத்தான் என்கிற பேர் வேணுமா? இல்ல... யார்கிட்டயும் கையேந்தாம சிங்கமாவே வாழ்ந்து சிங்கமாவே செத்தார் என்கிற பேர் வேணுமா?' என்றார்.

எங்கள் எல்லோர் கண்களும் கண்ணீர்க் குளமானது.

'அந்தக் காலத்தில் நான் அரண்மனை முற்றத்தில் உட்கார்ந்தால் வீதியில் போவோர், வருவோர் தங்களின் மேல்துண்டை எடுத்து எனக்கு மரியாதை செய்வார்கள். ஊர் மக்கள் வசூலித்துக் கொடுக்கும் பணத்தில் இனி நான் அந்த அரண்மனையில் உட்கார்ந்தால்... வீதியில் போகிற ஒவ்வொருவரையும் பார்க்கும்போது 'இவர் தயவில்தானே வாழ்கிறோம்'னு என்னையும் அறியாமல் என் மேல்துண்டை நான் எடுக்க வேண்டிய நிலை வருமே! பிள்ளைகளே... உங்க பெருந்தன்மையை நான் உதாசீனப்படுத்தலை. நீங்கள் எனக்குச் செய்கிற உதவியை வேறு விதமாகச் செய்யுங்கள். என் அரண்மனையை விற்று, அதில் கிடைக்கும் பணத்தில் அரண்மனை மீது இருக்கும் கடனை அடைத்துவிட்டு, மீதமுள்ள பணத்தில் என் மகளின் திருமணத்தை நீங்கள் நடத்தி வைத்தால்... அதைவிட பெரிய பாக்கியம் எனக்கில்லை" என்றார்.

அவர் விருப்பப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு விடைபெற்றோம்.

ஜமீன் அரண்மனையின் கட்டிடம், நிலத்தின் அன்றைய மதிப்பை பல இடங்களில் விசாரித்தோம். '24 ஆயிரம் ரூபாய் பெறும்' என்றார்கள். ஆனால் அதை வாங்க யாரும் முன்வரவில்லை. 'வாழ்ந்து கெட்டவர்களின் அரண்மனையை வாங்குவது நல்லதல்ல' என்கிற சென்ட்டிமெண்ட்தான் காரணம். இதனால் நானும், என் அண்ணன் ஆர்.எம். கிருஷ்ணசாமியும் பணம் கொடுத்து அந்த பழைய அரண்மனையை வாங்கினோம். சென்ட்டிமெண்ட்டைச் சொல்லி சிலர் எங்களை பயமுறுத்தியபோதும், 'நடப்பது நடக்கட்டும்...' என வாங்கினோம்.. அரண்மனை மீதிருந்த கடன் அடைத்தது போக...

மீதமுள்ள பணத்தில் ஜமீன்தார் மகளுக்கு திருமணம் செய்யும் வேலையை ஆரம்பித்தார் என் அண்ணன்.

ஜமீன்தாருக்கு தனிப்பட்ட சேவகராக இருந்தார் அழகுமலைத்தேவர். ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு, ஜமீன்தார் ஊரைவிட்டே வெளியேறிவிட... ஜமீன்தாரே கதி என இருந்த அழகுமலை, 'இனிமே நாம் எப்படி பிழைக்கப் போறோம்?' என கவலைப்பட்டு வந்தார். எனது தங்கையின் கணவர் அருணாச்சலத்தேவர், அப்போதைய மதுரைஜில்லா டிஸ்ட்ரிக்ட் போர்டு வைஸ்- பிரஸிடெண்ட்டாக இருந்தார். அவரிடம் அழகுமலை முறையிட... உயர்நிலைப் பள்ளியில் பெல் அடிக்கும் வேலை போட்டுத் தந்தார். அழகுமலையின் மகன் ராணுவத்தில் சேர்ந்தார். இப்போது ஜமீன் மகளுக்கு வரன் தேடிக்கொண்டிருந்த நேரத்தில் அந்த ராணுவவீரர் ஊருக்கு வந்திருந்தார். 'இந்தப் பையன் ஜமீன்தார் மகளுக்கு பொருத்தமா இருப்பானே' என முடிவு செய்தார் என் அண்ணன். விஷயத்தை நேரிடையாகச் சொன்னால் 'ஜமீன்தாருக்கு நான் சம்பந்தியா?' என அழகுமலை மறுப்பார் என்பதால்... 'அழகுமலை... ஒங்க மகன் லீவு முடிஞ்சு மறுபடி ராணுவத்துக்கு போறதுக்குள்ள... ஒரு நல்ல பெண்ணா பார்த்து உங்க மகனுக்கு கட்டிவச்சா ஏத்துப்பீங்களா?' எனக் கேட்க...

"நீங்க சொன்னா சரியா இருக்கும். நான் ஒப்புக்கிறேன்" எனச் சொன்னார் அழகுமலை.

என் அண்ணன் மறுநாளே... ஜமீன்தாரை சந்தித்தார். "அய்யா... மேல ஏறவும் முடியல, கீழ இறங்கவும் முடியலனு நீங்க ஏற்கனவே சொன்னீங்க. அப்படியெல்லாம் சொல்லாம... நான் சொல்றதுக்கு சம்மதிக்கணும்யா. உங்ககிட்ட வேலை பார்த்த அழகுமலை மகன், உங்க பொண்ணுக்கு பொருத்தமா இருப்பான். ரொம்ப நல்ல பையன். என்னய்யா சொல்றீங்க. ராணியம்மா... நீங்களும் மனசு வைங்க" எனச் சொல்ல... இருவரும் சம்மதித்தனர்.

ஒரு கார் பிடித்து ஜமீன்தாருடன் என் அண்ணன் இரவோடு இரவாக எழுமலை வந்து சேர்ந்தார். ஊரின் எல்லையில் காரை நிறுத்தச்சொல்லி கீழே இறங்கிய ஜமீன்தார், ரொம்ப வருடங்களுக்குப் பிறகு, தான் ஆண்ட மண்ணுக்கு வந்த மகிழ்ச்சியில் மண்ணைத் தொட்டுக் கும்பிட்டு அழுதுவிட... என் அண்ணன் தேற்றி அழைத்துவந்தார்.

நள்ளிரவில்... அழகுமலை வீட்டுக் கதவைத் தட்டிய என் அண்ணன், 'பொண்ணோட அப்பா வந்திருக்காரு' என்று சொல்ல... ஆர்வமாக

அரிக்கேன் விளக்கைத் தூக்கிப் பிடித்தபடி கதவைத் திறந்துவிட வீட்டுக்குள் நுழைந்தவர்... ‘அழகுமலை எப்படி இருக்கே?’ எனக் கேட்க... அரிக்கேன் விளக்கை உசத்திப் பிடித்து முகம் பார்த்த அழகுமலை... 'அய்யா... நீங்களா? உங்க மகளையா என் மகனுக்கு...' என கேட்டபடி ‘படார்' என ஜமீன்தாரின் காலில் விழுந்துவிட்டார்.

"அய்யா... உங்ககிட்ட வேலை பார்த்தவன் நான். ‘சம்பந்தினு உங்களுக்குச் சமமா உட்கார்ற பாவத்துக்கு என்னை ஆளாக்க நினைச்சுட்டாங்களே..." என அழகுமலை அழ ஆரம்பிக்க...

"அழுகையை நிறுத்துங்க. நீங்க ஜமீன்தார் மேல உண்மையிலே விசுவாசமா இருக்கிறவர்னா நீங்க அதை எப்படி நிரூபிப்பீங்க?" என என் அண்ணன் கேட்க...

"உயிரையே கொடுப்பேன்..."

"உயிர் வேணாம். அவர் மகளை நீங்க மருமகளா ஏத்துக்குங்க. அதுபோதும். நீங்க ஜமீன்தார் மேல மரியாதை வச்சிருக்கது உண்மைன்னா... அதைச் செய்ங்க" என அண்ணன் சொல்ல...

நீண்ட மறுப்பிற்குப் பின் ஒரே ஒரு கண்டிஷனுடன் சம்மதித்தார் அழகுமலை.

"அய்யா... நாலு பேருக்கு மத்தியில நீங்க என்னை ‘சம்பந்தி'னு சரிசமமா நடத்திராதீங்கய்யா’ என்பதுதான் அந்த கண்டிஷன்.

ஊரே திரண்டுவந்து வாழ்த்த... ஜமீன்தார் மகளின் திருமணம் நடந்தேறியது.

இந்த ஜமீன் கதை முழுவதையும் சின்னப்பத் தேவரிடம் சொன்ன நான்... "ஜமீன்தாரின் மூத்த மகளுக்கு உடம்பு முடியாமத்தான் மெட்ராஸுக்கு கூட்டி வந்து அரசாங்க பெரிய ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்காங்க. ஜமீன்தார் பத்துநாளா என் வீட்லதான் தங்கியிருக்கார். ஜமீன்தாருக்கு செலவுக்கு கொடுக்கத்தான் மூவாயிரம் ரூவா அவசரமா கேட் டேண்ணே" என்றேன்.

தேவர் மெய்மறந்து என்னையே கூர்ந்து பார்த்துவிட்டு, "ஞானம்... அந்த புண்ணியவான நான் பார்த்தே ஆகணும்டா" என என்னுடன் புறப்பட்டார்.

# அழைத்தார் இளையராஜா!

எழுமலை ஜமீன்தார் சங்கரபாண்டியனின் வாழ்க்கைக் கதையை முழுவதுமாக சின்னப்ப தேவரிடம் சொன்ன நான், 'ஜமீன்தார் தன் மூத்த மகளுக்கு சிகிச்சையளிக்க ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கார். பத்துநாளா ஜமீன்தார் என் வீட்லதான் தங்கியிருக்கார். அவருக்கு செலவுக்கு கொடுக்குறதுக்குத்தான் உங்ககிட்ட மூவாயிரம் ரூபாய் அவசரமா கேட்குறேண்ணே' என்றேன்.

'ஞானம்... அந்த புண்ணியவான நான் பார்த்தே ஆகணும்' என்று சொல்லி கிளம்பினார் தேவர்.

செக்கச் சிவந்த மேனி. திருநீறு அணிந்த நெற்றி... என ஞானப்பழமாக ஜமீன்தார் வீற்றிருந்தார். தேவரைவிட ஜமீன்தார் பத்து வயது மூத்தவர். அதனால் ஜமீன்தாரின் கால்களைத் தொட்டு வணங்கிய தேவர், ஒரு கவரை நீட்டி..,'இது முருகனோட பிரசாதம். மறுக்காம வாங்கிக்கங்க' என்றார். அந்தக் கவரில் ஒரு தொகை இருந்தது. ஜமீன்தார் திகைத்தார். எத்தனையோ பேர்களுக்கு தானதர்மம் செய்த ஜமீன்தாருக்கு தேவர் கொடுக்கும் பணத்தைப் பெற தன்மானம் தடுத்தது. இருப்பினும் நான் வற்புறுத்தினேன், வாங்கிக் கொண்டார்.

''நீங்க நூறு வருஷத்துக்கு மேல நல்லபடியா வாழ... என் அப்பன் முருகனை வேண்டிக்கிறேன். உங்களுக்கு என்ன உதவிவேண்டுமோ..கலைஞானத்திடம்சொல்லிவிடுங்க. நான் செய்து தர்றேன்'' என்று சொல்லி ஜமீன்தாரின் கைகளை முத்தமிட்டுவிட்டுச் சென்றார் தேவர்.



நாடு சுதந்திரம் அடைந்தபோது ஜமீன் ஒழிப்பு சட்டத்தை அரசு கொண்டு வந்தது. உடனே ஜமீன்தார் சங்கரபாண்டியனை சந்தித்த அவரின் அபிமானிகள் 'இப்படி ஆகிப்போச்சே' என்றனர். அதற்கு ஜமீன்தார், ஜமீன் என்ன பெரிய ஜமீன்... போனா போகுது. நாடு சுதந்திரம் அடைஞ்சிருச்சே, அது போதும். மகாத்மா காந்திக்கு ஜே!'' என கோஷமிட்டிருக்கிறார் ஜமீன்தார். அவரின் அந்த உயர்ந்த மனதிற்காகவும், அவர் செய்த தர்மங்களுக்காகவும் இன்று அவருடைய வம்சம் நல்லபடியாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

 

எழுமலையில் உள்ள ஜமீன்தாரின் வீட்டை நானும், என் அண்ணன் ஆர்.எம்.கிருஷ்ணசாமியும் சேர்ந்து வாங்கினோம் அல்லவா. அது இன்னமும் எங்களிடம்தான் உள்ளது.

அடடே... கலைஞானத்துக்கு சொந்தமா அரண்மனையே இருக்கா?''என பெரிதாக நினைக்க ஏதுமில்லை. அரண் மனையின் மாடி இடிந்துவிட்டது. மொத்த கட்டிடமும் பூமிக்குள் ஆறடி இறங்கிவிட்டது. இதை குடியிருப்பாக பயன்படுத்த முடியாது. இடம் மட்டுமே வேல்யூ. அந்த இடத்திற்கும் ரெண்டு டஜன் வாரிசுகள் பங்குக்காக இருக்கிறார்கள். பிரித்தால் ஆளாளுக்கு கையகலம் கிடைக்கலாம்.

எழுமலை ஜமீன்தார் சங்கரபாண்டியன் என்னிடம் சொன்ன வாழ்க்கைச் சம்பவங்களில் ஒன்றான பரிவட்ட முதல் மரியாதையைத்தான் 'எஜமான்' படத்திற்காக ஆர்.வி.உதயகுமாரிடம் ஒரு காட்சியாகச் சொன்னேன்.

மேலும் ஜமீன்தார் வாழ்க்கை நிகழ்வில் சிலவற்றை மட்டும் முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு, என் சொந்த கைச்சரக்கையும் சேர்த்துக்கொண்டு ஒரு புதிய கதையை உருவாக்கி தம்பி கமல்ஹாசனிடம் சொன்னேன். நான் சொன்ன கதையில் மூலக்கதையை எடுத்துக்கொண்டு 'தேவர் மகன்' படம் பண்ணினார். ஒரு கதையை ஒரே வரியிலும் சொல்லலாம். இது தம்பி கமலுக்கு தெரியாததல்ல.

எல்லாம்தெரிந்த தம்பி கமல் முறையாக என்னிடம் எழுதி வாங்காமல் 'ரெண்டு ஸீனை மட்டும் எடுத்து கொண்டதாக மேனேஜர் மூலம் சொல்லியனுப்பி 25 ஆயிரம் ரூபாய் மட்டும் கொடுத்தார். இந்தத்

தொகை... அந்தக் காலகட்டத்தில் நான் என் உதவியாளர்களுக்கு கொடுத்த சம்பளம்.

'தேவர் மகன்' மூலக்கதை கலைஞானத்தின் கதை என கங்கை அமரனும்,கதாசிரியர் கலைமணியும் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். 'கலைஞானம் நம்ம அண்ணன்தானே'என்கிறஉரிமையில் இந்தத் தொகையை மட்டும் கமல் கொடுத்திருக்கலாம். கமலைப்போல நானும் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருந்திருந்தால் பணம் கேட்டிருக்கமாட்டேன்.

காலம் மாறிக் கொண்டிருக்கிறது. கமலின் மனசு மாறாதா என்ன? ('தேவர் மகன்' கதை குறித்து எனக்கும் கமலுக்கும் இடையேயான விஷயங்களை முன்பே விரிவாகச் சொல்லியிருப்பதால் இங்கே இதற்கு மேல் பேச விரும்பவில்லை.)

'இது நம்ம ஆளு' படத்தில் பங்குதாரராக இருந்து படம் வெளியாகி வெற்றியடைந்த பிறகு... 'அம்மன்கோவில் திருவிழா' என்கிற படத்தை எடுக்க முடிவு செய்து அறிவிப்புச் செய்தேன். அதனைப் படித்த இரண்டு விநியோகஸ்தர்கள் என்னைச் சந்தித்தனர்.

''அண்ணே... இராம.நாராயணன் தயாரிச்சு வெளியிட் டிருக்கும் 'ஆடி வெள்ளி' படத்தில் தேவர் ஃபிலிம்ஸுக்கு சொந்தமான யானைக்குட்டி ரொம்பப் பிரமாதமா நடிச்சிருக்கு. அந்த யானைக் குட்டிக்காகவே படம் ஓடுது. அந்த யானைக் குட்டியை ஒங்க படத்திலும் நடிக்க வைக்கிறதா இருந்தா... இப்பவே நாங்க ரெண்டு ஏரியாவை வாங்கிக்கிறோம்'' என்றனர்.

''அது ஒண்ணும் பெரிய காரியமில்லை... செஞ்சிடலாம்''

''சந்தோஷம். இந்தாங்க அட்வான்ஸ்'' என இருவரும் ஒரு தொகையை என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றனர்.

உடனே தேவரின் மகன் தண்டபாணியைச் சந்தித்து ''முதலாளி... என் படத்துக்கு உங்க யானைக்குட்டி வேணும்'' என்றேன்.

''அண்ணா... உங்களுக்கு இல்லாததா?'' எனச் சொல்லி விட்டு யானைப்பாகனை அழைத்து ''கலைஞானம் அண்ணா எடுக்கும் படத்தில் யானைக் குட்டியை நடிக்க வை. அவர் படம் முடியிற வரைக்கும் வேறு படத்துக்கு யானைக் குட்டியை கொடுக்காதே'' என்றார்.

''யானைக் குட்டிக்கு எவ்வளவு பணம் கொடுக்கட்டும்'' எனக் கேட்டேன்.

"என்னண்ணா... என்னை இவ்வளவு கேவலமா நினைச்சிட்டீங்க? தேவர் ஃபிலிம்ஸ்ல நீங்களும் ஒரு முக்கியமான ஆள்ங்கிறதை மறந்துட்டீங்களா? முதல்ல... நல்லபடியா படத்தை முடிங்க. பணம், கிணம் கொடுக்க வேண்டாம். எனக்கு ஒரு நல்ல கதையை ஏற்பாடு செய்து கொடுத்தா போதும்" என்று தேவரண்ணனைப்போல் தனது வள்ளல் தன்மையைக் காட்டி "முருகா... முருகா..." எனச் சொல்லியனுப்பினார்.

படத்தின் இசைக்காக இளையராஜாவை சந்திக்கக் கிளம்பினேன். தமிழ் சினிமாவுக்கு மட்டுமல்ல... இந்தியாவுக்கே பெரும்புகழ் சேர்த்தவர் இசைஞானி இளையராஜா என்பது அறிந்ததே. நானும், ராஜாவும் இதுவரை ஒருதாய் பெற்ற பிள்ளைகளாகவே பழகி வருகிறோம். என் படங்களுக்கு இசையமைக்க 'இவ்வளவு பணம் வேண்டும்' என அவர் கேட்டதேயில்லை. நான் கொடுக்கிற பணத்தை குழந்தைபோல் சிரித்த முகத்துடன் பெற்றுக்கொள்வார்.

ராஜாவின் தாயார் மறைந்து முதலாம் ஆண்டு நினைவுநாள் வரவிருந்த நேரத்தில், ராஜாவை சந்தித்த போது 'அண்ணே... நீங்க அம்மா நினைவுநாளுக்கு வாங்க' எனச் சொல்லிவிட்டு காரில் கிளம்பிவிட்டார்.

கம்பம் கூடலூரை அடுத்து மலையடிவாரத்தில் தாயாருக்கு எழுப்பப்பட்ட சமாதிக்குத்தான் வரச் சொன்னார். சென்னையிலிருந்து அதிகமான தூரம்தான் எனக்கு. என்றாலும் சிரமத்தை சிரமமாகப் பாராமல் அங்கு சென்று மாலை மரியாதை செய்து வணங்கினேன்.

ராஜா இருந்த அறைக்குச் சென்றேன். காலை டிபன் சாப்பிட தயாராக இருந்தவர், 'வாங்கண்ணே சாப்பிடலாம்'என்றார். இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது...

"தம்பி... பாரதிராஜா, பஞ்சு அருணாசலம்... இவங்களை யெல்லாம் கூப்பிடலையா?" என்றேன்.

"உங்களை மட்டும்தான் கூப்பிடணும்னு தோணிச்சு, கூப்பிட்டேன்" என்றார். ராஜாவின் உள்ளத்தில் எனக்கொரு உயர்ந்த இடம் இருப்பதை எண்ணி மகிழ்ந்தேன்.

(அந்த ஆண்டுமுதல் தொடர்ந்து பத்தாண்டுகளாக... என் தாய்மாமன் பரமசிவத்தையும், என் நண்பர் தேனி சுப்புராஜுவையும் அனுப்பி என் சார்பில் அம்மா நினைவு நாளன்று மலர் மரியாதை செய்து வந்தேன். என் மாமா இறந்த பிறகு எனக்கு அதற்கான வாய்ப்பில்லாமல் போய்விட்டது.)

'இளையராஜா இசையமைப்பதாக இருந்தால்தான் நடிப்பேன்' என சில ஹீரோக்களும், 'ராஜா இசையில்லா மல் படம் எடுக்கமாட்டேன்' சில தயாரிப்பாளர்களும்... ஏன், 'ராஜா இசையமைக்கிற படங்களுக்குத்தான் ஃபைனான்ஸ்...' என சில ஃபைனான்ஸியர்களும் சொல்லிவந்த காலமது. தமிழ், தெலுங்கு, கன்னடம் என இடைவிடாது இசையமைத்துக் கொண்டிருந்தார் ராஜா. 'எனக்குப் பசிக்கிறது. ஆனால்... சாப்பிட நேரமில்லை. எனக்குப் பதிலாக யாராவது சாப்பிடுங்களேன்' என்பது மாதிரி அவ்வளவு பிஸியாக இருந்தார் ராஜா. சில தயாரிப்பாளர்கள், சில நடிகர்கள், சில இயக்குநர்கள்... ராஜாவின் இசையால்தான் புகழ் பெற்றார்கள்.

இப்படி நான் இளையராஜாவை போற்றிப் புகழ்வதால் மற்றவர்களை, நான் குறைத்து மதிப்பிடுவதாக நினைக்க வேண்டாம். 'ஒவ்வொருவருக்கும் தனித்திறமை உண்டு' என்று ஒளவை சொன்னதை நான் எப்போதும் மறந்தவனில்லை.

தமிழ் மூதாட்டி ஒளவைக்கும், கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கும் இடையேயான ஒரு இலக்கியச் சுவாரஸ்யத்தை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

# பஞ்சுவுக்காக போன வேலை!

சோழமன்னனின் சபையில் ஔவையும், கம்பரும் அமர்ந்திருந்தனர். இவர்கள் இருவருக்கும் இடையே ஏற்கனவே மோதல் இருப்பதை அறிந்த மன்னன், இரு கவிகளுக்கும் இடையே ஒரு போட்டியை உருவாக்கி இலக்கியச் சுவை பருகி மகிழ எண்ணினான்.
"கவிச்சக்கரவர்த்தியே... உலக இன்பங்களில் சிறந்தது எது?" என கம்பரிடம் கேட்டான்.

"கங்கை நீர் அதனின் மிக்க கடவுள் நீர் எங்கும் இல்லை

செங்கதிர் ஒளியே யன்றி வேறுஒளிர் ஒளியும் இல்லை

எங்கணும் தாயைப்போல் இனியதோர் உறவும் இல்லை

மங்கையர் சுகமேயன்றி மறுசுகம் இல்லை மன்னா!"

-என்று கம்பர் பாட... மன்னனும், மற்றவர்களும் கரகோஷமிட்டு மகிழ்ந்தனர். ஔவை அமைதியாக இருந்தாள்.

"ஔவையே உங்கள் கருத்து என்னவோ?" எனக் கேட்டான் மன்னன்.

"மன்னா... கம்பன் பாட்டு உமக்கு தவறான மகிழ்ச்சியைத் தந்திருக்கிறது."

"கம்பனின் பாட்டில் தவறா?"

"தவறுதான் என்பதை நான் மெய்ப்பிக்கிறேன்" எனச் சொல்லிவிட்டு ஔவை பாடினாள்....



"விண்ணினின் மழையே யல்லால் வேறொரு நதியும் இல்லை
கண்ணினின் ஒளியே யல்லால் காணுமோர் ஒளியும் இல்லை
எண்ணிடில் பொருளைப் போல் இனியதோர் உறவும் இல்லை
உண்ணிடில் சுவையே யல்லால் ஒருசுகமும் இல்லை மன்னா!"

-ஔவை பாடியதும் கரகோஷத்தால் சபை அதிர்ந்து போனது.

இருவரின் செய்யுளுக்கும் என் அறிவுக்கு எட்டிய பாமரத்தனமான விளக்கத்தைச் சொல்கிறேன்.

'கங்கை நீர்போல் புனிதமானது எங்கும் இல்லை' என்றார் கம்பர்.

'கங்கை நதிபோல ஆயிரமாயிரம் நதிகளை உருவாக்குவது வான் மழையே' என்றாள் ஔவை.

'சூரிய ஒளிபோல் வேறு ஒளி இல்லை' என்றார் கம்பர்.

'சூரிய, சந்திர ஒளியையும், மற்ற ஒளியையும் காணுகின்ற கண்களின் ஒளியே சிறந்தது' என்றாள் ஔவை.

'தாய் உறவைக் காட்டிலும் சிறந்த உறவு இல்லை' என்றார் கம்பர்.

'செல்வத்தைப் போன்ற சிறந்த உறவு இல்லை' என்றாள் ஔவை.

(அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை... என்கிற கருத்துக்கு வலு சேர்த்தாள்)

'மங்கையிடம் பெறும் சுகத்துக்கு ஈடில்லை' என்றார் கம்பர்.

இந்த கருத்திற்கு எதிர்க்கருத்தை சிரித்தபடியே சொன்னாள்... 'ஒருவன் சில நாட்களாக உணவின்றி பசியால் வாடிக் கிடக்கிறான். அவனிடம் ‘உண்ண உணவு வேண்டுமா? உறவாட மங்கை வேண்டுமா?'’ எனக் கேட்டால்... 'கைப்பிடி சோறு கொடுங்களய்யா போதும்' என்பான். அதனால் 'உண்ணும் சுகம்போல் ஒரு சுகமும் இல்லை' மன்னா எனப் பாடினாள்.

அவையில் ஔவை தந்த பதிலடியால் முகம் சுளித்தார் கம்பர். இதைக் கவனித்த ஔவை, கம்பரின் அருகே சென்று 'கவிச்சக்கரவர்த்தியே... உமக்கு நிகர் நீரே. உமக்கு நான் எதிரியே அல்ல. அப்படியிருக்க... ஏன் எப்போது பார்த்தாலும் என்னை மட்டம் தட்டுவதுபோல் செயல்படுகிறாய்?’ எனக் கேட்டாள்.

ஔவை இப்படிக் கேட்டதற்கு ஒரு முன் மோதல்தான் காரணம்.

'அம்பர்' எனும் ஊரில் 'சிலம்பி' எனும் தாசிகுலப்பெண் வாழ்ந்துவந்தாள். கம்பரின் வாயால் தன்னைப்பற்றி ஒரு பாடல் பாடவேண்டும் என்பது அவளின் பலநாள் விருப்பம். ஒரு நாள்... கம்பரைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. ஆசையைச் சொன்னாள். பாடல் பாடுவதற்கு ஆயிரம் பொன் கேட்டார் கம்பர். அங்கே, இங்கே புரட்டி ‘ஐநூறு பொன்தான் இருக்கிறது' எனக் கொடுத்தாள்.

'நான் சொன்னால் சொன்னதுதான். ஐநூறு பொன்னிற்கு அரைப் பாட்டுதான் பாடுவேன்’ என்ற கம்பர், அவளின் வீட்டுச் சுவரில் கரித்துண்டு கொண்டு அரைப்பாடலை எழுதிவிட்டுப் போனார்.

இந்தப் பாடல் முழுமை பெறாமல் இருக்கிறதே என கவலைப்பட்டு வந்தாள் சிலம்பி.

பிறகொருநாள்... களைப்பு காரணமாக சிலம்பி வீட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தாள் ஔவை. உடனே... வீட்டிலிருந்த உணவை, ஔவைக்கு அளித்தாள் சிலம்பி. பசி கிறக்கம் மறைந்த ஔவை, சுவற்றில் எழுதப்பட்டிருந்த அரைப்பாடலை பார்த்து விசாரித்தாள். சிலம்பி விபரம் சொல்லி கண்ணீர் விட்டாள். உடனே மீதிப்பாட்டை சுவற்றில் எழுதி நிறைவு செய்தாள் ஔவை.

சிலநாட்கள் கழித்து சிலம்பியின் வீட்டுப்பக்கம் வந்த கம்பர், ஒளவையால் தன் பாடல் முழுமை பெற்றிருப்பதை அறிந்து... "பொன்னுக்குப் பாதிப்பாட்டு நான் பாட, கூழுக்கு மீதிப்பாட்டு ஒளவை பாடினாரோ" என கோபமானார். அன்றிலிருந்து ஔவைமேல் கம்பருக்கு மனஸ்தாபம்தான். இதுதான் அந்த முன்மோதல்.

"கவிச்சக்கரவர்த்தியே! நம்மைப் போன்றவர்களுக்கு கர்வம் கூடாது என்பதற்காகவே இறைவன் பாடம் கற்பித்திருக்கிறான். தூக்கணாங்குருவிக் கூட்டையும், சிலந்தி வலையையும், தேன் கூட்டையும், கறையான் புற்றையும் வேறு யாராலும் உருவாக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒருவித திறமை உண்டு. கர்வம் கூடாது" என்கிற பொருளுடன் ஒரு செய்யுள் பாடினாள் ஒளவை. இதையடுத்து மனக்கசப்பு நீங்கி ஒளவையுடன் சமாதானமானார் கம்பர்.

அந்த ஒளவைப் பாட்டை நான் எப்போதும் மனதில் கொண்டுள்ளேன்.

நான் இசைஞானி இளையராஜாவை புகழ்கிறேனே தவிர, மற்றவர்களைக் குறை கூறவில்லை. ஒவ்வொருவரிடமும் ஒரு திறமை உண்டு. நான் ராஜாவின் தனித் திறமையை வியக்கிறேன். அவ்வளவுதான்.

எம்.எஸ். விஸ்வநாதன், கே.வி.மகாதேவன், ஏ.ஆர். ரஹ்மான் போன்றோர் தமிழ்நாட்டுக்கு கிடைத்த பாக்யம் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

இளையராஜாவைச் சந்திக்கப் போனேன். சந்தையைப் போல் தயாரிப்பாளர்களின் கூட்டம் ராஜாவின் கால்ஷீட்டுக்காக காத்திருந்தது. என்னைப் பார்த்ததும் அகமலர வரவேற்றார்.

"தம்பி... 'அம்மன்கோயில் திருவிழா'னு ஒரு படத்தை ஆரம்பிச்சிட்டேன். நாலு பாட்டு வேணும். இது என்னோட அன்புக்கட்டளை" என்றேன்.

பிஸியான சூழலை நினைத்து திகைத்தார். இருப்பினும் 'சரி' என்பதுபோல தலையசைத்தார். 'இது போதுமடா சாமி' என ஓடி வந்துவிட்டேன்.

கதாநாயகியாக 'கரகாட்டக்காரன்' புகழ் கனகாவை ஒப்பந்தம் செய்ய விரும்பி, கனகாவின் அம்மா தேவிகாவைப் பார்க்க புறப்பட்டேன்.

(தேவிகா குறித்தும், தேவிகா-தேவதாஸ் காதல் திருமணத்திற்கு கிளம்பிய எதிர்ப்பால்... காதல் தம்பதி குடியிருந்த வீட்டில் நான் காவலுக்கு இருந்தது உட்பட பல விஷயங்களை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.)

பல வருடங்களாக நான் தேவிகாவை சந்திக்க முடியாமல் போனதற்கான காரணம் இப்போது என் நெஞ்சில் நிழலாடியது.

தேவிகா-தேவதாஸ் தம்பதிகளின் மேற்பார்வையில் தேவதாஸ் இயக்குநராக அறிமுகமான ‘வெகுளிப் பெண்' படத்திற்கு நான் கதை எழுதியிருந்தேன். படத்திற்கு முழு ஃபைனான்ஸ் செய்த கபார் என்னிடம் 'இந்தப் படம் தயாராகி முடிகிறவரை நீதான் கூடவே இருந்து பார்த்துக்கணும்' என உத்தரவிட்டார். அதனால் தினமும் ஆபீஸ் போய்விடுவேன்.

அந்தச்சமயம்... கவியரசு கண்ணதாசன் தனக்கு உதவியாளராக தன் அண்ணன் மகனான பஞ்சு அருணாசலத்தை அழைத்து வருவார். ஒரு பாடலுக்கு ரூபாய் ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கண்ணதாசனுக்கு தரப்பட்டு வந்தது. தான், எழுதிய பாடலை நகலெடுத்து எழுதும் பஞ்சுவுக்கு 'ஒரு பாடலுக்கு நூறு ரூபாய் தரவேண்டும்' என கண்ணதாசன் சொல்லிவிடுவார். 'வெகுளிப் பெண்' படத்திற்காக இரண்டு பாடல்களை காப்பி எடுத்த பஞ்சுவுக்கு இருநூறுரூபாய் தரப்படவில்லை. அதனால் தினமும் அலுவலகம் வருவார் பஞ்சு. தேவிகா-தேவதாஸுக்கு நெருக்கமாக இருந்த அந்த மேனேஜர் பணத்தைத் தராமல் இழுத்தடித்தார். தினமும் பஞ்சு அலைவதைப் பார்த்து எனக்கு பரிதாபம் வந்தது. அந்தப் பணத்தில்தான் அவர் அன்றாடம் குடும்பம் நடத்தவேண்டும். அதுபோக நானும் அவரைப்போல ஒரு எழுத்தாளன் என்பதால் வந்த இரக்கம்.

"யோவ் மேனேஜர்... பாவம் பஞ்சு, எத்தனை நாளைக்குத்தான் அவர அலைய விடுவீங்க? நான் சொன்னேன்னு சொல்லி பணத்தை வாங்கிக் கொடுங்கய்யா" என கோபித்தேன்.

உடனே தேவிகாவிடம் சொல்லி பஞ்சுவுக்கான பணத்தை வாக்கிக் கொடுத்தனுப்பிய மேனேஜர், "கலைஞானம் சார்... நாளைலருந்து நீங்க ஆபீஸுக்கு வரவேணாம்னு தேவிகாம்மா சொல்லீட்டாங்க. ‘படம் முடிஞ்சு ரிலீஸ் ஆகப்போகுது. இனி அவருக்கு இங்க என்ன வேலைன்னும் கேட்டாங்க’ என்றார்.

'உயிருக்குயிரான நட்புடன் பழகிய தேவிகாவா அப்படிச் சொன்னார்' என மனம் வெதும்பி கலங்கிய கண்களுடன் வெளியேறினேன்.

அன்று பஞ்சு அருணாசலத்திற்காக நான் சிபாரிசு செய்ததையும், அதனால் என் அலுவலக வேலை பறிபோனதையும் இன்றுவரை நான்

பஞ்சுவிடமோ, வேறு யாரிடமோ சொல்லவில்லை.

**1970-ல் நடந்த இந்த சம்பவத்திற்குப் பின்... 1990-ல் தேவிகாவை அவரின் வீட்டில் சந்தித்தேன்.**

**தன் குடும்பப் பிரச்சினையை என்னிடம் சொல்லி அழுது தீர்த்தார் தேவிகா.**

# சாமியார் வேடம் தந்த குழப்பம்!

கனகாவின் கால்ஷீட் விஷயமாக, கனகாவின் அம்மா தேவிகாவை சுமார் இருபது வருடங்களுக்குப் பிறகு... அவரின் வீட்டில் சந்தித்தேன்.

''அம்மா... வணக்கம்மா''

''வாங்க சார்... இப்பத்தான் என் வீட்டுக்கு வர வழி தெரிஞ்சதோ?''

''பஞ்சு அருணாச்சலத்துக்கு நியாயமா நான் சிபாரிசு செஞ்சதுக்குத்தான் நீங்க மேனேஜர் மூலம் என்னை 'ஆபீஸுக்கு வரக்கூடாது'னு சொல்லீட்டீங்களே... அந்த வருத்தம்தான்''

''இங்கதான் நீங்க தப்பு பண்ணீட்டீங்க. நான் உங்கள வரவேணாம்னு சொல்லவே இல்லை. அந்த மேனேஜர் என்கிட்ட வந்து ஏதேதோ சொன்னான். 'ஒரு பாட்டை காப்பி எடுக்க நூறு ரூபாயா?'னு அவனே கேட்டு என்மேல பழியைப் போட்டுட்டான். அந்தாளு எல்லா விஷயத்திலும் கமிஷன் அடிப்பவன். பஞ்சு, கமிஷன் தர மறுத்திருக்க லாம். இந்த விஷயத்தையெல்லாம், மேனேஜருக்கு கீழே வேலை பார்த்தவன் காலம் கடந்து என்கிட்ட சொன்னான். எல்லாம் அந்த மேனேஜரால் வந்த குழப்பம். சரி... அத விடுங்க. நீங்க டிபன் சாப்பிட்டீங்களா? வாங்க... சாப்பிடலாம்'' என்றார் தேவிகா.

சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தோம்.

எனக்கு அன்புடன் பரிமாறிய தேவிகா தனக்கும் பரிமாறிக்கொண்டார்.

''உங்க கையால சாப்பிட்டு இருபது வருஷமாச்சும்மா'' என்றேன்.



பேச்சு கனகா பற்றி ஆரம்பித்து, அப்படியே... தேவதாஸ் குறித்துப் போனது.

காதல் திருமணம் செய்துகொண்ட தேவிகா-தேவதாஸ் தம்பதிக்கு எதிர்ப்புக் கிளம்பிய போது, அவர்களுக்கு பக்க பலமாக இருந்தேனல்லவா நான். அதனால் வெளிப்படையாக என்னிடம் பல விஷயங்களைத் தெரிவித்தார் தேவிகா.

உங்ககிட்ட ஏன் மறைக்கணும். ஒரு உண்மையைச் சொல்றேன் கலைஞானம். எனக்கொரு நல்ல கணவனா இருப்பாருன்னுதான் தேவதாஸை தேர்ந்தெடுத்தேன். 'கடைசிவரை அவர் எனக்கு பாதுகாப்பா இருக்கணும்... என்னைவிட்டு போயிடக்கூடாது'னுதான் அவரு ஊரான மதுரை ஏரியாவுலயே.... அவருக்கு ஒரு சொத்து வாங்கித் தரணும்னு முடிவு செஞ்சேன். ஆனைமலை ஒத்தக்கடை பக்கத்தில் ஒரு வீடும், அதைச்சுற்றி ஏழெட்டு ஏக்கர் நிலமும் அவர் பெயரில் வாங்கித் தந்தேன். இந்த நிமிஷம்வரை அந்த சொத்தை அவர்தான் அனுபவிச் சுக்கிட்டிருக்கார். புருஷன்-பெண்டாட்டிக்குள்ள சிறுசிறு கருத்து வேறுபாடு ஏற்படுறது... எல்லாக் குடும்பத்திலயும் நடக்கிறதுதான். ஆனா... அந்த

மனுஷன் ஒரு சின்ன கருத்து வேறுபாடுக்காக வீட்டைவிட்டு வெளியேறிட்டார்.

அவர் பேரில் நான் வாங்கித் தந்த சொத்து போதாதுனு, எங்க ரெண்டுபேருக்கும் பொதுவா இருந்த சொத்துக்கும் உரிமை கேட்டு கேஸ் போட்டுட்டார். இன்னமும் அந்த கேஸ் கோர்ட்டுல நடக்குது. கனகா குழந்தையா இருந்ததால் என்னிடம் வளர கோர்ட் அனுமதிச்சது. அதோட... வாரம் ஒருமுறை குழந்தையை பார்த்துப் பேச அவருக்கு கோர்ட் அனுமதி கொடுத்துச்சு. ஆனாலும் அந்தப்பாவி ஒரு நாள்கூட வந்து பெத்த புள்ளய பார்த்ததேயில்ல.

புருஷன் பெண்டாட்டிக்குள்ள ஆயிரம் இருந்தாலும், அந்தக் குழந்தை என்னங்க பாவம் பண்ணுச்சு? இப்போ... கனகா சினிமாவில் கதாநாயகியாக நடிப்பதால், நிச்சயம் அவளோட தோற்றத்தை அவர் பார்த்திருப்பார். ஆனா... கனகாவுக்கு, தன்னோட அப்பா கருப்பா? சிவப்பா?னுகூட தெரியாதே..'' என்றபடி சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, பொலபொலவென கண்ணீர் சிந்தி அழுது விட்டார் தேவிகா.

அவருக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை எனக்கு. இப்படி மனம்விட்டு அழுதால் பாரம் குறையும் என்பதால் நான் மௌனமாக இருந்தேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு தன்னைத்தானே ஆசுவாசப் படுத்திக்கொண்ட தேவிகா... ''கனகாவோட கால்ஷீட் எத்தனை நாளைக்கு, எந்தெந்த தேதியில் தேவைப்படுதுனு ஒரு பேப்பர்ல எழுதிக் கொடுங்க'' என்றார்.

''இதோ... தயாரா இருக்கும்மா'' என எடுத்து நீட்டினேன்.

அதை வாங்கிப் பார்த்தவர்... ''உங்களுக்குத் தெரியாத தில்லை. கனகா இப்போ ரொம்ப பிஸியா இருக்கா. எப்படியோ அட்ஜஸ்ட் பண்ணி நீங்க கேட்ட தேதிகளை ஒதுக்கித் தர்றேன். திட்டமிட்டபடி நீங்க ஷூட்டிங் ஆரம்பிக்கலாம். நான் இப்போ சங்கிலி முருகன் படத்துக்காக அவசரமா மதுரை புறப்படுறேன். கைமாத்தா ஒரு பத்தாயிரம் ரூபாய் இருந்தா கொடுங்க'' என்றார்.

''கைமாத்து... கால்மாத்து எதுக்கும்மா? அட்வான்ஸா இதை வச்சுக்கங்க'' என பத்தாயிரம் ரூபாயை கொடுத்துவிட்டு கிளம்பினேன்.

அடுத்து.... கதாநாயகனாக 'நிழல்கள்'ரவியையும், முக்கிய கேரக்டரில் நடிக்க காகா ராதாகிருஷ்ணனையும் பேசி முடித்தேன்.

இளையராஜா இசையில்... ‘ஆடி வெள்ளி’ யானை நடிக்கும்... ‘அம்மன்கோயில் திருவிழா' என படத்துக்கான விளம்பரம் செய்தேன். எல்லா ஏரியாவும் உடனே விற்றுத் தீர்ந்தது. படம் முடிந்து வெளியாகி வெற்றிகரமாக ஓடியது.

ராஜாவின் இசை, கவுண்டர்-செந்தில் காமெடி, ஆயிரம் படங்கள் நடித்து அனுபவப்பட்டது போன்ற கனகாவின் நடிப்பும், அழகும், இளமையும் படத்தின் வெற்றிக்கு கை கொடுத்தது. ‘நிழல்கள்’ரவியும், காகாவும் தங்கள் பங்கிற்கு சிறப்பாக நடித்திருந்தார்கள். இயக்குநர் பி.ஆர்.சோமசுந்தரத்தின் ஒத்துழைப்பும் மிகவும் பாராட்டுதலுக்குரியதாக அமைந்தது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு....தேவிகா இறந்துவிட்டார்.

தேவிகாவுக்கும், தேவதாஸுக் கும் இடையேயான பொதுச் சொத்து வழக்கு கோர்ட்டில் இருந்தது.

தாயை இழந்து தனிமையில் இருக்கும் கனகாவை அவரின் அப்பாவுடன் சேர்க்கும் முயற்சியை இரு தரப்பிலும் மேற்கொண்டனர். அதில் நானும் முக்கிய பங்கு வகித்தேன்.

மெட்ராஸ் ஐகோர்ட்டில் சொத்து வழக்கு விசாரணைக்கு வந்த ஒருநாள்....

கோர்ட் நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்பாகவே... நீதிபதி வருவதற்கு முன்பாகவே... தன்னோட அப்பா எப்படி இருப்பார்? என்பதைப் பார்ப்பதற்காக முன்கூட்டியே வந்து பெஞ்சில் அமர்ந்திருந்தார் கனகா. பக்கத்துப் பெஞ்சில் ஒரு சாமியார் வந்து அமர்ந்தார்.

சாமியார் கனகாவையே பார்க்க... பயந்துபோன கனகா... பதட்டத்துடன் வாசல் வழியாக தன் அப்பாவை எதிர்பார்த்து இருக்க...

''மகளே...''

சத்தம்கேட்டு திரும்பினால்... சாமியார்.

சாமியார்கள் பொதுவாக பெண்களை ‘மகளே' என விளிப்பது வழக்கமல்லவா? அதனால் கனகா பயத்துடன் சாமியாரைப் பார்க்க...

''மகளே... கனகா... நான்தான் உன் அப்பா தேவதாஸ்'' என அந்த சாமியார் சொல்ல....

கனகாவின் விழிகள் நட்டுக்குத்தலாக நின்றுவிட்டது.

தன் அப்பா குறித்து ‘இப்படி இருப்பாரோ... அப்படி இருப்பாரோ' என கனகா தன் மனதுக்குள் போட்டு வைத்திருந்த பிம்பத்துக்கு மாறாக இருந்ததால் இந்த அதிர்ச்சி.

'நான் மூணு மாசமா ஐயப்பனுக்கு மாலைபோட்டு விரதம் இருக்கேனம்மா' என தேவதாஸ் தன் சாமியார் தோற்றத்திற்கு காரணம் சொன்னார்.

அதன் பிறகு கனகாவும் அவரின் தந்தையும் தொடர்ந்து பேசிக்கொள்ள வாய்ப்பு அமைந்தது.

ஆனாலும்... கனகா தன் அப்பாவுடன் சேர ஒப்புக்கொள்ளவில்லை.

இதுபற்றி நான் கனகாவிடம் கேட்டேன்.

"இல்ல சார்... சின்ன வயசிலருந்தே அவர் என்னைப் பார்த்துப் பழகிப் பேசியிருந்தா, பாசம் காட்டியிருந்தா... எனக்கும் அவர் மேல பாசம் வரும். திடீர்னு பாசம் எப்படி வரும்? எங்க அம்மா மட்டும்.... அந்த தெய்வம் மட்டும் இல்லேன்னா... என் வாழ்க்கை என்னாயிருக்கும்?" என வேதனைப்பட்டார்.

கனகாவின் நியாயமான வேதனையை நான் தேவதாஸிடம் சொன்னேன்.

"குழந்தையில இருந்தே கனகாவை நான் பார்க்காம இருந்தது என் குற்றம்தான்" என தவறை ஒப்புக்கொண்டார்.

அப்பாவையும், மகளையும் ஒன்றுசேர்க்க நான் எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை.

கனகாவோ... என்னை 'தேவதாஸின் ஆள்' என முடிவு செய்து என்னைப் பார்ப்பதையும், பேசுவதையும் தவிர்த்தே வருது.

தேவதாஸின் அப்பா 'முருகன் டாக்கீஸ்’ சுந்தரம் அய்யர் சினிமாவின் தொடக்க கால தயாரிப்பாளர். மீண்டும் அவர் தயாரிப்பில் இறங்கியபோது நான் அவரிடம் டிரைவராகவும், தயாரிப்பு நிர்வாகியாகவும் பணி செய்தேன். (இந்த அனுபவங்களையெல்லாம் நான் ஏற்கனவே விரிவாக சொல்லி யிருக்கிறேன்.)

என் முதலாளியின் மகன் தேவதாஸ் என்பதால் அவரின் குடும்பப் பிரச்சினையைத் தீர்க்க நான் ஆர்வம் காட்டினேனே தவிர... நான் கனகாவின் சுய விருப்பத்திற்கு மாறானவனல்ல.

நூற்றுக்கு நூறு நான் கனகாவின் நலன் கருதியே முயற்சிகள் மேற்கொண்டேன். இது அந்தப் பெண்ணிற்கு தெரியவில்லை பாவம்.

கனகா நன்றாக இருந்தால் போதும். அதுவே எனக்குப் பெருமகிழ்ச்சி.

சென்னையை விட்டு வெளியேறிய சின்னப்பத் தேவரின் மகன் தண்டபாணி!

பசி, பட்டினி, பிராந்தி, பாக்யராஜ்...!

# வார்த்தை ஜாலங்கள் தெரியாத பாக்யராஜ்!

1990-ஆம் ஆண்டு 'அம்மன் கோவில் திருவிழா' படத்தை எடுத்து வெளியிட்டேன். பெரும் வெற்றிப்படமாக அமைந்தது. அந்தச் சமயம் எனது நான்காவது மகள் ராஜராஜேஸ்வரிக்கு திருமண ஏற்பாடுகளை செய்து, பத்திரிகையும் அடித்தாகிவிட்டது.
சின்னப்பத்தேவர் இருந்திருந்தால் முதல் பத்திரிகையை அவருடைய கையில்தான் கொடுத்திருப்பேன். அந்த நன்றியுணர்ச்சியுடன் தேவரின் மகன் தண்டபாணிக்கு முதல் பத்திரிகை வைப்பதற்காக தேவர் ஃபிலிம்ஸ் அலுவலகத்திற்குச் சென்றேன்.

அலுவலக போர்டிகோவில், காரை நிறுத்தி டிக்கியில், பெட்டி, படுக்கைகளை வைத்துக்கொண்டிருந்தார் தண்டபாணி.

'வணக்கம் முதலாளி. எங்கே பயணம்?'எனக் கேட்டேன்.

அடக்கமான குரலில் "அண்ணா... வீடு, வாசல், தோட்டம், துரவு... எல்லாத்தையும் வித்து கடனை அடைச்சிட்டேன். இப்போ... வெறுங்கையோட மெட்ராஸை விட்டு கிளம்புறேன். என் மாமனார் ஊர்ல குடியேற முடிவு செஞ்சு கிளம்பிக்கிட்டிருக்கேன்" என்றார்.

மகிழ்ச்சியாக அவரைப் பார்க்க வந்த எனக்கு, அதிர்ச்சியாக இருந்தது. அழுகையும் வந்தது. 'எத்தனை பேர்களுக்கு வாழ்வளித்தவர் தேவர். இன்று அவருடைய மகன் அனைத்தையும் இழந்து, அனாதை போல ஊரைவிட்டே கிளம்புகிறாரே...' என என்னால் அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை.



என்னைப் பார்த்த தண்டபாணி... ''முருகன் இருக்காண்ணா... அவன் கைவிட மாட்டான்'' என்றபடி என் கையில் இருந்த கல்யாணப் பத்திரிகையை வாங்கிப் பார்த்தார்.

''நல்லபடியா நடக்கட்டும். என்னால கல்யாணத்துக்கு வரமுடியுமான்னு தெரியல. வர்றதுக்கு முயற்சிக்கிறேன். நான் கிளம்பறேண்ணா'' என கும்பிட்டுவிட்டு காரில் ஏறிக் கிளம்பினார்.

கார் போன திசையையே கலங்கிய கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீடு திரும்பினேன்.

திருமணம் மதுரையில் நடந்தது. கல்யாண மண்டபத்தில் வைத்து என் தம்பி நித்தியானந்தன் என்னிடம் ஒரு கவரைக் கொடுத்தார். அதில் பத்தாயிரம் ரூபாய் இருந்தது. ''ஒரு ஆள் மூலமா தண்டபாணி கொடுத்தனுப்பியிருக்கார்'' என விபரம் சொன்னார் தம்பி.

எனக்கு உடம்பு சிலிர்த்துவிட்டது.

''கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே... சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பது என் நினைவுக்கு வந்தது.

தேவரின் குடும்பம் மறுபடி தொழில் செய்து, உலகறிய புகழுடன் வாழவேண்டும்... என இறைவனை துதிப்பதுடன், இன்றுவரை அதற்கான முயற்சிகளையும் செய்துகொண்டுதான் இருக்கிறேன்.

தம்பி பாக்யராஜுடனான 'இது நம்ம ஆளு', 'எங்க சின்ன ராசா', 'அவசர போலீஸ் 100' அனுபவங்களை ஏற்கனவே சொன்னேனல்லவா? தம்பியின் 14 படங்களுக்கு திரைக்கதை ஒத்துழைப்பு செய்திருக்கிறேன் நான். அவருடனான எனது கலைப்பயணத்தின் ஊடே அவரின் தனிப்பட்ட குண இயல்புகளுடன் கூடிய சில விஷயங்களை உங்களுடன் பகிர விரும்புகிறேன்.

தமிழ் சினிமாவுக்கு வைர சிம்மாசனம் தந்தவர் பாக்யராஜ். வார்த்தை ஜாலங்கள் தெரியாதவர். வஞ்சகம் சூது அவரிடம் இல்லை. 'வெளுத்ததெல்லாம் பால், கருத்ததெல்லாம் டிகாக்ஸன்' என வெள்ளந்தியாக இருப்பவர்.

கோவையிலிருந்து சென்னைக்கு புறப்படும்போதே கோவை ராஜாவுக்கு சினிமா பைத்தியம் செம்மையாகவே பிடித்திருந்தது. தேனாம்பேட்டையில் கலைஞர்கள் தங்கும் விடுதி ஒன்றில் தங்கியபடி, இரவு பகலாக சினிமா வாய்ப்புகளைத் தேடிவந்தார். பசியும், பட்டினியும் அவரை வாட்டி வதைத்த நிலையில், ஒரு கம்பெனியில் கதை சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். உடம்பில் தெம்பில்லாததால் வெறும் காற்று மட்டும்தான்... அதுவும் சத்தமில்லாமல் வந்திருக்கிறது.

இந்நிலையில் ஒருநாள்... எப்படியோ கையில் சிறிது பணம் கிடைத்திருக்கிறது. 'இந்தப் பணத்தை வைத்து இரண்டு நாட்களுக்கு பசி எடுக்காமல் இருக்க என்ன பண்ணலாம்?' என யோசித்தவருக்கு 'வேலு மிலிட்டரி ஹோட்டலும்' அங்கே போடப்படும் அன் லிமிட்டெட் சாப்பாடும் ஞாபகம் வர... சாப்பிடுவதற்குப் போதுமான அந்தப் பணத்துடன் புறப்பட்ட போது... அறையில் ஜன்னலோரம் ஒரு பிராந்திப் பாட்டில். அதில் கையளவுக்கு அதிகமான பிராந்தியும் இருந்திருக்கிறது.

''யாரோ குடிச்சிட்டு, அதுக்கு மேல முடியாம மிச்சத்த வச்சிட்டுப் போயிட்டாங்க போல. பிராந்தியை குடிச்சா... வயிறு 'கபகப'னு வேலை செய்யும். கூடக் கொஞ்சம் சாப்பிடுறதுக்கு வயிறு தாராளமா இடம் கொடுக்கும்னு சொல்லுவாங்களே. முன்னப்பின்ன குடிச்சதில்ல இருந்தாலும் இதக் குடிச்சுப்பாப்போம்' என பிராந்தியை குடித்துவிட்டார்.

ஹோட்டலில் சப்ளையர் பிரமிக்கிற அளவுக்கு.... சப்ளை பண்ணி சலிக்கிற அளவுக்கு... வயிறு முட்ட சாப்பிட்டிருக்கிறார். அவர் சும்மா இருந்தாலும் உள்ள போன பிராந்தி சும்மா இருக்காதே... சாப்பாட்டுக்கான ரூபாயை எடுத்துக் கொடுக்கும்போது 'இது ரொம்ப நல்ல ரூபா நோட்டு தெரியுமா?'

என கேட்க... 'தெரியும் சார்' என சப்ளையர் சொல்ல... வீரப்பா பாணியில் ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, 'இந்த கோவை ராஜா ரொம்ப நல்லவன் தெரியுமா?' எனக் கேட்க... 'நீங்க சிரிக்கிறதப் பார்த்தாலே தெரியுது. முதல்ல வழிய விடுங்க சார்' என கடிந்திருக்கிறார் சப்ளையர். இதனால் கோபமாகி 'நாளைலருந்து உன் ஹோட்டலுக்கு சாப்பிட வரமாட்டேன்' என்க... 'வராம இருக்கிறதுதான் நல்லது' என பதிலுக்குச் சொல்ல... புலம்பியபடியே விடுதிக்குத் திரும்பினார்.

அங்கே....

சினிமா எழுத்தாளர் தூயவன் மதம் பிடித்த யானைபோல் பிளிறிக்கொண்டிருக்கிறார்.

'என் பிராந்திய குடிச்ச அயோக்கியன் யார்? அத நம்பித்தானய்யா ஓடோடி வந்தேன்' என எதிர் அறையில் இருந்தவரிடம் சண்டை கட்ட... ''என்னை ஏன் முறைக்கிறீங்க. அதோ நிக்கிறாப்லயே... கோவை ராஜா. அவரு குடிக்கிறதை என் கண்ணால பார்த்தேன்'' என்று சொல்ல... ஃபுல் மீல்ஸ் சாப்பிட்ட பாக்யராஜிற்கு புஸ்ஸுனு ஆகிப்போச்சு. முட்ட முட்ட சாப்பிட்ட வயிறு இப்போ ஒட்ட ஒட்ட ஆகிவிட்டது. 'சார் மன்னிச்சிடுங்க. குடிக்க முடியாம யாரோ மிச்சத்தை வச்சிட்டாங்கனு நினைச்சு... நிறைய சாப்பிடணும்கிறதுக்கா குடிச்சிட்டேன்' என பாக்யராஜ் சொல்லியிருக்கிறார்.

'அகோர பசியா? அடப்பாவி... பசி வந்தா பத்தும் பறந்துபோகும்னு சொல்வாங்க. உன் பசியில என் பிராந்தியே பறந்திருச்சேப்பா... பாவி' என புலம்பியபடி தூயவன் போய்விட்டார்.

'பேய் பசியும், வறுமையும் பிராந்தி குடிக்க வச்சிருச்சே... அறிவை தொலைச்சிட்டோமே...' என வருந்தியபடி படுத்துவிட்டார் பாக்யராஜ்.

மறுநாள்... என்னைச் சந்தித்த தூயவன், 'உமக்கு ஒரு நல்ல அஸிஸ்டெண்ட் அனுப்புறேன்வோய். எந்த கெட்ட பழக்கமுமில்லாத சுத்தமான மனுஷன்' என கேலிச் சிரிப்புடன் சொன்னார்.

அதன்படியே மறுநாள் பாக்யராஜ் என்னிடம் உதவியாளராகச் சேர்ந்தார்.

சுமார் இரண்டு மாத காலம் எனது உதவியாளராகப் பணியாற்றியவருக்கு என் பாணி கதைகள் பிடிக்கவில்லை.

அதன்பின் டைரக்டரும், தயாரிப்பாளருமான ஜி.ராமகிருஷ்ணனிடம் சேர்ந்துவிட்டார்.

'ஏழை பணக்காரன்' என்ற படம் தொடங்கப்பட்டது.

முதல்நாள் படப்பிடிப்பு.

ஷூட்டிங் ஸ்பாட்டில் டைரக்டர் ராமகிருஷ்ணனே 'சைலன்ஸ்...' 'சைலன்ஸ்' என குரல் கொடுத்து வந்தார். ஒரு கட்டத்தில் தொண்டைத்தண்ணி வத்திப்போய்... "ஏம்ப்பா... நானே கத்திக்கிட்டிருக்கேனே... உனக்குப் புரியலையா? 'சைலன்ஸ்'னு நீ சொன்னா என்ன? இப்படி இருந்தா நீ என்னைக்கு டைரக்டராகிறது?"என கேட்டுவிட்டார்.

சிறிது நேரத்திற்குப் பின் 'சைலன்ஸ்' சொல்ல வேண்டி வந்தது. தன் உயிரையே மொத்தமாக திரட்டி பலம்கொண்ட மட்டும் 'சைலன்ஸ்' என பாக்யராஜ் கத்த...

மறுநாள் ஃபைனான்ஸ் இல்லாமல் படப்பிடிப்பு நின்றுவிட்டது. கம்பெனியே 'சைலண்ட்' ஆகிவிட்டது.

மறுநாள்...

'பதினாறு வயதினிலே' படத்துக்கு அஸிஸ்டெண்ட்டாக பாரதிராஜாவிடம் அழைத்துச் சென்றார் அஸோஸியேட் டைரக்டர் பாலகுரு. கலைமணி எழுதும் வசனத்தை காப்பி எடுத்து எழுதும் வேலையை பாக்யராஜிற்கு கொடுத்தார் பாரதிராஜா.

அப்படி காப்பி எடுத்து எழுதும்போது, 'இந்த இடத்தில் வசனம் இப்படி இருந்தா நல்லா இருக்கும்' என தனக்குத் தோன்றியதை தனியாக எழுதி பாரதிராஜாவிடம் காட்டினார்.

'நல்லாருக்கே' என பாராட்டிய பாரதிராஜா, மேலும் சில ஸீன்களுக்கு எழுதச் சொன்னார்.

இப்படி பாரதிராஜாவிடம் அபிமானம் பெற்று... குருவின் "புதிய வார்ப்புகள்"படத்தில் ஹீரோவுமானார் பாக்யராஜ்.

கதாசிரியர், திரைக்கதை எழுத்தாளர், வசனகர்த்தா, டைரக்டர், நடிகர்... என பல தளங்களில் பிஸியாக வலம் வந்த பாக்யராஜ் ஏகப்பட்ட சொத்து சேர்த்திருக்க வேண்டுமே...

இல்லை.

ஏன்?

# தர்ம சிந்தனை!

கதாசிரியர், திரைக்கதை எழுத்தாளர், வசனகர்த்தா, நடிகர், இயக்குநர் என சினிமாவின் பல தளங்களில் வெற்றிகரமாக திகழ்ந்த பாக்யராஜ் பெரிய அளவில் சொத்து சேர்த்திருப்பாரே... என நினைத்தால்... இல்லை.

ஏன்?

தனக்கிருந்த செல்வாக்கை வைத்து தம்பி பாக்யராஜ் தன்னை மட்டும் வளர்த்துக்கொள்ள ஆசைப்படவில்லை. நஷ்டப்பட்ட தயாரிப்பாளர் களுக்கும், கஷ்டப்பட்ட தயாரிப்பாளர்களுக்கும் படம் எடுத்துக் கொடுப்பதிலேயே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

தன் குருநாதர் பாரதிராஜாவிற்கு நன்றிக்கடனாக 'ஒரு கைதியின் டைரி' படத்திற்கு கதை-வசனம் எழுதிக்கொடுத்தார்.

பாரதிராஜாவிடம் தன்னை உதவியாளராக சேர்த்து விட்டதற்கு நன்றியாக டைரக்டர் பாலகுருவையும், நஷ்டத்தில் தவித்த தயாரிப்பாளர் ஹேம்நாத் நாக்பாலையும் 'ஆராரோ ஆரிரரோ' படத்தில் பார்ட்னர்களாக்கினார்.

'ஏழைபணக்காரன்' படத்தில் ஒரே ஒருநாள் உதவி இயக்குநராக பணிபுரிய வாய்ப்பளித்து 'சைலன்ஸ்' சொல்ல வைத்த டைரக்டர் ஜி.ராமகிருஷ்ணனை 'பொய் சாட்சி' படத்தின் தயாரிப்பாளராக்கினார். (சிறு லாபம் கருதி அந்தப்படத்தை திருமால் என்பவருக்கு கைமாற்றிவிட்டார் ராமகிருஷ்ணன்)



இரண்டு மாதம் என்னிடம் உதவியாளராக பணியாற்றி... என் வீட்டில் ஒருவேளை சாப்பிட்ட நன்றிக்காக என்னை 'இது நம்ம ஆளு' படத்தில் பார்ட்னராக்கினார். என் மகன் முருகனையும், காஸ்ட்யூமர் கண்ணனையும் 'அம்மா வந்தாச்சு' படத்தின் பார்ட்னர்களாக்கினார்.

'சுவரில்லாத சித்திரங்கள்' படம் மூலம் தனக்கு முதன்முதலாக டைரக்ஸன் வாய்ப்பளித்த தயாரிப்பாளர் கோபிநாத்திற்கு (பிரபல தயாரிப்பாளர் கே.ஆர்.ஜி.யின் அண்ணன்) 'மௌன கீதங்கள்' 'ஞானப்பழம்' படங்களை எடுத்துக் கொடுத்ததோடு, 'இது நம்ம ஆளு' படத்திலும் அவரை பார்ட்னராக்கினார்.

கண்ணதாசனின் அண்ணன் ஏ.எல்.எஸ்.ஸின் தயாரிப்பு நிறுவனத்தில் கணக்குப்பிள்ளைகளாக இருந்த நாச்சியப்பன் மற்றும் ஜெயராம் அய்யர் ஆகிய இருவருக்காகவும் 'அந்த ஏழு நாட்கள்' படம் எடுத்துக்கொடுத்தார்.

புரொடக்ஸன் மேனேஜராக இருந்த சண்முகராஜாவுக்கு 'டார்லிங் டார்லிங்' படம் எடுத்துக் கொடுத்தார்.

தனது காஸ்ட்யூமர் கண்ணனுக்கு 'சின்ன வீடு' படம் எடுத்துக் கொடுத்தார்.

எம்.ஜி.ஆர் கேட்டுக்கொண்டதால் துரைச்சாமிக்கு 'அண்ணா நீ என் தெய்வம்' படத்தை 'அவசர போலீஸ் 100' படமாக மாற்றி எடுத்துக் கொடுத்தார்.

கதாசிரியர் தூயவனுக்கு 'விடியும் வரை காத்திரு' படம் எடுத்துக் கொடுத்தார்.

எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் விஸ்வநாதனுக்கு 'ருத்ரா' படம் எடுத்துக் கொடுத்தார்.

பாடலாசிரியர் சூலூர் கலைப்பித்தனுக்கு 'சாட்டை இல்லாத பம்பரம்' படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதிக் கொடுத்தார்.

தன்னுடன் இருந்த நண்பர் பழனிச்சாமிக்காக 'வீட்ல விசேஷங்க' படத்தை எடுத்துக் கொடுத்தார். அதே பழனிச்சாமி தயாரித்த 'ஆயுத பூஜை' படத்திற்கு தன் உதவியாளர் சிவக்குமாரை டைரக்டராக்கி, கதை, வசனமும் எழுதிக்கொடுத்தார்.

கோவை காய்கறி வியாபாரி சி.எம்.நாச்சியப்பனுக்காக 'தூறல் நின்னு போச்சு' படம் எடுத்துக் கொடுத்தார்.

'பதினாறு வயதினிலே' படத்தில் பாரதிராஜாவின் உதவியாளராக வேலை செய்ய அனுமதித்த தயாரிப்பாளர் எஸ்.ஏ.ராஜ்கண்ணுவுக்கு 'எங்க சின்ன ராசா' படம் எடுத்துக் கொடுத்தார்.

கேமராமேன் ஏக்நாத்திற்கு 'பவுனு பவுனுதான்' படம் எடுத்துக்கொடுத்தார்.

டைரக்டர் 'பசி' துரைக்கு 'சுந்தர காண்டம்' படம் எடுத்துக்கொடுத்தார்.

இப்படி நலிந்தவர்களுக்கும், தனக்கு சிறு உதவி செய்தவர்களுக்கும் படம் பண்ணித் தந்தார் பாக்யராஜ்.

விதிவிலக்காக... ஏவி.எம்.சரவணனுக்கு 'முந்தானை முடிச்சு' படம் எடுத்துக் கொடுத்தார்.

ஏ.வி.எம். மிகப்பெரிய ஸ்தாபனம் என்பதைத் தாண்டி... தன்னைப்போன்ற பல டெக்னீஷியன்களை ஏவி.எம். உருவாக்கியது. அங்கே ஊழியம் செய்த பல தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து வாழ்வளித்த பெருந்தன்மைக்காகவும், ஏவி.எம்.மின் உயர்ந்த உள்ளங்களுக்காகவும் அந்நிறுவனத்திற்கு படம் செய்து கொடுத்தார்.

சிவாஜியை வைத்து 'எங்க ஊர் ராஜா', 'பட்டிக்காடா பட்டணமா', 'தங்கப் பதக்கம்' என பட்டிதொட்டியெல்லாம் சாதனை படைத்த படங்களைத் தந்தவர் டைரக்டர் பி.மாதவன். தொடர்ந்து சொந்தமாக படங்களைத் தயாரித்து, இயக்கி சம்பாதித்ததையும் விட்டுவிட்டார். மாதவன் இயக்கித் தயாரித்த 'சின்னக் குயில் பாடுது' படம் வியாபாரம் ஆவதில் மந்தநிலை ஏற்பட்டது.

'பாக்யராஜ்கிட்ட ரெண்டுநாள் கால்ஷீட் வாங்கி நடிக்க வச்சீங்கன்னா படம் பிசினஸ் ஆயிடும்' என விநியோகஸ்தர்கள் சொல்ல... பாக்யராஜை சந்தித்துப் பேசினார் மாதவன்.

'எவ்வளவு பெரிய மலை மாதிரியான டைரக்டர், நம்மகிட்ட கேட்கிறாரே' என வியந்து நெகிழ்ந்த பாக்யராஜ், "சார்... ரெண்டுநாள் போதுமா? கூடவேணும்னாலும் தர்றேன். ஆனா ஒரு கண்டிஷன். எனக்காக நீங்க எதுவுமே செலவு பண்ணக்கூடாது. காஸ்ட்யூமிலிருந்து, மேக்-அப் வரை நானே பார்த்துக்கிறேன். ஷூட்டிங்கிற்கு என் காரிலேயே வந்து நடிச்சுத் தர்றேன். நீங்க நல்லா இருக்கணும் சார்" எனச் சொன்னார்.

பாக்யராஜின் கைகளைப் பற்றி கண் கசிந்தார் மாதவன்.

சில நாட்களில்... ஒரு ஏரியா விநியோகஸ்தர், மாதவனுடன் பாக்யராஜின் ஆபீஸிற்கு வந்தார்.

"சார்... நீங்க கெஸ்ட்டா நடிக்கிறதால படம் நல்லா போகும். எனக்கும் லாபம் வரும். என் ஏரியா உரிமைக்கான முழுப்பணத்தையும் ஒங்க கைல கொடுக்கிறேன். நீங்க கிழக்குப் பக்கமா திரும்பி நின்னு பணத்தை மாதவன் சார் கைல கொடுங்க. உங்க கைராசியை நம்புறேன்" என்றார்.

அதன்படியே செய்தார் பாக்யராஜ்.

'சின்னக் குயில் பாடுது' படம் ரிலீஸானது. எதிர்பார்த்த அளவு போகவில்லை. அதிலும் அந்த குறிப்பிட்ட விநியோகஸ்தருக்கு சுத்தமாக நஷ்டம். உடனே பாக்யராஜை வந்து பார்த்தார். "உங்களையும், உங்க கைராசியையும் நம்பித்தான் ரெண்டரை லட்சம் பணம் போட்டேன். அதை நீங்க திருப்பிக் கொடுங்க. அப்பத்தான் என் குடும்பம் வாழமுடியும்" எனச் சொல்லி முழுப் பணத்தையும் வாங்கிக்கொண்டார்.

'ஒங்கள கிழக்க பார்த்து நிக்கச் சொல்லி, ஒங்க கையால மாதவனுக்கு பணம் கொடுக்க வச்சிட்டு... இப்போ அந்தாளு கிழக்க பார்த்து நின்னு

பணத்தை வாங்கிட்டுப் போறாரு. இதுதான் தம்பி காலத்தின் கொடுமை' என்று சிரித்தேன். பாக்யராஜும் சிரித்துவிட்டார்.

'அண்ணே... இப்ப நீங்க மாதவன் சாரைப் பார்த்து, அந்த விநியோகஸ்தருக்கு நான் முழுப்பணமும் கொடுத்திட்ட விஷயத்தை சொல்லீடுங்க. இல்லேன்னா... வட்டி அது, இதுனு தொல்லை கொடுப்பார் அந்த விநியோகஸ்தர்' எனச் சொல்ல...

உடனே நான் மாதவனைச் சந்தித்து நடந்த விஷயங்களைச் சொன்னேன்.

''எனக்கு சல்லிக்காசு வாங்காம உதவி செய்ய வந்தவருக்கு, இப்படி ஒரு பெரிய இழப்பு ஏற்பட நான் காரணமாகிட் டேனே'' என வேதனைப்பட்டார்.

''நீங்க வேதனைப்படக்கூடாதுனுதான் தம்பி என்னை அனுப்பிவச்சது'' என்றேன்.

''இப்படிப்பட்ட பெரிய மனசுள்ள மனுஷனுக்கு நான் ஏதாவது கைமாறு செய்யாதவரை எனக்கு நிம்மதி இல்லையே'' என்றார்.

''சார்... நீங்க தப்பா நினைக்கலேனா ஒரு விஷயம்...''

''சொல்லுங்க கலைஞானம்''

''அவருக்கு ஏதாவது செய்தே ஆகணும்னு நீங்க ஃபீல் பண்றதால சொல்றேன். கே.ஆர்.விஜயா தோட்டத்துக்கு பக்கத்துல உங்களுக்கு சொந்தமான இடம் கொஞ்சம், பயன்பாட்டுல இல்லாம இருக்குனு கேள்விப்பட்டேன். அது ஒரு லட்சம் பெறுமா?''

''அவ்வளவுதான் பெறும்''

''அவர் கொடுத்த ரெண்டரை லட்சத்துக்கு அந்த இடத்தை அவருக்கு கொடுத்திடுங்க. அப்படிச் செஞ்சிட்டா, ஒங்க ரெண்டுபேர் மனசிலயும் ஒரு திருப்தி ஏற்படும். ஒருவரை ஒருவர் எந்தக் காலத்திலும் மகிழ்ச்சியோட சந்திச்சுக்கலாம்.''

நான் சொன்னதும் எழுந்து நின்ற மாதவன் ''அருமையான யோசனை சொன்னீங்க. உடனே செஞ்சு முடிக்கிறேன்'' என்றார்.

சொன்னபடி ஒரே வாரத்தில் அந்த இடத்தை பாக்யராஜ் பெயருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டார் மாதவன்.

அப்போதும், இப்போதும் இப்படி தர்ம சிந்தனை இருப்பதால்தான் தம்பி பாக்யராஜ் பணத்தைச் சேர்க்கத் தவறிவிட்டார்.

# சூப்பர் ஸ்டார் சம்மதம்!

'ஒரு கைதியின் டைரி' படத்திற்கு கதை வசனம் எழுதியிருந்த பாக்யராஜ் அந்தக் கதையை 'ஆக்ரி ரஸ்தா' என்ற பெயரில் இந்தியில் இயக்கினார். ஹீரோ அமிதாப் பச்சன்.
படப்பிடிப்பின்போது... ஒரு காட்சியில் தொடர்ந்து சுமார் ஐந்து நிமிடங்கள் அமிதாப் ஆங்கிலத்தில் வசனம் பேசுவது போல அமைத்த பாக்யராஜ் அதற்கான வசனத்தையும் எழுதிக்கொடுத்தார். ஆனால் அமிதாப் அந்த ஆங்கில வசனத்தைப் பேச மறுத்தார்.

"இந்த வசனத்தை நீங்கள் பேசினால் அது... காட்சிக்கு வலுவாக இருக்கும்" என பாக்யராஜ் சொன்னார்.

"என்னோட ரசிகர்கள் நான் இங்கிலீஷில் பேசுவதை ஏத்துக்கமாட்டாங்க. என் ரசிகர்களைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்" என உறுதிபடத் தெரிவித்துவிட் டார் அமிதாப்.

இதனால் இருவருக்கும் இடையே மனக்கசப்பு. இருப்பினும் அமிதாப்பை தனிமையில் சந்தித்து சில விளக்கங்களைக் கொடுத்தார் பாக்யராஜ்.

"சார்... நான் ஒரு எழுத்தாளன்ங்கிற முறையில் கேட்கிறேன். எனக்காக, என் ஆசைக்காக அந்த இங்கிலீஷ் டயலாக்கை நீங்க பேசணும். அத படமாக்கலாம். உங்க விருப்பப்படி அதே வசனத்தை நீங்க இந்தியிலும் பேசுங்க. அதையும் படமாக்கலாம். முதல்ல இங்கிலீஷ் வசனத்தோட படத்தை ரிலீஸ் செய்வோம். ரசிகர்கள் ஏத்துக்கலைன்னா... நைட்டோட நைட்டா இங்கிலீஷ் டயலாக் ஸீனை நீக்கிட்டு, இந்தி டயலாக் ஸீனை சேர்த்துவிடலாம். இதுக்கான செலவை நானே ஏத்துக்கிறேன்" என கெஞ்சிக் கேட்டார் பாக்யராஜ்.



மனப்பூர்வமாக சம்மதிக்காவிட்டாலும், விருப்பமின்றி சம்மதித்தார் அமிதாப்.

அமிதாப் ஆங்கிலத்தில் வசனம் பேசும் காட்சிகளுடன் படம் வெளியானது.

எல்லா ஊரிலும் தியேட்டரே இடிந்து விழுகிற அளவுக்கு அமிதாப்பின் ஆங்கில வசனங்களுக்கு கைதட்டலும், கரகோஷமும், விசிலும் வந்தது ரசிகர்களிடமிருந்து.

பாலிவுட் திரைக்கதை மன்னர்களான சலீம்-ஜாவித் இருவரும் படம் பார்த்துவிட்டு பாக்யராஜை தேடிப் பிடித்து வாழ்த்தினர்.

"இந்தி ஹீரோக்கள் சிலர் வசனம் பேசும் விஷயத்தில் அவர்கள் பாணியிலேயே பிடிவாதமாக இருப்பார்கள். அதே பாணிக்கே எங்களையும் இழுத்துவிடுவார்கள். அதிலும் அமிதாப் ஒருமுறை மறுத்தால் மறுத்ததுதான். மறுபரிசீலனையெல்லாம் கிடையாது. நாங்கள் கஜகர்ணம் அடித்தாலும் ஒப்புக்கமாட்டார். அப்படிப்பட்ட சூப்பர்ஸ்டார் பேச மறுத்த வசனத்தையும் விடாப்பிடியாக பேசவைத்து, பெரிய சக்ஸஸும் பண்ணீட்டீங்க. சக எழுத்தாளர்கள் என்ற முறையில் உங்களுக்கு எங்களோட மனப்பூர்வமான வாழ்த்துகள்" என பாக்யராஜின் கைகளைப் பிடித்து இருவரும் முத்தமிட்டனர்.

தன் கணிப்புக்கு நேர்மாறாக, தான் ஆங்கிலத்தில் பேசியதை ரசிகர்கள் மிக உற்சாகமாக வரவேற்பதைப் பார்த்த அமிதாப், தொடர்ந்து பலமுறை

பாக்யராஜைப் பாராட்டினார்.

'ஆக்ரி ரஸ்தா' படத்தின் இமாலய வெற்றியால் தம்பி பாக்யராஜைத் தேடி மேலும் பல இந்திப்பட வாய்ப்புகள் வந்தன. ஆனால் பாக்யராஜ் அந்த வாய்ப்புகளை ஏற்கவில்லை.

தமிழ் சினிமாவின் ஜாம்பவான்களான 'ஜெமினி' எஸ்.எஸ்.வாசன், சின்னப்பதேவர் ஆகிய இருவரும் இந்திப் பட மார்க்கெட்டிலும் கொடிகட்டி தமிழர்களுக்கு பெருமை சேர்த்தார்கள். ஒரு தமிழ்க் கலைஞனாக இந்தியில் பதிவைச் செய்யவேண்டும் என்கிற விருப்பம் நிறைவேறியதால் தொடர்ந்து இந்திப்படங்களை பாக்யராஜ் இயக்கவில்லை.

பிரபல நடிகரும், தயாரிப்பாளருமான பாலாஜி தயாரித்த 'விதி' படத்தில் பாக்யராஜ் ஒரு கெஸ்ட் ரோலில் நடித்திருந்தார். அந்த கேரக்டர் அந்தப் படத்தின் வெற்றிக்கு வலுவாக இருந்தது என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. இந்த கேரக்டரில் நடிக்க பாக்யராஜ் சம்மதித்ததற்கு காரணம்... தேவரைப் போல தொழிலாளர்களுக்கும், நட்சத்திரங்களுக்கும் உதவக்கூடியவர் பாலாஜி. அதனால்தான் ஒருநாள் கால்ஷீட் கொடுத்து நடித்தார்.

இதற்காக பாக்யராஜிற்கு பெரிய சம்பளம் ஒன்றை தரவிரும்பினார் பாலாஜி.

"படம் வெளியான பிறகு பார்த்துக்கலாம் சார்" என பாக்யராஜ் சொல்லிவிட...

படம் வெளியாகி, மாபெரும் வெற்றியடைந்த நிலையில் 'இப்பவாவது உங்களுக்கான சம்பளத்தை வாங்கிக்கங்க' என பாலாஜி வற்புறுத்த...

"எனக்கு ரெண்டு சட்டை. என் அஸிஸ்டெண்டுக்கு ரெண்டு சட்டை எடுத்துக் கொடுங்க போதும்" எனச் சொல்லிவிட்டார்.

இப்படி உயிருக்குயிராக பழகிய பாக்யராஜ்-பாலாஜி இடையே 'ரத்தத்தின் ரத்தமே' படத்தால் கடும் மோதல் வந்தது ஏன்?

ஒருநாள்... தம்பி பாக்யராஜைச் சந்தித்த பாலாஜி "உங்களை ஹீரோவா வச்சு படம் எடுக்க விரும்புறேன். இந்தியில் வந்த 'மிஸ்டர் இந்தியா' படத்தை தமிழில் எடுக்கலாம்" எனச் சொல்லி படத்தையும் போட்டுக் காட்டினார்.

அனில்கபூர், ஸ்ரீதேவி நடித்த படம். தன் தம்பி அனில்கபூருக்கு ஒரு ஹிட் படம் அமையணும்னு 300 நாட்கள் ஷூட்டிங் நடத்தி 200 ஃபிலிம் ரோல்களை எக்ஸ்போஸ்பண்ணி மிகப்பெரிய செலவில் அந்தப் படத்தை தயாரித்திருந்தார் போனிகபூர்.

படம் பார்த்த பாக்யராஜ் "இது ரொம்ப நல்ல படம், நல்லா ஓடின படம். ஆனா... அதே மாதிரி டிரிக் ஷாட் வச்சு தமிழ்ல எடுக்கணும்னா பெரிய செலவாகும். அதனால் இந்தப் படத்தை ரீ-மேக் செய்யவேண்டாம் சார்" என்றார் பாக்யராஜ்.

"இந்தப் படத்தில் குழந்தைங்களை கவர்ற அம்சம் இருக்கு. இதையே எடுப்போம். ஆனா நாம அந்த அளவுக்கு செலவு செய்ய வேணாம். இந்தியில் பண்ணிய டிரிக் ஷாட்டை அப்படியே வாங்கி நம்ம படத்துல சேர்த்திடுவோம். அந்தப் படத்தில் கதாநாயகியா நடிச்ச ஸ்ரீதேவியையே தமிழ்லயும் நடிக்கவைக்கலாம்''’என்றார் பாலாஜி.

"ஸ்ரீதேவி நடிக்கிறாங்கன்னா அந்த டிரிக் ஷாட்டை யெல்லாம் அப்படியே வாங்கி நாம் பயன்படுத்தலாம். செலவு மிச்சம். வேலையும் மிச்சம். ஆனா ஸ்ரீதேவி மறுபடி தமிழ்ல நடிக்க வருவாங்களா?" என பாக்யராஜ் கேட்டார்.

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்" என சொல்லிவிட்டுப் போன பாலாஜி... பாம்பே சென்று ஸ்ரீதேவியை சந்தித்துப் பேசினார்.

"நான் இப்போ இந்தியில நல்ல பொஸிஷனில் இருக்கேன். இந்தச் சமயத்தில் நான் தமிழ்ல நடிச்சா 'ஸ்ரீதேவிக்கு இந்தியில் மார்க்கெட் இல்லை'னு பிரச்சாரம் பண்ணுவாங்க. அப்புறம் மறுபடி நான் இந்த பொஸிஸனைப் பிடிக்க கஷ்டமாயிடும்" எனச் சொல்லிவிட்டார்.

"ஸ்ரீதேவி மறுத்திட்டார். அதனால 'இந்த' நடிகையை கதாநாயகியாகப் போடலாம்" என தமிழில் முன்னணியில் இருக்கும் ஒரு கதாநாயகி பெயரைச் சொல்ல... பாக்யராஜும் ஓகே சொல்லிவிட்டார்.

மறுநாள்... கோபத்துடன் வந்த பாலாஜி "நான் ரெகுலர் புரொடியூஸர். என்கிட்ட அவ எப்படி இவ்வளவு லட்சங்கள் சம்பளம் வேணும்னு கூச்சமில்லாம, சங்கோஜமில்லாம கேட்கலாம்? அவளுக்கு நல்லா பாடம் கற்பிக்கிறேன்" என ஆவேசப்பட்டார்.

"விடுங்க சார். நாம வேற பொண்ண பார்க்கலாம் சார்" என பாக்யராஜ் சமாதானப்படுத்தினார்.

''இல்ல... அவ இந்த அளவுக்கு என்கிட்ட பேசிட்டாங்கும் போது... அவளைவிட ரெண்டு மூணு லட்சம் கூட சம்பளம் கொடுத்து இந்தியிலருந்து மீனாட்சி சேஷாத்ரியை புக் பண்ணிட்டு வர்றேன். அப்பத்தான் இந்த நடிகைக்கு புத்தி வரும்''

''யார் மேலயோ இருக்க கோபத்துக்காக நாம ஏன் நஷ்டப்படணும். வேண்டாம் விடுங்க. இங்கயே ஒரு நடிகையை ஓ.கே. பண்ணலாம். பாம்பேலருந்து ஆர்டிஸ்ட்டை கொண்டுவந்தா ஃப்ளைட்ல அவங்க வந்துபோவாங்க. ஸ்டார் ஹோட்டல்லதான் தங்குவாங்க. நாம கொடுக்கிற சாப்பாட்டை சாப்பிடவும் மாட்டாங்க. இப்படி நிறைய செலவு வரும் சார்'' என பாக்யராஜ் சொல்ல... ''அதெல்லாம் பிரச்சினை வராது. கெஸ்ட்ஹவுஸ்ல தங்கிக்குவாங்க'' என பாலாஜியோ பிடிவாதமாக இருந்தார். '

'ரத்தத்தின் ரத்தமே' படத்தின் ஷூட்டிங் தொடங்கு வதற்கு முன்பே சிக்கல்.

''டயலாக் ரைட்டர் சரிப்படல. அதனால் நீங்களே எழுதிடுங்க'' பாக்யராஜிடம் சொல்லிவிட்டார் பாலாஜி.

''சரி... எப்பவும் போல ஷூட்டிங் ஸ்பாட்ல போயி டயலாக் எழுதிக்கலாம்'' என பாக்யராஜ் சம்மதித்தார்.

ஷூட்டிங் தொடங்கியது. டைரக்டர் கே.விஜயனுக்கு உடம்பு முடியாமல் படுத்துவிட்டார். ''அவர் ரெக்கவரி ஆகி வர டைம் ஆகும். அதனால் அவரோட பையன் சுந்தர்.கே. விஜயனை அஸிஸ்டெண்ட்டா வச்சுக்கிட்டு நீங்களே பண்ணிடுங்க'' என்றார் பாலாஜி. வேறு வழியில்லாமல் அதையும் ஏற்றுக்கொண்டார் பாக்யராஜ்.

தொழில்நுட்ப காட்சிகளை விரைவாக எடுக்கக்கூடிய கேமராமேனை ஒப்பந்தம் செய்திருந்தார்கள். ஆனால் அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்துவிட்டது. இதனால் வேறு கேமரா மேனைப் போட்டார் பாலாஜி.

'பிரச்சினைக்கு மேல பிரச்சினையா இருக்கே' என ஃபீல் பண்ணிய பாக்யராஜ் மனதை தேற்றிக் கொண்டு ஷூட்டிங்கை நடத்தினார்.

மூன்றாவது நாள்...

கதாநாயகி மீனாட்சி சேஷாத்ரி செய்த தகராறு.

பாலாஜியின் துப்பாக்கி! பாக்யராஜின் பிடிவாதம்! ரஜினியின் பதட்டம்!

# பஞ்சாயத்துக்கு வந்த ரஜினி!

'ரத்தத்தின் ரத்தமே' படப்பிடிப்பு பல தடைகளைத் தாண்டி நடந்து வந்தது.

முதல் இரண்டு நாட்கள் சும்மா இருந்த கதாநாயகி மீனாட்சி சேஷாத்ரி, மூன்றாம் நாள் படப்பிடிப்பின் போது.... "நான் கெஸ்ட் ஹவுஸிலெல்லாம் தங்க முடியாது. எனக்கு அது சரிப்படலை. ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டுத்தாங்க'' என தகராறு செய்தார். இதனால் ஸ்டார் ஹோட்டலில் ரூம் போட்டுக் கொடுத்தனர். அதன்பிறகு... "நான் மொத்தமா கால்ஷீட் தரமுடியாது. நடுவுல கொஞ்சம் பிரேக் பண்ணி பிரேக் பண்ணித்தான் தருவேன்'' எனச் சொல்லிவிட்டார்.

''அந்த பொண்ணு கால்ஷீட் விஷயத்தில் தகராறு பண்ணுது. அதனால் அவங்க தர்ற கால்ஷீட்டுக்கு ஏத்தமாதிரி நீங்க அட்ஜெஸ்ட் பண்ணி ஷூட்டிங் நடத்துங்க'' என பாக்யராஜிடம் பாலாஜி சொல்ல... அதையும் ஏற்றுக்கொண்டார் பாக்யராஜ்.

''கேமராவில் ட்ரிக் ஷாட் எடுப்பது பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. ஒரு வயர், தானா எழுந்துவந்து அதுவா மூவ் ஆகுதுன்னா... இதை எடுக்கிறதுக்கு நான் எதுக்கு. அதனால் நான் டாக்கி போர்ஷன் ஷூட்டிங்கை காலையிலிருந்து, சாயங்காலம் அஞ்சு மணிவரைக்கும் நடத்திக்கிறேன். அதற்குப்பிறகு டிரிக் ஷாட்டுகளை நீங்க எடுத்துக்கங்க'' என கேமராமேனிடமும், டைரக்டர் கே.விஜயனின் மகன் சுந்தர் கே.விஜயனிடமும் சொல்லிவிட்டார் பாக்யராஜ்.



கேமராமேன் புதுசு என்பதால் ட்ரிக் ஷாட்டுகளை எடுத்து முடிக்க தினமும் லேட் ஆனது. இதனால் டபுள் கால்ஷீட் ஆனது. செலவு கூடிக்கொண்டே வந்தது. பாக்யராஜ் தன்னுடைய வேலைகளை சரியாக செய்துவந்தார். ட்ரிக் ஷாட் விஷயத்தில் பாக்யராஜ் தேவையில்லை என்றாலும் "பாக்யராஜ் இருந்தா வேலை சீக்கிரம் முடியும். அவர் இருக்க மாட்டேங்கிறாரே" என பாலாஜிக்கு வருத்தம்.

படத்தின் எல்லா வேலைகளையும் பாக்யராஜ் மீது சுமத்தினார் பாலாஜி. அதை ஏற்றுக்கொண்ட பாக்யராஜ், நடிப்பதற்குரிய சம்பளத்தை மட்டுமே பேசினார்.

''படத்தோட தெலுங்கு ரைட்ஸ் மட்டும் கொடுத்திடுங்க. வேற எதுவும் வேணாம்'' என பாக்யராஜ் சொல்லிவிட்டார். காரணம்... அப்போது தெலுங்கிலும் பாக்யராஜ் படங்களுக்கு நல்ல மவுசு இருந்தது. இதற்கு பாலாஜியும் ஒப்புக்கொண்டார்.

படத்தின் வசன காட்சிகளுக்கான ட்ராக்கை பாலாஜியிடமிருந்து வாங்கி தெலுங்கு வசனம், பாடல்களை தயார் செய்துகொண்டிருந்தார் பாக்யராஜ்.

''படம் முடியிறதுக்கு நாலைந்து மாதங்களாகும். அதனால் அப்பப்போ நான் கேட்கும் பணத்தை நீங்க எனக்கு கடனா கொடுத்தா போதும். தெலுங்கு ரைட்ஸை விற்றதும் நான் அந்தக் கடனை திருப்பித் தந்திடுறேன்'''எனச் சொல்லி எட்டு லட்ச ரூபாயை அவ்வப்போது கடனாக வாங்கினார் பாக்யராஜ்.

படத்தின் ஃபர்ஸ்ட் காப்பி ரெடி பண்ணி பாலாஜியிடம் கொடுத்தார்.

''ஃபர்ஸ்ட் காப்பி பாத்துட்டீங்கன்னா திருப்பி அனுப்புங்க. அதில் சென்ஸார் அப்ஜெக்ஷன் பண்றமாதிரி காட்சிகள் இருந்தா அதை முன்கூட்டியே நீக்கிட்டு, சென்ஸாருக்கு அனுப்பலாம்'' என பாக்யராஜ் சொல்லியனுப்பினார். ஆனால் பிரிண்ட்டை பாலாஜி திருப்பியனுப்பவில்லை. பாக்யராஜிற்கு விஷயம் புரிந்துபோனது.

''படத்தை முழுவதும் முடித்துக் கொடுத்த பிறகு நம்மள கழட்டி விட்டுட்டு அவங்களே படத்தை ரிலீஸ்பண்ண திட்டமிடுறாங்களே''என ஃபீல் பண்ணியவர்... அதையும் பெருந்தன்மையாக விட்டுவிட்டார்.

ஆனால்....

''பாக்யராஜ் என்னிடம் எட்டு லட்சம் வாங்கிக்கிட்டார். பாக்கி சம்பளத்தை பிளாக் மணியில கொடுத்திட்டோம். ஆனா... எங்களுக்குத் தெரியாமலே படத்தை தெலுங்கில் விற்க பாக்யராஜ் முயற்சி பண்றார்'' என பாலாஜி புகார் தெரிவித்தார்.

''பாக்யராஜ் சம்பளத்தை முழுசா வாங்கிக்கிட்டு பிரச்சினை பண்றார்னுதானே சினிமா வட்டாரத்தில் நினைப்பாங்க. நமக்குரிய சம்பளமான தெலுங்கு ரைட்ஸையும் இப்போ தர மறுக்கிறாங்களே... சீச்சீ... இந்தப் பழம் புளிக்கும்'' என்பதுபோல நொந்துபோனார் பாக்யராஜ். ஆனாலும் கடனாக வாங்கிய எட்டு லட்சத்தை சம்பளம் என்றும், பாக்கி சம்பளத்தை கருப்பு பணமாக வாங்கிக்கொண்டதாகவும்,

தன் மீது அபாண்டமாக சொன்ன குற்றச்சாட்டை பாக்யராஜால் தாங்க முடியவில்லை.

பஞ்சாயத்தானது. ஏ.வி.எம்.சரவணன், ரஜினி ஆகியோர் "பிரச்சினையை பேசித் தீர்க்கலாம்" என கூப்பிட்டபோது 'அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்' என பாலாஜி சொல்லி விட்டார்.

ஃபிலிம் சேம்பரில் பாக்யராஜ் கேட்டபோது, 'பாலாஜி எதுக்கும் கட்டுப்பட மாட்டாரு. இந்தப் பிரச்சினையை நீங்க எப்படி பண்ணணும்னு நினைக்கிறீங்களோ... அப்படி பண்ணிக்கங்க' என கை விரித்துவிட்டனர்.

ஃபெப்சி தலைவர் மோகன்காந்திராமிடம் புகார் கொடுத்தார் பாக்யராஜ்.

பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது பாலாஜி வரவில்லை. இதனால் படத்தின் இறுதிக்கட்ட வேலைகளை தடுத்து நிறுத்தியது ஃபெப்சி. இதனால் பாலாஜி போலீஸில் சொல்ல... மோகன் காந்திராமை அடித்து, கைது செய்தது போலீஸ். உடனே ஃபெப்சி ஸ்டிரைக் அறிவித்தது. சினிமா படப் பிடிப்புகள் ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட்டன. பாலாஜியின் வாகனம் மீது கல்வீசித் தாக்கியதுடன், அவருக்கு சொந்தமான யூனிட் பொருட்களையும் சேதப்படுத்தினார்கள். பிரச்சினை ரொம்ப பெரிதானதும்... ஏவி.எம்.சரவணனும், ரஜினியும் பாக்யராஜிடம் வந்து பேசினார்கள்.

"சார்... நான் எந்தப் பிரச்சினையும் பண்ணல. "எனக்கு நஷ்டமாயிருச்சு. அதனால் சம்பளத்தை விட்டுக்கொடு'ன்னா நான் தாராளமா விட்டுக் கொடுத்திடுறேன். 'பாக்யராஜுக்கு சம்பளமா படத்தோட தெலுங்கு ரைட்ஸை நான் தருவதா சொன்னேன். பாக்யராஜுக்கு நான் எட்டு லட்சரூபாய் கடனாத்தான் கொடுத்தேன்'ங்கிற உண்மையை பாலாஜி சொல்லிட்டா போதும் எனக்கு. என் படங்களோட தெலுங்கு ரைட்ஸ் 25 லட்சரூபாய்க்கு போகும். அதை நான் மனப்பூர்வமா விட்டுத் தந்திடுறேன்" என அவர்களிடம் பாக்யராஜ் சொல்லியனுப்பினார்.

ஆனால் பாலாஜியோ "நான் ஒருமுறை சொன்னதை மாத்திச் சொல்லமாட்டேன்" எனச் சொல்லிவிட்டார்.

"கலைஞானம் அண்ணே... என்னை என்ன வேணாலும் விமர்சனம் பண்ணலாம். அதை ஏத்துக்குவேன். ஆனா... 'பாக்யராஜ் சீட்டிங் பண்ணீட்டான்'ங்கிற அவப்பெயரை நான் எப்படி ஏத்துக்க முடியும்?" என என்னிடம் பாக்யராஜ் நியாயமான தன் மன உணர்வுகளை சொன்னார்.

பாக்யராஜ்-பாலாஜி மோதல் மேலும் மேலும் தீவிரமடைந்த நிலையில்...

மீண்டும் பாக்யராஜை சந்தித்துப் பேசினார் ரஜினி.

"பாலாஜி விஷயத்தில் நீங்க கொஞ்சம் காம்ப்ரமைஸா போகணும்"

"நான் எந்த தப்பும் பண்ணலையே. உண்மையை அவர் ஒத்துக்கிட்டா, நான் எனக்கு கிடைக்கக்கூடிய 25 லட்ச ரூபாயை விட்டுக் கொடுக்க தயாராத்தானே இருக்கேன். நான் ஏமாத்துக்காரன்னு அவர் சொல்றதை எப்படி ஏத்துக்க முடியும்?"

"இல்லப்பா... ஏதோ நீங்க அட்ஜஸ்ட்பண்ணிப் போங்க"

"அவரு மேல தப்பு... ஆனா நீங்க என்னை அட்ஜஸ்ட்பண்ணி போகச் சொல்றீங்களே?"

"இல்லைங்க... அவரு துப்பாக்கியெல்லாம் வச்சுக்கிட்டு அதைக்காட்டி பேசுறாரு. விபரீதமா எதுவும் நடந்திடக் கூடாதேனுதான் சொல்றேன்"

"என்னை 'விதி' படத்துக்கு புக்பண்ண வரும்போதும், இந்தப் படத்துக்கு புக் பண்ணவரும் போதும் துப்பாகி வச்சிருந்தாரு. இப்போ என் வீட்டு அட்ரஸ் மறந்திட்டார்போல. நீங்க வேணும்னா அவருக்கு என் வீட்டு அட்ரஸை ஞாபகப்படுத்துங்க. என்ன ரஜினி... அவரு துப்பாக்கி வச்சிருக்கறதை என்கிட்ட சொல்லீட்டு இருக்கீங்க"

"இல்லல்ல... அவரு துப்பாக்கிய காட்டி பேசுனதால உங்ககிட்ட சொன்னேன்" எனச் சொன்னார் ரஜினி.

சக கலைஞனுக்கு எந்த பாதிப்பும் வந்துவிடக்கூடாது என்கிற ரஜினியின் நல்ல மனதை புரிந்துகொண்டார் பாக்யராஜ், ஆனாலும் 'தன்னைப் பற்றி அபாண்டமாக பேசியதை பாலாஜி திரும்பப் பெறவேண்டும்'என்பதில் பாக்யராஜ் உறுதியாக இருந்தார்.



இந்நிலையில்...

படத்தின் பிரிண்ட்டுகளை ஃபெப்சியை மீறி இங்கே போடமுடியாது என்பதால்... கேரளாவில் பிரிண்ட்டுகளைப் போட்டு படத்தை ரிலீஸ் செய்துவிட்டார் பாலாஜி.

''பாக்யராஜின் படம் பார்க்கலாம்கிற எதிர்பார்ப்பில் வந்தா... படத்துல அவர் மாயமா மறைஞ்சிடுறாரே... அப்புறம் யாரைப் பார்க்கிறது?''என படத்திற்கு விமர்சனம் வந்தது.

பாக்யராஜ்-பாலாஜி சண்டை உள்ளிட்ட காரணங்களால் படம் ஓடவில்லை.

அப்புறம்தான் பாக்யராஜிற்கு ஒரு உண்மை தெரிய வந்தது.

'ரத்தத்தின் ரத்தமே' படத்தின் மூலப்படமான 'மிஸ்டர் இந்தியா' இந்திப் படத்தின் கதையைக் கேட்டு முதலில் நடிக்க விரும்பியவர் அமிதாப்பச்சன்.

''உன்னைப் பார்க்கத்தான் ரசிகர்கள் வருவாங்க. நீ மாயமா மறையிற மாதிரி காட்சிகள் இருக்கே? இந்தப் படத்தில் நீ நடிச்சா... ரசிகர்கள் எப்படி ரசிப்பாங்க?''னு நண்பர் ஒருவர் கேட்டதால் அந்தப் படத்தில்

நடிக்கும் ஆசையை கைவிட்டார் அமிதாப். அதன்பிறகே அனில்கபூர் நடித்தார்.

"இந்த விஷயம் எனக்கு முன்னமே தெரிஞ்சிருந்தா நான் இந்தக் கதையில் நடிச்சிருக்க மாட்டேனே"'என என்னிடம் ஃபீல் பண்ணினார் பாக்யராஜ்.

பாக்யராஜ்-பாலாஜி... பூர்ணிமா பாக்யராஜால் ஏற்பட்ட சமாதானம்!

# கசப்பு மறைந்தது!

'ரத்தத்தின் ரத்தமே' படத்தால் பாக்யராஜிற்கும், பாலாஜிக்கும் இடையே உண்டான மனக்கசப்பு, படம் வெளியான பிறகும் கூட நீடித்தபடியே இருந்தது. பாக்யராஜின் மனைவி பூர்ணிமா பாக்யராஜால் இந்தக் கசப்பு ஒரு முடிவுக்கு வந்தது.

"பாலாஜி சாரோட மகன் என்னை எங்க பார்த்தாலும் நல்லா பேசுறார். சாரோட மருமகளும் நல்லா பேசுறாங்க. 'வீட்டுக்கு வாங்க'னு அடிக்கடி கூப்பிட்டுக்கிட்டே இருக்காங்க. இன்னும் எதுக்குங்க மனக் கசப்பு?" என பூர்ணிமா கேட்க...

"நாம என்னம்மா பண்றது? தப்பு நம்ம மேல இல்லியே" என்றார் பாக்யராஜ்.'

"தப்பு நம்ம பக்கம் இல்லதான். பாலாஜி சார் வயதான பெரிய மனுஷன். அவர்கிட்ட நாம கொஞ்சம் இறங்கிப்போறது தப்பில்லையே"

"அதான் எல்லாம் முடிஞ்சிருச்சேம்மா. இப்போ நாம இறங்கிப் போய் என்ன ஆகப்போகுது?"

"பாலாஜி சார் டயாலிசிஸ் சிகிச்சை பண்ணிக்கிட்டிருக்காரு. சி.எம்.மேடம் (ஜெயலலிதா) போய் பார்த்திட்டு வந்திருக்காங்க. அவரோட கடைசிகட்டத்துல... நாம ஏன் மனக்கசப்பை வச்சுக்கிட்டு இருக்கணும்?"

"சரிம்மா... நான் என்ன பண்ணணும்னு நீ நினைக்கிற?"

"நீங்க பழைய வருத்தங்களை நினைக்காம, பிரெஸ்டீஜ் பாக்காம, அவரைப் போய்ப் பார்க்கலாமே?"

'சரி... பொண்டாட்டி இவ்வளவு தூரம் சொல்லும்போது கேட்டுக்கலாம்' என நினைத்தவர், "நாம அவரைப் பார்க்கப் போனா... அவரு மரியாதை குடுத்துப் பேசுவாரா?" என கேட்டார்.



"அதெல்லாம் உரிய மரியாதை கிடைக்கும்" என பூர்ணிமா சொல்ல.. பாக்யராஜும் சம்மதித்தார்.

அதன்படி பாக்யராஜும் பூர்ணிமாவும், பாலாஜியின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்து அவருடைய காலில் விழுந்து ஆசி வாங்கினார்கள்.

"பழசையெல்லாம் மறந்துட்டேன் பாக்யராஜ். நீங்க என்னைப் பார்க்க வர்றது தெரிஞ்சதும் நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன்" என பாலாஜி சொல்ல...

"ஏதோ... நடந்தது நடந்துபோச்சு" என பாக்யராஜும் சொல்ல... பாலாஜி இனிப்புக் கொடுக்க, அந்தக் கசப்பு மறைந்தது.

எம்.ஜி.ஆர்., எம்.ஆர்.ராதா மோதலை விடவா ஒன்று கலையுலகில் நடந்துவிடும். ஆனால் அவர்களே பிறகு சமாதானமாகி, நல்ல முறையில் பழகினார்கள்.

தம்பி பாக்யராஜின் கலைப்பயணத்தில் நானும் பல ஆண்டுகள் இணைந்து பயணித்தவன். நண்பர் பாலாஜியையும் எனக்கு 1960-களிலிருந்தே தெரியும். இருவருக்கும் 'ரத்தத்தின் ரத்தமே' படம் சம்பந்தமாக ஏற்பட்ட சம்பவங்களை, கூடயிருந்து பார்த்தவன். 'இப்படி ஆகிக்கிட்டிருக்கே' என மனவேதனையையும் அனுபவித்தவன் நான்.

இன்றளவும்கூட சினிமா வட்டாரங்களில் பாக்யராஜ் -பாலாஜி மோதல் குறித்து செவிவழிக் கதைகளாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான்... உண்மை என்ன என் பதை நான் விலாவாரியாக வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டேன்.

பாக்யராஜிடம் நான் கற்றுக்கொண்டது என்ன?

அவர் பாணி என்ன என்பதை அவரிடமே கற்றுக் கொண்டு, அவருக்குத் தகுந்த மாதிரி ஸீன்கள் சொல்வேன்.

'ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி' படத்தில் பாக்யராஜின் கதா பாத்திரம் ஒரு அப்பாவி. அவன் எங்கே வேலைக்குப் போனாலும் ‘பைத்தியக்காரப் பட்டம்தான் கிடைக்கும். இதனால் அவன் மனம் சோர்ந்துபோகும் நேரங்களில் 'கண்ணா... நீ கவலைப்படாதடா. உன் ஜாதகத்துல ராஜயோகம் இருக்கு. உன்னை ஒரு ராஜகுமாரி காதலிச்சு, உனக்கு மனைவியா வருவா' எனச் சொல்லி பேரனை உற்சாகப்படுத்துவாள் பாட்டி.

இப்படிப் போய்க்கொண்டிருக்கும் நேரத்தில்... ஊட்டியில் ஒரு அரண்மனை பங்களாவில் அவனுக்கு வேலை கிடைக்கிறது. பாட்டியுடன் அங்கே சென்று தங்கி வேலை செய்கிறான். அரண்மனை பங்களாவில் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பும் ராஜகுமாரி (மீனா) அங்குள்ள ஒரு ஊழியரிடம் 'நான் ராஜகுமாரி என்பது யாருக்கும் தெரியக்கூடாது' எனச் சொல்லிவிட்டு வேலைக்காரி வேஷத்தில் பங்களாவிற்கு வருவாள். அவள் ராஜகுமாரி என்பது தெரியாமல் 'என் ஜாதகப்படி ஒரு ராஜகுமாரிதான் எனக்கு மனைவியா வருவா''என அந்த அப்பாவி அடிக்கடி சொல்லுவான். இதை ராஜகுமாரி ரசிப்பாள். ஒரு கட்டத்தில் அவன் மீது ராஜகுமாரிக்கு காதல் வந்துவிடும். இதுதான் கதை.

இதில் முரட்டுக் காளையை அடக்கும் காட்சி ஒன்று உண்டு.

ஊட்டி மைதானத்தில் ஒருவன் முரட்டுக் காளையை அவிழ்த்துவிட்டு ‘இந்தக் காளையை அடக்குபவனுக்கு வெள்ளி கோப்பை பரிசு' என அறிவிப்பான். ஆனால் யாராலும் அந்தக் காளையை அடக்க முடியாது.

அப்போது... அந்த அப்பாவி, துணிச்சலுடன் அந்த மைதானத்துக்கு போவது காட்டப்படும். ‘கட்’ பண்ணினா... பாட்டியிடம் வெள்ளிக் கோப்பையை நீட்டி 'பாட்டி... யாராலும் அடக்கமுடியாத காளையை நான் அடக்கிட்டேன். அதுக்கு இந்த கோப்பை பரிசாக தந்தாங்க' என்பான்.

"ஏண்டா... கண்ணா... நீ எப்படிடா அந்த முரட்டுக் காளைய அடக்கினே?'' என வியப்புடன் கேட்பாள் பாட்டி.

"அது ஒண்ணும் பெரிய காரியமில்லை பாட்டி. கொழுகொழுனு இருந்த ஒரு பசுமாடை இழுத்துக்கிட்டுப் போய் முரட்டுக்காளை முன்னாடி நிறுத்தினேன். அப்படியே மண்டிபோட்டு அடங்கிருச்சு காளை'' என்பான்.

"அதான பாத்தேன். இந்த மாதிரி புத்தியெல்லாம் ஒனக்குத்தாண்டா வரும்'' என்பாள் பாட்டி.

அருவருப்பில்லாத டபுள்மீனிங் கிளுகிளுப்பு என்பது பாக்யராஜின் ஸ்டைல். அதை சொல்லிக் காட்டுவது போல் பாட்டியின் வசனம் இருக்கும்.

"இங்கதான் என்னை எல்லாரும் தப்பா நினைக் கிறீங்க. அந்தப் பசுமாடு போட்ட கன்றுதான் அந்த முரட்டுக்காளை. தாய்ப்பாசத்துல அடங்கிருச்சு பாட்டி'' என பாக்யராஜின் வசனம் அமைந்தது.

தியேட்டர்களிலெல்லாம் இந்த காட்சிக்கு பெருத்த சிரிப்பலை ஏற்பட்டு அடங்க வெகுநேரமாகியது.

இந்த... பசுவை வைத்து காளையை அடக்கும் காட்சி மட்டும் கதை விவாதத்தில் நான் சொன்னது.

இதேபோல 'பவுனு பவுனுதான்' படத்திற்கு காளை மாட்டை வைத்து சென்ட்டிமென்ட்டாக ஒரு ஸீனும் சொன்னேன்.

அவளுக்கு ஐந்து வயது இருக்கும்போது... சிறுவனான தன் மாமனின் மகன் மீது பாசம் வைத்திருப்பாள். ஒருநாள் அந்தச் சிறுவன் காணாமல் போய்விடுவான். இப்போது பருவ மங்கையாகிவிட்ட அவள், தன் மாமன் மகனையே நினைத்து காதலும், கனவுமாக வாழ்ந்துகொண்டிருப்பாள். மாமன் மகனோ ராணுவத்தில் இருப்பான். சக வீரனான பாக்யராஜும் அவனும் தோற்றத்தில் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருப் பார்கள். இதனால் இருவரும் நெருங்கிய நண்பர்களாகி விடுவார்கள். பவுனு பற்றி அடிக்கடி பாக்யராஜிடம் அவன் சொல்வான். ஒருநாள் எதிரி நாட்டுடனான யுத்தத்தில் காயம்பட்டு உயிருக்கு போராடும் அவன் "நண்பா... நான் சாகப்போறேன். நான் செத்தது தெரிஞ்சா பவுனும் உயிரை விட்டுடுவா. அதனால் நீ என்னைப்போல் மாறி கிராமத்திற்குச் சென்று பவுனை கல்யாணம் செய்துகொண்டு வாழணும். அப்பதான் என் ஆத்மா சாந்தியடையும்'' எனச் சொல்லிவிட்டு இறந்துவிடுவான்.

பாக்யராஜ் கிராமத்திற்கு வந்து பவுனுவின் மாமன் மகனாகவே மாறிவிடுவார். பவுனும் சந்தோஷத்தில் தலைகால் புரியாமல் குஷியாகிவிடுவாள். பாக்யராஜிற்கோ பவுனுவை பிடித்துப்போகும். இருப்பினும் 'நான் உன் மாமன் மகன் இல்லை' என்கிற உண்மையை சொல்லிவிட நினைப்பார். அதற்கான சந்தர்ப்பம் அமையாது. சொல்வதற்கு தயாரானாலும் அது தட்டிப்போகும். ஒருநாள் ''மாமா நீ என் பெயரை உன் நெஞ்சில் பச்சை குத்திக்கோ''என்பாள். ‘மறுப்பார். ஆனால் விடாப்பிடியாக ‘என் பேரு உன் நெஞ்சில இருக்கிறதைப் பார்த்தா... ‘இது பவுனுக்குச் சொந்தம்னு மத்தவளுக விலகிப் போவாளுக'' எனச் சொல்லி பச்சை குத்திவிடுவாள். இருவருக்கும் திருமண ஏற்பாடு நடக்கும் நேரத்தில்... இறந்துபோன வீரனின் உறவு... இந்தக் கிராமத்தில் இருப்பதை அறிந்து, இறந்ததன் அடையாளமாக அந்த வீரனின் உடைகளை அனுப்பி வைப்பார்கள் அதிகாரிகள்.

பாக்யராஜ் தன் மாமன் மகனில்லை எனத் தெரிந்ததும், 'என் மாமனுக்காக தூய்மையா வச்சிருந்த என் உள்ளத்தை மாசுபடுத்திட்டியே மாபாவி' என குமுறி அழுவாள் பவுனு. 'நீ இந்த ஊரைவிட்டே போயிடு' என பெட்டி படுக்கைகளை வெளியே வீசுவாள். ஆனால் பாக்யராஜ், பவுனுவின் வீட்டுக்கு எதிர் வீட்டில் தங்கிவிடுவார்.

ஒருகட்டத்தில்... ''என் உயிரை வாங்கிட்டுத்தான் ஊரை விட்டுப் போவியா?'' என ஆவேசமாக கேட்பாள். அப்போது ஒரு காளை மாட்டைக்காட்டி ''அந்த மாட்டோட தொடையில் சூலாயுத வடிவில் சூடு வச்சிருக்காங்களே ஏன்? அது கோயிலுக்குச் சொந்தமானதுனு மத்தவங்களுக்கு தெரிவிக்கத்தான். அதேபோல ‘உனக்கு மட்டும்தான் நான் சொந்தம்னு சொல்லி என் நெஞ்சில உன்பேரை பச்சை குத்திட்டியே' என நெஞ்சைக் காட்டுவார் பாக்யராஜ். பவுனு அப்படியே அதிர்ச்சியில் உறைந்துவிட்டாள்.

பவுனுவாக நடித்திருந்த ரோஹினி பற்றி சில விஷயங்களை நான் சொல்லியே ஆகவேண்டும்.

தேவரின் ஆசி பெற்ற ரோஹினி!

# திருட்டுக் குரங்கின் மனிதாபிமானம்!

ரோஹினிக்கு அப்போது பத்து வயது இருக்கும். அவளது தந்தை என்னிடம் அழைத்து வந்தார்.

"கலைஞானம் சார்... நீங்க மனசு வச்சா முடியும். எப்படியாவது தேவர் ஃபிலிம்ஸில் சொல்லி என் மகளுக்கு வேஷம் வாங்கித் தரவேண்டும்" என்றார்.

சிறுமி ரோஹினி முகத்தில் ஒரு கலையம்சம் இருப்பது தெரிந்தது.

"இப்போ ஏதாவது நடிச்சுக் காட்ட முடியுமா பாப்பா?" எனக் கேட்டேன்.

நான் கேட்ட உடனே... 'கட்ட பொம்மன்' படத்தில் அண்ணன் சிவாஜி பேசும் வசனத்தை பட்டாசு வெடிப்பது போல் மூச்சுவிடாமல் பேசிக் காட்டினாள்.

"மகளே..." என ரோஹினியை முத்தமிட்டு, தேவரிடம் அழைத்துச் சென்றேன்.

தேவர் முன்பும் அதே வசனத்தை பட்டாசு போல சுட்டுத் தள்ளினாள்.

"அட என்னப்பா, இந்தக் குழந்தை ஸ்ரீதேவி மாதிரியே இருக்கு" என வியந்து ஆசிர்வதித்த தேவர் அப்போது, தான் எடுத்துக்கொண்டிருந்த படத்தில் ஒரு வேஷம் கொடுத்து விட்டார்.

அன்றுமுதல் ரோஹினியும், அவரின் தந்தையும் என்னிடம் பேரன்பு கொண்டு பழகிவந்தனர்.



நாளடைவில் கதாநாயகியாக உருவெடுத்தார் ரோஹினி.

பல ஆண்டுகளுக்குப் பிறகு 'பவுனு பவுனுதான்' படத்தில் கதாநாயகியாக... நடிப்புன்னாலும் நடிப்பு... உங்கவீட்டு நடிப்பு, எங்கவீட்டு நடிப்பில்லை... அதையும் தாண்டி எங்கேயே போய்விட்டார் என் அன்பான குள்ள ரோஹினி.

இந்தப் படத்திற்காக நான் சொன்ன காளைமாடு சென்ட்டிமெண்ட் ஸீன் நன்றாகவே ஒர்க்-அவுட் ஆகியது.

இதுபோல நான் பணியாற்றிய ஒவ்வொரு படத்திலும் முத்தாய்ப்பாக ஒரு காட்சி இருக்கும். அது... அந்த முருகன் எனக்குத் தந்த கதையறிவு.

'இது நம்ம ஆளு' படத்தில் பாக்யராஜ் பசிக்கொடுமை தாங்காமல், பூணூல் அணிந்து அய்யர் வேஷம் போட்டுக்கொண்டு பிற அய்யர்களுடன் கணபதி ஹோமம் நடத்தப் போவார். கதாநாயகி ஷோபனாவின் தந்தை சோமையாஜுலு, கணபதி ஹோமம் செய்யப்போகையில் கண்பதி சிலை மீது பழைய பூமாலை கிடப்பதைப் பார்த்து, அதை காலில் மிதி படாதவாறு கூரை மீது தூக்கிப் போடச்சொல்லுவார். ஷோபனாவும் அந்த மாலையை தூக்கி வீசும்போது... அது கூரையைத் தாண்டிப் போய் தெருவில் வந்துகொண்டிருக்கும் பாக்யராஜின் கழுத்தில் விழும்.

பாக்யராஜ் பரவசத்துடன் வானத்தைப் பார்ப்பார். அப்போது ஒரு பருந்து வட்டமிடும்.

"ஆஹா... வைகுண்டத்தில் இருந்து பகவான் இந்த மாலையை போட்டிருக்கார்" என்பார்.

உடனே ஒரு அய்யர்... "அபிஷ்டு... வைகுண்டத்துல இருந்து போடல. அதோ பார்... வைதேகி போட்ட மாலை" எனச் சொல்லி ஷோபனாவை கை காட்டுவார்.

பாக்யராஜ் ஷோபனாவைப் பார்க்க... இருவரும் மாறி மாறிப் பார்க்க... கண்களில் காதல் தரிசனம் ஆரம்பமாகும்.

'இது நம்ம ஆளு' படம் பார்த்த பாரதிராஜா எனக்கு போன் செய்தார்.

"யோவ் சண்டாளா... மாலையை தூக்கிப் போடுற ஸீன் யாரு பண்ணினது?"

"நான்தான். எதுக்கு கேட்குறீங்க தேவரே?"

"சூப்பர் ஸீன்யா. இந்த மாதிரி ஒரு ஸீன் எனக்குக் கிடைச்சா... ஸ்லோமோஷன்ல அந்த ஸீனை திருப்பித் திருப்பிப் போட்டு முழுப்படத்தையும் ஓட்டிடுவேன்" என்றார்.

பாக்யராஜிற்கு முன்பே நான் சினிமாத் தொழிலில் இருந்தவன் என்றாலும்... பாக்யராஜுடன் தொழில் செய்யும்போது ஒரு புது உத்வேகம் பிறக்கும். கதையை எப்படி அமைக்கணும், திரைக்கதையை எப்படி அமைக்கணும் என்பதில் மிகத்தேர்ந்தவர் தம்பி பாக்யராஜ். நான் ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொல்லுவேன். கொள்ளுவதும், தள்ளுவதும் கோவை ராஜாவின் சித்தமே.

'ஆட்டுக்கார அலமேலு' பாணியில் குரங்கை வைத்து ஒரு கதை தயார் செய்து தயாரிப்பாளர் உடந்தை மணாளனிடம் சொன்னேன்.

ஒரு குரங்கு தினமும் தென்னைஓலைக் கூடையில் நிறைய துளசி இலைகளைப் பறித்துக் கொண்டுவந்து ஒரு பெண்ணிடம் கொடுக்கும். அதைப் பெற்றுக்கொண்டு அவள் இரண்டு ரூபாய் கொடுப்பாள். பணத்தை வாங்கிக்கொண்டு ஆஞ்சநேயர் சன்னிதிக்குச் சென்று தலைவைத்து வணங்கிவிட்டு, ஒரு பெட்டிக்கடையில் பணத்தைக் கொடுக்கும். அந்த கடைக்காரர் ஒரு பேப்பரில் பீடிகளைச் சுற்றிக் கொடுப்பார். அதை வாங்கிக் கொண்ட குரங்கு, அங்கிருந்து சென்று, ஒரு

மரத்தின் உச்சியில் ஏறி நின்று, பீடிக்கட்டை வீசி எறியும். அது ஜெயிலின் காம்பவுண்டுக்குள் போய் விழும். அந்த பீடிக்கட்டை ஒரு கைதி எடுத்துக்கொண்டு, ''ராமா... நாளைக்கு நான் விடுதலையாகிறேன். நீ வந்திடு'' என்பான். அவன்தான் அந்த குரங்கின் முதலாளி.

மறுநாள் சிறை வாசலில் அவனை காத்திருந்து வரவேற்கும் குரங்கு.

''ராமா... இனி நான் கஞ்சா விற்கும் தொழில் செய்யமாட்டேன். அதனாலதான் மாட்டிக்கிட்டேன். இனிமே... நாம திருட்டு தொழில் செய்யலாம். யாராலும் கண்டுபிடிக்க முடியாதபடி கச்சிதமா செய்வோம். எப்படின்னா... உனக்கு ஒரு பை ரெடிபண்ணித் தர்றேன். அதில் மயக்கப் பொடி, கள்ளச்சாவினு திருடுறதுக்கு தேவையான எல்லாம் இருக்கும். இதை எப்படி பயன்படுத்தி திருடுறதுன்னும் உனக்கு நான் டிரெய்னிங் தர்றேன். நீ வீடுகளின் வெண்டிலேட்டர் வழியாவோ, புகைக்கூண்டு வழியாவோ வீட்டுக்குள் புகுந்து போய் மயக்கப் பொடியை தூவிவிடு. அவங்க மயங்குனதும், நகைகளைத் திருடிக்கிட்டு வரணும். புரியுதா?'' என்பான்.

குரங்கும் புரிந்துகொண்டு சிரிக்கும்.

இரவில்... சினிமா பார்த்துவிட்டு ஒரு தம்பதி வீட்டுக்கு வரும்போது நகை குறித்து பேசிக்கொண்டே வருவார்கள்.

'மங்களம்... ஒன்னோட புது நெக்லஸ் பளபளனு மின்னுதே... டூப்ளிகெட்டா?'னு பக்கத்து வீட்டுக்காரி கேட்டுட்டா'' என்பாள்.

''அது ஒரிஜினல் தங்கம். உனக்கென்ன அதுல சந்தேகம்?'' என கணவன் கேட்பான்.

''எதுக்கும் நீங்க நகை வாங்கின கடைக்கு என்னை கூட்டிட்டுப் போங்க. செக் பண்ணிரலாம்'' என்பாள்.

''காலைல முதல் வேலையா கூட்டிப்போறேன்'' என்பான் கணவன்.

இந்த உரையாடலை ஒட்டுக்கேட்ட குரங்கும், குரங்காட்டி யும் கிரிக்கெட் வீரர்களைப் போல ஒருவருக்கொருவர் கைகளால் அடித்துக்கொள்வார்கள்.

அன்று நடு ராத்திரியில்... ஜேம்ஸ் பாண்ட் ஸ்டைலில் குரங்கு டிரெஸ் பண்ணிக்கொண்டு புகைக்கூண்டு வழியாக கயிறு மூலம் அந்த வீட்டுக்குள் இறங்கும். மயக்கப் பொடி தூவி தம்பதி மயங்கியதும்...

அவள் கண்ணாடி முன்பு கழட்டி வைத்த நெக்லஸை திருடிக் கொண்டு போய்விடும்.

விடிந்தால்... வீடே ரெண்டுபடும்.

"பூட்டின கதவு பூட்டின மாதிரி இருக்கு. அது டூப்ளிகெட் நெக்லஸ். அதுனால நீங்கதான் அதை ஒளிச்சு வச்சிட்டீங்க" என கணவனிடம் தகராறு செய்துவிட்டு, தாய் வீட்டுக்கு கிளம்பிவிடுவாள்.

இன்னொருநாள்... ஒரு பணக்கார குழந்தை நீளமான தங்கச் சங்கிலி அணிந்து வேலைக்காரியுடன் இருக்கும். இதைப் பார்த்து குரங்கும், குரங்காட்டியும் திட்டமிடுவார்கள்.

இரவில் குழந்தையை தனியே படுக்க வைத்துவிட்டு, கணவனும், மனைவியும் பெட்டில் தூங்கிக்கொண்டி ருப்பார்கள். வெண்டிலேட்டர் வழியாக உள்ளே புகுந்த குரங்கு, குழந்தையின் சங்கிலியை திருட முனையும்போது, குரங்கின் ரோமம் பட்டு குழந்தை அழும். பெற்றோர் எழுந்ததும் குரங்கு கட்டிலுக்கு அடியில் ஒளிந்துகொள்ளும். குழந்தையின் அழுகையை நிறுத்திவிட்டு மறுபடி தூங்கப் போய்விடுவார்கள். குரங்கு புத்திசாலித்தனமாக அருகே இருக்கும் பால் புட்டியை எடுத்து குழந்தையின் வாயில் வைத்துவிட்டு சங்கிலியைத் திருடிக்கொண்டு போகும்.

சங்கிலித்திருட்டு குறித்து போலீஸில் புகார் செய்யப்பட்டு, போலீஸ் வந்து விசாரிக்கும். கதவு பூட்டியே இருக்கு. வெளியாட்கள் வர வாய்ப்பில்லை. பிறகெப்படி திருட்டு நடந்தது? என புரியாமல் போலீஸ் குழம்பிப்போகும்.

இப்படி குரங்கு மூலம் திருடிய நகைகளை விற்று, பங்களா கட்டி வசதியுடன் வாழ்வான் குரங்காட்டி. குரங்கிற்கும் தனியே ஏ.ஸி. வசதியுடன் ரூம் தந்து தங்க வைப்பான்.

இந்நிலையில்...

ஒரு ஏழைப்பெண் திருமணத்திற்காக அவளின் அப்பா அக்கம்பக்கத்தில் கடன் வாங்கி நகை செய்து வைத்திருப்பார். அந்த நகைகளை குரங்கு திருடிவிடும். இதனால் கடன் கொடுத்தவர்கள் வீட்டிலிருந்த கொஞ்சநஞ்ச சாமான்களையும் எடுத்துக்கொண்டு போய்விட... அதிர்ச்சியில் நெஞ்சுவலி ஏற்பட்டு அந்தப் பெண்ணின் தந்தை இறந்துவிடுவார்.

நகை திருடியவனை ஊர்மக்கள் சபிப்பதையும், அப்பாவை பறிகொடுத்த அந்தப்பெண் கதறி அழுவதையும் குரங்கு பார்க்கும். 'தன்னால் ஒரு

குடும்பம் நாசமாகி விட்டதே' என மனம் வருந்திய குரங்கு, ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று அழுது கண்ணீர்விடும். பின் வீடு சென்ற குரங்கு... 'நாம் திருடிய நகைகளை உரியவர்களிடம் கொடுத்துவிடுவோம்' என ஜாடையாகச் சொல்வதுடன் "இனி திருடமாட்டேன்"என வெங்கடாஜலபதி படத்தின் மீது சத்தியம் செய்வதுடன்... 'நீ திருந்தாவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவேன்' என குரங்காட்டியை எச்சரிக்கும். ஆத்திரமான குரங்காட்டி துப்பாக்கியால் சுட வருவான். அங்கிருந்து தப்பிய குரங்கு... அந்த ஏழைப் பெண்ணிடம் அடைக்கலமாகி... அவளை வாழவைக்க தெருத் தெருவாக டான்ஸ் ஆடி சம்பாதித்து அவளிடம் கொடுக்கும். ஆனால் இந்த குரங்கால்தான் நமது குடும்பம் சீர்குலைந்தது என்பது அவளுக்குத் தெரியாது.

க்ளைமாக்ஸில் குரங்காட்டியை காட்டிக்கொடுத்து ஜெயிலுக்கு அனுப்பும் குரங்கு.

கதாநாயகி சரிதாவின் சேலையை இழுத்து வம்பு செய்த மனிதக் குரங்கு.

# சினிமா பைத்தியம்!

குரங்கை வைத்து நான் சொன்ன கதை பிடித்துப்போனதால் உடந்தை மணாளனும், சிங்காரமும் இணைந்து படமாகத் தயாரிக்க முன்வந்தார்கள். உடந்தைமணாளனுக்கு ஒரு ஆசை வந்தது. அதை விபரீத ஆசை என்றுதான் சொல்ல வேண்டும்.
கல்கத்தாவில் ஒரு சர்க்கஸ் கம்பெனியில் ஒரு பெரிய சிம்பன்ஸி குரங்கு தன் சேஷ்டைகளால் ரசிகர்களை கவர்ந்திருந்தது. சர்க்கஸ் பெண்களு டன் காதல் லீலைகள் செய்து டூயட் பாடுவது அந்த சிம்பன்ஸியின் ஸ்பெஷல். ஒருமுறை சர்க்கஸில் சிம்பன்ஸியின் சேஷ்டையை ரசித்த உடந்தைமணாளன்... அந்த குரங்கை இந்தப் படத்தில் நடிக்க வைப்பதற்காக வாடகைக்குப் பேசி கொண்டுவந்துவிட்டார்.

'ஸ்ரீதேவி' என்ற பெயரில் படப்பிடிப்பு துவங்கியது. சரிதா கதாநாயகியாக நடித்தார்.

கதைப்படி புகைக்கூண்டு வழியே குரங்கு சென்று திருடும். அதற்கு நான் கதையில் எழுதியது போன்ற சிறிய குரங்கையே நடிக்க வைத்திருக்க வேண்டும். ஆனால் மனிதக்குரங்கை கொண்டு வந்ததால் சுவராஸ்யமான அந்த திருட்டுக் காட்சிகளை கதைப்படி எடுக்க முடியவில்லை.

'தன்னால்தானே சரிதாவுக்கு இவ்வளவு கஷ்டமும்' என பீல் பண்ணும் குரங்கு, சரிதாவிடம் ரொம்ப சிநேகத்துடன் இருக்கும். இந்த உயிரோட்டமான காட்சிகளையும் எடுக்க முடியவில்லை.

  

  

காரணம்... சர்க்கஸில் பெண்களிடம் சில்மிஷம் பண்ணி பழக்கப்படுத்தப்பட்ட அந்த சிம்பன்ஸி, சரிதாவைப் பார்த்ததும் ஓடிவந்து சேலையைப் பிடித்து இழுத்து சிரித்திருக்கிறது. இதனால் அதிர்ச்சியான படக்குழு... சரிதாவிடம் விஷயத்தைச் சொன்னால் இந்த சிம்பன்ஸியோடு நடிக்க மறுத்துவிடுவார் என்பதால், அவரிடம் சொல்லாமலே, சரிதா -குரங்கு காம்பினேஷன் காட்சிகளை தனித்தனியாக எடுத்து மேட்ச் பண்ணினார்கள்.

இதனால் கதையில் இருந்த ஜீவன், படத்தில் இல்லை. படம் வெளியாகி தோல்வியைச் சந்தித்தது.

பிறகொரு சமயம்...

இந்தப் படத்தைப் பார்த்த தயாரிப்பாளர் ஜே.வி.ருக்மாங் கதன் என்னைச் சந்தித்தார். '' 'ஸ்ரீதேவி' படம் அருமையான கதை. அதை நான் மறுபடி எடுக்கிறேன்'' எனச் சொல்லி, என்னிடம் கதை உரிமையை வாங்கினார். ஆர்.சுந்தர்ராஜன் இயக்கத்தில் 'சாமி சொன்னா சரிதான்' என்ற பெயரில் படம் எடுக்கப்பட்டது. சுந்தர்ராஜன் நாத்திகவாதி. அதனால் குரங்கிற்கும், ஆஞ்சநேயருக்குமான பக்திமயமான காட்சி களையெல்லாம் திரைக்கதையிலிருந்து நீக்கிவிட்டார். இதனால் இந்தப்படமும் ஓடவில்லை. ஆனால் கிராமப்புறங்களில் ஓரளவு ஓடியதாக தயாரிப்பாளர் ருக்மாங்கதன் சொன்னார்.

நான் முதன்முதலில் ரஜினிகாந்த்தை ஹீரோவாக்கி 'பைரவி' படத்தை எடுக்க திட்டமிட்டபோதே... பூஜைகூட போடுவதற்கு முன்பே 'பைரவி' படத்தின் நான்கு ஏரியாக்களை விற்றுக் கொடுத்தார் உடந்தைமணாளன். அது எனக்கு அன்று பேருதவியாக இருந்தது. (இது பற்றி ஏற்கனவே நான் விரிவாகச் சொல்லியிருக்கிறேன்) அந்தநன்றி உணர்வோடுதான் ஆயிரம் ரூபாய் மட்டும் பெற்றுக்கொண்டு குரங்குக் கதையை அவருக்கு கொடுத்தேன். அவர் விருப்பத்தில் தலையிட வேண்டாம் என்றுதான் சிம்பன்ஸியை வைத்து அவர் படமாக்கியபோது நான் மௌனமாக இருந்துவிட்டேன். அடுத்து... ஆர்.சுந்தர்ராஜன் பெரிய வெற்றிப் படங்களின் டைரக்டர் என்பதால் கதையை அவர் இஷ்டம்போல மாற்றிக்கொள்ள விட்டுவிட்டேன். தயாரிப்பாளர்களோ... இயக்குநர்களோ... படம் வெற்றிபெற வேண்டும் என்றுதான் எடுப்பார்கள். தோல்விப்படம் தரவேண்டும் என எடுக்கமாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அதனால் எனது நல்ல கதை வெற்றி பெறாமல் போனதில் நான் யார் மீதும் குற்றம் சுமத்த விரும்பவில்லை. நான் மட்டும் என்ன வெற்றிப் படமாகவா எடுத்தேன். தோல்விப் படமும் தந்தவன்தானே. மிருகங்களை வைத்து படம் எடுப்பது என்பது தனிக் கலை. அதில் சின்னப்ப தேவரைப்போல், விட்டலாச்சார்யாபோல், இராம.நாராயணன் போல் பெரிய அளவில் வெற்றி கண்டவர்களில்லை.

இப்போது அந்தக் கதையை பக்தி தூக்கலாக மேலும் மெருகேற்றி வைத்திருக்கிறேன். வேறு மொழியில் இந்தக் கதையை படமாக்க திட்டமிட்டுள்ளேன்.

சில சமயம் உண்மை என்பது கற்பனைக்கும் எட்டாத சம்பவங்களுடன் இருக்கும்.

நான் எத்தனையோ உண்மைகளை நேரில் பார்த்திருக் கிறேன். ஆனால்... என்னை ரொம்பவே உலுக்கி எடுத்த உண்மை.... டாக்டர் ராஜகோபாலின் வாழ்க்கைதான்.

எம்.பி.பி.எஸ். படித்தவர் டாக்டர் ராஜகோபால். அவரின் மனைவி காயத்ரி ஹோமியோபதி வைத்தியம் படித்தவர். இந்த தம்பதியின் மகள் மஞ்சுளா அப்போது கல்லூரியில் படித்துவந்தாள்.

சிறுவயது முதலே டாக்டருக்கு சினிமாவில் சாதிக்க வேண்டும் என்கிற தீராத விருப்பம். அதிலும் எம்.எஸ்.விஸ்வநாதன் போல் இசையமைத்து, அவரைப்போல் பாடவேண்டும் என்பது டாக்டரின் வாழ்க்கை லட்சியமாகவே இருந்தது. இதற்காக முறைப்படி சங்கீதமும் கற்றுக்கொண்டார். தன் வீட்டுச் சுவரில் பி.பி.ஸ்ரீனிவாஸ், பி.சுசீலா, எம்.எஸ்.வி., எம்.எஸ். சுப்புலட்சுமி, டைரக்டர் ஸ்ரீதர், நடிகர் முத்துராமன் போன்றோரின் புகைப்படங்களை மாட்டிவைத்துவிட்டு, 'இவர்களைப் போல் நானும் சினிமாவில் பெரிய ஆளாக வருவேன்' எனச் சொல்லிவந்தார். டாக்டரின் சினிமா ஆசையைத் தெரிந்து கொண்ட சிலரால் தன் சம்பாத்தியத்தை டாக்டர் இழந்தும் வந்தார்.

'கணவரின் சினிமா பைத்தியத்தை அவ்வளவு சீக்கிரம் குணப்படுத்த முடியாது' என, தான் படித்த ஹோமியோபதி படிப்பை வைத்து ஒரு கிளினிக்கை ஆரம்பித்தார் காயத்ரி. டாக்டரும், மனைவியின் கிளினிக் வெற்றிகரமாக இயங்க ஆலோசனைகளைச் சொல்லி வந்தார்.

இந்நிலையில் டாக்டருடன் பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்த, கோடீஸ்வரரான ரகுநாத், டாக்டரைப் பார்க்க வந்தார். மகிழ்ச்சியுடன் தன் மனைவி, மகளை ரகுநாத்திற்கு அறிமுகப் படுத்திவைத்தார் டாக்டர்.

"என்னடா ராஜகோபால்... வீடு முழுக்க சினிமாக் காரர்களின் போட்டோவ மாட்டி வச்சிருக்க?" என ரகுநாத் கேட்டார்.

"அவங்கள்லாம் என்னோட மானசீக குரு. நான் ஏகலைவன் மாதிரி. அவங்களை வணங்கிவிட்டு பாட்டுப் பயிற்சியும் செய்றேன், இசையமைத்தும் பழகுறேன். நான் எப்படியும் சொந்தமாக ஒரு படம் தயாரித்தாவது நான் நினைத்ததை சாதித்தே தீருவேன்" என டாக்டர் சொன்னார்.

"இவர் இப்படி சினிமாப் பைத்தியமா இருக்கிறதாலதான் நான் சின்னதா ஒரு கிளினிக் நடத்துறேன்" என காயத்ரி சொன்னார்.

"ஏண்டா... இப்படி பொட்டிக்கடை மாதிரி கிளினிக் நடத்தி எப்போ சம்பாதிக்கிறது? ஒன்ன மாதிரி டாக்டர் கள்லாம் பெரிய பெரிய ஹாஸ்பிடல் கட்டி லட்சம் லட்சமா சம்பாதிக்கிறது உனக்கு புரியலையா?" என ரகுநாத் கேட்க...

"எனக்கு புரியாமலா இருக்கு. ஹாஸ்பிடல் கட்டணும்னா பேங்க்ல லோன் வாங்கணும். அப்புறம் வட்டியும் முதலுமா வாழ்க்கை பூரா கட்டிக்கிட்டே இருக்கணும். இப்படி கடனை அடைக்கிறதுக்கே என் வாழ்க்கை போச்சுன்னா... என்னோட சினிமா லட்சியம் என்னாகிறது?"

"நீ பேங்க்ல லோன் வாங்கவேண்டாம். நான் வட்டியே இல்லாம பத்து லட்ச ரூபாய் தர்றேன். அசலை உனக்கு தோதுப்படும்போது திருப்பிக்கொடு போதும். இதுக்காக நீ எந்த ஒரு பேப்பரிலும் கையெழுத்துக்கூட போட வேணாண்டா. பணத்தை வச்சுக்கிட்டு நான் என்ன பண்ணப் போறேன்? நன் ஒரு கட்டை பிரம்மச்சாரி.இப்போதைக்கு எனக்கு இருக்க ஒரே உறவு நீதான்'''என்று ரகுநாத் சொல்ல...

டாக்டரின் மனைவிக்கும், மகளுக்கும் எல்லை இல்லா மகிழ்ச்சி.

"அங்கிள்... நீங்கதான் என் டாடியை சம்மதிக்க வச்சு ஹாஸ்பிடல் கட்ட ஏற்பாடு செய்யணும்" என்றாள் மஞ்சுளா.

"நீங்க எங்க மேல வச்சிருக்க நம்பிக்கை வீண் போகாதபடி... உங்க பணத்துக்கான முழுப்பொறுப்பையும் நான் கவனமா பார்த்துக்கிறேன். ஹாஸ்பிடலுக்கான வேலையை உடனே செய்ங்க" என காயத்ரி சொன்னார்.

விடைபெற்றுச் சென்ற ரகுநாத் வெகு விரைவிலேயே ஒரு பழைய மருத்துவமனையை வாங்கி, கூடுதல் வசதிகளுடன் அதைப் புதுப்பித்து... "காயத்ரி மருத்துவமனை' என பெயர் வைத்து, திறந்து வைத்தார் ரகுநாத்.

டாக்டரின் உதவியுடன் அவரின் மனைவி காயத்ரி கடும் உழைப்பால் மருத்துவமனையை வெற்றிகரமாக நடத்தி வந்தார். நான் கதை எழுதிய சில படங்களை இயக்கிவர் எனது நண்பர் மதுரை திருமாறன். (பல வெற்றிப் படங்களைத் தந்த இவரைப்பற்றி நான் ஏற்கனவே விரிவாக சொல்லியிருக்கிறேன்)

ஒருநாள்... டாக்டர் ராஜகோபாலிடம் என்னை அழைத்துச் சென்றார் மதுரை திருமாறன்.

டாக்டர் எனக்கு நெருங்கிய நண்பராக ஆவார் என்றோ... அவரின் வாழ்க்கையில் விதி புகுந்து பிரளயம் நடத்தும் என்றோ நான் நினைத்தேனா? அவர்தான் நினைத்தாரா?

# நண்பா... என்னைக் கொன்று விடு!

'சினிமாவில் ஜெயிக்க வேண்டும்... குறிப்பாக இசைத்துறையில் ஜெயிக்க வேண்டும்...' என சதா சினிமா சிந்தனையுடன் இருந்த டாக்டர் ராஜகோபாலிடம் டைரக்டர் மதுரை திருமாறன் என்னை அழைத்துச் சென்றார்.

''டாக்டர்... நான் ஏற்கனவே சொல்லியிருந்தேனே... கலைஞானம். அது இவர்தான். நல்ல கதை கிடைச்சா படம் பண்ணலாம்னு சொல்லீருந்தீங்கள்ல. இவருகிட்ட நிறைய லவ் ஸ்டோரி இருக்கு'' என்றார்.

'மிஸ்டர் கலைஞானம். லவ்' ஸ்டோரின்னா எப்படி? நீங்க அனுபவப்பட்டு எழுதின கதையா? இல்லை கற்பனையா?''

''ரெண்டுமே சேர்ந்துதான் எழுதிருக்கேன் டாக்டர்'' என்றேன்.

டாக்டர் சிரித்துவிட்டார்.

''மிஸ்டர் கலைஞானம்... எனக்கு ஸ்ரீதர் கதைகள்னா ரொம்பப் பிடிக்கும். அவர் எடுத்த 'நெஞ்சில் ஓர் ஆலயம்', 'கல்யாணப் பரிசு' படங்களை பலதடவை பார்த்திருக் கேன். அந்தப் படங்கள்ல வர்ற பாடல்களைப் போல இசையமைத்துப் பாடவேண்டும் என்பது என்னோட ஆசை'' எனச் சொன்னவர்... 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை' என ராகமாக பாடியபடி பாடலின் பேக் ரவுண்ட் மியூஸிக்கையும் வாயாலேயே வாசித்துக் காட்டினார்.

'வாடிக்கை மறந்தது ஏனோ' என அடுத்த பாடலையும் பாடிக் காட்டினார்.



நானும் இப்படி பாடுவதில் அலாதி சுகம் காண்பவ னாச்சே... 'காதலிலே தோல்வியுற்றாள்' பாடலைப் பாட... டாக்டர் ரசிக்க...

"நீங்க இப்படி பாடிக்கிட்டிருங்க. நான் கிளம்புறேன்" என மதுரை திருமாறன் சொல்ல... நாங்கள் சிரித்துவிட்டோம்.

"ஓ.கே. மிஸ்டர் கலைஞானம்... ஒரு நல்ல கதையை பக்காவா ரெடி பண்ணுங்க. நான் ஃபைனான்ஸ் ரெடி பண்றேன்" எனச் சொல்லி விடைகொடுத்தார்.

அன்று முதல் நானும், டாக்டரும் நெருங்கிய நண்பர்களாகப் பழகிவந்தோம்.

இந்தச் சூழலில்.. டாக்டருக்கு மருத்துவமனை கட்டிக் கொடுத்த டாக்டரின் நண்பர் ரகுநாத், டாக்டரின் வீட்டுக்கு வந்திருந்த நேரத்தில்.... டாக்டரின் மகள் மஞ்சுளாவுக்கு நல்ல வரன் இருப்பதாகச் சொல்லி புரோக்கர் வந்தார். மாப்பிள்ளையின் போட்டோவைக் காட்டினார். 'பையன் பி.எல். படிச்சிருக்கான். 40 பவுன் எதிர்பார்க்கிறாங்க' எனச் சொன்னார்.

டாக்டரும், அவரின் மனைவியும் தயங்கியபோது... "உடனே ஏற்பாடு பண்ணுங்க. 40 பவுன் இப்பவே ரெடி" என்றார் ரகுநாத்.

டாக்டரை தனியே அழைத்துச் சென்ற அவரின் மனைவி காயத்ரி "ரகுநாத் சார், இதுவரை நமக்கு எந்த டாகுமெண்ட்ஸும் இல்லாம

ஹாஸ்பிடல் கட்ட பத்து லட்சத்துக்கும் மேல கொடுத்துட்டார். இதுக்கு மேலயும் நம்ம பொண்ணுக்கு 40 பவுன் நகை வாங்கித் தர்றதா அவர் சொல்றதை நாம் ஒப்புக்கொள்ளக்கூடாது. அவரோட கடனை எப்ப திருப்பி அடைக்கிறோமோ... அப்பத்தான் மஞ்சுளாவுக்கு கல்யாணம். 'நூல் ஆடா இடத்தில் பொருள் ஆடக் கெடும்'னு சொல்வாங்க. (நூல்கூட நுழைய முடியாத இடத்தில் பணம் நுழைஞ்சா எல்லாம் கெட்டுப்போகும்) அவரோட புனிதமான நட்பை நாம் இழந்திடக்கூடாது'' எனச் சொல்ல... டாக்டருக்கும் அது சரியெனப்பட்டது.

இருவரும் மீண்டும் ஹாலுக்கு வந்தார்கள்.

''மஞ்சு மேல் படிப்பை முடிக்கும்போதுதான் அவளுக்கு நல்ல நேரம். இப்ப அவ சின்னப்பொண்ணுதானே. கல்யாணத்துக்கு இப்ப அவசரமில்லை'' என காயத்ரி, கல்யாண புரோக்கரிடம் சொல்லிவிட்டார்.

''மஞ்சு கல்யாணத்திற்கு நான் எப்போது வேணும்னாலும் உதவத் தயாரா இருக்கேன்'' என ரகுநாத்தும் சொல்லிவிட்டுப் போனார்.

ஒருநாள் காயத்ரிக்கு தாங்கமுடியாத வயிற்றுவலி.

துடித்துப்போன டாக்டர், வயிறு சம்பந்தப்பட்ட ஸ்பெஷல் டாக்டரை வரவழைத்து எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தார்.



"வயித்துல பெரிய கட்டி இருக்கு. உடனே ஆபரேஷன் செய்தால்தான் நல்லது''"என ஸ்பெஷலிஸ்ட் சொன்னார்.

"இப்போதைக்கு எனக்கு மருந்து, மாத்திரை எழுதிக் கொடுங்க. கொஞ்சநாள் கழிச்சு ஆபரேஷன் செய்துக்கிறேன்... ப்ளீஸ்" எனச் சொல்லிவிட்டார் காயத்ரி.

"ஆபரேஷனை நினைச்சுப் பயப்படுறீயா?" என மனைவியிடம் டாக்டர் கேட்டார்.

"பயமில்லீங்க. ஆபரேஷனுக்கு என்ன செலவாகும்னு உங்களுக்குத் தெரியாதா? ரகுநாத்தோட கடனை அடைக்கிறதுலதான் நம்ம கவனம் இருக்கணும்" எனச் சொல்லி விட்டார் காயத்ரி.

"தன் கணவர் சினிமாப் பைத்தியமாக இருப்பதால் படம் எடுக்கிறேன்னு வருமானத்தை தொலைத்துவிடுவாரோ" என்கிற சந்தேகம் காயத்ரிக்கு இருந்தது.

அடிக்கடி சினிமா விஷயமாக என் வீட்டுக்கு வருவார் டாக்டர். அன்றும் வந்திருந்தார். நானும் அவரும் பேசிக் கொண்டிருந்தோம்.

"படம் தயாரிக்கிறதுக்காக ஒரு ஃபைனான்ஸியரிடம் பணம் கேட்டேன். ஒரு லட்சம் தர்றதா சொன்னார். அது போதுமா?"

"அதெல்லாம் போதாது டாக்டர். குறைந்தது நாலு லட்ச ரூபாயாவது தேவைப்படும். இருந்தாலும் உங்க லட்சியத்துக்காக நான் ஒரு யோசனை சொல்லவா?"

"சொல்லுங்க கலைஞானம்"

"ஒரு பத்தாயிரம் ரூபா செலவு பண்ணினா... நீங்களே இசையமைச்சு, பாடலைப் பாடி பதிவு செய்யலாம். அதை மத்தவங்ககிட்ட போட்டுக் காண்பிச்சு, அவங்க எப்படி ரசிக்கிறாங்க? என்ன விமர்சனம் சொல்றாங்கனு தெரிஞ்சுக்கலாம்"

"மத்தவங்களைப் பத்தி எனக்கு கவலையில்லை. எனக்கு என் திறமை மேல கான்ஃபிடன்ஸ் இருக்கு" என டாக்டர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே...

என்வீட்டுத் தொலைபேசி ஒலித்தது.

எடுத்தேன்.

"டாக்டர் அங்க வந்திருக்காரா?"

"ஆமா. இதோ குடுக்கிறேன்..." என போனை டாக்டரிடம் கொடுத்தேன்.

டாக்டர் பேசினார். அவர் முகத்தில் பதட்டம் தெரிந்தது.

"என்ன டாக்டர்?"

"ஒரு அவசரம். நான் கிளம்பறேன்" எனச் சொல்லிவிட்டு கிளம்பினார்.

டாக்டரின் நண்பர் ரகுநாத்திடமிருந்து டாக்டருக்கு போன் செய்திருக்கிறார்கள். அவர் என்னைப் பார்க்க வந்திருப்பதால் என் வீட்டுக்கு போன் செய்திருக்கிறார்கள்.

ரகுநாத்தின் வீட்டிற்கு டாக்டர் போனபோது... அங்கே டாக்டரின் மனைவியும், மகளும் கண்கலங்கியபடி இருக்க... ரகுநாத் கதறி அழுகிறார்.

"என்னாச்சு ரகுநாத்?"

"என்னோட இடுப்புக்குக் கீழே செயலற்றுப் போச்சு. என்னால் உடம்பை அசைக்கவே முடியல"

அதிர்ச்சியான டாக்டர், ரகுநாத்தின் உடம்பில் ஆங்காங்கே தொட்டு பரிசோதனை செய்தார். உடனடியாக நரம்பியல் நிபுணர் வரவழைக்கப்பட்டார். ரகுநாத்தை மருத்துவமனையில் சேர்த்து பரிசோதனைகள் செய்தனர்.

"ஏன் டாக்டர்? உங்க நண்பர் மது குடிப்பாரா?" என நரம்பியல் நிபுணர் கேட்க...

"எனக்குத் தெரிஞ்சு அவனுக்கு எந்த கெட்ட பழக்கமுமில்லை" என டாக்டர் சொன்னார்.

எல்லா பரிசோதனைகளும் முடிந்ததும் "நான் சொல்றபடி இவர் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக்கணும். வீட்லயே ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டா போதும். கூடவே ஒரு நர்ஸ் இருக்கணும்"என நரம்பியல் நிபுணர் தெரிவித்தார்.

அதன்படி ரகுநாத்திற்கு அவர் வீட்டிலேயே, தன் மருத்துவமனை நர்ஸ்களை வைத்து மருந்து கொடுத்துவந்தார் டாக்டர்.

பல நாட்கள்... பல நிபுணர்கள் பரிசோதித்து, சிகிச்சையளித்தும் ரகுநாத்திற்கு குணமாகவில்லை.

ஒருகட்டத்தில் ரகுநாத்திற்கு, தான் மலம் போவதையும், சிறுநீர் கழிப்பதையும் கூட உணர முடியாத நிலை. துர்நாற்றம் தாங்காமல் மூக்கைப் பொத்திக்கொண்டு நர்ஸ் சிகிச்சை அளிப்பதைப் பார்த்து "எனக்கு இப்படி ஒரு நிலையா?" என மனம் வெதும்பிப்போனார் ரகுநாத்.

ஒவ்வொரு மருத்துவ நிபுணரும் ஒவ்வொரு விதமாக மருந்து தந்ததால் ரகுநாத்தின் கண் பார்வையும் மங்க ஆரம்பித்தது. இடுப்பிற்கு கீழ் உணர்வற்றுப்போனது போதாதென்று, உடலின் மேல் பகுதியும் கடுமையாக வலி எடுத்தது.

வழக்கம்போல் ரகுநாத்தைப் பார்க்க வந்தார் டாக்டர்.

"டேய்... டாக்டர் ராஜகோபால்... நீ என்னோட உயிர் நண்பன்தானே?"

"என்ன ரகு... திடீர்னு இப்படி ஒரு சந்தேகம்?"

"என் உயிர் நண்பன்ங்கிறது உண்மைன்னா... நான் சொல்றதை கேட்பியா?"

"சொல்லு ரகு"

"ப்ளீஸ்... என்னைக் கொன்னுருடா..."

# உயிர் வலி!

இடுப்பிற்கு கீழே செயலிழந்த நிலையில், தன்னையறியாமல் மலமும், ஜலமும் கழிக்கும் நிலையில், பலவித மருந்துகளால் இடுப்பிற்கு மேல வலி வாட்டிவதைத்த நிலையில், மருந்துகளின் வீரியத்தால் கண் பார்வையும் மங்கிவந்த நிலையில்... அதிலும் இரவில் கண்பார்வை பெருமளவு மங்கிய நிலையில்... துடி துடித்தார் ரகுநாத்.

"டேய்... டாக்டர் ராஜகோபால்... நீ என் உயிர் நண்பன்தானே?"

"ஆமா... ரகு. அதுல என்ன சந்தேகம்?"

"அப்படின்னா நான் சொல்றதைக் கேட்பியா?"

"சொல்லு ரகு"

"நீயும் பல ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்களை அழைச்சிட்டு வந்து எனக்கு ட்ரீட்மெண்ட் குடுத்திட்ட. ஆனா... அணு அளவும் குணமாகலையேடா. கூடுதலாத்தான் ஏதேதோ நோய் வந்து என்னை வாட்டி வதைக்குது. என்னோட கஷ்டமெல்லாம் உனக்கு நல்லாவே தெரியும். என்னோட மலத்தையும், சிறுநீரையும் அதோட நாற்றத்தையும் என்னாலயே தாங்கிக்க முடியலையே. பாவம் நர்ஸுகள். சிரமப்பட்டு கடமையைச் செய்றாங்க. இப்பத்தாண்டா உணர்றேன்... ஒவ்வொரு மனுஷனுக்கும் ‘மனைவிங்கிறவ எவ்வளவு முக்கியம்கிறத. இப்ப வருந்தி என்ன பண்ண?" என அழுதபடி ரகுநாத் சொல்லிக் கொண்டிருக்கும்போதே... உடலில் மின்னலைப் போல் ஒரு திடீர் வலி ஏற்பட... அலறி மயங்கினார்.

ரகுநாத்தை தாங்கிப் பிடித்து சமாதானப்படுத்தினார் டாக்டர்.



"ப்ளீஸ்டா... நீ என்னோட உண்மையான நண்பன்னா இந்த நரக வேதனையில இருந்து என்னைக் காப்பாத்துடா ஃப்ளீஸ். ஒரே ஒரு ஊசிபோட்டு எனக்கு விடுதலை குடுடா" என கையெடுத்துக் கும்பிட்டார் ரகுநாத்.

அதிர்ச்சியான டாக்டர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு... "உன் உசுர எடுக்கிறதுக்கா நான் உனக்கு நண்பனானேன்? இனிமே இப்படி தயவு செய்து என்கிட்ட சொல்லாத ரகு. நான் காலைல வர்றேன். நீ மாத்திரை சாப்பிட்டுட்டுத் தூங்கு" என்றார் டாக்டர்.

"நீ கருணை ஊசி போடலேன்னா என்னடா? ஊர்ல வேற டாக்டரே இல்லையா? காலைல நீ என்னைப் பார்க்க வரும்போது... நீ என்னைப் பார்ப்ப. ஆனா நான் உன்னை பார்க்க மாட்டேன். நிம்மதியா, நிரந்தரமா நான் தூங்கிக் கிட்டிருப்பதை நீ பார்க்கத்தான் போற" என ரகுநாத் சொல்ல...

ரகுநாத்திற்கு எப்படி ஆறுதல் சொல்வது எனத் தெரியாமல் டாக்டர் புறப்பட்டுப் போனார்.

மறுநாள் காலை...

ஒரு பாம்பே மருத்துவ நிபுணருடன் ரகுநாத்தின் வீட்டுக்கு வந்தார் டாக்டர்.

அந்த நிபுணர் ரகுநாத்தை பலவாறு சோதித்தார்.

"ரகு... இவர் ரொம்ப பெரிய டாக்டர். பாம்பேலருந்து வந்திருக்கார். இனிமே நீ கவலைப்படத் தேவையில்லை. இவர் நிச்சயம் உன்னை குணப்படுத்திவிடுவார்" என டாக்டர் ஆறுதல் சொன்னார். பரிசோதனை முடிந்தது.

டாக்டர் ராஜகோபாலை பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்ற பாம்பே டாக்டர்... "இதுவரை ரகுநாத்திற்கு யார், யார்? என்னென்ன சிகிச்சை தந்தாங்க என்கிற ரிப்போர்ட்டை படிச்சுப் பார்த்திட்டேன். நானும் அவரை பரிசோதிச்சிட்டேன். இனிமேலும் அவருக்கு சிகிச்சை செய்றது பிரயோஜனப் படாது" எனச் சொல்லிவிட்டு கிளம்ப... பாம்பே நிபுணரை அனுப்பி வைப்பதற்காக டாக்டர் ராஜகோபாலும் அவருடன் சென்றுவிட்டார்.

ரகுநாத்திற்கு விஷயம் புரிந்துபோனது. நர்ஸிடம் லெட்டர்பேடையும், பேனாவையும் எடுத்துத் தரச்சொல்லி, வாங்கிக்கொண்டு, படுத்தபடியே மேல்நோக்கி லெட்டர்பேடை ஒரு கையால் பிடித்துக்கொண்டு எழுதினார் ரகுநாத்.

"அருமை நண்பா... இனிமே ட்ரீட்மெண்ட் சரியா வராது என்று பாம்பே டாக்டர் உன்னிடம் சொன்னது என் காதில் அரைகுறையாக விழுந்துவிட்டது. நீ நன்றாக சிந்தித்துப் பார். நான் யாருக்கும் எந்தத் துரோகமும் செய்யவில்லை. எல்லாருக்கும் நன்மைதானே செய்தேன். அதற்கு இப்படி ஒரு கொடுமையா? இது இறைவன் எனக்குக் கொடுத்த தண்டனை இல்லை. என் பெற்றோருக்கு நான் செய்த பாவத்தின் விளைவு. எனக்காக கோடிக்கணக்கில் சொத்து சேர்த்துவைத்த என் பெற்றோர்... "மகனே... நீ கல்யாணம் செஞ்சுக்கிட்டு, நம்ம வம்சத்துக்கு வாரிசா ஒரு பிள்ளையை பெற்றுக்கொடுக்க வேண்டும். பேரப்பிள்ளையை நாங்கள் கொஞ்சவேண்டும்"என தினமும் என்னைக் கெஞ்சினார்கள். ஆனால் நான் அவர்களின் நியாயமான ஆசையை உதாசீனப்படுத்திவிட்டேன். அந்த ஏக்கத்திலேயே என் பெற்றோர் இறந்துவிட்டார்கள். அந்தப் பாவம்தான் இது. பெற்றோரின் ஆசையில் மண்ணைப் போட்டேனே... அதற்குத் தண்டனைதான் இது"என எழுதிக் கொண்டிருந்த ரகுநாத் துயரம் தாங்காமல் வழிந்த கண்ணீரை துடைத்துக்கொண்டு, தொடர்ந்து எழுதினார்... 'என் சொத்துக்களையெல்லாம் அனாதை குழந்தைகள் வாழ்க்கைக்காக எழுதி வைத்துவிட்டேன். அதனால் என் பெற்றோரின் ஆன்மா என்னை மன்னிக்கும். ஆனால் நண்பா... என் கருமத்தை தீர்க்காத உன்னை

என்னால் மன்னிக்க முடியவில்லையே' என எழுதிவிட்டு அப்படியே அசந்து உறங்கிப்போனார்.

வழக்கமாக வரும் நர்ஸ்கள் யாரும் இல்லாமல், புதிதாக ஒரு நர்ஸ் அன்று இரவு பத்து மணிக்கு டூட்டிக்கு வந்தார்.

"யாரம்மா நீ?"

"சார்... இன்னிக்கு மட்டும் உங்களுக்கு டூட்டி பார்க்க டாக்டர் என்னை அனுப்பிச்சார். டிபன் ரெடியாக இருக்கு. சாப்பிட்டுட்டு மருந்து சாப்பிடுறீங்களா?" எனக் கேட்டபடி உணவை தட்டில் வைத்து ரகுநாத்தின் அருகில் வைத்தார் நர்ஸ். மலம் இருந்த தட்டை சுத்தம் செய்வதற்காக எடுத்தபோது... ரகுநாத் வீட்டு போன் ஒலித்தது. அப்படியே வைத்துவிட்டு, நர்ஸ் போனை எடுத்தார். நர்ஸின் குழந்தைக்கு ஆக்ஸிடெண்ட் ஆகிவிட்டதாக தகவல் வர... அந்தப் பெண் பதறியடித்து தன் வீட்டுக்கு ஓடினார்.

இரவு பதினோரு மணி.

பசி தாங்கமுடியாமல் டிபன் தட்டை துழாவினார் ரகுநாத். கையில் தட்டுப்பட்டதை அள்ளி எடுத்தார். சந்தேகப்பட்டு மோந்து பார்த்தார். 'அய்யோ...' என்றார்.

அந்தச் சமயம் டாக்டர், வீட்டுக்குள் நுழைந்தபடி....

"என்ன ரகு... சாப்பிட்டியா?" எனக் கேட்டார்.

"இந்தா... நீயே சாப்பிடு" என ஆவேசத்துடன் குத்துமதிப் பாக குரல் வந்த திசை நோக்கி தன் கையில் இருந்ததை வீசியடித்தார் ரகுநாத்.

டாக்டரின் முகமெல்லாம் மலம்.

அதிர்ந்துபோனார்.

"அட நாயே... என்னோட மலத்தை, நானே திங்கிற நிலைக்கு கொண்டுவந்திட்டியேடா. என் வேதனை உனக்கு புரியலையாடா நாயே..." என வெடித்து கதறி அழுதார்.

அழுகை நிற்க வெகுநேரமானது.

அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் இருந்தார் டாக்டர்.

அமைதியும், இறுக்கமும் நீடித்தது.

ஜீவனற்ற குரலில் ரகுநாத் கெஞ்சினார். "ராஜகோபால்... உன்னோட கால்களைப் பிடிச்சு கேட்கிறேன்... என்னை இந்த நரகத்திலிருந்து விடுபடச் செய்யேண்டா. அணுஅணுவா நான் செத்துக்கிட்டிருக்கது உனக்குத் தெரியலையா? அப்படி என்னடா நான் உனக்கு துரோகம் பண்ணீட்டேன்? நீ கூட்டி வந்த பெரிய பெரிய ஸ்பெஷலிஸ்ட் டாக்டர்கள்லாம் கைவிட்டுட்டானுங்களே. இன்னிக்கி வந்த பாம்பே டாக்டரும் 'ஒண்ணும் பண்ணமுடியாதுனு சொல்லீட்டாரே. உண்மை தெரிஞ்சும் ஏண்டா ஊமையா இருக்க? நீ சொன்னதையெல்லாம் நான் கேட்டேன். நான் சொல்றதை நீ ஏம்ப்பா கேட்க மாட்டேங்கிற? டேய்... உன் மனைவி, மகள் மேல சத்தியம் பண்ணிச் சொல்... நீ என் உண்மையான நண்பனா?" என ரகுநாத் கேட்க...

டாக்டர், ரகுநாத்தின் முகத்தையே பார்த்தபடி இருக்க...

"நான் உன்னோட உண்மையான நண்பன்ங்கிறதை நீ தெரிஞ்சிக்க. இந்த சாவியை எடுத்து பீரோவைத் திற" என ஒரு சாவிக்கொத்தை நீட்ட... டாக்டர் வாங்கி பீரோவைத் திறந்தார்.

"அங்க ஒரு நகைப்பெட்டி இருக்கா? அதைத் திறந்து பார்"

டாக்டர் பெட்டியைத் திறந்தார். அதில் நிறைய நகைகள் இருந்தன.

"இதெல்லாம் உன் மகள் மஞ்சுளாவுக்கு. அவளோட கல்யாணத்துக்கு. அவளுக்கு எப்போ கல்யாணம் வச்சாலும், நான் இருந்தாலும், இறந்தாலும் அவ கல்யாணம் நகையால தடங்கல் படக்கூடாதுனு வாங்கிவச்சிட்டேன். உன் மனைவி காயத்ரிகிட்ட சொல்லீட்டுதான் வாங்கி வச்சேன் தெரியுமா?... சர்ப்ரைஸா இருக்கட்டுமேனுதான் உன்கிட்ட சொல்லல"

ரகுநாத் சொல்லச் சொல்ல டாக்டரின் கண்களில் கண்ணீர்.

"நீ என்னவோ... "என்னோட லட்சியம் சினிமா எடுத்து, இசையமைச்சு, பாடுறதுதான்'னு சொன்னியே. அதுக்கும் பத்துலட்ச ரூபாய் அந்த சூட்கேஸ்ல இருக்கு. எடுத்துக்க. உன் லட்சியத்தை நிறைவேற்று. ஆனா ஒண்ணுடா... என்னோட மனப்பூர்வமான ஆசி உனக்கு கிடைக்கணும்னா... ஒரே ஒரு ஊசி போட்டு என்னை விடுவிச்சிடு என் தெய்வமே... ஒரே ஒரு ஊசி..." என கெஞ்சி அழுதார்.

# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்!

இடுப்பிற்குக் கீழே உடல் செயலிழந்த நிலையில், மலமும், சிறுநீரும் தன்னையறியாமல் கழிந்த நிலையில், மருந்து மாத்திரைகளால் கண் பார்வையும் பாதிக்கப்பட்ட நிலையில்... "நண்பா... என்னை ஒரே ஒரு கருணை ஊசி மூலம் உலகத்தைவிட்டு விடுவித்துவிடடா" எனக் கெஞ்சினார் ரகுநாத்.

"அப்படியெல்லாம் செய்றதுக்கு சட்டத்தில் இடமில்லை ரகு" என கண்ணீருடன் சொன்னார் டாக்டர் ராஜகோபால்.

"சட்டத்துல இடமில்லாம இருக்கலாம். தர்மத்துல இடமில்லையா? ஒன்னோட மனசாட்சியில் இடமில்லையா சொல். இடமில்லையா?"

"என் நண்பனைக் கொல்ல என்னால் முடியாது."

"போடா துரோகி... நீ இல்லேன்னா வேற டாக்டரே இல்லையா? போடா... டேய்... உன் மீது, நம்ம நட்பின் மீது ஆணையிட்டுச் சொல்றேன்... நான் சாகப் போறது உறுதி. ஆனா... நீ என் பிணத்தைக் கூட பார்க்கக்கூடாது. கெட்-அவுட்" என ஓங்கிக் கத்தியபடி கையில் சிக்கிய எதையோ எடுத்து எறிந்தார் ரகுநாத். அது பீரோவின் கண்ணாடியில் பட்டு சிதறியது. தான் எழுதி வைத்திருந்த கடிதத்தையும் வீசினார். அந்த கடிதத்தை எடுத்துக் கொண்ட டாக்டர், ரகுநாத்தை சில நிமிடங்கள் பார்த்துவிட்டு, தன் வீட்டிற்கு வந்தார்.

மனைவியும், மகளும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந் தார்கள். அவர்களையே உற்றுப்பார்த்தார்.



"நான் இருந்தாலும், இறந்தாலும் உன் மகள் மஞ்சுளாவின் திருமணம் தடை படக்கூடாது என்பதால் நகைகள் வாங்கி வைத்திருக்கிறேன்'' என ரகுநாத் சொன்னது டாக்டரின் காதுகளில் ஒலித்தது. 'இனி இவரை குணப்படுத்தவே முடியாது' என பாம்பே டாக்டர் தன்னிடம் சொன்னதும் டாக்டரின் காதுகளில் ஒலிக்கிறது.

பூஜையறைக்குள் நுழைந்தார் டாக்டர். சப்பணமிட்டு உட்கார்ந்தார். அவரின் வாய் ஏதோ மந்திரத்தை உச்சரித்தபடி இருக்க... கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தபடி இருந்தது.

நீண்ட நேரம் பூஜையறையிலேயே இருந்தார் டாக்டர்.

விடிந்தது.

ஒரு ஊசியில் மருந்தை லோட் செய்தார். நர்ஸை அழைத்தார். "ரகுநாத் சாருக்கு இந்த இஞ்செக்ஸனைப் போடு. ஏதாவது ரியாக்ஸன் இருந்தா எனக்கு தகவல் சொல்லு" என அனுப்பிவைத்தார்.

நேராக என் வீட்டிற்கு வந்தார் டாக்டர். அவர் முகத்தைப் பார்த்த எனக்குப் பகீரென்றது.

அழுகையினூடே விம்மிய குரலில் ‘ரகுநாத்’ குறித்து நடந்த விஷயங்களையெல்லாம் என்னிடம் சொன்னவர் 'இதோ... ரகுநாத் எழுதின கடிதம்' எனக் காட்டினார்.

இதயத்தை அழுத்தும் கனமும், பிரமிப்புமாக தவித்துப் போன எனக்கு பேச்சே வரவில்லை.

''தாங்கமுடியாத இந்த வேதனையை உங்ககிட்ட சொல்லி அழணும்போல இருந்தது. அதான் சொன்னேன். நான் உங்ககிட்ட தெரிவிச்ச விஷயங்களை என் மனைவி, மகளிடம் கூட சொல்லவில்லை. நீங்களும் அவர்களிடம் சொல்ல வேண்டாம்'' என்றவர்... 'நான் கிளம்புறேன் கலைஞானம்' என்றார்.

''சரிங்க டாக்டர்'' என நான் சொன்னாலும் மனசு கேட்கவில்லை. நானும் டாக்டருடன் சென்றேன்.

டாக்டரின் வீட்டுக்கு வந்தோம்.

பதட்டமாக வந்த நர்ஸ் சொன்னார்... ''டாக்டர்... ரகுநாத் அய்யா இறந்திட்டார்.''

ரகுநாத் இறந்த எட்டாம்நாள்....

ரகுநாத்தின் போட்டோவுக்கு டாக்டரின் மனைவியும், மகளும் மாலை அணிவித்து தீபம் ஏற்றிவைத்து அழுதபடி இருந்தார்கள். அந்த நேரம் நானும் அங்கே போனேன்.

''கலைஞானம்... என் மனைவியும், மகளும் சதா அழுதபடியே இருக்காங்க. நீங்கதான் அவங்களுக்கு ஆறுதல் சொல்லணும்'' என்றார்.

நான் அவர்கள் பக்கம் சென்று.. ''விதிப்படி நடக்க வேண் டியது நடக்கத்தானே செய்யும். அதையே நினைச்சுக்கிட்டி ருக்காம மறக்க முயற்சி பண்ணுங்கம்மா'' என்றேன்.

''எப்படிங்க அவரை மறக்க முடியும். எங்க வாழ்க்கையே அவர் போட்ட பிச்சைதானே'' என தன் மகள் மீது ரகு காட்டிய அன்பையும் குறிப்பிட்டு காயத்ரி அழ... எனக்கும் அழுகை வந்தது. ''டேய்... ரகு...'' என டாக்டரும் சத்தமிட்டு அழுதார்.

இரண்டு மாதங்கள் கடந்த நிலையில்...

காயத்ரிக்கு ஏற்கனவே இருந்த வயிற்றுவ- இப்போது பெரிதானது. ஆபரேஷன் செய்துகொள்வதை தள்ளிப்போட்டுக் கொண்டே வந்த காயத்ரியிடம் ... 'உடனடியாக ஆபரேஷன் செய்து வயிற்றில் உள்ள கட்டியை அகற்றியே ஆகவேண்டும்...' என டாக்டரும், மஞ்சுவும் வலியுறுத்த... ஆபரேஷன் செய்து கொள்ள சம்மதித்தார் காயத்ரி.

டாக்டரின் சொந்த மருத்துவமனையிலேயே ஆபரேஷ னுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆபரேஷனை நடத்த ஸ்பெஷலிஸ்ட் டாக்டரும்

வந்துவிட்டார். காயத்ரிக்கு சோதனைகள் நடத்தப்பட்டன.

அன்றிரவு....

காயத்ரி பூஜை அறைக்குச் சென்று அம்பாள் படத்தை தொட்டு வணங்கிவிட்டு, அருகே இருந்த ரகுநாத் படத்தையும் வணங்கிவிட்டு வந்தார். ஆபரேஷன் தியேட்டருக்குள் கொண்டு செல்லப்பட்டார்.

ஆபரேஷன் தொடங்கி வயிறு கிழிக்கப்பட்ட நிலையில்...

காயத்ரியின் சுவாசத்திற்காக இணைக்கப்பட்டிருந்த சிலிண்டரில் ஆக்ஸிஜன் தீர்ந்துபோயிருந்தது.

வேறு சிலிண்டரை தேடினால்... அதுவும் காலி.

தன் மனைவியின் ஆபரேஷனின் போது இப்படி ஆகிவிட்டதே... என ஆத்திரமான டாக்டர் "நீ சிலிண்டர் செக் பண்ணலையா?" எனக்கேட்டு நர்ஸை ஓங்கி அடித்து தள்ளிவிட்டார். ஆபரேஷன் செய்யும் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர், அவரை சமாதானப்படுத்தி "இப்போ உங்க வொய்ஃப்போட உயிரை காப்பாத்தியாகணும். உடனே பக்கத்துல இருக்க ஹாஸ்பிடல்ல போய் சிலிண்டர் வாங்கிட்டு வாங்க" எனச் சொன்னார். அரை டவுசரும், பனியனுமாக இருந்த டாக்டருக்கு பதட்டம். அப்படியே தெருவில் இறங்கி ஓடினார்.

மூன்று தெரு தள்ளி இருந்த அந்த ஹாஸ்பிடலுக்கு ஓடினார்.

இரவு நேரம் என்பதால் கேட் பூட்டப்பட்டு இருந்தது.

கூர்க்காவிடம் "டேய் கதவைத் திற... நான் டாக்டர் ராஜ கோபால். அவசரமா சிலிண்டர் வேணும். கதவைத் திற'' என்று டாக்டர் கத்த... மொழி புரியாத அவன் டாக்டரின் பதட்டத்தைப் பார்த்து என்னமோ ஏதோ என நினைத்துப் பயந்து "அரே ஜாவ்...ஜாவ்..". என டாக்டரை விட்டியடிப்பதில் குறியாக இருக்க... டாக்டர், கூர்க்காவைத் தாக்க.. கூர்க்கா டாக்டரைத் தாக்க... கைகலப்பு ஏற்பட்டது.

சத்தம் கேட்டு ஓடிவந்த மருத்துவமனை நிர்வாகி, டாக்டரை அடையாளம் கண்டுகொண்டு... விபரத்தைக் கேட்க... டாக்டரும் சொன்னார்.

வீட்டுக்குப் போய்விட்ட அந்த டாக்டருக்கு போன் போட்டு 'ராஜகோபால் சிலிண்டர் கேட்கிற விஷயத்தைச் சொன்னதும்.. கொடுக்கச் சொன்னார்.

சிலிண்டர் கேட்டுக்கு வந்தது. அதைத் தூக்கி தோள் பட்டையில் வைத்துக்கொண்டு தனது மருத்துவமனைக்கு ஓடி வந்தார் டாக்டர்.

முதல் மாடியில் மனைவிக்கு நடக்கும் ஆபரேஷன் தியேட்டர் முன்பு சிலிண்டரை இறக்கிவிட்டு... "சிலிண்டர் கிடைச்சிருச்சு" என கத்தினார் டாக்டர்.

நிசப்தம் நிலவியது. டாக்டருக்கு புரிந்துபோனது.

"காய்த்ரீ"'என ஓங்கிக் கதறினார். சத்தம் கேட்டு பூஜையிலிருந்து ஓடிவந்த மஞ்சு... “"அம்மா" என அழுத அழுகை கேட்டு எமனின் இதயமே வெடித்திருக்கும்.

ஒரு நர்ஸுக்கு தெரியாமலே அவள் மூலம்... நண்பனுக்கு நரக வேதனையிலிருந்து விடுதலை கொடுத்தார்.

ஒரு நர்ஸின் கவனக்குறைவால் தன் மனைவியை இழந்தார்.

இதற்கெல்லாம் யார் காரணகர்த்தா?

விடைதான் தெரியவில்லை.

கொஞ்சநாட்கள் கழித்து... டாக்டர் உருவமே மாறிப் போய் என்னைச் சந்தித்தார். ரகுநாத் குறித்தும், தன் குடும்பம் குறித்தும் என்னிடம் வெகு நேரம் பேசினார்.

பேசிக்கொண்டிருந்தவர்... ‘படக்கென எழுந்து என்னிடம் சொல்லாமலேயே கிளம்பிப் போனார்.

டாக்டர் ராஜகோபாலை எனக்கு அறிமுகம் செய்து வைத்த டைரக்டர் மதுரை திருமாறனை சந்தித்தபோது... டாக்டர் பற்றி விசாரித்தேன்.

"டாக்டர் ஆஸ்பத்திரியை மூடிட்டார். அவருக்கு மன நிலை ரொம்பவே கெட்டுப்போச்சாம். அவரோட பொண்ணு மஞ்சுளா, டாக்டரை தன்னுடன் கூட்டிட்டுப் போயிட்டாராம். எங்க போனாங்க? எப்படி இருக்காங்கனு எந்த விபரமும் தெரியல... கலைஞானம்" என்றார்.

சினிமாவில் இசைக்கலைஞனாக ஜெயிக்கவேண்டும் என பைத்தியமாக இருந்த டாக்டரின் வாழ்க்கையில் இவ்வளவு சோக கீதங்களா?

கண்ணதாசன் பாடல்களை அடிக்கடி என்னிடம் பாடிக்காட்டுவார்.

அதிலும் "நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை" பாடலை டாக்டர் ராகத்தோடும், வாயாலே தாளமிட்டும் பாடியது இப்போது என் காதில் ஒலித்தது.

அதற்காக "நினைத்தே பார்க்க முடியாத அளவுக்கா... யாராலும் தாங்கிக்க முடியாத அளவுக்கா நடக்கணும்?'' என எனக்குள் கேட்டுக் கொண்டபடியே வந்தேன்.

# ஐந்தாம் பாகத்தில் உள்ள சிறப்பம்சங்கள்!

ரயிலில் பாட்டுப் பாடி சில்லறை சேகரித்த சோக அனுபவம்

டி.ஆர். ராஜகுமாரியுடன் நான் டூயட் பாடிய அனுபவம்

'பராசக்தி' பட பூசாரி... கவி.கே.பி. காமாட்சி சுந்தரத்தின் குடும்பத்தில் உண்டான ரணகளம்

வறுமை வாட்டியெடுத்த கவி.கே.பி. காமாட்சியின்

இறுதிக்காலம்

தேவர் மற்றும் சிவாஜியுடனான பாரதிராஜாவின் அனுபவம்

பாரதிராஜாவுடன் எனது கலைப்பயணம்

ஜெயகாந்தனுடன் எனது அனுபவம்

உருகி அழுத இளையராஜா... உடைந்தது நாதஸ்வரம்

கே.பாலசந்தருடன் எனது அனுபவம்

எம்.ஜி.ஆரின் வெறி பிடித்த பக்தர்

கனல் கக்கிய ரஜினி

மீனாவின் அம்மா சிரித்தார்... ஸ்ரீதேவியின் அம்மா கோபப்பட்டார்...

மீனா, ஸ்ரீதேவி விஷயத்தில் நான் சொன்னதே நடந்தது

விஜய் படத்துக்கு என் கதை

கே.எஸ். ரவிக்குமாருடனான எனது அனுபவம்

டைரக்டர் ஏ.பி.நாகராஜன் என்னிடம் சொன்ன அவரின் உருக்கமான வாழ்க்கைச் சம்பவங்கள்

சாண்டோ சின்னப்ப தேவரின் கனவுகள்